In Public domain. Digitization Muthulakshmi Research Academy



மயிலம் முருகன் அருட்பனுவல்கள்

மயிலம் பொம்மபுர ஆதீன வெளியீடு

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

C.S.S.

வெளியீடு எண்: 85

மயிலம் முருகன் அருட்பனுவல்கள்

திருக்கயிலாய பரம்பரை மயிலம் பொம்மபுர ஆதீனம்
திருவருள் திருமிகு வீரசைவ ஞானாசிரியர்
வீரசைவ ஞானபீடத்தில் திகழ் திருவுரு
திருவருட் குருமகாசந்நிதானம் இருபதாம் பட்டம்
ஸ்ரீ ல ஸ்ரீ **சிவஞான பாலய சுவாமிகள்** அவர்களின்
திருவருட் குருவாணையின் வண்ணம் வெளிவருகிறது.

மயிலம் பொம்மபுர ஆதீன வெளியீடு - 2015
மயிலம் - பொம்மபுரம்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

நூல் குறிப்பு

நூல் தலைப்பு	:	மயிலம் முருகன் அருட்பனுவல்கள்
முதற்பதிப்பு	:	2015
உரிமை & வெளியீடு	:	மயிலம் பொம்மபுர ஆதீனம் மயிலம் – 604304 பொம்மையபாளையம் – 605104
பொருள்	:	மயிலத்துச் சிற்றிலக்கியங்கள்
அளவு	:	1/8 டெமி
புள்ளி	:	12 புள்ளி
பக்கங்கள்	:	208
விலை	:	ரூ. 135/-
வடிவமைப்பு	:	கபிலன் ஒளியகம், புதுச்சேரி–8
அச்சிட்டோர்	:	கணபதி எண்டர்பிரைசஸ்

ISBN NO: 978-93-85508-01-1

இந்நூல் விஜய ஆனி 30, 15.07.2015 புதன்கிழமை மயிலம் திருமடத்தில் ஆதிகுருமுதல்வர் ஸ்ரீபாலசித்தர் மகாகுருபூசை விழாவில் மயிலம் பொம்மபுர ஆதீனம் 20ஆம் பட்டம் குருமகாசந்நிதானம் ஸ்ரீ சிவஞான பாலய சுவாமிகள் சுவாமிகள் முன்னிலையில் தவத்திரு முத்து சிவராமசாமி அடிகளார் அவர்களால் வெளியிடப் பெற்றது

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

உ

ஸ்ரீ பாலசித்த குருவே போற்றி!

ஸ்ரீமத் சிவஞான பாலய சுவாமிகள் திருவடி வாழ்க!

குருமரபு வாழ்த்து

பரசிவமார் திருக்கயிலைப் பரம்பரையின்
வீரசைவ பரமே காட்டப்
பரனருளால் பொம்மபுரக் கடலுதித்த
சங்குகன்னப் பால சித்தர்
வரமயிலார் முருகனுப தேசமுடன்
வந்துகுரு வாகி யாண்ட
திரமிகுபேர் சிவஞான பாலயநற்
குருமரபு சிறந்து வாழி!

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

உ

சிவமயம்

ஸ்ரீபாலசித்த குருவே நம

திருக்கயிலாய பரம்பரை மயிலம் பொம்மபுர ஆதீனம்
ஸ்ரீமத் சிவஞானபாலய சுவாமிகள் திருமடம்
மயிலம் – 604304. விழுப்புரம் மாவட்டம்

மயிலம் பொம்மபுர ஆதீனம் சீர்வளர்சீர் குருமகா சந்நிதானம்

20ஆம்பட்டம் சிவஞானபாலய சுவாமிகள் அருளிய

ஆசியுரை

இறைவனருளால் உயிர்கள் தாம் செய்த வினைகளுக்கு ஏற்ப வழங்கப் பெறும் பிறவிகளுள் மேலானதும் சிறந்ததும் மனிதப் பிறவியேயாகும். நன்மையையும் தீமையையும் நாடி ஆய்ந்து, அல்லனவற்றை நீக்கி நல்லனவற்றை நோக்கும் ஆறாவது அறிவாகிய பகுத்தறிவு வாய்த்திருப்பதே இதற்குக் காரணமாகும். அதனால் தான் பாவுக்கரசராம் நாவுக்கரசர் 'வாய்த்தது நம் தமக்கு ஈதோர் பிறவி மதித்திடுமின்' என்றார்.

காலங்கள்தோறும் சித்தர்கள், யோகிகள், ஞானிகள் உலகில் தோன்றி, மக்களுக்கு மெய்ஞ்ஞான உணர்வூட்டி வாழ வைத்தார்கள்; வாழ வைத்துக் கொண்டிருக்கிறார்கள். அவ்வகையில் நம் ஆதீன குரு முதல்வர் ஸ்ரீசங்குகன்னர், சிவபெருமான் அருளாணையின் வண்ணம் வீரசைவ நெறியைப் பரப்பி அன்பர்களை உய்விப்பதற்காக 'பாலசித்தர்' என்னும் திருப் பெயரோடு, கீழ்த்திசைக் கடலில் நடந்தேறி பொம்மபுரத்தை அடைந்தனர். அன்பர்களுக்கு ஞான உபதேசம் செய்து வீரசைவ நெறியைப் பரப்பினர்.

அவர்கள், முருகப் பெருமானின் திருவருளைப் பெற வேண்டும் என்று வரபலமிக்க மயிலம் திருத்தலத்தில் கடுந்தவஞ் செய்து அப்பெருமானின் திருக்காட்சியையும், உபதேசத்தையும், சிவஞானி

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

என்னும் தீட்சைத் திருப்பெயரையும், பற்பல வரங்களையும் வேண்டியவாறே பெற்றார்கள்; தமக்கு முருகன் அருள் புரிவதற்காக அருள்மிகு வள்ளி தெய்வயானையர்கள், மயிலமலையில் பாலசித்தர்பால் சித்த கன்னியர் வடிவில் வந்து தங்கியருளினார்கள். அவர்களை முருகனுக்கு மணமுடித்து, அன்பர்களுக்கு மணக்கோலக்காட்சி அருளல், தம் ஞான மரபில் வரும் சீடர்கள், சிவஞான பாலய சுவாமிகள் என்னும் தீட்சைத் திருப்பெயரோடு, தாம் தங்கியிருந்த தவக்குடிலையும், முருகன் எழுந்தருளிய தவக்குடில் சார்ந்த திருச்சந்நிதியையும் புரந்து வருதல், தம்மை நாடி வருவோர்க்கு வீரசைவ தீட்சை வழங்குதல், சமுதாயத் தொண்டு செய்தல் முதலியவற்றையெல்லாம் வேண்டியவாறே பெற்றார்கள். பின்னர் முருகனின் வலப்பாகத்தே இட்டலிங்க பரசிவ மயமாக சிவயோக நிலை பெற்றார்கள்; குருவருளைப் பொழிகின்றார்கள்.

முருகன் திருவருளும் பாலசித்தர் குருவருளும் செழித்து ஓங்கும் இம் மயிலத்தலத்தில் பாலசித்தர் மகா குருபூசைத் திருநாள் சீரும் சிறப்புமாக நடைபெற்று வருகின்றது.

அவர்கள் உபதேசித்தருளிய வண்ணம், மக்கள் எந்த வகையிலும் ஒருவருக்கொருவர் ஏற்றத் தாழ்வில்லாமல், போரும் பூசலும் நீங்கி அன்பும் அமைதியும் ஓங்கி வளர்ந்திட உலகியற்கல்வி, அருளியற்கல்வி, ஞானநூல் வெளியீடுகள் முதலான சமுதாயத் தொண்டுகள் இவ்வாதீனத்தின் உயர் குறிக்கோளாகக் கொண்டு நடைபெற்று வருகின்றன.

அவ்வகையில் இத்தலத்திற்கு வந்து வணங்கி வழிபட்டுக் குறைகள் நீங்கிப் பெருவாழ்வு பெற்ற அருளாளர்கள், மெய்ஞ்ஞானிகள், புலவர் பெருமக்கள் பாடியருளிய நூல்களை; பழம்பெரும் நூல்களைத் தொகுத்து 'மயிலம் முருகன் அருட்பனுவல்கள்' என்னும் திருப்பெயரில் இன்றைய நன்னாளில் வெளியீடு செய்யப்பெறுகிறது. (ஆனி - திருவாதிரை - 15.07.2015)

இத்தொகுப்பில் அமைந்துள்ள நூல்கள் பெரும்பாலும் நூறாண்டுக்கும் முற்பட்டவையாகும். சிதைந்த நிலையில் உள்ள

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

அவற்றையெல்லாம் பொருள் நோக்கிற்கேற்ப சொற்பிரிவு செய்தளித்த கல்லூரி முதல்வர் முனைவர் சு.விஜயகாந்தி, துணை முதல்வர் முனைவர் ச.திருநாவுக்கரசு மற்றும் பேராசிரியப் பெருமக்கள் திருமதி. இரா.வள்ளி, முனைவர் க.இலட்சுமிதேவி, முனைவர். து.அமரதீபா, திருமதி ஆ.கீதாலட்சுமி, செல்வி இ.தமிழரசி, செல்வி க.விமலா ஆகியோருக்கும், கணினித் தட்டச்சுப் படிவங்களில் இந்நூல்கள் அனைத்தையும் ஒப்பு நோக்கிச் செப்பம் செய்து உதவிய கல்லூரி மேனாள் முதல்வர் முனைவர்.சு.திருநாவுக்கரசு, விருத்தாசலம் திரு. கொளஞ்சியப்பர் அரசு கலைக்கல்லூரியின் தமிழ்த்துறை இணைப்பேராசிரியர் முனைவர். கி.சிவகுமார், சித்தர் சிவஞானி கலை மற்றும் அறிவியல் கல்லூரியின் உதவிப்பேராசிரியர் சொ.அருணன் ஆகியோருக்கும், ஆதீன ஊழியர்கள், அச்சகத்தார் ஆகியோருக்கும் மேலும் இத்தொகுப்பு நூல் உருவாக்கப் பணியில் தம்மை ஈடுபடுத்திக் கொண்ட அனைவருக்கும் எல்லாம் வல்ல ஸ்ரீபாலசித்தர், ஆதி சிவஞான பாலய சுவாமிகள் குருவருளும், மயிலம் வள்ளி தெய்வானை உடனுறை ஸ்ரீமுருகப்பெருமான் திருவருளும் நிறைந்து விளங்குவதாகுக.

ஆதீனம் ஆற்றிவரும் சிவத்தொண்டினையும், செந்தமிழ்த் தொண்டினையும் அன்பர்கள் பயன் கொண்டு இந்நூலைப் பெற்றுக் கற்றுப் பெருவாழ்வு வாழ்வார்களாகுக.

வாழ்க வீரசைவப் பெருநெறி!

(ஒப்பம்)

உ——— பாலயஞ்ஜரி.

ஸ்ரீ சிவஞான பாலய சுவாமிகள்
20ஆம் பட்டம்
மயிலம் பொம்மபுர ஆதீனம்

மயிலம்
02.07.2015

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

பதிப்புரை

திருக்கயிலையில் மேற்கு வாயில் கணத்தலைவராக விளங்கிய சங்கு கன்னரை நோக்கி சிவபெருமான் பூலோகத்தில் வீரசைவ சமய நெறிகளையும் வளர்க்குமாறு ஆணையிட்டார். அதனை ஏற்ற சங்குகன்னர் கிழக்கு கடற்ரையில் பாலகனாக பிரமபுரம் எனப்படும் பொம்மபுரத்தில் சித்துகள் நிறைந்த பாலசித்தராகத் தோன்றினார்.

பொம்மபுரத்தில் திருமடம் அமைத்துக் கொண்டு பலருக்கும் குரு - இலிங்க- சங்கம வழிபாட்டினையும் சடுத்தல சித்தாந்தத் தையும் தெளிவுறுத்தி வந்தார். அங்ஙனம் இருக்கும் காலத்தில் நாரத முனிவர் முருகப்பெருமானின் திருவருள் பெற மயில மலையை அடையுமாறு பாலசித்தருக்குக் கூறினார்.

பாலசித்தர் மயிலமலை அடைந்து திருமடம் ஒன்று அமைத்துக் கொண்டு முருகப் பெருமான் திருவருள் வேண்டி நெடுங்காலம் தவமியற்றி வந்தனர். பாலசித்தருக்கு அருள் புரியுமாறு முருகனிடம் வேண்டிய வள்ளி தெய்வானையர், முருகப்பெருமானின் சினத்திற்கு ஆட்பட்டனர். அந்நிலையில் சித்த கன்னிகையராக மயிலமலையில் பாலசித்தரின் புத்திரிகளாய் அடைக்கலம் புகுந்தனர்.

முருகப்பெருமான் பாலசித்தருக்கு அருள் புரிய வேண்டி மயிலமலை அடைந்து சித்தருடன் போர் புரிந்து தான் யார் என்பதனை உணர்த்தினர். சித்தர் தனது பாதுகாப்பில் இருந்த சித்த கன்னிகையரை முருகனுக்கு மணம் முடித்து வைத்தார். முருகன், பாலசித்தர் வேண்டிக் கொண்டதற்கு இணங்க அவரது சீடராகிய சிவஞானிக்கு சந்நியாச்சிரமம் தந்து ஆச்சாரிய அபிடேகமும், ஞான உபதேசமும் புரிந்து தமது அம்சத்திலே ஒரம்சம் அவரிடத்திலே பதியும்படி செய்து பாலை உணவாகக் கொண்டு சீட பரம்பரையோடு சிவஞான தேசிகராய்த் திகழ திருவருள் பாலித்தார்.

சிவயோகப் பெருவாழ்வு வாழ்ந்த பாலசித்தர் ஓர் ஆனி மாதத் திருவாதிரை நன்னாளில் தமது விருப்பப்படியே தம்மால்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

எழுந்தருளச் செய்து வழிபாடாற்றி மகிழ்ந்த மணக்கோல முருகனின் வலப்பக்கத்தில் சிவயோக சமாதி கூடியருளினார்.

'மந்திரம் ஒன்று ஆயிரமாய் வளர்ந்து பயன் தந்திடும் ஒண்மயிலைத் தண்மலை' என்று, நம் ஆதீன முதன்மைச் சீடராய்த் திகழ்ந்த கற்பனைக் களஞ்சியம் நல்லாற்றூர் ஸ்ரீ சிவப்பிரகாச சுவாமிகள் மயிலமலையைப் போற்றுகின்றார். இது மட்டுமின்றி **கயிலை மலை மீதிருந்த காட்சி போல் வந்து மயில மலை மீதிருக்கும் வள்ளல்** என்று சிவஞானியைப் போற்றிப் பரவுகின்றார்.

மயிலம் பொம்மபுர ஆதீன ஞான பீடத்து எழுந்தருளி குருமரபை அலங்கரித்த 19 ஆம் பட்டம் மகாசந்நிதானம் அவர்கள் நல்லாற்றூர் ஸ்ரீ சிவப்பிரகாச சுவாமிகளின் நூல்களை உரையுடன் வெளியிடத் திட்டமிட்டு அப்பணி மூலம் உரை நூல்கள் வெளியிட்டு அருளினார்கள். சுவாமிகளைத் தொடர்ந்து 20 ஆம் பட்டம் குருமகா சந்நிதானங்கள் இறைபணியில் தம்மை ஈடுபடுத்திக் கொண்டு சமயப் பணியையும், சமுதாயப் பணியையும் மேற்கொண்டு வருகின்றார்கள். அவ்வகையில் பாலசித்தருக்கும், ஆதி சிவஞான பாலய சுவாமிகளுக்கும் திருவருள் பாலித்த மயிலம் முருகப்பெருமான் மீது புலவர் பெருமக்கள் இயற்றிய நூல்களையும் வெளியிட சித்தம் கொண்டார்கள்.

திருப்புகழ் பாடிய அருணகிரிநாதர், மயிலாசலக் கலம்பகம் பாடிய தண்டபாணி சுவாமிகள், பாம்பன் சுவாமிகள், மயிலம் சுப்பிரமணியர் துதியமுது பாடிய பாவேந்தர் பாரதிதாசன், பாலசித்தர் பாமாலை, சிவஞான பாலய தேசிகமாலை முதலான நூல்களைப் பாடியுள்ள நம் ஆதீனப்புலவர் வித்துவான் ஆ.சிவலிங்கனார் முதலியோர் மயிலம் முருகப்பெருமான் மீதும், அவனருள் பெற்ற ஆதீன முதற்குரவர் ஸ்ரீபாலசித்தர், ஆதி சிவஞான பாலய சுவாமிகள் மீதும் பாமாலை சூட்டி மகிழ்ந்தவர்களாவர்.

மேலே குறிப்பிடப்பெற்ற புலவர்களைப் போல எண்ணற்ற புலவர் பெருமக்கள் மயிலம் முருகப்பெருமான் மீது பல

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

பனுவல்களைப் பாடிப் பரவியுள்ளனர். அவற்றுள் மயிலவேள் அகவல், மயில மாலை, மயிலத்து அந்தாதி, கார்த்திகைக் கதம்பகம், திருமயிலைச் சந்நிதி முறை, மயிலாசல மாலை, மயிலத்து இரட்டை மணிமாலை, அருள் வேட்டல் ஆகிய நூல்கள் தொகுத்து வெளியிடப் பெறுகின்றன.

முருகப்பெருமானின் அவதார நோக்கும், அவனது திருவிளையாடல்கள், ஓம் சரவணபவ, ஓம் குகாய நம எனத் தொடங்கும் மந்திரங்களின் சிறப்பியல்புகள், இம்மைக்கும் ஏழேழ் பிறவிக்கும் அவனது துணை, இச்சா சக்தி, கிரியா சக்தி, ஞான சக்தி எனும் முருகப் பெருமானின் மூவிதச் சக்திகளின் இயல்புகள், ஸ்ரீபாலசித்தர், சிவஞான பாலய சுவாமிகளின் குருவருளால் விளைந்த அற்புத நிகழ்வுகள், வாரம், மாதம், நட்சத்திரம் குறித்த பதிகங்கள் போன்ற அரிய பற்பல கருத்துகள் மேற்கண்ட நூல்களில் பதிவாகியுள்ளன.

பாலசித்தருக்கு முருகன் திருவருள் வழங்கியமையை 'பாலசித்தருக்கு அருளியோய் தஞ்சம்' என மயிலவேளகவல் எனும் நூல் குறிப்பிடுகிறது.

இம்மை, மறுமை இன்பங்களையும், வீடுபேறு எனும் மேலான நிலையையும் வழங்கும் ஒப்பற்ற தெய்வமாக விளங்குபவன் மயிலம் முருகன் என்பதை 'மயிலாசல மாலை' எனும் நூல் தெளிவுபடுத்துகிறது.

இம்மையே மறுமை வீடெனும் மூன்றும்
இருந்தவம் புரிந்திடா தவர்க்கும்
செம்மையே வழங்கும் சிறப்புறும் தெய்வம்
செறிந்துறை வரை இதென்று உணர்ந்தேன்.

மயிலம் முருகன் குறித்த இப்பனுவல்கள் பொருள் ஆழமும், கற்பனைச்; சிறப்பும், சந்தச் சிறப்பும், வீரசைவ சமய சித்தாந்தக் கருத்துக்களையும், முருகப்பெருமான் குறித்த பல்வேறு புராணக் கதைகளையும் விளக்குவதாக அமைந்துள்ளன.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

"மயிலம் முருகன் அருட்பனுவல்கள்" எனும் தலைப்பில் அமைந்த இந்நூல் மயிலம் பொம்மபுர ஆதீனம் ஸ்ரீமத் சிவஞான பாலய சுவாமிகள் பெரிய திருமடம், மயிலம் திருமடத்தில் மன்மத ஆண்டு ஆனித்திங்கள் 30 ஆம் நாள் புதன்கிழமையன்று (15.07.2015) நடைபெறுகின்ற ஸ்ரீ பாலசித்தர் குருபூசையில் வெளியிடப் பெறுகின்றது.

பதிப்பாளர்

முனைவர் ச.திருநாவுக்கரசு
தமிழ்த்துறைத்தலைவர்
ஸ்ரீமத் சிவஞானபாலய சுவாமிகள்
தமிழ், கலை, அறிவியல் கல்லூரி,
மயிலம்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

பொருளடக்கம்

மயிலத்து அந்தாதி	-	பு.அ. பெரியசாமிபிள்ளை
மயில மாலை	-	இரத்தினமுதலியார்
ஸ்ரீமயிலத்து இரட்டை மணிமாலை	-	வேங்கடாசல நாயகர்
மயிலவேள் அகவல்	-	P.N. இராஜமாணிக்கம்
மயிலாசல மாலை	-	தே.ஆ. ஸ்ரீநிவாஸன்
முருகன்அருள்வேட்டல்	-	திரு.வி. கலியாணசுந்தரனார்
கார்த்திகைக் கதம்பகம்	-	ஆ. சிவலிங்கனார்
திருமயிலைச் சந்நிதி முறை	-	சாமிநாதப்பிள்ளை

பஞ்சாங்கப் பாமாலை
திதிப் பதிகம்
நட்சத்திரப் பதிகம்
யோகப் பதிகம்
கரணப் பதிகம்
ஸ்ரீ மயிலாசல மாலை
திருமயிலை அந்தாதி
மயிலாசல சதகம்
பஞ்சரத்தினம்
திருமயிலைத் தேவாரம்
திருமயிலை துயரப் பதிகம்
ஸ்ரீ மயிலை நாதர் பதிகம்
திருமயிலை வடிவேல் முருகர் பதிகம்
திருமயிலைத் தேவாரப் பண் கொல்லி
திருமயிலை சத்குரு நவ ரத்தினம்
திருமயிலை அருள் பதிகம்
ஸ்ரீ மயிலாசல அனுபூதி
தேவாரப் பண் 32

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

மயிலத்து அந்தாதி

ஆசிரியர்: பு.அ. பெரியசாமிபிள்ளை

சிவகணபதயே நம

மயிலத்து அந்தாதி மூலமும் உரையும்

தற்சிறப்புப் பாயிரம்

விநாயக வணக்கம்

மயிலத்தந்தாதி யமகமதாச் சதம்மா வினை ஓட்டு
அயில் அத்தம் தாதுஇவர் இந்துளம் உள்அவன்அன்பு கொள்வான்
குயிலத் தம்தாதி கலைமாமகள் எனகொள் பரைகால்
வெயில்அத்து அந்தம் ஆதிஅகடுஆர் முன்னோன் செயும் மிக்கருளே.

ஸ்ரீ சிவஞான பாலய தேசிகர் துதியமுது

ஆலை அனங்கனை நீறுஎழ நோக்கிய அக்கன் இடப்
பாலை அனநடைக்கு ஈந்தோன் பரவும் பரன் கடப்ப
மாலையன் நண்ணும் மயிலத்து அந்தாதி வழுத்த அருள்
பாலையன் நல்திருப் பாதஅர விந்தம் பலன் தருமே.

அவையடக்கம்

நீரார் சிறுகயலைக் கவரும் சீரல் நீடு அலையின்
வார்ஆர் உழக்கும் திமிங்கலத்தைக் கொத்துவான் நின்றதை
நேர்ஆர் மடியன் துணிந்தது அறிஞர் நிகழ்த்த அரும்
சீர்ஆர் மயிலத்து அந்தாதியைப் பூவினில் செப்புதற்கே.

மயிலத்து அந்தாதி

1. கடல் நிற வண்ணன் மருக வெளிற்றுக்கரி மகிழ்
மகள்தன் நிறம் வண் நல் மலை முலை மேவும் கடம்பு புய
கடன் இற அண்ணன் மருமத்து இவர்ந்திடும் கத்த எனைக்
கடன்இறவு அண்அல் மதி சூழ் மயிலத்த காக்க நிற்கே.

2. காக்கைக்கு மாறு விழியொன்று அளித்தவன் காசினியைக்
காக்கைக்கும் ஆறுவிடா அயன் ஆக்கற்கும் கண்டவகா
காக்கைக்கு மாறு விளையாத வேல கரி அரவு அங்
காக்கைக்கு மாறு விறப்புறும் சீர் மயில் கல்லினனே.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

3. கல்இனன்நன் மதி செல்லல் மறிக்கும் கவின் மயிலக்
கல்லின் அனல் மதியோர்கட்கு எட்டாது உறும் கந்தன் மிக்க
கல் இனல் நன் மதிக்கப்பட்ட என்றன் கவலையின் வேர்
கல்லினன் நல்மதிப்பான் இவ்வுலகு எனைக் கண்டனனே.

4. கண்டம்கரி அரன்சண்முகம்தன்னில் கணலும் நுதல்
கண்தங்கு அரியர் அன்னோற்கு ஓம் உரை புகல் காரணர்
அகண்டம் கரியர் அன்பு இல்லேன் எனையுங் கருணை செய்தார்
கண்டுஅம் கரியர் அல் மா மயிலத்தர் வேல் கந்தப்பரே.

5. கந்தர் அங்கம் பணி மென் மொழியாக்கும் கவிஞர் இருள்
கந்தரம் கம்பு அணி மால் விடையார்க்குக் கருணை செய்துஉக்
கந்தர் அங்கம் பணி மா மயிலத்தில் களித்துறும்சு
கந்தர் அம்கம் பணிவீர் உலகீர் நற்கதி வரும்.

6. கதியன் நல்அங்கிரி ஏத்துநர்க்கு ஈந்திடும் கானம்மன்ம
கதியன் அலங்கு இரிசல் புரியாத அகத்தியர்க்கும்
கதியன் அல் அம் கிரியாம் மயிலத்தன் கழலிணையைக்
கதி அனலம் கிரிமால்அடும் வேலன் கருது அகனே.

7. கரு வடிவேலை மகிழ்ந்து அண்டர்காவைக் கடிமதியீர்
கரு வடிவேலை மதித்து எந்தநாளும் கனிந்து அன்பர்ப
கர்உ வடிவேல்ஐ மயிலப் பொருப்பைக் கருதுகில்லீர்
கருவடிவு ஏல்ஐ மறலிக்கு என் செய்வீர் கரையுமினே.

8. கரம் ஆதவன் பரி ஆலோன் நெருப்பு முக்கண் எனக்கொள்
கரவாத அன்பரில் ஆர் அரன்றன் குரு கல்பகும் வேல்
கர வாதம் வன்பர் இலா மயிலத்த கடல்உறும்,ம
கர வாதவன் பரிமேதியன் மேவிடில் கண்டிக்கவே.

9. கண்டிக் குமரன் தழல் வேல் கரத்தன் கருதலரைக்
கண்டிக்கும் அரன் தரு பாலன் சேவையைக் காசினியீர்
கண்டு இகு உமர் அன்று அழ நமன் நும்முயிர் கைப்பற்றுமுன்
கண் திக்கு மரம்தழை மயிலத்தினில் கண்டு உய்மினே.

10. கண்இக்கு மாரனை நீறுஎழ நோக்கும் கடுக்கை மலர்க்
கண்ணி குமாரன் ஐ ஆர் மயிலத்தண் கடம்பு அணிமின்
கண்ணிக்கு மார் அல்நை அங்கசனார் ஐங்கணைகளினால்
கண்ணிக் குமார்அனைமீர் வாங்கி ஈமீன் அக்காரிகைக்கே.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

11. காரி,கையார்க்கும் குருத்துவம் ஆனவன் கானவரின்
காரிகை ஆர்க்கும் குருமுலை தோய் அடுக்கல் புயத்தன்
காரி கைஆர்க்கும் குரு மயிலத்தண் ககனர்க்குஉப
காரிகையார்க்குஉங்கு உருமேற்றன் தாள்என்றும் காப்பு எனக்கே.

12. காப்பன் அகத்தின் அன்பு இல்லேம் நமையும் கனிகள் மிகும்
கா பல் நகத்து இனன்போல் ஒளிர்வோன் பால் கடலினிடைக்
கா பன்னகத்தினன் சேர் மயிலத்தன் கழலிணை நீங்
கா,பன் நகத்தினன் செய்யேல் உலகு அவங்கள் மனனே.

13. கண்ணம் பல வரை மாதரை மேவ கனவிலும் கீழ்க்
கள்நம்பு அல்லவரை மாமயிலத்தரைக் காரியுண்டமுக்
கண் அம்பலவரை மாதா மக வேல்கர அடியார்க்
கண்அம்பலவரை மா இன்னல் என்பம் எக்காலத்துமே.

14. கால் அனல் அம்புஆர் ககனமது ஆம்ஐ யோகம் செய் அந்தக்
கால் அல் நல் அம் பார் களிப்பான் குடை மன்மதன் கண்ணின் அட்ட
காலன் அலம்பு ஆர் கடுக்கையன் சேய் மயில்கல் பணிந்தக்
கால்அனலம் பார் கலிப்பகை அன்றே கடந்திடுமே.

15. கடம்பு அணிவாகு முருக மயிலத்து கந்த பொலம்
கடம் பணி வாகு முலைமேல் மதன் எய்ய கான் அம்பு,வி
கடம் பண்ணிவா குமுதவாய் நொந்தாள் அந்தக்கன்னியின்,சங்
கடம் பணிவாகும் உனது அணி ஈயக்களித்து இங்ஙனனே.

16. களிப்பாலையில் தோய்ந்து ஒருபுலவன்சொல் கவிஞர்உரக்
களிப்பால் ஐயிற்று ஓய்ந்தவர் சூழ் மயிலத்துக் காதலரே
களிப்பு ஆலையில் தோய் மலர் அம்பின் மாது கலங்குகின்றாள்
கள் இப்பாலை இன்று ஓய் விரைவில் நும் மெய்யன்பு காட்டுவீரே.

பொய்யாமொழிப் புலவர் கூறியது

பொன்போலுங் கள்ளி பொறிபறக்குங் கானலிலே
யென்பேதை செல்லற்கு இசைந்தனளே - மின் போலும்
மானவேன் முட்டைக்கு மாறாய தெவ்வர்போம்
கானவேன் முட்டைக்குங் காடு.

17. காட்டுஆ மரை அணிஆ மேய் மயிலத்து கந்தர் கம்மின்
காட்டு ஆமர் ஐ அண் இயாழ்மொழி நேயர் கவின்தனக்கு ஓர்
காட்டாம் மரையள் நியாய மருகர் கருணை செய்யில்
காட்டாம் அரையணி ஆர் வீழ்ந்ததை அவர் கண்களுக்கே.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

18. கண்ணப்பர் ஐயரை நன்கு ஆண்டு அருளி கருப்பு வில் வீ
கண் அப்பரை அரைத்துப் பூதியாகிட கண்டநுதல்
கண் அப்பரையர் ஐயாம் மயிலத்தரை கால்அனல் வான்
கண் அப்பு அரையரை யாமத்தும் முன்னி மின் காஉறுமே.

19. கா அல வாவு அரிஎன் பொழில்சூழ் மயில்கல்லின்முரு
காவலவா அரி வேல் விழியார் கோகனகை மரு
காஅல் அவாஅரி செம்தழல் வீசிடக் கன்றினள்வான்
காவல வா அரில் நீங்கி என் மாது கனிவுறவே.

20. கனவான் அகத்து அன்புடையோர்க்கு அருள் முருகன் மயிலக்
கனம் வான் நகத்தன் புனம் துளவன் மலர்க்கண் அயன்,நக்
கன் அவ்வானகத்தன் புகழ்ந்து ஏத்தும் வேலன் கடம்பு அணிவா
கன் அவ் ஆனகத்தன் புரிவான் நலங்கள் கருதும் எற்கே.

21. கரியான் அகத்து இயல்மிக்கு ஏவு ஒழிக்கும் கடவுள் மத
கரியான கத்தியன் சேய் மயிலக்குகன் கா செந்தில்,ந
கரியான் அகத்தியன் போற்றும் குருபரன் காசினிக்கு ஓர்
கரியான் நகத்து இயல் மன்னவன் தாளைக் கணித்து உய்ம்மினே.

22. கணக்காயனார் மகனார் கீரனார் சொல் கவிஞன்நல் முக்
கண் நக்கு ஆய் அன்னார் மகவான் கும்பன் மால் மகதி முனிவன்
கண் அகாயன் ஆர் மகம் மா மயிலத்தன் கழல் உன்னும் என்
கணக்கு ஆயல் நார் மகவால் உதையுண்டதைக் காண் நமனே.

23. காணாது அவாதனை மேற்கொண்டு எந்நேரமும் கற்பினை நீங்
காள்நாத வாதனை தண்மதி கண்டு இந்தக்காரில் என்ன
காண் ஆதவா தனைநேர் மயிலத்தனைக் கண்ணலர் போல்
காணா தவாது அல்நை செய்கின்றை என்னும் என் கார்க்குழலே.

24. கார் ஆதரிக்கும் மயில் என தேவ கணங்களும் நீங்
கார்ஆதரிக்கும் மயிலப் பொருப்பில் களித்து உறும் சிங்
காரா! தரிக்கும் அயிலா உணர்ந்து கருணை செய் மெய்க்
கார் ஆதர் இக்கு மய் இல் என்தன் மாதை கலக்கும் அதே.

25. கலக்கந்தர தனைவாட்டும் அனங்கனை கட்செவிஅ
கலம் கந்தரத்து அல் நைவில்லான் கொன்றான் என்ப கள்ளம் என்பு
கல்அகந்தரத்தன் ஐயா மயிலத்த என்கன்னி துன்பு,அ
கலக்கு அந்தரத்து அனை ஒப்பாய் அருள்செய் கனிந்து வந்தே.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

26. வந்து இக்கன் ஆவி மலர்அம்பு சந்தம் மலையத்து உறும்
வந்து இக்கு அனாவி மலர் அம்புலி செய வாடுகின்றேன்
வந்து இகனா விமலர் அம்பு உதித்தோன் மயில்நகத்துஉ
வந்திக்கன் நா விமலரம்புயனை வணங்கிலனே.

27. வணக்கலம் கம் தரமாக குகன்தாள் மலரினில்சு
வணம் கலம் கந்தரம் ஆரும் மின்னாரின் மயல்கொண்டு அவர்
வணக்கு அலங்கு அந்தரமாய் மனனே நாம் மறலிக்கு எந்த
வணம் கலங்கம் தரம் மால் மா மயிலவரை யகத்தே.

28. வரைஅவர் ஐய வடிவேல் முருக மதி மிகுத்த
வர்அ ஐவரை அன்று அளித்தோன் மருக மயிலம் என்னும்
வரைய வரைய அடங்காத என்றன் மனத் துயரை
வரை அவரை அணுகாது உறும் வாழ்வை உவந்து அருளே.

29. வந்தனம் ஆதரமாகப் புரிந்து உய்வம் வா பொலம்,து
துவம் தனம் மாதர் அம் ஆகத்தை நாளும் வரைவு இல் மிக்கு
உவந்தனம் ஆதர் அம்மா களித்தோம் இனி வாழ்வது எங்ஙன்
வந்து அன்னம் மா தரம் மாகம் மயில வரையை நெஞ்சே.

30. வரைவில் அரிவை அம்பு ஆர்க்கா உமைக்கு எதிர் மால் சொல் பொய்யின்
வரைவுஇல் அரிவை அம்பு ஆம்பழம் என்னா மருவுதலை
வரை வில் அரி வையம் பாண வந்தாரென்று மாயம் சொன்னாய்
வரைவில் அரிவை அம்பார் ஆர்மயிலை வரையிடத்தே.

31. வரம்பல ஏற்றவன் சூர்மா வதைத்து அண்டர் வாழவைத்த
வரம் பலம் வேல் தவன் வள்ளிக்கு உகந்த மணாளன் இந்தீ
வரம்பல வேல் தவல் மேவா மயிலத்தன் மாண் அடிய
வர்அம்பலம் ஏற்றவன் மால் அயன் மாதவர் வானவரே.

32. வானம் பரவும் ஐயன் பன்றிக்கோடு மீ மண் புகழு
வான்அம்பு அரவு உமையன் பூண தந்து மகிழ்ந்த பக
வான்அம் பரவும் ஐயன் மயிலம் குகன் மாற்றுயர் பொான்
வான் அம் பரம் உமையன் மருமான் தாள் வணங்கு அகனே.

33. வண் நக்கரும் கலைப் பொன்னரும் வாழ்த்தி மகிழ்குகன்க
வண் நக்கு அரும் கல்லை வைத்துக் கிளி கடி வள்ளி யென்ப
வள் நகரும் கல்லை மா ஈய உண்டவன் வாழ் மயிலம்
வண்ணம் கரும் கல்லை சூழ்ந்தவர் இல்லில் வரும் திருவே.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

34. வரம் தானவரை அரைத்த வைவேலன் வனத்தில் முன்னோன்
வர தானவரை அதுவாகிக் கண்டு அஞ்சும் வள்ளியின் பால்
வரத்தான் நவரை அமரரை ஆளும் மயிலமென்னும்
வரம் தான அரையனை ஏத்தி உய்குவம்வா மனனே.

35. வா மனனே அல் நகம்களைவிட்டு மயிலத்தில் தே
வா,மனனே அல் நகங்கள் ஐநாத என் வாழ்த்திடுவம்
வாமனன் ஏயன் அகம் களை வேலவன் வள்ளி மகிழ்
வாமன் நல்நே அனகம் கள் ஐ ஆரன்நீ வான் நலமே

36. வான் நாடு வாகு அனன் மாதவன் வாழ்த்த சூர் மாய்த்த திட
வான்ஆடு வாகனன் மாமயிலத்தன் வெண்மாவின் மகள்
வால் நாடு வாகன் நல் மாண் அருள்என்று சொல் வாரிதியில்
வான்ஆடு வா கனல் மாணர் பொய் வாஞ்சையை வாட்டி நெஞ்சே.

37. வாள் தானவரை மலம் கடல் கண்டவன் வானவரை
வாட்டான் அவரை மலக்கடி நீக்கி மேல் வைத்த குகன்
வாழ்த்து ஆன்நவர் ஐ மலயத்தன் கீரன் வணங்கு குரு
வாட்டான் அவரை மலங்கள் மயிலவரை மனனே.

38. வருந்த வருந்த நமன் உமைப்பற்றுமுன் வாழ்த்துமின்,தே
வரும் தவரும் தனமனும் மை வண்ணனும் மை வையம்,இ
வரும் தவரும் தனம்மன் உமையானும் வணங்கு அயில
வர்,உந்து அருந்து அஅனம் மனும் மையில் வரை வைத்தியரே.

39. வையத்து அரங்கத்தர் மா மகள் நாயகர் மானதப்பேர்
வையத்தர் அம் கத்தர் நக்கீரர் பாவில் மலிந்த பக்கம்
வைஅத்தர் அங்கத்தர் சேர் மயிலத்தர் மலை வளர் பா
வைஅத்தர் அங்கத்தர் மாலை எற்கு ஈவர் போய்வா நெஞ்சமே.

40. வால் நந்து உதிக்கும் மலர்வாவி சூழும் மயிலத்து அமர்
வான்நம் துதிக்கும் மகிழ் வடிவேலன் மலைமகள்,க
வான் அம் து திக்கு மணந்திடச் செய் சேய் மலரடியை
வான் நந்து திக்கும் மகிதலத்தீர் சென்று வந்திப்பிரே.

41. வந்தான் நந்த கனல் நோக்கினில் நோக்கித்தன் மைந்தன்நல்த
வம் தானம் தக்கனவாறு செய்தோர்க்கு அருள் வள்ளியன்,நி
வந்த ஆனந்தம் கனவான் வடிவேல் விழி வாடல் இன்று,உ
வந்தான்வரும்அந்தம் கனம் மால் மயிலத்து அமர்வான் வருமே.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

42. வர வர மாதவன் அன்பில் புரிவார் மனமெனும்தா
வர வரம் மாது அவன் நல்சுத மிக்க வளத்த பல்தா
வரவரமாதவன் மின்னார் மயிலத்த வந்தருள் பா
வர்அவர் அமா தவச்செய் நமன் என்முன் வரில் வளலே.

43. வள்அவல்மலை அவ்வனம் முல்லைமால்கால் மலர்அம்பு உய்த்தான்
வள்ளம் வல் மலை யவ்வனம் முலையைப் புணர்வான் வருங்கொல்
வளவன் மல் ஐவனம் அம் உலையாது ஆர் மயிலத்தன்,த
வளம் வல் மலையவன் நம் முல்லை ஈசன் மகன் வள்ளலே.

44. வள்ளல் ஐயப் போழ்து உவந்து அருள் வேலன் மயிலத்தன் பொன்
வள் அலையப் போடும் வள்ளியின் நாயகன் வான் பிறை ஆர்
வள் அலை அப்பு ஓடு வண் தலை கை அணிவான் சுதன்,இ
வள் அலையப்போடுவன் அலன் செய்குவன் வான் அளியே.

45. வான் நாகம் மஞ்சு ஆர் அமை சேர் பொழிலில் ஐ வாயினொடு
வால் நாகம் சாரலிற் சென்று அருந்தும் மயிலம் என்னும்
வான் நாகம் அஞ்சார் அடல் அசுரர்ச்சென்ற வை அயில் ஆர்
வான்ஆகமம் சார் அடியரைத் தாழும் வைவச் சுதனே.

46. வசந்தன் அலவனை நோக்கிப் பயந்து அண்டர் வான் தருதா
வ,சந்து அனலம் வனைந்து ஓதிட அந்தணர் வாய்ந்துறும் சீர்
வசந்தம் நல்அவல் நைவில்லாது ஒளிர மயிலம் மன்னே
வசந்தன் நல்லவன் ஐயோ நமன் என்னும் எம் வார் குழலே.

47. வார் அண் அம்மன் கை அமைநேர் வனம் குறவள்ளி தெய்வ
வாரண மங்கை அமரும் முருகன் மயிலத்தன் கார்
வாரணம் அங்கு ஐ அரங்காத் துடி நட மன்னன் அருள்
வாரண மங்கு ஐ அறியா துவசன் செய் வாகனனே.

48. வானரம் பன்னகம் ஆர் பட்சி வாகனம் மால் மருமான்
வால் நரம்பு அன்ன கற்கண்டு உரை நோய் போம் மதிஞர் சொல்பா
வான் அரம் பன் நகம்தோறுஆடல் செய்து மயில வெற்பில்
வானர் அம் பன் அகலாது உறைவான் வர வந்திப்பிரே.

49. வந்து அல்நம் தன்னம் மாற்றும் மயிலமலைக் குகற்கு
வந்தனந் தந்தனம் இல்லை அன்பில் மட மங்கையர்க்கும்,உ
வந்து அனம் தந்து அன்ன மெல்நடை மின்இடை வாய்ந்தீர் என்றுஅ
வன் தன்னம் நந்தம் தனம்போல் ஈந்து வாடுஉறும் வல் நெஞ்சமே.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

50. வன்னம் கண் ஆறும் பனிரண்டும் ஆ கொளும் மாண்பு உடைய
வன்அம் கண் ஆறும் பல் களை நீக்கி நல் வாழ்வு அருள்தே
வன்அம் கண் நாறும் பல் நிவந்த வேயும் கைம்மாவும் இன்செய்
வன்னம் கள் நாறும் பனிச் சோலையும் சூழ் மயிலத்தனே.

51. தனவரை மாதரை ஐ ஆனத்தரைச் சானகம் தேர்
தனவரை மாது அரை மால் ஆ சுகத்தரை தந்தியின்வ
தனவரை மாதர் ஐயா அண்ணலே என்னும் சாமி துதி
தனம்வரை மாதரை ஆர் மயிலத்தன் தருவன் நெஞ்சே.

52. தருமனை அங்கிரியால் உதைத்தோன் நுதல் சக்குவினிற்
தருமன் ஐ அம் கிரியும் செற்ற வேலன் தழைத்த கனித்
தருமன் ஐ அம் கிரியாம் மயிலந்தனைச் சார்ந்திடும்மைந்
தருமனை அங்கு இரியல் பதம் மேவும் என் தன் அகனே.

53. தனத்தன ஊந்தன என்று நடம்புரி தாணுவின்சு
தனத்தன் அனந்தன் அனாமயன் வேலவன் சண்மலர்வ
தனத்தன்நல் நந்தனம்சூழ் மயிலத்தினைத் தாழ்ந்த வரைக்
தனத்தன் அல் நந்தன் அன்னத்தன் சுரேசன் தமர் என்பரே.

54. தமனிய நாகத்தவர் அரனுக்கு அருள் தந்திடும்உத்
தமன் இயல் நாகத்தவர் இன்னல் நீக்கிய சத்தியன் சுத்
தம்மன்னியன் நா கத்து அவர்க்கு அரியான் நலம் தண் மயிலத்
தமன் நியன் ஆகு அத்தவர் பணிவான் செய்யும் சார்ந்தவர்க்கே.

55. தவாத வலவன் ஐவத்திரற்கு ஓம்புகல் சற்குருநா
தவாத வலவன் ஐமானதத் தேர செந்தாமரைப்பா
தவாத அலவன் ஐமீன் ஊர் மயிலத்துச் சண்முக நீ
தவா தவல் அவன் நைவு இல்லாது உற அருள் தந்திடவே.

56. தந்துஅனம் மாஅல்ஐ கூந்தல்ஐ நடை இடை தம்மை நல் பா
தம்தனம் மா வல்லை தாமரையை நிகர்சாரும் மின்னார்
தம் தன்னம் ஆவலை ஆற்றும் விழி என்பம் தாழ்ந்துதுதி
தந்தனமா அல்லை ஆர் மயிலத்தை தவிக்கும் நெஞ்சே.

57. தவ வரை கண் திகழ் முத்து உடுப்போல் ஒளிர் தண்டலை வாய்த்
தவவரை கண்டு இகழ் பூவான் குணத்தினர் சார் மயிலத்
தவ வரை கண்டி கதிர்காமம் ஆதி தலத்து அமர்நா
த,அவரை கண்டு இகல் செய்வாரை விட்டுஉறத்தாநிதியே.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

58. தானம் தவாதவர் சாரும் மயிலச் சயில சச்சி
தானந்தஆதவர் போன்று ஒளிர்மேனிய சண்முக போ
தான்நந்து அவா தவர் கோல் மலையான் பணி சற்குரு என்
தால்நந்தவாது அவர்போற்றாதுஉன் தாமரைத்தாளை விட்டே.

59. தாமரையான் நையக் கம் தரம் குட்டியைத் தண் கடப்பந்
தாமரை ஆன் ஐ அக்கம் தரம் வந்திடும் சண்முகரைத்
தா மரை யானை அ கந்தரம் மேவித் தழை மயிலத்
தாமரை யான் ஐ அக்கம் தர ஏத்தித் தரிசிப்பனே.

60. தருவான் நவன் பனிரண்டு அக்கன் போரில் சலதியில்மாந்
தரு ஆன வன்பன் இறந்திட வேல் விட்டுத் தாழ்ந்து உட்கி போ
தருவானவன் பனிக்கு இன்பு அருள் கேகயச் சையத்தன்போ
தர் உ ஆன் அவன் பன் இறை நலம் ஏத்திடு என்தன் அகனே.

61. தனியன் அகன் பணிமேல் துயில் மால் அருள் சந்திரவ
தனிஅனகன் பணியார்ச் செற்ற வேலன் சயிலமின்சு
தன் இயல்நகு அன்பு அணி மெய்யடியார் நிதம் தாழ் மயிலம்
தனி அல் நகன் பணி செய்வார் இல் பொன் மகிழ் தாமரையே.

62. தா மத்தர் அன்பு ஒருவா மகற்கா விழ தாள் எடுத்த
தாமத்து அரன் பொருள் சற்குரு ஆகிய சாமி பரந்
தாமம்தரன் பொருவு இல்லா மகள் வரன் தண் மயிலம்
தாமம் தரன் பொருள் நோய் நீக்கி நல் சுகம் தந்தனனே.

63. தனக்கலை மாதவன் போற்றும் மருகன் நல் தண் கந்த,மா
தனக் கல் ஐ மாதவன் போகிக்கு வாழ்வு ஈந்த தவன் மயிலத்
தன்நக்கு அலைமாது அவன் போதம்பெற அருள் சண்முகன் என்
தனக்குஅலை மாதம் வன்பு ஓய்ந்து அகல் பாக்கு தரும்திருவே.

64. தரு அனந்தம் கத்தி மேவிடும் அன்பர்க்குத் தண் அருளைத்
தருவன் நந்தம் கத்தியை நீக்குவன் தயை சார்ந்தவன்,வே
தர் உவனம் தங்கு அத்தியைக் காத்தவர் நிதம் தாழ் மயிலம்
தரு வனம் தங்கம் கிரியன் வள்ளியன் தார்க்குழலே.

65. தார் ஆதரம் வனை பாதா மெய்யன்பர் தமக்கு மிக்கு ஆ
தாராதரம் வல் நையச் செய்து உயர் நல் தனத்து வள்ளி
தாரா தரம் அனையொப்பில் வெம்நோயைத் தணித்து எனைக் கா
தாரா தரம் அணை ஆவி மயிலத் தலத்தினனே.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

66. தலைஅலங்கு ஆர்அம் மதி கொன்றை வேணியன்தன் அரும்ம
தலை அலங்காரம் அதி குணம் மாத தலைப் பெயலைத்
தலையயல் அம் கார் அ மதிரம் வனம் சூழ் தரும் மயிலத்
தலைஅலங்கு ஆரம் மதி முருகா வரம்தா தங்கமே.

67. தங்கம் தரம் தவர் ஐம்படை குண்டிகை தாங்கு கையர்
தம்கத்தர் அத்தவரை ஒத்த வாகினர் சத்தியர் மா
தங்கம் தரத்து அவரை அநுசர் செய்வர் தண்ணருள்ம
தங்கம் தரம் தவர் ஐ மயிலத்தார் தரணியரே.

68. தரணி அனைய நிறத்தன் குறத்தி தழுவு தனம்
தரணியன் ஐயம் எடுக்கும் அரற்கு அருள் சாமி வெண்பந்
தர்அணியன் ஐயன் உயர் மயிலம் குகன் தாள் பணிந்து
தரணி நையப் புரிந்து உய்குவம் வா என்தன் தண் அகனே.

69. தண்டு அணி கை கரன் மாள புரி முகுந்தன் புகழும்
தண் தணிகைக்கு அரன் பெற்றிட ஓம் உரை சாற்றும் ஐய
தண் தண் இக கரன் வாரணம் சார் மயிற்சையத்த யான்
தண்டுஅணி கை கரன் காலின் நையாதுற தா வரமே.

70. தாஅரவுஇந்து அம்புனை சடிலத்தன் சதுமுகவே
தாவரவிந்தம் புதையச் செய்தோன் பணிசற்குருநா
தாஅரவிந்தம் புரைபாத ஓங்கும் தனிமயிலத்
தாவரவிந்து அம்புரிநுதல் உய்யநின் தாரணியே.

71. தாரத்தன் அத்தத்து அன்று ஓர்ந்திட ஓம்உரை சாற்றியவித்
தாரத்தன் நத்தத்தன் வான் மகள் நேயன் தழை கடப்பந்
தார்த்தன் அத்தத்து அன்மை நீக்கும் வேலவன் சாமி மிக்குஉ
தாரத்தன் அத்தத்தன் மாஅல் மயிலத்தன் தருவன் நெஞ்சே.

72. தரம் தரம் ஆகமம் தத்தைகள் ஓது சீர் சார் மயிலத்
தர்அந்தரம் ஆகம்அம் தாமரைக்கண் அரிதன் மகள் சுந்
தரம்தரம் ஆகுஅம்மம் தாக்கு திண் தோளினர் சண்முகர்கந்
தர்அந்தரம் ஆகம் மந்தையன் எற்கும் பொருள் தந்தனரே.

73. தந்தவரை ஆனனத்தர்க்கு அநுசர் சரவணர் வேய்
தந்தவர் ஐ ஆல் நனி வளர்வோர் புகழ் சாமி நல்ப
தம்தவரை ஆன் அமர் மிக்கு அருள் மயில் சையத்தர்நி
தம்தவர் ஐ ஆன வி எற்குச் செய்நோய் தவிர்த்திலரே.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

74. தவத்தான் அவம்மண்ணி தூய்மை யுற்றோர்க்கு அருள்சாமிஉயர்
தவத்தான் நவம்மணி வண்ணன் மகள்வர தண்மயில்பா
தவத்து ஆனவ மணி வேய்ந்த பொன் மோலிய தாமரைப் பா
தவத்து ஆன்நவம் அண்ணிபால பரசுகம் தாபரனே.

75. தாபர சங்கமம் சிட்டிசெய் வேதனைத் தாக்கியபா
தாபரசம் கமம் கை அரன் மேவும்தனி மயிலத்
தாபரசங்கமராம் பாலசித்தர் தமக்கு அருள்சித்
தாபரசு அங்கம்மன்றா எனைக்கா ஒளிர்சத்தியனே!

76. சத்தியத்தன்தள் நியாயத்தினர்க்கு அரிதாம் கங்கை
அசத்தியத்து அன்று அண்ணிக் கை தம்பம் ஆனவன் சாற்று மறை
சத்து இயத்தன் தண் நிலை மயிலத்தன் தருவன் நிழல்
சத்தி அத்தன் தணி கையில் பணி பவன் சார் அகனே.

77. சாரங்க மங்கையின்மேல் ஆசையுற்று அவள் தாள்பணிஆ
சாரம் கமம் கையின் மிக்கவன் சேந்தன் சரவணத்தன்
சாரங்கம் அங்கையின் வைத்தோன் மருகன் தடம் மயிலம்
சார் அங்கு அமங்கை இன்பு ஆர்ந்து ஒழிப்பாய் உள்ளம் சஞ்சரமே.

78. சரவணத்து ஆனவன் தெய்வத குஞ்சரிதன் வரன்குஞ்
சர வண்ணம் தானவன் கார் உரி போர்த்தவன் தண் துளவின்
சரம் வண் நத்து ஆன் அவன் போற்றும் மயிலத் தடத்திணைக்கோ
சர வண்ணத்தால் நவன் வாடுநரே வந்து சந்திப்பிரே.

79. சந்து அனந்தம் பதிபால் விடுத்தும் வராத் தன்மையின்வ
சந்தன் நந்து அம்பு அதி மோகத்து எய்தான் மின் தனத்தினில்க
சந்து அனம் தம்பத்தில் ஆசையற்றாள் இனிச் சார்பு எவன்வ
சந்தன் அந்தம் பதி தாம் மயிலத்து அருள் சக்கினனே.

80. சக்கரத்தான் ஐயன் கண்டுகளிக்கும் தனி மயிலச்
சக்கரத்து ஆன் ஐயன் மைந்தன் திருமுகன் தந்தி அங்கு
சக்கரத்தானை அன்பு ஆரும் அநுசன் சரணம் மின்னார்
சக்கு அரத்தால் நையல் நெஞ்சேதொழு நலம் சார்ந்து உய்வையே

81. சார் ஆதவந்தனைச் சாய்த்து முன் ஆடிய சாமி உனைச்
சாராது அவன்தன்னை ஒப்பாய் இயற்றி தளர்ந்தேன் மறைச்
சாராதவம் தனை யின்றிப் புரிபவர் தாழ்ந்து உஞற்று
ஆசாரா த வந்தனைசெய் மயிலத்த சரண் அருளே.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

82. சரம்வள் இக்குகண்ணா இசையாக்கொண்டு ஏனலில்தங்குவன
சரவளிக்குக் கண்ணிஏகி மதுவைத் தராமலர்பஞ்
சரம்அளிக்குக் கணியாகிய வேளமயில் சையத்சைசஞ்
சரம்வளிகுக் கண்இனையும் நெஞ்சேபணி சார்வைநன்றே.

83. சாரிகை மா மனு அன்னம் கிளி சொலச் சந்துவிட்டும்
சாரி கைமா மன்னும் மா மயிலத்தன் சதுமுகற்குஆ
சாரி கை மாமன்உயிர் செகுத்தோன் புகழ் சாமி என்வி
சாரி கை மா மனுசைக்கு அருளாது எவன் சாதித்தலே.

84. சாது அகம் ஆவள்ளி ஆலயம் ஆம் காதலி சத்தி அசி
சாதகம் ஆம் வளி போர்வீரர் மா மாமி தேர்ச் சாரதிஆம்
சாதகம் ஆவளியோடு சொல் அந்தணர் தாழ் மயிலம்
சாதகமா அளியார் சேய்க்கு என்னும் சது மறையே.

85. சதியர் ஐ அன்று உதித்தார் என ஐந்து வெண்சத்தி கொள்ளும்
சந்தியர் ஐயன்து(த்)திப் பாம்பில் திருநடஞ் சார்ந்து செய்யும்
சதிஅரையன் அன்று துதிவான் மயிலக் குகன்தன் அடிவ
சதியரை அன்று நினையும் என எண்ணேன் பிறர் சார்பு எனவே.

86. சாதரம் மா இசை தண் கடம்பு ஆர் புயம் சாமி ஐந்து
சாதரம் ஆ இசைந்து உற்றோய் அகம் எற்குத்தா திருத்தாள்
சாரத மா இசை வள்ளி அளிக்கத் தனித்து உண்டஈ
சாரத மா விசை மானத மா மயில் சையத்தனே.

87. சையம் அடங்கலையும் களித்து ஆடல் செய் சண்முகவி
சையம் மடங்கலை நேர் வீரவாகு போய் தான் கொணர் கொச்
சைஅமடு அங்கு அலையும்படியா ஊர்ந்தவ மயில்பொச்
சையமடங்கு அல்லை நீக்கி என்கா ஒளிசால் இனனே.

88. சாலி அன முல்லை வாய்ந்தவள் மாது இத்தரையில் புத்தி
சாலிஅனம் உலை ஏழைகட்கு ஈபவள் சாயலில் பாஞ்
சாலிஅல் முல்லை கூந்தல் பல் ஆர்ந்தவள் சாமி யுறை
சாலி அனம்முல்லை செய் மயில் வெற்பன் பின் சார்ந்தது என்னே.

89. சாந்தம் மலையத்தன் நைதல் இல் நாரதன் தாமரையோன்
சாந்து அமலை அத்தன் ஐயே மயிலத் தரணிய பால்
சாந்தம் அலை அத்தன் ஐ மருகா என்தன் சஞ்சல நோய்
சாந்தம் மலை அத்தனை ஆக நீ செய் சரண் உனக்கே.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

90. சரியும் கலையும் அளகமும் சோரும் சரோருகக் கைச்
சரியும் கலையும்படி ஆயினள் என்மின் தாஅருள்குஞ்
சரியும்கலையுள் இடி ஈந்தவளும் தழுவிய கே
சரிஉங்கு அலையு மனத்தார்க்கு அரும் மயில் சக்கரனே.

91. சக்கரை ஆன நல் கூற்றரை உய்ய செய்தான் நுதலில்
சக்கர்ஐ ஆனனர் மைந்தன் கணபதி சர்ப்பத்தைஅ
சக்கு அரையான் அனன் பின்னோன் குரு மயில் தாபரன்ம
சக்கரை யான் அனல் என்று அணுகாது அருள் சாகரனே!

92. சாகரம் மாவினைச் செற்றுக் துடி நடம் தாம் செயும்
விசாகர் மா வினை யேற்கும் மயிலத்தார் தந்தனர்நி
சா கர மா வில் நையில்லர் கரும்பு அங்கசன் கொன்றக
சாகு அரம் மா இன் ஐ பூணிக்குத் தேசிகர் சம்பத்தையே.

93. சம்பு அந்தராமையர் மைந்தர் மருகர் சடாக் கரத்தர்
சம்பந்தர்ஆம் மையர் பொன் ஒளிர் தாளம் தவளம் முத்துச்
சம்பந்தர் ஆம் ஐயர் வான் மயிலத்தர் தமது அன்பர் தாள்
சம் பந்தர் ஆம்மையர் நாரதர் கீரர் சதானந்தரே.

94. சதானந்தம் ஆன வடிவேன் முருக சமரபுரி ஈ
சதால் நந்து அம் மால் நனி ஏத்தும் மயிலத் தரணியில்வா
சதானம் தம் மான மொழி குஞ்சரிய சதுமறையின்
ச(த்)தா நந்த மாமதன் புரியாது எமைச் சார்ந்து அருளே.

95. சாது அனம் மா வனசம் தடம்சூழ் மயில்சையத்தின்நே
சாதன மா வனமாலி மருக தயைமிகும் ஈ
சாதனம் மா வல் நல் நேரும் வழி முலைத் தையல் வள்ளி
சாதனமா வனம் மேயவ நீக்குஎன்தன் சங்கடமே.

96. சங்கம் தரங்கம் களம் விழி நேர் வள்ளி தன் பதி ஆம்
சம் கந்தர் அங்கங்கள் அங்கத்து அணிந்திடும் சங்கரன்சேய்
சங்கம் தரம் கம் கனத்தினில் குட்டின சாமி பிர
சம்கந்தரம் அம் கம்கள் மயிலத்தர் சரண் நமக்கே.

97. சரசம் மிசை அரி ஈன்ற பணிமொழித் தையலர் பால்
சரசம் மிசையர் இல்லா மயிலத்தர் தயை மிகும் நெஞ்
சர்அசமிசை அரில் நீக்கி இவரும் சமர்த்தினர் மஞ்
சர்அசம் இசையர் இன்று என் நோய் ஒழித்தனர் சத்தியமே.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

98. சத்தம் மா வையத்து அமர் வெம்கதிர் மடி தந்தம் அங்கு
சத்தமா ஐ அத்தம் மன் துணைவா வள்ளி சங்கிரத்துஈ
சத்து அம் மாவை அத்து அயின்றவ வான் மயில் சையத்தக
சத்த மா வைஅத்த என் தலைக்கு உன் தாள் சலசத்தையே.

99. சலம் தரன் நாகம் தனுவாகக் கொள் பரன் சக்கரத்தால்
சலந்தரன் ஆகம் தடிந்தவன் சேய் அயில் சையத்த விஞ்சு
அலம் தரன் நாகந்தனில் துயில் மால் புகழ் சாமி என் சஞ்
சலம்தரனா கந்தா நீக்கல் உனக்கு சமர்த்தினனே.

100. சமர் அசம் அங்கு அளம் மேவ இவர்ந்தவ தண் குறிஞ்சி
சம் அரச மங்கு அளம் மேதையர் இல் மயில் தாபரத்த
சமம் ரசம் அம் களம் ஈ மக்கள் பொன் மனை தம்மொடு என்னை
சமரசம் மங்களமா வாழ செய் தயை சால் கடலே.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

மயில மாலை

ஆசிரியர்: இரத்தினமுதலியார்

காப்பு

மயிலமலைச் செவ்வேளை மன்னும் இமய
மயிலமலை தந்த மகவைக் - கயிலைமலைக்
கோமானுக்குஓம் உரைத்த கொற்றவனைப் பாடுவன் கைம்
மா மாமுகத்தனை உள் வைத்து.

நூல்

ஆரணப் பொருளே ஆர்அருட் கடலே
ஆரல்பால் அருந்து இளங்குருந்தே
ஆரணம் முடியான் மைந்தனே என உன்
அடிதனை ஏத்திட அருளாய்
வாரணக் கரத்து மாலும் அம்புயனும்
வளம்திகழ் தவளநாற் கோட்டு
வாரணத் தவனும் தொழுதிட மயில
மாமலை மன்னிய மணியே. 1

வானவர் பதமும் மண்ணவர் சுகமும்
மாறும்என்று உளத்திடை மதித்து உன்
தேன்அமர் வனசப் பதத்தினை எளியேன்
சிந்தைசெய்து உய்ந்திட விழைந்தேன்
கானவர் பிணையும் கடவுள் நற்பிடியும்
களித்து இருமருங்கு உறும்தருவே
வானவர் பொழிலின் வளமலி மயில
மாமலை மன்னிய மணியே. 2

எழுவகைப் பிறவி யுள்ளும் மிக்கு உயர்ந்த
இத்தனு அடைந்ததற்கு ஏற்ப
வழுவறு நினது திருவடித் தொண்டர்
மலர்அடிக்கு ஏவல் பூண்டு இலனே
செழுமணி கொழிக்கும் திரைப்புனல் அளித்த
சேயனே அறுவர்தங் கொங்கை
வழி அமுது உணும் செவ்வாயனே மயில
மாமலை மன்னிய மணியே. 3

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

ஆடவர் தமைப்புன் கோடரம் எனவே
ஆட்டி எம்மயலினைப் பூட்டும்
சூடக மடவார் தமை மறந்து உனது
துணைப்பதம் துதித்து உய்ய அருளாய்
பாடலம் புன்னை குரவு கோங்கு அசோகு
பகருமந் தாரைகள் பலவும்
மாடெலாம் மலர்கள் சொரிந்திடு மயில
மாமலை மன்னிய மணியே. 4

காமம் ஆதியமூ விருபகை கடிந்து
கருது சாதன சதுட் டயங்கள்
நேமமோடு அடைந்து பரநிலை உணர்ந்த
நின்மலரடி அணுகுவனோ
தாமரை விழியான் உந்தியில் வந்தோன்
தனைச்சிறையிட்டு முக்கணற்கு
மாமறைப் பொருளை வழுத்தினோய் மயில
மாமலை மன்னிய மணியே. 5

கொஞ்சு மின்னாரைக் கூற்றுவன் ஏவும்
கொடியதின் தூதென நினையாது
எஞ்சியே அவர்பால் உழன்றிடும் எளியேன்
இன்பவீடு அடையுமாறு அருளாய்
குஞ்சரி படீரப் பயோதரக் களபக்
கோடுஉழும் ஆறிரு புயனே
மஞ்சுறும் பொழில்கள் தழைத்திடும் மயில
மாமலை மன்னிய மணியே. 6

அரவின் மாமுடியில் சுமைஎனக் கிடந்த
அம்புவி உயிர் எவற்றினுக்கும்
பரமஇன்பு உதவும் ஒருவன்நீ எளியேன்
பருவரல் ஒழித்திலை என்னோ
குரவொடும் அன்பர் குயிற்று பாமாலை
கொள்ளும் முந்நான்கு திண்தோளா
மரவுரி வனைந்த முனிவரர் மயில
மாமலை மன்னிய மணியே. 7

மேவலர் வணங்கப் புவிமுழுது ஆண்டோர்
வெந்து மண்ணாவதைக் கண்டும்
பாவியேன் உளம் அவ்வாழ்வினை நயத்தல்
பழவினையாம் கொலோ அறியேன்
வீவுஇல் மாயூரம் மிசைஎழில் கிரண
விண்மணி எனவெயில் வீச

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

மாவுறு மலர்ப்பூஞ் சுனைமிகு மயில
  மாமலை மன்னிய மணியே. 8

கைப்பொருள் கவர்ந்து நகிலமே விலையாக்
  காட்டிமாள் பூட்டும் மென் கரிய
மைப்படு விழியார் மயலினை இகழ்ந்துஉன்
  மலரடி பணிந்திட அருளாய்
பைப்பணி மணிக்கங் கணம் என விசைத்த
  பசுபதி அருளிய சேம
வைப்பென எவரும் ஏத்திட மயில
  மாமலை மன்னிய மணியே. 9

இழிவுறும் வினையால் அணைந்த இத்தனுவை
  எனதுஎனது என்று இறுமாந்த
முழுமகன் தனக்கு உன் அன்பர்கள் அடையும்
  முத்தி இன்புறுவது எவ்வணமோ
புழுகுஅணி குயமான் மகள்மிசை விருப்பால்
  புனமதில் கணி என நின்றோய்
வழுவுஇலா விபுலம் மேவிய மயில
  மாமலை மன்னிய மணியே. 10

மனம்எனும் கவியை இயங்கிடாது இருத்தி
  வயங்கிய நிராசை கொள் அன்பர்
இனமதை மருவி நினதுபேர் அருளாம்
  இன்னமுது அருந்துவது என்றோ
பனிமலை உதவு நறுங்குழல் உமைஉள்
  பரிவொடும் ஈன்ற சண்முகனே
மனுமுரசு ஆர்க்கும் மங்கல மயில
  மாமலை மன்னிய மணியே. 11

தொடியணி மாதர் செய்திடும் விடயத்
  தோதகம் இகழ்ந்து நிர்மலவெண்
பொடிஅணி அடியர் ஏவல் செய்திட இப்
  புலையனேன் உளத்தினை இருத்தாய்
படியெலாம் புகழும் திருப்புகழ் உரைத்த
  பண்ணவர்க்கு இன்னருள் சுரந்த
வடிவமே மேகம் தவழ்ந்திடும் மயில
  மாமலை மன்னிய மணியே. 12

வீங்கிய உடலுக்கு இரையது தேடும்
  வேலையே பெரிதென இருந்தால்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

தீங்கரும்பு அனைய அண்ணலே நின்தாள்
சிந்தைசெய்து உய்வதுஎன்று உரையாய்
மாங்குயில் பாட மயில்நடம்ஆட
வண்டிசை தரப் பலாக்கனியால்
வாங்கவி த(ண்)ணுமை முழக்கிடும் மயில
மாமலை மன்னிய மணியே. 13

பஞ்ச பூதத்தால் ஆகிய உடலைப்
பாவியேன் சுமக்க நீ விதித்தால்
எஞ்சலில் அடியர் இகழும் இச்சுமையை
எளியனேன் ஒழிப்பது எவ்வணமோ
குஞ்சரம் முழக்கும் மறைமுனிவோர்கள்
கூறிடும் முழக்குஅம் பரத்தின்
மஞ்சுகள் முழக்கை அடக்கிடு மயில
மாமலை மன்னிய மணியே. 14

சுடரினைக் கண்ட விட்டிலை நிகர்க்கத்
தோகையர் விழிக்கடை நோக்காம்
இடரினில் படிந்து மெலிந்தஇக் கொடியேற்கு
இன்னருள் சுரக்குநாள் உளதோ
தொடர்என அவுணர் குடரினை அணிந்த
தூயவை வேல்அணி தோளா
வடுவினம் முரலும் பூம்பொழில் மயில
மாமலை மன்னிய மணியே. 15

எத்தனை நாளைக்கு இருப்பினும் ஒருநாள்
எய்துவன் கூற்றுவன் என்றே
சித்தம் நைந்து உருகும் அவலனேன் தனக்கு உன்
சீரருள் அளித்துஇனிது ஆளாய்
நத்தினை முழக்கித் தெவ்வரைச் சாடும்
நாரணன் மருகனே இனிய
மத்தமா லிகையோன் மதலையே மயில
மாமலை மன்னிய மணியே. 16

தாயினும் இனிய நின்தனை நினையாத்
தன்மையேன் எனினும்மிக்கு உயர்ந்த
நீயெனைப் புரந்து நன்னிலை அதனில்
நிறுத்துவது உன்பரம் அலவோ
பாயுமா மதவெண்கரி இவர் குலிசன்
பருவரல் ஒழித்திடும் பதியே

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

மாஇரு ஞாலம் புகழ்ந்திடும் மயில
மாமலை மன்னிய மணியே. 17

வான்வளி தீநீர் மண் இருசுடர்கள்
வணங்கிய உயிர்முதலியவோ
மேன்மைகொள் இவைகட்கு அணியமோ நினது
மெய்ந்நிலை இன்னது என்று உரையாய்
பான்மொழி முருகா என்று உனைத் துதிக்கப்
பரிவுடன் கரம்அருள் பதியே
மான்மகள் தழுவும் குமரனே மயில
மாமலை மன்னிய மணியே. 18

மால்அயன் அமரர் ஆதியர் இடரை
வன்னியிற் பஞ்சு என முடிக்கக்
கோலவேல் எடுத்த குமரனே எனது
குறைதவிர்த்து ஆள்வதும் பெரிதோ
சீலமாய முனிஉள இருளைச்
சிதறிடச் செயும் அணிவிளக்கே
வாலியந்தககன்தன் மருகனே மயில
மாமலை மன்னிய மணியே. 19

எத்தனை சொலியும் என்மனம் கொடிய
ஏந்திழை அவரிடத்து அன்றிப்
புத்தமுது அனைய நினதுசேவடியில்
பொருந்திலது இதனைநீ திருத்தாய்
முத்தனே முருகா மூவிரு முகனே
மூவுலகு எங்கணும் நிறைந்த
வத்துவே நீப மார்பனே மயில
மாமலை மன்னிய மணியே. 20

கொடி இனத்தோடும் அருந்துவது அறிந்தும்
குறியொடும் ஈட்டிய நிதியின்
கடுகளவேனும் அன்பருக்கு உதவாக்
கயவனேற்கு உன்அருள் வருமோ
செடிதவிர் அடியைக் கும்ப மாமுனிவன்
சென்னியில் வைத்த தேசிகனே
வடிவுறும் குவளைச் சுனைகள் ஆர்மயில
மாமலை மன்னிய மணியே. 21

அந்தகன் உயிரைப் பாசவெம் கயிற்றால்
அடக்கியவாறு என எனது

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

சிந்தையைக் காமர் விழியினால் வருத்தும்
சேயிழையார் மயல் அறுப்பாய்
கொந்தலர் சூதக் கனிதனைக் கடுவன்
கொய்துவந்து ஊடல் கொண்டிருக்கும்
மந்தியை அருத்தும் வளம் செறி மயில
மாமலை மன்னிய மணியே. 22

மண்ணினில் செல்வச் செருக்குளோர் தம்மை
மதித்திடா நெறியுநின் அன்பர்க்கு
அண்ணிய ஏவல் புரிந்திடும் அன்பும்
அடியனேற்கு உதவி நன்கு ஆளாய்
கண்ணனுக்கு ஆழி அளித்திடும் கருணைக்
கடலினில் எழுந்த தெள்ளமுதே
வண்ண முக்கண்ணி மைந்தனே மயில
மாமலை மன்னிய மணியே. 23

பாசவெம் காலதூதர்கள் என்னைப்
பகைத்துஇடர் செயவரும் அந்நாள்
ஆசுஅறு கருணை அண்ணலே நின்தாள்
அன்றிஎற்கு ஆதரவு உளதோ
வாசவன் மகள்தன் மைவிழி எனும்சீர்
வரியளி விரும்பு கற்பகமே
மாசுஅகல் முனிவர் குழுவுறு மயில
மாமலை மன்னிய மணியே. 24

இந்திர சாலம் என்னவே இருந்த
இப்புவி மயல்எலாம் ஒழித்துச்
சந்ததம் மாறா இன்பவீடு அருள்நின்
தாள்இனி இருத்தும்நாள் உளதோ
தொந்தமது அகன்ற பாலசித்தன் தன்
தூய்மனத்து இருந்த சிற்சுகமே
வந்தனை செய விண்ணவர்வரு மயில
மாமலை மன்னிய மணியே. 25

விடல்அரும் எனது மனம்எனும் சுரும்பர்
மெய்அடியார் உளம் பூத்த
மடல்அவிழ் நினது தாள்மலர்த் தேனை
மயக்குஅற அருந்துநாள் உளதோ
படரஉண் சேனைக் கடலினைக் கலக்கும்
பாரவை வேல்அணி கரனே

வடமதில் துயின்றோன் மருகனே மயில
மாமலை மன்னிய மணியே. 26

பார்முதல் ஆய பலஎனும் அண்டப்
பரப்புஎலாம் நிறைந்த நின்பாதச்
சீர்வன சங்கள்எனது உளம் எனும்திண்
சிலைதனில் அலர்வது எந்நாளோ
வேர்வறும் அறுவர் கரத்து எடுத்து அணைத்துஉள்
உவந்து பாராட்டியே உதவு
வார்முலை உண்ட மதலையே மயில
மாமலை மன்னிய மணியே. 27

அரவுஅகல் அல்குல் மாதர்மால் ஒட்டில்
அவலனேன் மனமெனும் பறவை
மருவியே சுடுவெம் மணல் விழு புழுப்போல்
வருந்துதல் ஒழித்து இனிஆளாய்
புரம் எரி செய்தோன் இடத்துஉறும்அனகப்
பூங்கொடி உதவும் என் பூவே
வரம் உற உலகில் சித்தர்(ஆ)ர் மயில
மாமலை மன்னிய மணியே. 28

ஒன்றைவிட்டு ஒன்றைப் பற்றியே கறங்கின்
உழலும் என் பேய்மனக் குரங்கு
வென்றிகொள் உனது மலரடி அதனை
வியப்புற நாடுவது என்றோ
கன்றினைக் குணிலா எறிந்து வான் விளவின்
கனிதனை உதிர்த்தவன் மருகா
மன்றல்ஆர் சோலை வளமலி மயில
மாமலை மன்னிய மணியே. 29

மிடிகெடப் புன் மானிடர்களைப் பாடி
வெந்துயர் உறாது நின் எழிலார்
அடியவரோடும் உனது அடி மலரை
அனுதினம் துதிக்குமாறு அருளாய்
குழல் இனிதுறு திண்மறவர்உள் களித்துக்
குரவைகள் பயின்றுவான் இறாலில்
வடிநறவு அருந்தும் வளமலி மயில
மாமலை மன்னிய மணியே. 30

கருங்கடா ஏறித் தண்டொடு பாசம்
கரத்தினில் தாங்கி உள் வெகுண்டு

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

வருங்கொடுங் காலன் நிரயமே வீழ்த்தா
வகை எனை அஞ்சல்என்று அருள்வாய்
இருங்கதிர்த் தினைகள் விதைத்துப் பின் பதத்தில்
எயின்மின்னார் புட்குலம்அதனை
மருங்கு எலாம் கடியும் ஒலிமிகு மயில
மாமலை மன்னிய மணியே. 31

மருமலர் தொடுத்துஉன் திருவடி தனக்கே
மாண்புறச் சாத்தி நேர் வணங்கிப்
பொருவுஇலா நினது புகழினைப் பாடப்
புன்மையற்கு அருள்வது எந்நாளோ
கருமுகில் வண்ணன் உதவுமின் இருவர்
களித்து உறும் பவளமால் வரையே
வரும் ஒரு பதினெண் கணங்களார் மயில
மாமலை மன்னிய மணியே. 32

காசினி உழன்றும் நதிகளில் தோய்ந்தும்
கனவரை முழையிடை இருந்தும்
மாசுஉறும் கரணம் அடங்கினர்க்கு அன்றி
அரிய நின் அருள் கிடைத்திடுமோ
தாசரின் இதய தாமரை மலரில்
தயங்கிய பசியசெந் தேனே
மாசுஇனம் அகன்றோர் தொழுதிடும் மயில
மாமலை மன்னிய மணியே. 33

கானகத்து உறையும் கொடும்புலி எனவே
காசினிதனில் உளோர் எவர்க்கும்
ஈனமே விளைக்கும் இழிவினேன் அடியார்
எழின்மிகு குழாம்அணுகுவனோ
ஞானமே வடிவாம் தொண்டரின் உளம்மா
நதிபுகும் அருள் பெருங்கடலே
வானம்ஆதிய ஐம்பூதமே மயில
மாமலை மன்னிய மணியே. 34

தனத்தினை மனைவிதனை எழில் மகவைத்
தகும்உயிர்த் துணையென விழைந்தே
வனத்துறும் இலவு காத்திடு சுகம்போல்
வாடுதல் ஒழித்துஇனிது ஆளாய்
குனித்து வெம்சிலையாக் கனகமால் வரையைக்
கொண்ட கற்பகம்தரு கனியே

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

வனத்துஉறு குறவர் துடியொலி மயில
மாமலை மன்னிய மணியே. 35

கண்இருண்டு உடலம் விதிர்த்துவாய் குழறக்
கையில்ஓர் கோல்கொடு என் சிந்தை
புண்உறா முனம்உன் பொன்னடி தனக்கே
பூசனை புரிந்திட அருளாய்
திண்ணிய எயினர் மான்எழில் தெய்வச்
சிந்துரம் இருமருங்கு உறவே
மண்ணவர் இயற்றும் தவத்தினால் மயில
மாமலை மன்னிய மணியே. 36

பற்பலவாய சமயவெங் கடலில்
பாவியேன் அமிழ்ந்து இடர்ப்படாமல்
பொற்புற நினது பாதபங்கயமாம்
புணைதரல் நினது அருட்கு அழகாம்
கற்பனை கடந்த மோனவா நந்தர்
களித்துஇனிது அருந்து தீங்கரும்பே
மற்புனை கயங்கள் பிளிறிடும் மயில
மாமலை மன்னிய மணியே. 37

எச்சமயத்தும் இருந்துநீ எவர்க்கும்
இதமகி தங்களை இயற்றும்
நிச்சயம் அதனை எளியனேன் அறிந்து
நிலைபெற நீஎனக்கு உணர்த்தாய்
நச்சரவு அணிந்த நாயகன் உரத்தின்
நடைபயில் சிற்றடிக் குருந்தே
வச்சிரத்து அரன் ஆதியர்தொழும் மயில
மாமலை மன்னிய மணியே. 38

எண்ணறு காலம் எண்ணறு பிறவி
எடுத்துஎடுத்து இளைத்த இத்துயரம்
புண்ணியர் அடையும் உனது பேர்அருளைப்
பொருந்தினால் அன்றி நீங்குறுமோ
திண்ணிய அசுரர் குலங்களை மாய்க்கச்
செங்கைவேல் எடுத்த சேவகனே
வண்ணஆடகம் செஞ்சினகரம் மயில
மாமலை மன்னிய மணியே. 39

ஒருவர்நிந்தனை செய்திடில் வெகுளியும் மற்
றொருவர்வந்தனை செயின் மகிழ்வும்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

தரும்எனது இதயச் சழக்கினை அகற்றித்
  தகுநிலை ஈதுஎனத் தெரிப்பாய்
திரிபுரம் அதைப்புன்முறுவலால் எரித்த
  சேவகன் அருளிய சேயே
மருமலர் நீப மார்பனே மயில
  மாமலை மன்னிய மணியே. 40

ஒன்பது வாயில் பீற்றையாம் உடலின்
  உள்எனை இருத்தி இன்பு அருளும்
நின்பெருந் திறலை அன்பு அணுவு இல்லா
  நீசனேன் நிகழ்த்தவும் எளிதோ
தென்பொதியையில் வாழ் முனிவரன் உளத்தில்
  தீஞ்சுவை உதவு செந்தேனே
வன்பரும் அன்பர்என மிளிர் மயில
  மாமலை மன்னிய மணியே. 41

இழிவினை உடையேன் கொடுஞ்செயல் தன்னை
  இயற்றினேன் அன்றி நின்அடிக்கே
வழிவழித் தொண்டு பூண்ட மாதவர்கள்
  மலரடித் தொண்டு பூண்டிலனே
குழுவி நால்திசையில் உள்ளவர் எவரும்
  கோதுஅறும் கார்த்திகை நாளில்
வழுவிலாது ஓங்கு விழவுசெய் மயில
  மாமலை மன்னிய மணியே. 42

மும்மலம் எனும் என் ஊத்தையைப் போக்க
  மூதறிவுடைய நல்அன்பர்
தம்மலர் அடிக்கே மஞ்சனம் ஆட்டும்
  தண்புனல் அன்றி வேறுஉளதோ
கம்மியர் எவரும் வியப்புஉறும் கிரணக்
  கனக வான்கோபுர மடங்கள்
மம்மரை அகற்றும் மண்டப மயில
  மாமலை மன்னிய மணியே. 43

எண்திசை முழுதும் நிறைந்த வல்இருள் இங்கு
  இரிந்திடத் தண்ணொளி பரப்பிக்
கொண்டநின் எழிலார் திருவுரு வினையின்
  கொடியனேன் காணுநாள் என்றோ
விண்தலத்தவர்கள் பூமழை பொழிய
  விஞ்சையர் இன்னிசை பாட

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

மண்டலத்தவர்கள் வணங்க வான் மயில
மாமலை மன்னிய மணியே. 44

எவ்வுயிர்தொறும் நீ ஒளித்திருந்து எவையும்
இயக்கு நின் பெருந்திறல் உணர்ந்தே
அவ்வுயிர் அனைத்தும் காண்தொறும் உளத்தில்
அன்பு மிக்குஉற எனக்கு அருளாய்
தெவ்வென எழுந்த சூர்உரம் கீண்ட
திண்கதிர் வேல்படைத் தேவே
மெவ்வ ஒண்மலரின் மணமலி மயில
மாமலை மன்னிய மணியே. 45

ஆயநான்மறைகள் அழுத்திய நெறியை
அகற்றிய அவலனை முடிவில்
தீயவெங்காலன் ஏதுசெய்வானோ
தெரிகிலேன் காத்தல் உன் கடனாம்
மாயிரு ஞாலம் புகழ் தமிழ்க்கீரன்
மகிழ்ந்திட வரைமுழை பிளந்தோய்
வாய்எழில் சோபானங்களார் மயில
மாமலை மன்னிய மணியே. 46

மனம்ஒரு புறத்தும் விழியொரு புறத்தும்
வாக்கொரு புறத்துமாய் நடித்தே
துனிமிக இயற்றும் மங்கையர் மயலைத்
துறந்து நின்கழல் அடைவேனோ
கனமறை மகங்கள் இயற்றும் மாமுனிவர்
களிப்புஉறக் கனிமுதல் உதவி
வனசரர்களும் நன்னெறி உறும் மயில
மாமலை மன்னிய மணியே. 47

வல்வினை யேற்குத் தனுகரண(ம்) ஆதி
வண்மையோடு உதவி இன்பதனை
ஒல்லையில் அடைதி என்றுஅருள் சுரந்த
உனைமறந்து இங்கு உழல்கின்றேன்
நல்லருள் மதம் மாமுகத்தனுக்கு இளைய
நாதனே நான்மறைப் பொருளே
மல்லல் அம்புவனம் புகழ்ந்திடும் மயில
மாமலை மன்னிய மணியே. 48

கொடிய வெந்துயரில் அமிழ்ந்திடச் செயினும்
கோதுஅறு நினது பேர்அருள்சேர்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

அடியவர் குழுவில் சேர்ப்பினும் நின்தாள்
அன்றி எற்கு ஆதரவு உளதோ
கடிகமழ் மலரால் அருச்சனை புரிந்து உன்
கழலிணைக்கண்டு நின் தொண்டர்
அடிகள்நீர் பெருக்கி நின்றிட மயில
மாமலை மன்னிய மணியே. 49

பொறிபுலன் கரணம் ஓய்ந்து கண்ணொளியின்
பொற்பு இழந்து ஐயும் மேலாகி
அறிவழிந்து உழலும் அங்குவந்து அஞ்சல்
அஞ்சல் என்று இனிது வந்துஆளாய்
செறிபொழில் மலர்த்தேன் நுகர்ந்து பண் பாடிச்
செய்ய வண்டினங்கள் அந்தியினில்
வறிது பங்கயத்தில் கண்வளர் மயில
மாமலை மன்னிய மணியே. 50

பசுந்துழாய் அரியும் பங்கயாத்தனனும்
பண்ணவர் கோனும் இன்புறுதல்
இசைந்த நின்கருணை அடைந்து எனில் எளியேன்
எங்ஙனம் அருள்இலாது உய்வேன்
குசந்தனைக் கரத்தில் கொண்ட மாதவர்கள்
கூறிடும் மறையின்உட் பொருளே
வசந்த மண்டபங்கள் இலகிய மயில
மாமலை மன்னிய மணியே. 51

அன்னை எத்தனையோ அப்பன் எத்தனையோ
அணிமனை மைந்தர் எத்தனையோ
இன்னும் எத்தனையோ பிறப்பிவன் அறியேன்
ஏழையேற்கு இத்துயர் ஒழிப்பாய்
தென்னுறு விசும்பைத் தீண்டு திண் கழையில்
செறிவுறு கணுக்களில் நின்று
மன்னு நித்திலங்கள் உதிர்ந்திடும் மயில
மாமலை மன்னிய மணியே. 52

இன்னும் ஓர் அன்னை எனைஎடுத்து அணைத்தே
எழில்உறும் குடமுலை அருத்தி
நன்னலம் செய்யா முனம்உனது அருளை
நாயினும் கடையனேற்கு ஈவாய்
நின்னருகு உறையும் என்னருந் தாயர்
நிறை உள மகிழ்வினைப் பொருந்தி

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

மன்னுநல் தவங்கள் இயற்றுசீர் மயில
மாமலை மன்னிய மணியே. 53

தாங்குஅரும் வினையால் ஏங்கிய எளியேன்
தன்முனம் வெகுண்டுஅடர் காலன்
வாம்கொடும் பகட்டில் வருமுனே உனது
மலர்ப்பதம் கண்டு உய அருளாய்
தேங்குழல் உமையாள் தரும்அமுது அருந்து
சேயனே தூய வான் பொருளே
மாம்பொழில் மயில்கள் அகவுசீர் மயில
மாமலை மன்னிய மணியே. 54

கஞ்சனும் மாலும் கழல்அரு மறையும்
காண்பரும் உனது பூங்கழலே
எஞ்சு அறிவுடையேன் உளத்திடை இருத்த
எண்ணினேன் நின்கருத்து எதுவோ
குஞ்சரி தன்னை அளித்த வானவர்கோன்
குறைஇறப் பொன்னகர் அளித்தோய்
மஞ்சரி மிகுந்த பொழில்களார் மயில
மாமலை மன்னிய மணியே. 55

தூய மாதவர்கள் அடிபணிந்தவர்கள்
சொல்லினை மறையென உணர்ந்தே
ஆய இவ்வுலக இச்சையை ஒழித்துன்
அடிதனை ஏத்து நாள் உளதோ
காயமாருதம் தீ அம்புவியோடு
கலந்துவேறாய் உறும் சித்தே
மாயவன் அயன்மால் போற்றிய மயில
மாமலை மன்னிய மணியே. 56

என்உளம் கலங்கும் இறுதியின் முதியோர்
இதயம் நொந்து அருகிருந்து அமிழ்தை
மன்னும்என் வாயில் ஒழிக்கிடக்கடையில்
வழியும் அத்ததியில்நீ வருவாய்
பன்னிரு புயத்துக் கடம்பனே உம்பர்
பரவும் மாநந்தனே பணிலம்
மன்னியதடங்கள் மிகுந்திடும் மயில
மாமலை மன்னிய மணியே. 57

கன்றினை விரும்பி வந்து பால்உதவிக்
கனிவுறும் பசுவென எளியேற்கு

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

இன்றுவந்து உலகில் எவைக்கும் மேலாய
  இன்பவீட்டினில் எனைஇருத்தாய்
குன்றுகள் எவையும் நின்றுஇருத்து அளியாக்
  கொளும் எழில் சண்முகத்து அரசே
மன்றலார் சந்து அடவிசெறி மயில
  மாமலை மன்னிய மணியே. 58

என்றனை விரும்பும் மனைவி ஆதியரில்
  இயமன்உள் வெகுண்டு எனைநாடும்
அன்றுஅவன் தன்னைத் தடுப்பவர் ஒருவர்
  அறிகிலேன் நின்தனை அல்லால்
வென்றி கொள் மாவைக் குலிச வேல்விடுத்து
  வீழ்த்த வல்வீரனே கனக
மன்றில்ஆடு இறைதன் மைந்தனே மயில
  மாமலை மன்னிய மணியே. 59

ஏகநாயகன்நீ இருக்க ஆறு எழுத்தும்
  இருக்க வெண்ணீறு நன்கு இருக்க
மோக வெங்கடலைத் தாண்டுமாறு அறியா
  மூடனேன் உய்வது எவ்வணமோ
வாகுஅயில் எடுத்தே மலையொடு மதமா
  வத்திர அரக்கனை ஒழித்தோய்
மாக துந்துமிகள் முழங்கிடும் மயில
  மாமலை மன்னிய மணியே. 60

வான்மதி தனக்கும் பூங்கணைகளுக்கும்
  வருந்தினள் எனது மின் அதற்குஉன்
கான்மலர்த் தரைத்தாவென இரந்தாள்
  கருணை வைத்த அவட்குஅதை ஈந்தான்
கூன்பிறை தவழும் மலய மாமுனிவன்
  முறைதவிர்த்து ஆண்ட பொற்குன்றே
மான்மகள் தழுவும் மோகனே மயில
  மாமலை மன்னிய மணியே. 61

எவ்வுயிர்தமையும் படைத்துஅளித்து அழிக்கும்
  இறைவன் நீ என்னுளத்து இருக்க
இவ்வயின் துயரம் எதுஎனக்கு இதனை
  எண்ணுறில் ஐயம் ஒன்று உளதோ
கொவ்வையின் அதரக் குஞ்சரியோடு
  கூடி இன்பு அடைந்து மான்மகளை

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

வவ்விய அனகக் கள்வனே மயில
மாமலை மன்னிய மணியே. 62

சொல்லரும் புகலிதனில் பலஉயிர்கள்
சுகமுற இன்ப வீட்டிருத்தும்
வல்லஉன் சரிதை வினவி நற்கமல
மலரடி தனில் குறை இரந்தேன்
வெல்லரு மாயை இயற்றிடும் கொடிய
விலங்கலைப் பொடிசெயும் குகனே
மல்அரி முழக்கம் மிகுந்திடும் மயில
மாமலை மன்னிய மணியே. 63

இக்குறு கரத்து மாரவேள் கணைகள்
இலக்குஎன ஏழையேன் இருந்தே
செக்குறு திலம்போல் வருத்துதல் ஒழித்து உன்
செய்யதாள் நிழல்அளித்து ஆள்வாய்
அக்கரவு அணிந்த மிக்கவன் உதவும்
ஆறுமாமுகக் குணக் குன்றே
மைக்கடல் கலிங்கப் புவிதொழும் மயில
மாமலை மன்னிய மணியே. 64

உடல்உயிர் போலும் மனைவி ஆதியர்கள்
ஓதுமென் அடங்கியக் கால்
கடுமொழி புகல்வர் இதனை ஆன்அறிந்து
கடுவென விட அருள்புரிவாய்
கடகளிற்று அனைய சிங்கமாமுகனைக்
காலனூர் புகுந்திட விடுத்த
வடுவிலா வென்றி வேலனே மயில
மாமலை மன்னிய மணியே. 65

ஆசையாம் பேய்என்றனைப் பிடித்து ஆட்ட
அறிவினைஇழந்து அயர்வடைந்தேன்
தேசுறு நினது வெண்திருநீற்றைச்
சிறிதுஅளித்து இன்னலைத் தீர்ப்பாய்
தூசுகள் அன்பர் முருகனே குகனே
தூயனே எனுமொழி கேட்டு
மாசுஅறும் கிளிகள் மொழிபயில் மயில
மாமலை மன்னிய மணியே. 66

மையுறு விழியார் தம்சுகம் அணுவாம்
மற்றுஅவ ரால்வருந் துயரம்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

ஐயகோ மலையாம் ஆதலால் அவரை
அகன்றுஉயும் நெறிஎனக்கு அருள்வாய்
பையரவு அணையின் மிசைத்துயில் அமர்ந்த
பசுந்துழாய் மாதவன் மருகா
வையகத்து எவரும் துதிசெயும் மயில
மாமலை மன்னிய மணியே. 67

விண்படு பிறையின் எயிற்றொடும் அழல்சேர்
விழியொடும் கருமுகில் வருவாய்த்
திண்படு பகட்டில் வரும்கொடுங் காலன்
செய்இடர் எனக்குஉறாது ஆளாய்
பண்படு மொழி நல்பசுங்குயில் அளித்த
பன்னிரு கண்ணுடைக் கரும்பே
வண்படு பொழிலில் சசிதவழ் மயில
மாமலை மன்னிய மணியே. 68

மதலை யாயஎழில் கௌமாரமாய்த் தளர்ந்த
வயோதிகமாய்க் கொடும் பிணமாய்
இதமறுந் தீயாய்ச் சாம்பராய்ப் போகும்
இவ்வுடலால் பயன் என்றோ
துதிபெறும் அகில முழுதையும் படைத்த
தூயனே ஆயநான்மறை தேர்
மதிவரோர் உறையும் சீர்மிகு மயில
மாமலை மன்னிய மணியே. 69

முத்தென நகையும் அத்திர விழியும்
முகில்எனும் குழலொடும் எனையே
எத்திய மொழியோடு இலகுமின்னாரை
இகழ்ந்துநான் சுகமுற அருளாய்
தத்துநீர்க் கயத்தில் குடைந்து நீறு அணிந்து
தகும்உனைப் புகழ்ந்துநன் மலர்த்தா
மத்தினைத் தொடுக்கும் அன்பர்சூழ் மயில
மாமலை மன்னிய மணியே. 70

கண்புனல் துளியேன் வெண்திருநீற்றைக்
கவின்பெற அணிந்திலேன் அடியார்
அண்மையில் செல்லேன் ஆறெழுத்து ஓதேன்
ஆயின்இன்பு அடைவது எவ்வணமோ
பெண்மைபாதி யன்தன் புதல்வனே மலயப்
பிறங்கலில் உறையும் மாமுனிவன்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

வண்மைசேர் உளத்தில் வாசனே மயில
மாமலை மன்னிய மணியே. 71

மங்கையர் குழலை முகத்தினைக் குயத்தை
வாடிடை தன்னையான் பார்த்துக்
கங்குல் மாமதியம் சிலம்புநூல் என்னும்
கடையனேன் உய்வது எவ்வணமோ
அங்கைஐந்துறும் மாதங்கம்உள் களிக்கும்
அறுமுகம் உடைய கேசரியே
வங்கணம் அருவி அன்பர் சூழ் மயில
மாமலை மன்னிய மணியே. 72

பொன்மனை மைந்தர் ஆதிய துயிலும்
போதினிவ் அவைகள்அங்கு உளவோ
என்ன நன்கு அறிந்து இங்கு அவை துறந்து
எண்ணும் நல்லறிவு எனக்கு அருளாய்
தென்னுரு கருணைக்கடல் சிவஞான
தேசிகன் பணி பதாம்புயனே
மன்னுதி குறவர் மணம்செயும் மயில
மாமலை மன்னிய மணியே. 73

வாரணம் ஊர்ந்தும் குடைநிழல் இருந்தும்
மைந்தர்கள் பலர்தமைப் பயந்தும்
வாரண முலையார்க்கூடி வாழ்ந்து இருந்தும்
வரும்பயன் ஒன்றுஇங்கு இலையே
வாரணத் துவசம் அங்கையில் எடுத்த
வள்ளலே விள்அரும் பொருளே
வாரண நாதச் சந்நிதி மயில
மாமலை மன்னிய மணியே. 74

ஒருசிறியேனுக்கு இருவினை குணம்மூன்று
ஓது நாற்கரண ஐம்புலன்கள்
வருமறுகாம ஆதிகள் எழுபிறவி
வகுப்புஎலாம் எட்டிடாது அருள்வாய்
திருமலி சோபானங்களில் சேவை
செய்திடச் செல்பவ ரோடு
வருபவர்தாமும் நெருக்குறு மயில
மாமலை மன்னிய மணியே. 75

அனங்கன்நேர் வடிவும்தனதன் நேர்நிதியும்
அரம்பைநேர் மனைவி ஆதிகளும்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

பினம்படும் எனும்ஓர் நிச்சய அறிவுஇப்
  பேதையேற்கு உறுவது எந்நாளோ
கனம்படு மறையோர் மகங்கள்நன்கு இயற்றிக்
  கவின்உறும் வானகத் தவர்க்கு
வனம்பெற அவியை உதவும்சீர் மயில
  மாமலை மன்னிய மணியே. 76

வினைத்தொகை எங்கே பிறவிஎங்கே என்
  மேல்வரும் கூற்றுவன் எங்கே
அனைத்தும் மாய்ந்திடுமே உழலும் என்பால்உன்
  அருள் கடைக்கண் சிறிது உறுமேல்
அனைத்தினும் கலந்த தனிச்சுடர் ஒளியே
  ஐங்கணை கரத்தினில் கொளுகா
மனைத்தெறும் ஒருவன் மதலையே மயில
  மாமலை மன்னிய மணியே. 77

கொடுவிடம் அனைய துட்டர்கள் உறவைக்
  கொண்டிடா நெறியும் நல்அன்பர்
அடியிணைத் தொண்டும் உனதுஇடத்து அன்பும்
  அன்பும் அவலனேற்கு உதவுவதுஎன்றோ
பொடியணி பரமன் புதல்வனே உம்பர்
  போற்றுபூம் பாதனே எழில்கா
வடிகள்நால் திசையோர் கொணர்ந்திடும் மயில
  மாமலை மன்னிய மணியே. 78

நின்னடி வணங்க நின்புகழ்பாட
  நின்தளிதனை வலம்புரிய
மன்னுநின் அடியர்க்கு ஏவல்செய்திட இவ்
  வறியனேற்கு அருள்வது என்று அறியேன்
பன்னரும் பொருளே பழமறைமுடிவே
  பாந்தள்அம் குழுஉளம் நடுங்கும்
வன்னமாயூரப் பரியனே மயில
  மாமலை மன்னிய மணியே. 79

மரகத மலைமேல் பவளமால் வரைபோல்
  மயில்மிசை இலகு நின் உருவை
விரவுறும் அன்போடு எனது இருகண்கள்
  வியப்புறக் காணும்நாள் என்றோ
சரதநல் அடியர் உளத்திடைச் சுரக்கும்
  தகவுறும் அமுத இன்புஊற்றே

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

வரதனே கருணை வானமே மயில
மாமலை மன்னிய மணியே. 80

எத்தனைபிறவி எடுப்பினும் எளியேன்
இசைவென்நின் எழில் அடிதனக்கே
சித்தம்நைந்து உருகும் அன்பர்உளம்களிக்கும்
செய்யநல் தொண்டு எனக்குஉறுமேல்
வித்தகமேனிச் செஞ்சடைப் பரமன்
வியக்க ஓர் மொழி சொலும்ஆறு
வத்திரம் உடைய வள்ளலே மயில
மாமலை மன்னிய மணியே. 81

விதியினால் வனைந்த உடல்எனும் கலத்தை
வெம்சமன் உடைக்கு நாள்அளவும்
துதிபெறும் நினது திருவடி மலர்க்கே
தொண்டு இயற்றிட எனக்குஅருளாய்
திதிமகர் தம்மைசெறுத்து இமையோர்தம்
தீங்கினை அகற்றிய தேவே
மதிகதிர் ஊரும் சினகர மயில
மாமலை மன்னிய மணியே. 82

நான்எனது என்னும் வல்அகங்கார
நவை மமகார மாம்காட்டை
ஆனநின் அருளாம் கோடரி அதனால்
அழித்திடின் அன்றிவேர் அறுமோ
கான்இளமதிசேர் செஞ்சடைப்பரமன்
குமரனே செங்கதிர்ப்பரிதி
மானும்வேல் ஏந்தும் வாகனே மயில
மாமலை மன்னிய மணியே. 83

பிறவியாம் கடலைக்கடந்து நல்இன்பப்
பெருங்கரை ஏறிட நினது
நறைமலர் அடியாம் புணைதனைஉழலும்
நாயினேற்கு ஈந்திட நினைவாய்
கறையுறு களத்தன் உளத்தினில் இன்பம்
கதித்திட ஆடல்செய் குருந்தே
மறையவர் வேதம் சுரமிகு மயில
மாமலை மன்னிய மணியே. 84

ஆஎழில் உதரத்து உறுபெரும்துயரும்
அம்புவிதனில் வரும்துயரும்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

மாயும் அந்நாளில் உறும்அருந்துயரும்
வந்துஎனைப் பொருந்திடாது ஆள்வாய்
தீயவெஞ்சமண வல்இருள் அதனைச்
சிதறிடச் செய்தி வாகரனே
மாயவன் மகள்தன் மணவனே மயில
மாமலை மன்னிய மணியே. 85

தாரணி அதனில் இறப்பொடு பிறப்பும்
தமியனேன் தனக்கு வந்துஉறுதல்
சீர்அணுவேனும் அடைந்திடாக் கொடிய
சிந்தையால் அன்றிவேறு உளதோ
நாரணி நிறைந்த பூரணிஎவைக்கும்
நாயகி மணிவடத்தோடு
வாரணி முலையாள் மைந்தனே மயில
மாமலை மன்னிய மணியே. 86

தீயமாமாயை இயற்றும் ஓர் சிலம்பைச்
சிறுதுகள்படுத்திய திறம்போல்
நீஎனக்கு இரங்கி எளியனேன் எளியனேன் வினையாம்
நெடுங்கிரியையும் பொடிசெய்வாய்
தாயினும் சிறந்த அருட்பெருங்கடலே
தகுவரைக்கறுவு கோள ரியே
வாய்அருந்தவர்கள் துதித்திடும் மயில
மாமலை மன்னிய மணியே. 87

மண்டலம் ஆதி யாவையும் நின்னுள்
வைத்து அருந்தாய்என அருள்நீ
மண்டலம் உற்ற எளியனேன் உளத்தில்
மருவி நன்னலமுறத் தெரிப்பாய்
மண்டல அமணர்தமைக் கழுவுஏற்றும்
மன்னனே வானுறு மதிய
மண்டலம் அளவும் உயர்ந்திடும் மயில
மாமலை மன்னிய மணியே. 88

ஒரிநாய்கழுகுக்கு இரையெனும் உடலை
ஓம்பி நான் இருந்ததே அன்றி
ஆரியன்ஆய நினதுசேவடிக்கே
அன்பு பூண்டு ஒழுகிலேன் அந்தோ
ஈரிரு மருப்புக் கரிக்குஇறைக்கு அருள்வோய்
எழில்உறும் பொழிலில்நல் மலர்த்தேன்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

மாரிபோல் துளிக்கும் வளமலி மயில
மாமலை மன்னிய மணியே. 89

ஆரணப்பொருளாம் ஆறுஎழுத்து இயல்பும்
அரியவெண்ணீறும் நன்னிலையும்
சீரண அடியார் பெருமையும் எளியேன்
சிந்தையில் தெளிந்திட அருளாய்
பூரணன் நுதற்கண் புலிங்கமே சுரர்க்குப்
பொன்உலகு அளித்த வான்தருவே
வாரணம் இலங்கு துவசனே மயில
மாமலை மன்னிய மணியே. 90

எண்திசைக் கிரிஎன்று இசைத்திடும் யாவும்
எளியனேன் இயற்றிடும் கொடிய
திண்திறல் வினையாம் மலைக்கு நேராமோ
சிறியனேன் உய்வது எவ்வணமோ
குண்டிகைக்கரத்துக்குறுமுனி சிரத்தில்
கோதுஅறச் சூட்டும் பூம்பதனே
வண்டிசை கூரும் மலர்ப்பொழில் மயில
மாமலை மன்னிய மணியே. 91

மலந்தனை அகற்றி நலந்தனை உதவ
வயங்கும்மீர் அன்னியர் ஓடும்
கலந்து இழிவுடையேன் உளந்தனில் அரிய
கவின் சினகரம்என இருப்பாய்
துலங்கிடும் இம சயிலம் தருபாவை
துணைக்கர மலர்உறும் கரும்பே
வலம்பெறும் கிரண வேலனே மயில
மாமலை மன்னிய மணியே. 92

பொன்எழிந்தளில் இல்லை என்பதுபோலப்
புகலும்என் மனத்தினைஅன்றித்
துன்னிய உலக இன்ப துன்பங்களோடு
ஒன்றுமோ அந்நிலை அருளாய்
வன்னமாமயிலை வாரணத்தைவெம்
மறிதனை ஊர்தியாக் கொண்ட
மன்னனே கருணை வாரியே மயில
மாமலை மன்னிய மணியே. 93

மனம்ஒடுங்கியபின் இடர்செயும் உலகம்
வயங்குமோ ஆகலின் அதனை

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

இனிதுற அடக்கும் நன்னெறி அதனை
ஈதென என்றனக்கு இசைப்பாய்
கனி தனக்கு உலகை வலம்வர இசைந்த
கந்தனே எழில்உறும் உபய
வனிதையர் இருபால் உற உயர் மயில
மாமலை மன்னிய மணியே. 94

மதுஅருந்தினர் போல் உளந்தடுமாறி
மாநிலத்து உழன்றனன் அல்லால்
இதம் உற எனது நிலை தெளிந்திலன்இவ்
எளியனேற்கு இன்னருள் சுரப்பாய்
புதுமணநீப மதுமலர் மாலை
புயத்தினில் அணிந்த புண்ணியனே
வதுவைகள் குன்றாப் பொங்கநார் மயில
மாமலை மன்னிய மணியே. 95

புனலினில்எழுந்த புற்புதம் அனைய
பொய்யுட வினைஒழிந்திடுமின்
நினதுஅருள்வடிவை ஏழையேன்காண
நீல மாயூரமேல் வருவாய்
கனைகடல் சுவறக் கதிர் அயில் விடுத்த
கந்தனே சேந்தனே கண்ணன்
மனம் மிக மகிழும் மருகனே மயில
மாமலை மன்னிய மணியே. 96

ஊத்தையாம் உடலினுள் எனை இருத்தி
ஊழ்வினை யின்வழிகாட்டும்
சூத்திர தாரியாம் உனை என்னுள்
தோமறக் காணும் நாள் என்றோ
நாத்திகர் உளத்தில் பாய்ந்திடா ஒளியே
நனி விரும்பினர் தமக்குஉறவே
வாத்திய ஒலிகள் மிகுந்திடும் மயில
மாமலை மன்னிய மணியே. 97

ஆரியனாகிப் பதிஅது பசுவீது
அரியதோர் பாசமீது என்ன
நேருற எனக்கு நீசொலாவிடத்து
நிச்சயம் தெரியுமோ எந்தாய்
வார்உறும் கொங்கை குறமினால் அளித்த
மாவினை உண்ட மாதவனே

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

மாரிகள் என்றும் குறைவிலா மயில
மாமலை மன்னிய மணியே. 98

விருப்பொடு வெறுப்பும் அகற்றி மற்றுஎவைக்கு
மேலதாம் சுகக்கடல் மூழ்கி
இருக்க என்உளத்தில் பரமதேசிகனாய்
இனிதிருந்து ஓர்மொழி இசைப்பாய்
பருப்பத வரையன் பயந்த பொன்பாவை
பாலனே பாத மாமயிலோய்
மருக்கொளுந் தெரியல் மார்பனே மயில
மாமலை மன்னிய மணியே. 99

மாமறைக்குஅரிய நினதுபேரொளியை
வயங்கும்என் உளந்தனில் கருதி
ஏமவோ வியம்போல் இயக்கற இருக்க
எண்ணினேன் இனிதுஅருள்புரிவாய்
தாமரைக்கிழத்தி கலைமகள் புவியில்
தழைந்திடச் சைவம் மேலோங்க
வாமமார் அடியர் வாழ்ந்திட மயில
மாமலை மன்னிய மணியே. 100

முற்றும்

வேலும் மயிலும் துணை

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

ஸ்ரீமயிலத்து இரட்டை மணிமாலை
ஆசிரியர்: வேங்கடாசல நாயகர்

புதுவைக்கு அடுத்த ஒர்லெயான்பேட்டை சோதிடம் நாராயணநாயகன் குமாரரும் மகாவித்துவான் பு-அ-பெரியசாமிப் பிள்ளை அவர்கள் மாணாக்கரில் ஒருவரும் ஆகிய வேங்கடாசல நாயகரால் இயற்றிய புதுவை நெல்லித்தோப்பு மகா-ள-ஸ்ரீ கா-மநு-நாராயணசாமி ஆசாரி அவர்களால் புதுவை ஜவுளி - கந்த குருசாமிப்பிள்ளை அச்சுக்கூடத்திற் பதிப்பிக்கப்பட்டது, 1902.

சிறப்புப் பாயிரம்
இந்நூல் ஆசிரியர்க்கு ஆசிரியர் ஆகிய
புதுவை மகாவித்துவான் மகா - ள - ஸ்ரீ
பு - அ - பெரியசாமிபிள்ளை அவர்கள் கூறியது

1. தேவார் மயிலமலைச் செவ்வேட்கு அணிந்து உய்ந்தான்
மாவார் இரட்டைமணி மாலை செய்து - பாவாணர்க்கு
அற்புஉடையான் வேங்கடாசல வேள் மூவாத
கற்புடையான் சொல் முழுதுங் கண்டு.

மகா. வித்துவான் மகா - ள - ஸ்ரீ
பு - அ - பெரியசாமிப்பிள்ளை அவர்கள் மாணாக்கர்
சி - பங்காருபத்தரவர்கள் கூறியது.

2. பன்னு மயிலக் குகன்மேல் பா வேங்க டாசல மான்
மன்னும் இரட்டை மணிமாலை செற்றான் -என்உளம் வாழ்
நற்பெரிய சாமி எனும் நல்லா சிரியர்இடம்
கற்பனவை குற்றம் அறக் கற்று.

3. புலவர் எலாம் போற்றும் புலவற்கே அம்ம
மலைவுஇல் இரட்டைமணி மாலை - மிலைச்சினன் ஆல்
நாவலர் மெச்சக் கவிசொல்நம் வேங்கடாசலவேள்
பூவில்இது வன்றோ புகழ்.

குகாயநம

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

ஸ்ரீ மயிலத்து இரட்டைமணிமாலை
விநாயகர் காப்பு

எழில் மயில வேளுக்கு இரட்டைமணி மாலை
வழு ஒழிய ஓதி வனையப் - பொழிமதஞ்சேர்
அத்திமுகத்து எந்தைஅடி அம்புயங்களைத் துணையாப்
பத்தியொடு என்னெஞ்சே பற்று.

ஸ்ரீ பாலைய சித்தர்துதி

சித்தி பலவாய் விளங்கித் தெய்வம் ஒன்று உண்டு என்று உலகம்
நத்தி உய்யச் செய்த ருளும் நம் பால - சித்தமுனி
நாதனை அறா அன்பின் நண்ணுவையே நெஞ்சே நீ
வேதனை உறாது என்றுமே.

நூல்

1. பூவார் மயிலமலைப் புங்கவ நின்சேவடி மென்
பூவா அன்றுஓங்கு வன்மை பூண்டதே - ஓவாது
வான்மன் அமரர்முடி மாண் அடியர் தூவுஅலர்நா
யேன்மனக் கற்றாக் கவுற லின்.

2. இந்திரையாம் மான்மகளைக் கிழஉருவு ஏற்று வந்து
தந்திரமாக் கொள்குமரன் மயிலத்தடம் சிலம்பார்
சந்திரன் மேவவும் காரிருள் காட்டும் சமர்த்துறும்இவ்
இந்திரசாலத் தொழிற்குப் பரிசுஎன்ன ஏந்திழையே.

3. இரை எனக் கோட்பாம்பை எழில் மயில்கள் கொத்த
விரைவின் எழுமயில வெற்பன் - விரைமலர்த்தாள்
பால்அன்பினரைப் பரவுவரைக் கண்டு கருங்
காலன் பணிவான் கணித்து.

4. கண்ணப் பயன்தரு மானிடனுக்கு நற்காதில் அவன்
எண்ணப்படி சொல்குகன் மயிலக் கோ இளங்கொடியே
கண்ணப்பர் வாயிலார் பாணி காளத்திக் கடவுள்முடி
அண்ணப்படாது இருந்தால் எங்ஙன் ஓதுவர் அன்பர் என்றே.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

5. என்தன் பிழைகள் எலாம் எண்ணில் எந்தாய் மாமேருக்
குன்றும் பின்நாம் எடுத்துக் கூறல் என்னின் - உன்றன்
அடியே கதியென்று அடைந்தேன் மயில
வடிவேலாய் ஆள்வாய் மகிழ்ந்து.

6. துய்அளித்தார் முருகன் வாழ் கடுவன் சுவைத் திணைமா
வையளித் தாவுமுடி மாமயில் வரையினில் இன்
மையளித் தாரிடையாய் இரு கிண்ண மறைத்துஅ முது
கையளித்தால் எங்கன்உள் கொண்ட இனிமையைக் காணுவதே.

7. தேடி மயிலச் சிலம்பைச் சேவித்துப் பைந்தமிழால்
பாடி மனம் நைந்து உருகும் பாவிகட்கும் —— வீடு அருள்வான்
வான்நாடு இடத்தன் மகள் நாயகன் குகன்நம்
மான்நாடு இடத்தன் மகன்.

8. கம்பைக் குரல் கறிக்குஞ் சுகம் தம்மைக் கடிகுறவர்
கொம்பைக் கலந்திடும் வேடன் மயிலக்குல வரையாய்
வம்பைக் கெடுத்துப் பொருங் கரியெற்கா வரவிடுத்தாய்
அம்பைக் கைதொட்டு விடாது இருந்தால் செயம் அங்கசற்கே.

9. அங்கி எனக் காந்தள் அருகில் குரங்கினங்கள்
தங்கிக் குளிர்காயுந் தண்மயில அங்கிரிவாழ்
தண்டாயுதத்தோய் தமியேனை எத்துயரும்
அண்டாது இருக்க அருள்.

10. அரிதான் களிக்கு மருகன் மறைக்கு எலாம் அப்புறத்தன்
கிரி சாசனக் குகனார் மயில் ஓங்கல் கிளிமொழியே
கரிதேர் அயில் வில்லளிக்காய் மதன்போர் கடக்க ஒரு
பரிகாரங் காட்டினை பண்டிதையோ நீ பகருவையே.

11. கருங்கல் மனத்துக் காலன் கைப்படாது ஆளும்
அருங்கல் மனத்துஅக் குரங்கு வானத்தருவின்
ஏறக் கரங்கள் எடுக்கு மயிலத்தோய் எற்கு
ஆறுஅக் கரங்கள் அருள்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

12. அஃகொண்ட கண்டன்இடம்கொண்ட அஃஅம்மைக்கு அரும்புதல்வன்
சொல்கொண்ட தீரன் மயிலப் பொருப்பில் துளங்குமுலைப்
பல்கொண்ட பெண்ணமுதே நயந்தோன்ற நின்பாலின்று
கல்கண்டு உவந்தனன் மேல்இனிச் சக்கரைக் காட்டு எனக்கே.

13. என்றும் துயரம் இராது கேள் என்சொல்லை
இன்று மனம் ஏசற்று இருந்துநீ - வன்திறல் சேர்
சத்தி தரித்தக் கரத்துச் சண்முகனே வான்மயில
வித்தகனேஎன்று ஒருகால் வேண்டு.

14. வேங்கொடும் பாலையில் ஓர்புலவோன் இடம் மெய்ப்புகழ்
வாங்கு மேலாம் புலவன் வாழ் மயின்மலை வல்லியம் புள்
------- மாத்திரங் காட்டில் என்னாம் உய்யன் ஆடுஅரவ
--------- காட்டினுள் காட்டுவேன் கண்ணன் ஆடலையே.

15. ஆடும் பித்தன் சேய் அறுதலையன் மான்திருடி
------- வரைக்குடியன் கொள்மயிலன் - ஆடுங்
--------- குறியில்லான் கிழவன் கோதை இவன் தன்னை
------- குறித்து நின்றான் என் மால்.

16. -------- முருகா முருகா என வாளறு கைப்
——பாது வளர்த்து அருள் சித்தன் மயிலப் பொருப்பு அணையாய்
சூதுகள் விட்டது போற்றி ----------
----

17. ------------- மாயில ஓங்கலில் ஓர் விம்மி -------
------------- மாற்றாரைப் பாய்ந்து ஏத்தின் அருக்கிள் ---
------------ வடிவாம் ஐயை வேட்டுஅணைந்தின் -----------
------------- மான்பிடியும் உன்.

18. உருளார் தொடைக் கடப்பந் தோளன் உண்மை உடையா
பொருளாய் விளங்கு முருகன் மயில்வரைப் பூங்கொடியே
தெருளார் மணிப்பூண் தனத்துகிர் நேடித்திகைத்திடும் என்று
இருளான் மறைத்து நின்றாய் வஞ்சி என்னற்கு இசைந்ததுவே.

19. இழிந்த வறுமை மடநோய் எத்தீங்கும் அற்றும்
கழிந்தஅவ் அருமை வாழ்வைக் காண்பார் - செழுங்கருணை

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

வெள்ளம் பொழி நயன வேள்மயில வெற்பை வலம்
உள்ளன்பின் வந்துதுதித் தோர்.

20. ஓமப் புகை மால் என ஆடும் மஞ்ஞை மேல் ஓங்கு வெட்சித்-
தாமப் புயச் சண்முகன் வாழ் மயிலச் சயிலம் அன்னீர்
காமச் சொடைக்கு இளநீர் சுமாத்தந்தீர் என் கல்அகத்தும்
---------- படையும் அளிக்கின் நன்றொ சுகம் பூங்குழலே.

21. வான்வாழ்க நான்குமறை வாழ்க மலையுறும் குவட்டுக்
கோன்வாழ்க சித்தர் குழாம் வாழ்க - மேன்மையுறும்
நல்லோரும் வாழ்க இசைத்தோர் கேட்டோரும்
எல்லோரும் வாழ்க இனிது.

முற்றிற்று.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

மயிலவேள் அகவல்
ஆசிரியர்: P.N. இராஜமாணிக்கம்

சாற்றுக் கவிகள்

இது

புதுவை அரவிந்த ஆச்சிரமம் சுவாமி சுத்தானந்த பாரதியார் அவர்கள் அன்புடன் திருவாய் மலர்ந்து அருளியது "அன்பு மாணிக்கத்திற்குச் சிவமாணிக்கம் அருள் புரிக" மயிலை வேலன் அகவல் மிகவும் இனிமையாய் இருக்கிறது. இறைவனுக்குச் சூட்டி இன்னருள் பெறுக!

அடியார் கலிதீர்த்து அருள்வான் அபயம்
முடியா வினை யாவும் முடித் திடுவான்
ஒடியா உரமும் திருவும் தருவான்
வடிவே லனைவாழ்த் திடுவாய் மனமே!

அன்பு, அன்பு, அன்பு!
சுத்தானந்த பாரதி

இது

புதுவைத் தமிழ்க்கல்விச் சங்கத் தலைவரும்
கண்ணப்பர் கலம்பகம் திருஅருணைப் பதிற்றுப்பத்தந்தாதி முதலிய நூலாசிரியரும்
தமிழ்மகவு, பொன்மலர் முதலிய பத்திர ஆசிரியரும் ஆகிய உயர்திருவாளர் வி.துரைசாமி முதலியார் கூறியது.

சாற்றுக்கவி

வள்ளிக்கு மரமாகி நிழல்தந்து கிழமான வடிவாகி முன்
தெள்ளித் தரும் சீர்கொள் திணைமாவுடன் தேன் சிறந்து உண்டு நம்
உள்ளத்துள் உறைகின்ற மயிலக் குகன் தாளில் உருகும் துதி
விள்ளுற்று விழை ராஜமாணிக்கன் அருள் பெற்று மிக வாழியே

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

இது

புதுவை கவர்ன்மெண்ட் பாடசாலைத் தலைமைத் தமிழ்ப் பண்டிதரும் நெல்லித்தோப்பு அறிவு விளக்க சங்கத் தலைவரும் ஆகிய உயர் திருவாளர் கோ, இராமாநுஜ செட்டியார் அவர்கள் கூறியது

மயிலம்எனும் சயிலமா முருகற்கு அன்பு
பயில அகவல் ஒன்றுபாடி எயில்உடுத்த
அன்புஆக்கை வாழ் ராஜமாணிக்கமால் அளித்திட்டு
இன்புஆக்கை பெற்றுஉய்ந்தான் ஏய்ந்து.

இது

புதுவைத் தமிழ்க் கல்விச் சங்கத் தலைவரும் கண்ணப்பர் கலம்பகம், திரு அருணைப் பதிற்றுப்பத்து அந்தாதி முதலிய நூலாசிரியரும், தமிழ்மகவு பொன்மலர் முதலிய பத்திர ஆசிரியருமாகிய திருவாளர் வி.துரைசாமி முதலியார் அவர்கள் மாணவரும் புதுவை, இலாசுப்பேட்டை, கவர்ன்மென்ட் பாடசாலை உபாத்தியாயருமாகிய திருவாளர் சு.குமாரசாமி செட்டியார் கூறியது

திருஅமர் மார்பன் உருவமது உறழ்கொளக்
கருமுகில் கவைஇய காண்தகு மயில்மலை
நெடுவேள் மலரடிக்கு இன்று துதி நேர்ந்தனன்
வடு இல் சொற்கள் வளம் மிக அமைஇய
இராசமாணிக்கம் என்னும்
பராவரு நற்குணம் பலகெழீஇ யோனே.

இது புதுவை, மகாவித்துவான், பு.அ. பெரியசாமிப்பிள்ளை குமாரரும், புதுவை, நெல்லித்தோப்பு, திருவாளர் கோ.ராமாநுஜ செட்டியார் மாணவருமாகிய புதுவை, சாரம் பு.அ.பெ. வைத்தியலிங்கப்பிள்ளை இயற்றியது.

பத்திச் சுவை சொட்டப் பா அகவல் ஒன்று நன்று
சித்தி தருமயிலச் செவ்வேளுக்கு - உரைத்தான்
வருபாக்கை வாழ் ராஜமாணிக்கம் வேலோன்
தருபாக்குப் பேறுடன் நற்சார்பு.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

இது சென்னை லோகோபகாரி பத்திராதிபர் உயர் திருவாளர் பரலி, சு. நெல்லையப்பர் அவர்கள் அன்புடன் கூறியது

திருமயிலம் வாழும் திருமுருகன் மீது
அருமையுறும் பாமாலை ஆக்கித் - தரித்தான்
புதுவைப்பதி ராச மாணிக்கப் பூமான்
மதுரமுடன் கற்க மகிழ்ந்து.

ஓம் குஹாய நம:
வேலும் மயிலும் துணை

காப்பு வெண்பா

இன்பு உருவாந் தேவை எழின்மயிலவேல் குகனை
என்பு உருக ஏத்தி இருள் அகற்ற - அன்புஉருவா
மூலாதாரத்தில் ஒளிர் மும்மதத் தன் தாள்இணைகள்
வாலாயமாக நெஞ்சே வாழ்த்து.

மயிலவேள் அகவல்

உலகெலாம் நின்னுள் உறைந்திட ஆங்கமர்
அலகிலா உயிர்க்கு அருள்ஆண்டவன் நீயே!
பன்னுசீர்ச் செந்தூர் பழநி ஏரகம்
மன்னிய சோலை மலை பரங் குன்றம்
தணிகை மயில்மலை தங்கிய பற்பல
அணிகொள் குவடுஅமர்ந்து அருள்புரி பவனே!
என் மனக்குன்றிலும் இனிது வீற்றிருப்போய்!
பொன்மனப் புனிதருள் போது அமர்ந்து உவப்போய்!
ஒப்பு உயர்வு இல்லா அற்புத ஒன்றே!
செப்புதற்கு அரிய சீருடைப் பலவே!
முக்காலத்தும் மூவா முதலே!
எக்காலத்தும் என்னுள் உறைவோய்!
அன்பின் விளைவே! அருளார் பொருளே!
இன்பே இன்பத்து எழும் ஆனந்தமே!
அருவே! உருவே! அரு உருத் தேவே!
கருவே கருவில் கலந்த மெய்த் துணையே!

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

பிரிவற நின்ற பேரருள் தலைவா!
அறிவற நின்ற ஆனந்த நிலையே!
என் பிணி நீக்கியும் என்பணி ஏற்றும்
வன் பிணிப்பு அவிழ்த்து வளர்த்திடும் குருவே
மனம் மிகக் களித்து வாழ்த்திடற்கு உரிய
கனப்பெருங் கடவுள் கண்மணி நீயே!
கனை இருள் தொலைக்கத் தோன்றிய கதிரே!
நினைத்தவர்க் கைவிடா நின்மலன் நீயே!
ஆதியும் நடுவும் அந்தமும் இன்றிச்
சோதியாய் நின்ற துரியநற் பொருளே!
மண்ணவர் ஊனக் கண்களால் அறியவுந்
தண்ணருள் கொண்டு தாங்கினை உருவம்
நின்னுரு உளத்தின் நினைத்து ஆறு எழுத்தை
உன்னி உருகி நிற்பவர் தம்முன்
யாவரே தீமை அகலாது அயர்வார்?
யாவரே இன்பம் அடைந்து வாழாதார்?
நீறெடுத்து அணிந்தால் பேறுகள் பெருகும்
வீறுடை வேல் எனில் வினை விடை கேட்கும்
ஆவலாய் மயில் எனில் அழியும் மாபாதகம்
சேவலென்று அழைத்தால் காவலாய் நிற்கும்
வள்ளி என் தாயெனில் வளர்ந்திடும் திருவே
துள்ளுமா வாணவந் துணையடி துணை எனில்
தெய்வத யானை என்று செப்பினால்
மெய் விருந்தாவர் மேல்உல குக்கே
கந்தன் அடியார் என்றுஉரைத் திட்டால்
எந்தப் பயமும் இலை எமக்கு என்பார்
அன்புடை அரசே அருட்பெருஞ் சோதீ!
வன்மிகு பிறவியால் வருந்தும் இக்கடையனை
அடிமையாய்க் கொள்வாய் அறுமுகக் கடவுளே
மிடிமையும் நோயும் கொடுமையும் அச்சமும்
பகையொடு பழியும் பண்பிலாப் பிறவும்
புகைபோற் சூழ்ந்து புகைத்திடும் உலக
வாழ்வினில் வெறுப்பு வருவித்து அருளி
தாழ்வின் நீக்கித் தனிச்சுகம் அளித்தே
பொல்லா மனக்குரங்கு ஒல்லையின் அழித்து
நல்லார் கூறிய ஞான மாக் கடலில்
ஆட்டுவித்து எல்லையற்ற பேரின்பம்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

ஊட்டுவித்திடும் அவ்வொருவன் நீயே!
அப்பா போற்றி! அரசே போற்றி!
முப்பா லவர்க்கும் முதல்வா போற்றி!
எப்பா லவர்க்கும் இறைவா போற்றி!
தப்பாது அருளும் தலைவா போற்றி!
அண்ணா போற்றி! அமுதே போற்றி!
எண்ணார் உள்ளம் நண்ணாய் போற்றி!
அற்புதத் தூய அருள்மலை போற்றி!
சொற்பதம் கடந்த சுடரொளி போற்றி!
உடல்பல எடுத்திடும் குதித்தும் மரித்தும்
இடர்ப்படற்கு அஞ்சி நின் இணையடி அடைந்தேன்
தணிப்பருங் காதல் தான் கொண்டு அடைந்தேன்
அணிபொற் கமல அடி இணை அடைந்தேன்
உள்ளம் உடைந்து ஒண்கழல் அடைந்தேன்
கள்ளம் தவிர்ந்த நின்கருணை வாழ்க!
சரவண பவனே சண்முகா தஞ்சம்
அருணகிரியார்க்கு அருளியோய் தஞ்சம்
கலிவெண்பாத் தொடைக் காரா தஞ்சம்
அலங்காரத்தின் அழகா தஞ்சம்
பாலசித்தருக்கு அருளியோய் தஞ்சம்
கோலமார் முருகா கோவே தஞ்சம்
அடியெடுத்து அளித்த அறுமுகா தஞ்சம்
குடிமுழுது ஆண்ட கொற்றவா தஞ்சம்
ஐம்பெரும் பூதத்து அப்பால் நின்ற
எம்பெருமானே ஏகா தஞ்சம்
கதிர்விடு நெடுவேல் காளாய் தஞ்சம்
மதிஞர் புனை பாமாலையோய் தஞ்சம்
திருமுருகாற்றுப் படையோய் தஞ்சம்
திருப்புகழ் மாலைத் தேவா தஞ்சம்
இறைவா தஞ்சம் எழிலா தஞ்சம்
நறைபோன் மொழியர் நாயகா தஞ்சம்
அறுகணி சிவனார்க்கு அருளியோய் ஓலம்!
பெரும்பேறு அளிக்கும் பெற்றியாய் ஓலம்!
குன்றுடைக் குமரா குகனே ஓலம்!
என்றும் இளையா யீசா ஓலம்!
சேவல் கொடியுடைச் செவ்வேள் ஓலம்!
காவடி மகிமைக் காரா ஓலம்!

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

பல பல உண்டும் பல பல நினைத்தும்
பலபகல் உறங்கியும் பல பல தீவினை
செய்து இங்கு உழல்வது திருவருட்கு அழகோ?
பொய்ம்மையில் விடுத்தல் உன் புகழ்தனக்கு அழகோ?
பன்னிரு கண்மலர் பண்புடன் இருந்தும்
என்னொரு கொடுமையை எடுத்துப் பாராது
இருப்பது முறையோ? என்ஆ ருயிரே!
கருத்து இது முறையோ? கண்ணறன் முறையோ?
கைவிடல் முறையோ? கலக்கு தன் முறையோ?
நைவிடல் முறையோ? நலிவது முறையோ?
வான் நீ, வளி நீ, மண் நீ, தண் நீ
தீ நீ, தே நீ, மா நீ, கா நீ,
பண் நீ, பா நீ, ஒளி நீ, உயிர் நீ,
பெண் நீ, ஆண் நீ, பெறும் பொருள் நீயே,
தாய் நீ, தந்தை நீ, தனம் நீ, மனம் நீ,
ஆய்தொடி மனை நீ, அன்புடைச் சேய் நீ,
மதி நீ, விதி நீ, மாஏ மூலகுநீ,
பதி நீ, கண்தரும் பரமசற்குரு நீ,
பூ மகள் மருகா! புலவர் ஏறே!
தேமொழி உமையாள் திருக்கிளர் செல்வ!
என்னுடை அரசே! எய்ப்பினில் வைப்பே!
தன்னிகர் இல்லாத் தனிப்பெரும் கடவுளே!
மலக்கட்டு அதனை மாய்த்திடல் வேண்டும்
நிலத்தில் உன்திருவடி நினைத்திடல் வேண்டும்
ஒழுக்கம் வேண்டும் உறுதியும் வேண்டும்
அழுத்தமார் பத்தியும் அன்பும் வேண்டும்
திருவொடு கல்வி சீர்பல வேண்டும்
திருவருள் வேண்டும் திறம் பல வேண்டும்
தமிழ்மொழி மலர்த்தொடை தான் புனைந்து உனது
தமிழடிக்கு அன்புடன் சாற்றிடல் வேண்டும்
இருவினை ஒப்பு மலபரி பாகம்
வருநாள் புகலாய் வரதா எற்கே
வாழ்க நின் அருளே! வாழ்க நின் புகழே!
வாழ்க நின் முறுவல்! வாழ்க நின் பார்வை!
வாழ்க நின் செவிகள்! வாழ்க நின் உளமே!
வாழ்க நின் அடிகள்! வாழ்க நின் நாமம்!
வாழ்க நின் வாரண மாக்கொடி வாழ்க!

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

வாழ்க நின் மாமயில் வாகனம் வாழ்க!
மும்மலப் பெருங்கடல் முற்றிலும் குடித்து எழு
செம்மை சேர் வெற்றித் திருக்கைவேல் வாழ்க!
இச்சகத்து உழலாது எனக்கு அருள் புரிய
இச்சை கொள் வள்ளிஎன் இறைவி வாழ்க!
புரியும் மென் தொழில் எலாம் புனிதமே ஆக்கும்
பெரியநா யகிவிண் பிடியவள் வாழ்க!
விண்மீன் கிடந்து உயர்கோபுரம் விளங்கலும்,
கொண்மூப் பொழிலைத் தழுவிக் குலாவலும்,
அட்டில் புகைமேல் வட்டமிட்டு ஒளிர்தலும்
பட்டுக் கொடிகள் பறந்து ஒளி காலலும்
இன்னிசை கறங்கலால் இரும்பிடி அஞ்சலும்
துன்னிய குரங்கினம் துடுமெனப்பாய்தலும்
நெடுங்கால் மானும் குறுந்தாள் முயலும்
நெடுங் கொம்பு எருது நிரை நிரை மேய்தலும்
புள்ளிக் குயிலும் புறாவும் மயிலும்
கள்ளக் காகமும் காடையும் கொக்கும்
இன்னன பிறவும் எங்கணும் பறத்தலும்
இன்நறும் சுனையில் தண்ணீர் சுரத்தலும்
சந்தன வகுளம் சண்பக நாக
சிந்தூரம் பலா தேமா வாழை
அரியொடு பூகம் அசோகுஅரசு ஆமிலம்
அரியிதழ்க் கொன்றை அத்தி இலந்தை
முதலிய தருக்கள் முகிழ்த்துத் தளிர்த்து
மதுமலர் சொரிந்து மகிழுற விளங்கலும்
ஆகிய செழுமை அமையும் சாரல்சூழ்
வாகுடை நெடுந்தேர் வதிந்திடும் அடிப்புறம்
மாத்தண் மயில மாமலை வாழ்கவே!

முற்றும்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

மயிலாசல மாலை

ஆசிரியர்: தே.ஆ. ஸ்ரீநிவாஸன்

நூல் முகவுரைகள்:

(1)

திருப்பாதிரிப்புலியூர்

ஸ்ரீமத் ஞானியார் மடாலயத்துச் சுவாமிகள் அருளியது

அயிலார் கரத்து அண்ணல் அன்பை வளர்க்கும்
மயிலாசல மாலை வாய்ப்பக் - குயிலாரும்
மாமஞ்சை வாழு மறைச் சீநிவாசபேர்
நாமன் செய்து உய்ந்தான் நயந்து.

(2)

திருப்பாதிரிப்புலியூர்

திருப்போரூர் ஸ்ரீமத் மவுனசுவாமிகள் குருபூஜா நிலையத்து ஸ்ரீமாணிக்க சுவாமியார் அருளியது

1. மயிலாசல மாலை மன்ன உரைத்தான்
சயிலத்து உறைதரு சண்முகனே அன்பால்
சிறுமையில் சீநிவாசன் செஞ்சொல் செவிக்கொள்
வறுமை தொலைத்து அருள்வாய்.

2. மயிலாசலனை மருவும் அம்மகளிர்
அயிலா சலனுக்கு அருள்வோன் - சயிலத்து
உறையும் சிவஞானி ஒண்புகழுந்
அறைவது இம்மாலை அணிந்து

(3)

திருமயிலம்

ஸ்ரீலஸ்ரீ சிவஞான பாலய சுவாமிகள் தமிழ்க்கல்லூரித் தமிழ் விரிவுரையாளர்

வெண்பாவூர், வித்வான், ஸ்ரீ S. துரைசாமி அய்யர் அளித்தது.

தண்ணார் பொழிலுடை அண்ணாமலை வாழ்
பண்ணார் பரமனைப் பண்புடைப் புலமை
முற்றிய இறையொளி முன்னம் மொழிந்த
நல்திரு சோணசைலமாலை என
மலர்மலி மயிலமலை தனுள் நிலைஇப்
பலர்புகழ் நல்லிசைப் பாக்கொளும் பாலய

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

அடிகளார்க்கு அருளிய அறுமுகத்தவன் மேல்
படிதனில் பாவலர் முடிதனில் சூடச்
சங்கநூற் பொருளைத் துங்கமாய்ப் புணர்த்தி
இங்கித மொழிகொள் இயல்பல விளங்க
மயிலாசல மாலையெனும் பெயரொடும்
அயிலுடை அவன்தண் அருளா அறைந்தனன்
மஞ்சையம் பதிவாழ் விஞ்சிய புலனுடையச்
செஞ்சொல் சீநிவாசன் எனும்
நெஞ்சத்தவள் பதிக்கழல் பணிவோமே.

கூடலூர் N.T. St. Joseph's College தமிழாசிரியர் வித்வான். வெ. ஜெகந்நாதய்யரவர்கள் தந்தவை.

ஒரு பொருள் தனதிரு வினையொடு மும்மல
முற்றுஅழி தரவரும் ஒரு நான்காய்
வருபொருள் ஐம்முறை முறையின் அளித்திடு
வளரறு முகமுடை வடிவேலன்
ஒருமழ களிறென இருபிடி பெற்றிட
உற்றிடு நற்றவர் வாழ்மயிலம்
மருவுறு மதிபுகழ் மாதவர் மனமுற
மறைவழி அறைதரு-மாலையிதே.

வேறு

மாலைஎன் கோ மனமால் இருளோட்டி மதியளிக்குங்
காலை என் கோ வீர சைவசித்தாந்த சிகாமணி சொல்
வேலை என் கோ விச ஞான போதப் பொருள் வீறுபெறு
மாலை என் கோ அருள் இனி மயிலாசல மாலையையே

வேறு

கயிலாசலத்தன் அருளியமா கலைக்கடலின்
கரை கண்ட காட்சியவனே
அயிலார் கரத்தன் இருமயிலார் அடுத்துவர
அழகோடு கண்ட தவனே
மயிலாசலத்தன் இருபுயமா சலத்தில் அணி
மணமாலை தந்த தவனே
செயிலார் மலர்க்குள் உறைமயில்ஆள அருட்பெருகு
திருவாழ்வு பெற்ற சுபனே.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

சிவசண்முக மெய்ஞ்ஞான தேசிகன் திருவடி வாழ்க

புகழுரை

மயிலாசல மாலை: இது திருவாளர் வித்வான் ஸ்ரீநிவாஸாசாரியார் அவர்கள் இயற்றி வெளியிட்ட பல நூல்களுள் ஒன்று மயிலம், மயூராசலம், மயிலாசலம் எனப் பெயரிய குன்றத்தின்கண் ஆலயங்கொள் பரமனாம் அறுமுகப்பெருமான் துதிகளான நூறு பாக்களைக் கொண்டது. செய்யுள் தோறும் அமைந்த "மயிலனே சயில நாயகனே" எனக் கொண்ட மகுடத்தானும் எழுசீர்க்கழி நெடிலடி விருத்தப் பாக்களானும் இது சோணசைல மாலையினை நினைவூட்டுகிறது. மயிலன் எனும் சொல் முருகனாம் மயிலனுக்கும் குன்றமாம் மயிலனுக்கும் சிலேடையாய் அமைந்துள்ளது. மடக்கு முதலிய அணிகள் இதில் செறிந்துள்ளன. இக்குன்றின்கண் அமர்ந்து தவம் இயற்றிய ஆதிகுரு மூர்த்திகளின் அருளிப்பாடும், சமயகுரவர்களின் சதுரப்பாடும் இச்செய்யுட்களில் காணப் படுகின்றன. உலகப்போக்கிற்கு உரிய கருத்துரைகளும் இதில் செறிந்துள்ளன. சிவஞான போதத்துப் பன்னிரு சூத்திரங்களின் நுட்பங்களைத் தம்முள் அடக்கிக் கொண்டுள்ள ஈராறு பாக்களும் தடித்த எழுத்தால் விளக்கஞ் செய்யப்பட்டுள்ளன. வீரசைவ மரபினர்கட்குப் பேரணியாக இலங்கும் வெண்ணீறு, கண்மணி, எழுத்தைந்து, அடிகள், சதாசிவ வடிவம், அடியார், திருவடிப்புனல், அடிகள் உண்மிச்சில் ஆகிய எட்டுப் பொருள்களின் தன்மைகளையும், சிறப்புக்களையும் விளக்கும் நாலிரு பாக்களும் முத்தையன் மதாணி முத்துக்களைப் போல் இலங்குகின்றன. இதனை வாசிப்போர், தோத்திரம் என்பார் சிலர், சாத்திரம் என்பர் சிலர், புராணம் என்பர் சிலர், அருங்கலை விநோதர்க்குப் பொழுது போக்கென்பார் சிலர்.

மயிலம் தமிழ்க்கல்லூரி முதல்வராம் குருமகா சந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ சிவஞான பாலய சுவாமிகள் அவர்களின் அருள் நோக்கத்தினைப் பெற்றது. மற்றைப் புலவர், அன்பர் பெரியோர்கள் வினையும் நாடுகின்றது. இசைவாராக,

இங்ஙனம்
B.N உருத்திரசாமி
தலைமை ஆசிரியர்
ஸ்ரீமத் ஞானியார்
கலாசாலை
திருப்பாதிரிப்புலியூர்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

திருமயிலமலைச் சிறப்பு.

கதிர்வலம் வரலாற் கனகநன் னிறனால்
காசினிக்கு உறுதிசெய் வதனால்
மதிதிகழ் முனிவர் மன்னிவாழ் வுறலால்
மற்றுஉள மலைகள்சூழ் தரலால்
விதிதவிர் கடவுள் மேவலால் விபுதர்
வீறலால் கூறலால் புலவர்
கதிதரும் மயிலா சலமலை மேருக்
கனவரை தனைநிகர் வதுவே.

மயிலாசல மாலை

காப்பு

இளம்பிடியும் மானும் இடம்தழுவும் மானும்
உளம்பிடியும் ஒண்களிறும் ஓங்க - வளம்செய்
அயிலா சலன்வைக்கும் அம்புயங்கள் ஏந்தும்
மயிலா சலமாலை மன்.

நூல்

1. உலகினில் உதித்த பெரியரும் பிறரும்
உற்றஓர் கிரியினைப் பற்றி
இலகுறல் நியதி எனும் உரை கேட்டுஉன்
இருஞ்சரண் சதம்என அடைந்தேன்
அலகிலா வளன் எம் மாண்தவர்ச் சுமக்கும்
அருவரை நீ என உணர்ந்தேன்
மலதிமி ரங்கள் மடித்து ஒளிர் செய்வாய்
மயிலனே சயிலநா யகனே!

2. உலகினை விரிக்கும் தணிகைஎர் வளனும்
உவமன்இல் பரங்கிரி வளனும்
பலவரை பணியும் கயிலையின் வளனும்
பற்றுநல் வேங்கட வளனும்
கலைபல வளர்க்கும் பொதிய நீள் வளனும்
கணிதம் இல் பல சிலை வளனும்
மலிதர விளங்கும் மாணுடைத் தலனே
மயிலனே சயில நாயகனே.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

3\. பரசிவம் நினைப்பின் நிலவுறுஞ் சீவர்
பற்றும்நல் ஈசனே முதலோர்
தரைமிசை வளர்வர் சத்தியம் ஒடுங்கின்
சகலமும் அடங்கியே சார்ந்து அங்கு
உரை தரும்அ பேதம் பேதம் ஒன்றின்றி
உற்ற அத்வைதமாய் இலங்கும்
வரம்இதை உணர்த்த வந்தருள் மலையே
மயிலனே சயில நாயகனே.

4\. அறிவதே பிரிவில் நினைவொடுங் கூடி
அரும்பரத்துஉறும் நவத்துஉருவும்
முறையுடை மூன்றாம் ஆன்ம பேதங்கள்
மும்மைசேர் மாயையார் புவனம்
நெறியுற இயங்கி நீள்பரத்து உடனாய்
நிலவுதல் தமிழினால் உலகம்
மறையென அறிவான் மலர்ந்தவர்ப் பொறுத்த
மயிலனே சயில நாயகனே.

5\. விண்ணவர் இழந்த கோபமும் நிலனும்
விளைதரற்கு இடமதா விளங்கிக்
கண்ணுறு சிவத்துப் புண்ணியம் கூட்டிக்
கனிவுசெய்து அருளும் நற்புவனம்
மண்ணுலகு எனவே மாந்தருக்கு உணர்த்த
மன்னினன் தன்னிடம் தெய்வ
வண்ணன் என்று ஏத்த வரந்தரும் சாரல்
மயிலனே சயில நாயகனே.

6\. இம்மையே மறுமை வீடுஎனும் மூன்றும்
இருந்தவம் புரிந்திடா தவர்க்கும்
செம்மையே வழங்கும் சிறப்புறும் தெய்வம்
செறிந்துறை வரைஇது என்று உணர்ந்தேன்
மும்மையும் தவத்தை உணர்கிலா மூடன்
முத்தியும் பெறுதலாம் என்றே
மம்மர் அங்கு ஒழிவான் மலரடி அடைந்தேன்
மயிலனே சயில நாயகனே.

7\. மூல மாமலத்தை நீக்கவே தந்த
முந்துடல் கரணம் என்பவற்றைச்
சீலமார் நெறியில் செலுத்திடாது அவற்றைச்
சிறப்புடை இன்பமா நினைந்து

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

கோலமார் குருவாய்க் குறுகியே உரைத்த
குலமறை மொழிதெரு ளாதேன்
மாலினால் உழன்றுஉன் பால்அடைந் ததனால்
மயிலனே சயில நாயகனே.

8. சிவமெனுஞ் சுடரோன் சிறந்திட மலரும்
செய்ய தாள் தாமரை இரண்டும்
தவவடிவாகும் சத்திமா முகத்துத்
தண்மதிக்கு அலர்ந்தவாய்க் குமுதம்
நவமுறப் பொலியும் நல்தடம் மூழ்கி
நானிலம் மேனிலம் பெறவே
மவுடியிற் சுமக்கும் மாண்புடை வரையே
மயிலனே சயில நாயகனே.

9. முத்தி வீட்டு உரிய பிறவியே தருவான்
முந்துறு சிவத்தறி அமுதம்
மெத்த ஊட்டிடுவான் சித்தமால் விகற்பம்
மேல்எழாது ஒழித்திடல் புரிவான்
தத்துமாறு உலகத்து உணர்ச்சியை மறைப்பான்
தன் திருவடியையே தருவான்
மத்தகஞ் சுமந்த சுத்த ஐந்தொழில்வாய்
மயிலனே சயில நாயகனே.

10. ஞானம்என் சிவத்தில் நினைவு இரண்டு ஒன்றே
நற்பரம் உயிரது ஒன்றாகும்
ஆன நற்பரமே அகிலமெல் அருளாம்
அதுதொடர் உயிரது மலமாம்
மோனநல் துணையாம் அருள்மல வழியே
முத்தொழில் படவரும் முத்தி
மான என்றுஉயிர் தாம்அறித்திட விளங்கும்
மயிலனே சயில நாயகனே.

11. மலரதாய் மலரின் மணமதாய்ச் சுவைகொள்
மதுவதாய் மன்னிய தருவே
சலதியாய் மற்றங்கு அமுதமாம் சுவையே
தண்ணிழல் தருபெருங் காவே
பலமதே ரசமே பாவைசேர் விழியே
பழமறை பகரும் செம் பொருளே
மலஇருள் பகையே என உலகுஏத்தும்
மயிலனே சயில நாயகனே.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

12. உலகுயிர் படைக்கும் பிரமன் நீயாயின்
உள்ளமென் மலர்மிசை உறைவாய்
இலகுயிர் காக்கும் இறைவன் நீயாயின்
இதயநல் வடத்திடம் துயில்வாய்
அலகிலா உயிர்கள் அழிப்பவனாயின்
அடியனேன் அவ்விச்சையை அழிப்பாய்
வலமுறும் மூவர் வணங்குறுங் குணஞ்சால்
மயிலனே சயில நாயகனே.

13. முதல்வரு தலத்து மூர்த்தி ஐங்கரத்தான்
முன்னுறை பொருளெனக் காட்ட
நுதல்வரு மறுமா முடியினன் வேலான்
நூல்நுதல் பொருளென நோக்க
இகந்தரு சிவமாய் ஏகமாய் விளங்கும்
இலிங்கம் ஒன்று இடையுற விளங்க
மதம்தவிர் மனத்து மாதவர் போற்றும்
மயிலனே சயில நாயகனே.

14. பதியிறை கொள்ளும் பாரெனும் மடந்தை
பண்புடை மக்கள் யாவர்க்கும்
கதியதாம் அங்க லிங்கசை யோகம்
கரதலக் கனியெனக் காட்டும்
விதியெனத் தன்னுள் விளங்கும் மாலிங்கம்
வீறிடு வரையெனும் செச்சை
மதியொடும் தரித்த மாட்சிமை தெரித்த
மயிலனே சயில நாயகனே.

15. இரும்பினும் பொன்னை விரும்புதல் மாந்தர்
இயற்கையாம் இவ்வுலகு எனினும்
துரும்பினும் நொய்ம்மைத் துடுக்குடை வாழ்க்கைத்
துரிசுகள் செறிசிறார் தம்மை
விரும்பியே நாளும் வீண்பட உழலும்
விதியினேன் கதிபெறற்கு அருள்வாய்
வரும்பிடி அயிலக் கரும்பினை வளர்க்கும்
மயிலனே சயில நாயகனே.

16. ஆணவத்து இருள் சீய்த்து அருளொளி உதித்தற்கு
ஆவலாக் கூவு செஞ்சேவல்
தாணுவின் இடத்துத் தையலைக் காட்டும்
தண்முகில் காடு பொன் மஞ்ஞை

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

காண்ஒரு தந்தக் களிற்றொடு பிடியும்
கானவர் பேணுறும் மானும்
மாணுடைச் சோதி வேங்கை மாதவர் வாழ்
மயிலனே சயில நாயகனே.

17. செம்மையே பொன்னுக்கு உயர்வினை அளித்தல்
தெரிகுவர் விரி உலகினர் தாம்
தம்மைஅச் செம்மை மருவிடாமையினால்
அணைந்துள மறுகுபூதரங்கள்
அம்மையில் கறுத்தும் வெளுத்துமற்று ஆழ்ந்து
அரனடி முடி சுமந்துறவே
மம்மர்வெல் சிவத்துச் செந்நிற மருவும்
மயிலனே சயில நாயகனே.

18. இதயநன் நாபிப்பிரம மாபுழையுள்
இலங்குஉரு அருஇரு நிலையைக்
கதி அருச்சனையோ மத்தியானத்தால்
கரண முற்றும் சிவ மயமாய்ப்
பதிபதப் பதுமம் பொழி மதுப் பருகிப்
பகர்துலை முனைநிலை நிலவும்
மதியுடைச் சமாதி மாண்பறி உறுத்து
மயிலனே சயில நாயகனே.

19. பெருகொலி எழுத்தின் பெரும் பொருள்அனைத்தும்
பெட்புடைத் தந்தையர்க்கு உரைத்து
மருவு அப்பொருளைப் பன்முறை மாந்தர்
மனங்கொள உரைத்திடற் பொருட்டாக்
குருநிறச் சூட்டுக் குக்குடம் கரத்துள்
கொண்டருள்இன்ப நற் கொண்டல்
மருவி எப்பொழுதும் மாமழை பொழியும்
மயிலனே சயில நாயகனே.

20. தொம்பதத்து எமையே தற்பதத்து உன்பால்
தொடக்குறாது ஊறு செய் பாசம்
தம் பலங் குன்றத்து தகைத்திடும் சத்தி
தாங்குறு பாங்கினை வீரர்
அம்புவிக்கு உணர்த்தி அனுதினம் சரணத்து
அம்புயத்து அமுதம் உண்டு அமர
வம்புஅவிழ் நீப வான்தருச் சுமக்கும்
மயிலனே சயில நாயகனே.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

21. குறியவற்கு உரைத்த நெடிய நன்மறையும்
கோதிலா வன்னமே விழையும்
நெறியவற்கு உரைத்த நிலவு நான் மறையும்
நிமல நல் விடைகொள்இ லிங்கக்
குறியவற்கு உரைத்த பிரணவப் பொருளும்
குவலயங் குறிக்கொள உள்ளம்
மறுவறத் தருவான் சுகத்தினைச் சுமந்த
மயிலனே சயில நாயகனே.

22. கருங்கடல் குடத்துக் கடிகொள்நன் னீரைக்
கவின்மதிச் சங்கினான் முகந்து
மருங்குறை தலைவன் வருணனார் ஆட்ட
மருத்தனார் முகில்புகை புலர்த்த
வரும்குணப் பரிதிக் குடவிளக்கு ஏந்தி
வானவர்க்கு இறையவன் வழுத்த
மருங்குஅமர் தொழிலும் அறிவையும் நடத்தும்
மயிலனே சயில நாயகனே.

23: உடலினை நினக்கே கோயிலா அமைத்துஅங்கு
உளமெனும் அடிமையைப் பணி செய்
திடனென நிறுத்தித் தீஞ்சொலால் ஆரமுதம்
தினம் உனக்கு அளித்திட அருள்வாய்
நடன்நவில் பரியும் நான்மறைப் பரியும்
நாரதன் பரியினோடு இரங்க
மடமயில் பரியாய் மாநிலத்து ஒளிதரும்
மயிலனே சயில நாயகனே.

24. தேகமே பொறியால் பொறிகளே புலனால்
திகழ்புலன் கரணம்என்பவையால்
ஆகுநற் கரணம் அனைத்தும் ஆன்மாவால்
அறிவுற விளங்கும் அவ்விளக்கம்
மோகமில் பரத்துப் பதி விளக்கு அதனால்
முழுதுஒளிர் உண்மை நன்குஉணர்த்த
மாகமே ஓங்கு மாடமே தாங்கும்
மயிலனே சயில நாயகனே.

25. ஆன்மநல் அறிவை விடயமா விடம்கொண்டு
ஆழ்ந்திட விடாதவை மருவும்
ஆன்மயப் பொறிகள் கடந்தவை அடங்கு
காயமே சடமெனக் கடிந்து

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

நான் பரம்என்னும் நாத்திறம் தவிர்த்து
நவிலும் ஆகம முடி நயந்து
வான்பெற உணர்த்தற்கு அசலமா வயங்கு
மயிலனே சயில நாயகனே.

26. அனுக்கிர கத்துப் பரையுடைப் பிரம
அடியவர் உளமலர்ச் சிவமும்
அனுக்கம் உள் சரத்துஅ சரத்தும் எம்குறை
செயத் துவிதத்து அருள் நிலையும்
மனி(த்)தருக்கு அருளற்கு உறுகுரு வடிவு
மருவும்அக் குறி செய் சங்கமமும்
வனப்புடைஅமரர்க்கு இரங்கி லிங்கமும் வாழ்
மயிலனே சயில நாயகனே.

27. ஆடுறும் இயற்கைப் பசுங்கடன் முகட்டி
அறுதிசைப் புறஇருள் துரந்து
நாடுறு பொருளை நானிலம் நணுக
நகுசுடர்ப் பரிதி வந்திடல் போல்
ஆடுறு மயில்மேலறி வினை மயக்கும்
மாறுகொள்அத்து வாஇருளான்
வாடுறும் உயிர்கள் வீடுற அமைந்த
மயிலனே சயில நாயகனே.

28. முந்துதாய் தந்தை தந்த பாலுண்டு
மூவறு ஓசனம் பெற்றும்
இந்திரா தியர்தம் வெந்துயர் மட்டே
எறிந்த எம் புகழினை இகழ்ந்தே
தந்த பொன் வள்ளத்து அமுதமுது அருந்தித்
தரணியர் முரண் ஒழித்திடவே
வந்த நற்கோலம் வயங்கு மாற்றமர்ந்த
மயிலனே சயில நாயகனே.

29. போகமே வேண்டிப் பொழுதினைக் கழிக்கும்
புறத்துறு பூசனை புரிவோர்
மேகவாகனனுக்கு அருள்அரு வதனம்
மேவிய தலம்செல விழைவர்
யோகமே வீடே ஞானமே நயந்தோர்க்கு
உள்ளுறும் பூசகர் நிகழ்த்து
மாகம் மேவியசீர் ஏகமாய் விளங்கு
மயிலனே சயில நாயகனே.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

30. இந்திரை ஞாலத் தேரினை ஒழித்து
இறையவர் தழுவுற மணந்தும்
வெந்தது சயந்தற்கு உணர்த்தியும் அமரர்
வேந்தனுக்கு அருளியும் பாசப்
பந்தனை புரியும் படைகளைப் படுத்தும்
பலதலை மலைவினைத் தடுத்தும்
மந்திரை துரந்தும் மந்திரம் புரிந்தோன்
மயிலனே சயில நாயகனே.

31. துறக்கமே வேண்டும் தேவருக்கு உதவித்
துயர்தரு செல்வமே நயத்த
லுறப்பெறு தந்தைக்கு உதவியும் கச்சி
உற்றரி சிவஉருத்தந்தும்
மறக்கருணை யினால் மலர்அவற்கு உணர்த்தி
மன்னுறும் ஆழி மாதவர்க்கு
வறப்பறு கலைகள் வழங்கி வீடளித்தோன்
மயிலனே சயில நாயகனே.

32. இம்மையிற் பொருளும் மறுமையின் அருளும்
இரண்டும் நன்குஉதவிடல் வல்லோன்
மும்மையுந் திகழும் முழு முதல்அறிவன்
முற்றிய திருவினன் பெரியோன்
எம்மையும் பிறவிக் கடலினின்று ஏற்றற்கு
இரங்கும் நூபுரஅடிப் புணையோன்
வம்மின்என்று உலகை அழைக்குறுங் கொடி நீள்
மயிலனே சயில நாயகனே.

33. துதிக்கையே கொண்டுஇங்கு அன்பரைத் துழவித்
தொல்லை வைத்துஇயக்கு நாயகனும்
மதிப்பில்இப் பிறப்போடு இறப்புஅலை எறியும்
மாயை அம் கருங்கடல் கடத்தற்கு
உதித்த சீரடியாம் உற்ற நற்கலனும்
உயர்கரை உணர்த்துஒளி விளக்கும்
வதித்த கந்திலிங்கம் வயங்குறும் துறையாம்
மயிலனே சயில நாயகனே.

34. வெயிலவற்கு உருகி வழிபடும் இமயம்
வெயிலவன் வழிபட இருப்பை
அயிலவற்கு உடையுங் குருகுமால் வரைநீ
அயிலவன் உடையிடம் ஆவாய்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

சயிலவற்கு உருகும் பொதியநீள் சைலம்
சயிலவன் பெருக நீ உறைவை
மயிலவர்ப் பொறுக்கு மயிலினைப் பொறுத்த
மயிலனே சயில நாயகனே.

35. பளிக்கு மாளிகை உள்ளூறுத்தஓர் ஞமலி
பலதிறத்து உருக்குஉரைத்திடல் போல்
ஒளிக்கு மாமாயைக்கு உள்ளூறக் கொண்டங்கு
உண்மையில் தத்துவத்து உருவாய்க்
களித்திடும் எனக்கே கருணை வாரிதியாம்
கவினுருக் கொண்ட சற்குருவை
வளைத்தருள் புரிவான் விளைத்தருள் தெய்வ
மயிலனே சயில நாயகனே.

36. விரையும் மாஉளத்து மறலியோன் என்னும்
வேகம்இல் ஊர்திமேல் அமர்ந்து
தரையில் வாழ் மாந்தர்த் தகையவோர் பாசந்
தண்டமே கொண்டு வந்திடல் முன்
கரையிலா அண்டம் கணத்தினில் சூழும்
கனகநற் பரிமிசை இவர்ந்தே
வரையெலாம் தாழ வேலொடும் வருவாய்
மயிலனே சயில நாயகனே.

37. யோகரே புகலும் உளத்தின் பாவனையும்
உற்றதோர் கருவி பாவனையும்
ஆகுமா றில்லாச் சொல்லின் பாவனையும்
மடுத்த ஓர் போலி பாவனையும்
ஏகுமாறு இல்லா இயல்புடைப் பொருளாய்
ஏத்து நல்அன்பருக்கு ஒருமை
வாகதா வழங்கும் தருமணி வயங்கும்
மயிலனே சயில நாயகனே.

38. தானவர்த் தடிந்து வானவர்க் காத்துத்
தனிவட மொழிமறை காத்தும்
ஆனநற் புகழை அடைந்திடா மையினால்
அடியரை வளர்த்திட நயந்து
வானம் நின்று இழிந்து வாது செய் அமணர்
வலம்தொலைத்து அருந்தமிழ் மறையை
வான்எனப் பொழிந்த வரமுகில் படிந்த
மயிலனே சயில நாயகனே.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

39. அறிவுமெய்ஞ் ஞானம் அறிபவன் ஆன்மா
அறிவரு பொருளதாம் சிவம் இம்
முறைவரும் பொருள்கள் மூன்றதாம் நிலைகள்
முற்றவும் அற்றநன் முத்தர்க்கு
அறிவருஞ் சுத்த மோனமா முகட்டினார் உளம்
அருள மொழிஉடற்கு எட்டா
மறிவுஅறப் பெருகும் முருகு நல்லருவி
மயிலனே சயில நாயகனே.

40. காட்டும் அவ்உதவி காணுதற்கு அமையும்
காணும்அவ் உதவியால் பற்றல்
ஊட்டும் அவ்உதவி உறும் அருளதனால்
உற்றஇவ் உருச்சுவை அமைதி
பூட்டுஅறிவு இச்சை தொழில்ஒரு மூன்றும்
பொறியென இயங்குற அமைத்த
வாட்டமில் சிவத்துப் பொறிமுதல் நிலைத்த
மயிலனே சயில நாயகனே.

41. ஆக்குதல் காட்டித் திருப்பரங் குன்றின்
அளித்திடல் ஆவி நன் குடியில்
போக்குதல் செந்தூர் பழமுதிர்ச் சோலை
புரிமறை அருளல் ஏரகத்தே
நீக்கம்இல் ஐந்தா நெடுமுதல் நிவந்து
நீடுயர் வரைகொளப் பழுத்து
வாக்குறும் தேறல் வாய்வழிந்து ஒழுகும்
மயிலனே சயில நாயகனே.

42. அருளினர் காணும் பதியினுக்கு உலகம்
அனையவும் பொய்யவே ஆகும்
இருள்உறும் கரணங் கொண்டறி பசுவிற்கு
இல்லவை உள்ளபோல் படுமால்
கருவியாம் அவைகட்கு அழிவிலாச் சான்றாய்க்
காணுறின் அருளினால் கலந்தே
மருவுபேரின்பம் விளையும்என்று உணர்த்தும்
மயிலனே சயில நாயகனே.

43. உயிரினை மயக்கும் மாயைமற்று அதனை
ஒன்றும்இல் சூனியம் எனவும்
பயிலுடல் புலனே கரணமே நுட்பம்
படர்வளி அறிவுஅவை திரட்சி

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

மயமென உணர்த்த மயங்கிடாது அருளால்
மன்னொளித் தன்னிலை பரமன்
வயமுடை அறிவாய் நயமுறல் விளக்கும்
மயிலனே சயில நாயகனே.

44. சூனியஞ் சீவன் எனக்கொளின் தேகத்
தொடர்பிலா ஒன்றிலாமையினால்
தான்இயல் தேகந் தத்துவம் சுட்டித்
தனியுணர் அறிவொரு பொருளால்
மேனிலை உணர்வே தானியல் ஆன்மா
மெய்ஒழி பாழெனல் தாயை
மானமில் மலடி எனும் மடமதியாம்
மயிலனே சயில நாயகனே.

45. உடலமே ஆன்மா எனக்கொளின் உடலை
உறுபிறி தின்கிழ மைக்கண்
திடமுற வகுத்தல் அன்றிதற்கிழமை
செப்புநர் இப்புவிக்கு இலரே
இடமுறத் தேகத்து ஒன்றெனப் பயின்ற
எழின்மதி சவம்துயில் இலதால்
மடமகன் மதியால் மாவெனக் காட்டும்
மயிலனே சயில நாயகனே.

46. இந்தியந் தாம்ஆன் மாஎன இசைப்பின்
இயலும்அவ்ஐந்தும் ஒன்றுஒன்றை
வந்துஇயன்று அறிதல் வழக்கிடை இன்றால்
வரும்உடற்கு ஐந்து உயிர் இலவே
தந்துஅமைந்து அறிவின் சாட்சியாய் நின்றே
தக்க ஐம் பயன்உணர் அறிவே
வந்தநல் ஆன்மா ஆகும் என்றுஉணர்த்தும்
மயிலனே சயில நாயகனே.

47. கரணமே ஆன்மா எனக்கொளின் பொறிவாய்க்
கண்டதோர் அறிவுடை விடயம்
முரணிலாது எனலும் நிச்சயித் திடலும்
முன்னு சிந்தித்தலோடு எழலும்
பரவிலா நான்காய் ஒன்றுறா மையினால்
பணியமைச் சுடையரசு ஆன்மா
வரமெலாம் வழங்கும் வாரிசம் மலரும்
மயிலனே சயில நாயகனே.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

48. சூக்குமத்து உடலம் ஆன்மம் என்று உரைப்பின்
தூலம் உள்ளீடதாய்க் கனவில்
தாக்குறுங் கருவி சாக்கிரம் சுழுத்தித்
தயக்கமும் தெளிவுடை நிலையும்
போக்கொடு வரவும் புணர்ப்புஅறிவு உறழ்வும்
பொருந்துற நடுநிலைத்து அதனால்
வாக்குறும் அறிவே ஆன்மம் என்றுணர்த்தும்
மயிலனே சயில நாயகனே.

49. பிராணனே ஆன்மா எனக் கொளின் அவத்தைப்
பேதுறா அறிவதுஒன்று அன்றால்
தராதலத்து எதையும் தக்கநற் கரணம்
தனி உணர்வதுஅன்றுணைத் தயவால்
பராவரும் நனவில் படர்தலே போலப்
படர்ந்திலது இருநிலத்து அதனால்
வராநிலை உணர்வே ஆன்மம் என்றுஉணர்த்து
மயிலனே சயில நாயகனே.

50. சிற்றறிவு ஆன்மம் எனச்சொலின்அது தான்
செறிந்த ஐம்பொறி புலன்கரணம்
உற்றுஅறி விடயத்து ஏகதேச சத்தாம்
உணர்வது விளக்கிட விளங்கும்
முற்றறிவினதாய் மயக்கமில் லதுவாய்
முழுநிலைப் போதமாய் விளக்கும்
வற்றல்இல் அறிவே ஆன்மம் என்றுஉணர்த்தும்
மயிலனே சயில நாயகனே.

51. தத்துவக் கூட்ட ஆன்மம் என்று உரைப்பின்
தனித்தனி சடமெனப் படுமால்
வத்துவை அறிதல் சடத்தினுக்கு இயலா
வகைதெரிந்திடல் அரிது அன்றாம்
சித்த தாவிளங்கு அறிவுறை தரற்குச்
செய்திடு மாயைஅக் குடிலே
மத்ததாய் அமுதம் மானிடர்க்கு அளிக்கும்
மயிலனே சயில நாயகனே.

52. வினைக்கடல் படிந்து மூழ்கியும் எழுந்தும்
வெறிகொள்ஐம்புலச் சுறா மகரம்
முனைத்திடப் பயந்தும் மனைவியர் மகவாம்
முறை வருந்திரைஅலைப் புண்டும்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

தனைத் தெரிகிலனை முத்தியங் கரைக்குத்
தவக்கலத்து ஏற்றியே நடத்தும்
வனப்பவிர் அயில் மீகாமனுக்கு இடமாம்
மயிலனே சயில நாயகனே.

53. மண்டபத்து உறையும் மாநிலத் தரையன்
மருவுறும் பரிசனத் தவரை
மண்டலத்து உறையுள் மருவிய பணியுள்
மடுத்திடும் மற்றவர் செய்யார்
கொண்டதத் துவத்தைக் கொள்கையில் செலுத்திக்
குலவுறும் ஒளியதாய்ச் சித்தாய்
மண்டும் அச்சான்றாம் ஆன்மம் என்று உரைக்கும்
மயிலனே சயில நாயகனே.

54. வளர்ப்பனை மாயை புவனம்என் குழிசி
வடித்திடு விடயம்என் சோற்றைத்
தளர்ப்புறு தத்(து)வக் கறியொடும் அயின்றும்
தணிந்திலன் நசைப்பசியதனால்
இளைப்பிலாது அளிக்கும் ஈன்றதாய்ச் சத்தி
இன்னுயிர்க் கலத்துஅருள் அமுதே
வளப்புற யான்உண்டு இளைப்புஅற அருளாய்
மயிலனே சயில நாயகனே.

55. உயிர்அறிவு என்னும் உரனிலா அமைச்சன்
உள்ளம்ஆம் கந்துகத்து இவர்ந்து
பயில்பொறி திறந்து ஐம்புலன் வழிப்படர்ந்து
பற்றுடைக் கரண வெவ்அரணுள்
துயில்வர விடயப் புலிஉணற்கு அணுகும்
துன்புஒழித்து இன்பினைச் செய்வாய்
மயில்மிசை வேல்கொள் உயிர் தமக்கு இறையோன்
மயிலனே சயில நாயகனே.

56. அடியனேன் அறிவும் இச்சையும் செயலும்
ஆணவ மும்மலம் கழித்தும்
விடுகிலா அன்பர் தொடர்பதே கொண்டும்
வித்தகர் வேடமே பூண்ட
அடியவர் தம்மைச் சிவமெனக் கொண்டும்
அரும்பிரா ரத்துவம் அகற்ற
மடிவிலாது உஞற்ற அருள்செயல் வேண்டும்
மயிலனே சயில நாயகனே.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

57. சுவை முதல் இயன்ற உலகமும் அவற்றைச்
சொல்லுறும் யான்எனும் உயிரும்
சிவமுதல் கொள்ளும் சுத்த தத்துவத்தாம்
செப்புறு தடத்தமும் கடந்த
பவமுதல்ஒட்டுந் சொரூப நற்சிவமே
பாவையால் ஆட்டுதல் தவிர்ந்து
மவுனமே உறுஞ்சீர் மடுத்திட அருள்வாய்
மயிலனே சயில நாயகனே.

58. கார்த்திகை அறுவர் கனிந்தபால் உண்டான்
கண்ணுதல் கன்னிமெல் அன்னம்
ஆர்த்தியின் அளித்த அமுதினை உண்டான்
அதன்பினும் அழுதுபொன் வள்ளம்
பூர்த்தியின் இனித்த புனித நல்அமுதும்
பொங்குற உண்டனன் தேக்கி
வார்த்திட உமிழும் வாய்அமுது அளிப்பாய்
மயிலனே சயில நாயகனே.

59. அந்தரத்து எழுந்த செஞ்சுடர்க்கு அல்லால்
அம்புயம் தன்னிடம் கறைகொள்
சந்திரற்கு அலராத் தன்மையின் தமியேன்
சகத்துறு பலப்பல தெய்வம்
சிந்தையுள் கொள்ளேன் சிறுபதம் கருதேன்
சிவவெளி தனில்வரும் கதிரே
மந்திரப் பொருளே தந்திரத் தலைவா
மயிலனே சயில நாயகனே.

60. அறிவதாம் சிவத்தை அணுகியே நோக்கி
அச்சிவத்து அத்விதம் விளங்கும்
மறிவதா மனத்துள் மன்னியே நிற்பின்
மரணமார் பிறவி எய்துதலால்
தறியதாய் இருந்து தத்துவம் கழன்று
தன்அறிவு ஒழிந்திட அருள்வாய்
மறியதாம் கரத்தன் மடியின்ஏறு உடையாய்
மயிலனே சயில நாயகனே.

விபூதி

61. ஞானமாம் சிவத்தின்நல் அழல் பூத்து
நலிவொழிந்து அணிபவர் தமக்குத்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

தான மா வசியந் தந்து அருந்தினர்க்குத்
தக்கதோர் அமுதமாய்த் தன்னை
ஊனமின்று அணிவோர்க்கு உற்றமும் மலத்தை
ஒழித்திடும் நற்குறி உணர்த்தும்
மானமார் பூதி மகிழ்ந்து அளித்திடுவாய்
மயிலனே சயில நாயகனே.

உருத்திராக்கம்

62. திரிபுரத்தவர்க்கு வெருவுதல் கொண்ட
தேவர்தம் வெந்துயர் கேட்டுப்
பெருகுறுங் கருணைத் திருமுகக் கண்கள்
பெருக்கிய துளி நிறை புணரி
வருகுறுஞ் செம்மை வெண்மையே கருமை
வயங்குறு மணிக்கலனாக
மரு உறுபவரைப் பவக்கடல் நடத்தும்
மயிலனே சயில நாயகனே.

பஞ்சாக்கரம்

63. ஐந்தெனும் எவையும் வந்துறல் பொருந்த
அருமறைக்கு இதயமாய் முதலாய்
மைந்துஎனும் பிரணவம் முந்தவோர் ஆறாய்
மாமுனிவரர் முதல் போற்றித்
தந்தமது துயர்வுற வெந்துற நரகம்
தக்கஐந் தருநிகர் ஐந்தன்
மந்திரம் அதுவாய் மனத்தினில் இனிப்பாய்
மயிலனே சயில நாயகனே.

குரு

64. குணங்களை உருவைக் கடந்தொளிர் சிவமாய்க்
குறைவறும் கலைமணிக் குன்றாய்
இணங்குறு வேதா மந்திரம் கிரியை
இயற்றி அத்வைத ஞானத்தைக்
குணங்கொள இசைத்தும் குறிக்கொள நிறுத்தும்
குலவு மெய்ஞ் ஞான சூரியனாய்
வணங்கிடக் குருவாய் வந்துஅருள் தருவாய்
மயிலனே சயில நாயகனே.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

இலிங்கம்

65. கிரியைகள் மனத்துப் பாவனை ஞானம்
திளர்விலாது ஒடுங்கிடும் இடனாய்த்
திரிவிலா மூலத்து இதயநற் புருவத்து
தெரிசுடர்என விளங்குவதாய்க்
குருவினால் அருளைக் குறிக்கொள நிறுவும்
குணமுதல் கடந்த சிற்பொருளாய்
மருவி லிங்கமுமாய் மணந்திட அருள்வாய்
மயிலனே சயில நாயகனே.

சங்கமம்

66. இருளினைக் கடிந்துஅங்கு ஆசைகள் மடிந்தும்
இகழ்புகழ்ச் சமஉளம் படிந்தும்
மருளினைக் கடிந்த சிவமயம் தாமாய்
மருவினர் வினைபொடித்து உயர்ந்த
தெருளுறுஞ் சித்தி முத்திஅங்கு உரமாம்
சிவசரச் சங்கம அர்ச்சனைசெய்
வரம்எனக்கு அருள்வாய் பரமசிற் பொருளே
மயிலனே சயில நாயகனே.

தீர்த்தம்

67. விஞ்சுறும் பஞ்சாக்கரத்தினாற் புனிதம்
வீறிடும் மந்திர உதகமும்
கொஞ்சமில் அபிடேகத்து அடிப்புனலும்
கொள் பிரசாதமாம் புனலும்
சஞ்சிதம் மூன்றும் கழித்திடும் குரவன்
சார் கருணோதகம் மூன்றும்
மஞ்சுஎனப் பொழிந்த எம் வெம்மயல் தணிப்பாய்
மயிலனே சயில நாயகனே.

பிரசாதம்

68. பத்திதன் முதலாய்ப் படர்குரு லிங்கம்
பகர்சரம் பத்தனே சரணன்
இத்தகையினர்தாள் இன்பஅநு பவந்தந்து
இருமையும் பெருமையே வழங்கும்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

சுத்தமே சித்தம் சொற் பிரசித்தம்
சுகம்தரும் இவ்வகை மூன்றும்
வத்து ஒன்றாக்கும் சித்தனாய் அருளாய்
மயிலனே சயில நாயகனே.

69. எரிமணல் பரப்பின் நீரெனுந் தோற்றத்து
இன்பமே நினைந்து உழன்று எய்த்தல்
மரையினுக்கு இயல்புஆறு போல் மன்னும்
மாயையின் காரியத்து உலகாம்
விரிமயற்கு உழன்று வீணனே எய்த்தேன்
வேண்டுவ என்றுஇனி அளிப்பாய்
வரம்உறற்கு இளைத்த வரை பல வளைத்த
மயிலனே சயில நாயகனே.

70. அவித்தையாம் வித்தொன்று அகந்தை வேர் வீழ்த்துஅங்கு
அகப்புறப் பற்றெனக் கிளைத்துச்
சவத்தியல் புஇச்சைச் சார்பொரு மூன்றுந்
தழைத்துமால் மனத்தினை மலர்ந்து
பவக்கனி உதிர்க்கப் புசித்தயான் மெலிந்தேன்
படுமுதல் தறித்துஒளிர் செய்வாய்
மவுட்டியங் களைவான் மவுனமாய் விளங்கும்
மயிலனே சயில நாயகனே.

71. இந்தியப் பரிகொள் இரதமேல் உற்றோர்
இழுத்தது விடுத்து என்று ஓட்டிப்
பந்தணை செய்துஅங்கு இழிந்து தம் மனையுள்
படும்இளைப் புறஅ மர்ந்து அருந்திச்
சிந்தனை மகிழ்ந்து சிறுதுயில் கொள்வர்
சிறியனேன் வெறியினால் அலைவேன்
வந்தெனைக் காக்கக் கந்தனைத் தாங்கும்
மயிலனே சயில நாயகனே.

72. மகபதி முதலோர் மன்னுறுந் தருவே
மனமறு பவர்உணும் மலரே
சக அருள் கடியச் சார்தரும் விளக்கே
சார்பவர்த் தெருள் செயும் ஒளியே
புகலென எவர்க்கும் பொருந்துறு தடமே
புன்மைகள் போக்குறும் புனலே
மகரனா வயங்கும் தகரனைச் சுமந்த
மயிலனே சயில நாயகனே.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

73.
தாயரே மகவுக்கு அருள்செயல் வேண்டித்
தந்தையை வினவுதல் சரதம்
ஆயவர் தாமே தமக்குஅருள் பெறுவான்
அடைந்தனர் நின்றனை அன்பால்
தூயவர் யாரும் தொழுது அணி மணியைத்
தொல்லை நாள் முதல் கொடு சுமக்கும்
மாயுரக்குன்றோ மகவுஎனக்கு அருள்வாய்
மயிலனே சயில நாயகனே.

74.
வரும் அருங்கிரியைச் செம்மையாக் குதற்காம
வகையிதென்று அதன்உரி கிழித்து
மருங்குற விரித்து மைந்நிறம் அடைந்த
மாபெரும் செம்மலை இயைந்த
பெருங்கரி சகலப் பெறுமகன் கருதப்
பிடிகளைக் களிற்றினைக் கரும்பால்
வரும்படிச் சுமந்த வரைக்குலத்து அரசே
மயிலனே சயில நாயகனே.

75.
இடக்கையே விழைந்த மானிடம் சுமந்த
இனியநல் தந்தையின் இயல்பு
முடுக்கையே விழைந்த விடையனை அறத்தை
உலகிதற்கு இயற்றிய தகையும்
நடக்கையே விழைந்த நகுகதிர் முடி.கொள்
நற்கிருத்தியன் செயல் விளங்க
வடக்கையே விழையும் மானிடம் சுமந்த
மயிலனே சயில நாயகனே.

76.
வேண்டுதல் வேண்டாமை எனும் இரண்டின்
வெவ்விய பந்தபோக் திருத்வம்
பூண்டு மும்மலத்துள் மூழ்கியே நாளும்
புரளுதல் போக்கு நாள் உளதோ
வேண்டுறுந் தேவர் விண்ணில் நின்று இழிவான்
வைத்ததோர் கோபுரம் வயங்கும்
மாண்புடை நிமலர் மாதவர் போற்றும்
மயிலனே சயில நாயகனே.

77.
விண்ணவர் வேதன் முனிவரர் முதலோர்
வேதனை விளிந்திட வெஞ்சூர்
பண்ணுறச் செயு நின் பழம்புகழ்த் தனிமை
பாவியேன் பழமலந் துணிப்பின்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

எண்ணுறப் பெரிதாம் ஏவரும் புகழ்வார்
இதுவும்நிற்கு அருஞ்செயல் அன்றால்
மண் உறைபவர்க்கே மருந்தென வளர்ந்த
மயிலனே சயில நாயகனே.

78. சச்சிதானந்தப் பெயர்பொருட் பிரமம்
சாரும் அப்பெயர் உடைத்து ஆன்மா
நிச்ச நித்தியமாம் சடந்துயர் மூன்றும்
நழுவுறும் நிச்சயம் சமாதி
மெச்சுறும் சகசம் மேவு ஞானத்தால்
மிக்குயர் பொருளதா விளங்க
வச்சருள் புரிவாய் உச்சிதப் பொருளே
மயிலனே சயில நாயகனே.

79. மரமதே விளிக்கும் விட்டலக் கணையும்
மாநிறம் விடாதலக் கணையும்
உரமதே பூண்டதேவ தத்தனைக் கண்டு
உற்ற இவ்விரண்டு லக்கணையும்
விரவுதல் கொள்ளல் ஆன்மமே அன்றி
வேறதாம் பிரமமே உறாதால்
வரமென மூன்றாம் கையுற விளங்கும்
மயிலனே சயில நாயகனே.

80. உள்ளதாம் உலகைத் துச்சமென்று உணர்தல்
உற்றதோர் நிச்சய மதியாம்
கள்ளமா மனத்தைக் கழித்து உலகு இன்பைக்
கடிந்திடல் சமாதியின் மதியாம்
வெள்ளமார் அறிவா அகம்புறம் சிவத்தை
மேவுதல் சகசநன் மதியாம்
வள்ளமாய் முருகின் வெள்ளமே கொள்ளும்
மயிலனே சயில நாயகனே.

81. தத்துவ சாலப் படைக்கலம் தாங்கி
சார்தரும் மனமுதல் நான்காம்
ஒத்துறு படைகள் புடைவர மாயன்
மூய வல் இருள்வெளிக் களத்தே
சத்துறு எம்மைத் தாக்குதற்கு அலந்து உன்
சரண நெஞ்சு அரண் எனக் கொண்டேன்
மத்தனார் தந்த சுத்தனே தாங்கும்
மயிலனே சயில நாயகனே.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

82. வினைக்கு இடம் செய்யும் கன்மமும் பிரபஞ்ச
விளைவினுக்கு இடமதாம் மாயை
இனைத்து இவை சுட்டும் ஆணவ மலமும்
எழில் சிவஞான நிட்டைக்கும்
வினைப் பிராரத்வ உள்அளவு உறுத்தும்
வீழ்த்திடற்கே குரு மூன்றும்
வனப்புற அளித்தே வழிபடச் செய்வாய்
மயிலனே சயில நாயகனே.

83. மனுமுறை அருளும் வேந்தன் மற்றவன்தன்
மகன் தனது அருள்வழி நடத்தும்
வினை வழி செலுத்தி வீட்டினை நல்கும்
விரகினன் சிவபிரான் எனினும்
முனைமுறை தவிர்த்துப் படைத்தவன் மணத்தே
முந்தினர்த் தந்தவன் வீட்டுள்
வனைபவன் விடுத்த வள்ளலைத் தாங்கும்
மயிலனே சயில நாயகனே.

84. அகம் பிரமம் என்று அனுதினம் கருதி
அகம் கரித்து அலக்கணுற்று இடாமே
அகம்படர் நின்னைப் பிரமம் என்று அறிந்தே
அருள்வழிப் படர்ந்திட அருள்வாய்
சகம்வளைக நடலும் வடமொழிக் கடலும்
தனி உணும் முனிவனுக்கு அருள்வோன்
மகம் தின மருவ மகக்குழை நிழற்றும்
மயிலனே சயில நாயகனே.

85. ஆசை அற்றிடுவோர் நிச்சயம் சமாதி
அறிவினிற் சிறிதெனுங் கலங்கார்
ஆசை உற்றிடுவோர் அவை இரண்டானும்
அனுதினம் கலங்கலுற்று அழிவார்
பாசம்முற்றும் அறுத்த சகச ஞானியர் போல்
பரந்த பொய்ச் சகத்தினில் கலங்கா
வாசம் உற்றிடுவான் மாசு ஒழித்து ஆள்வாய்
மயிலனே சயில நாயகனே.

86. அசுத்த மாயையினுள் அழுந்துறுஞ் சீவற்கு
அருளுருக் கொள்வதே ஈசன்
பசுத்துவம் நீங்கிப் பக்குவம் கொள்ளும்
பண்பி கூடத்தனாஞ் சீவன்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

நிசத்துவம் உணர்த்து நிட்களப் பிரமம்
நீட ருள் கொள்ள ஒன்றாகி
வசப்பட மறையும் வண்ணமே அருள்வாய்
மயிலனே சயில நாயகனே.

87. சேற்றினுள் அழுந்தும் சிறுவனைச் சேர்தாய்
சிறிது கால் வைத்துடன் தாங்கி
மேல்திடல் ஏற்றற்கு அழைத்திடத் தந்தை
மேவி அங்கை கொடுத்திடலாம்
கூற்றதன் மெய்ம்மை குவலயம் தெளியக்
குறுகும் அவ் இறையவர் உறைவான்
மாற்றுயர் மலையே மாடமாய் விளங்கும்
மயிலனே சயில நாயகனே.

88. அறுபொறியினர்க்கே அறு பொறியானால்
ஐம்பொறி அடியனேற்கு எவனே
குறுகுபன்னிருகை கொள்பவர்க்கு அருள
குறுகுபன்னி இருகையார் பவராய்ச்
சிறுமையில் அவர்க்கே சிறுமயி லவராய்ச்
சேயவர்ச் சேயவ ரானார்
மறுகுறும் எமை அம்மான் அடிக்கு உய்ப்பாய்
மயிலனே சயில நாயகனே.

89. மானிடப் பயிர்கள் தாம் அழிந்திடாமல்
மாமுகிலாகி நல்லருளைத்
தானிடப் பருகிச் சக்திவேல் மின்னத்
தக்கதோர் குக்குடம் இடிப்பக்
கோன் எனச் சிவஞானத்து உயர்வரை மேல்
குறுகியே பொழிந்திட நிமிர்த்து
வானுற வளர்ந்த தேன்உகும் பொழில்சூழ்
மயிலனே சயில நாயகனே.

90. உயிரினைத் துயர்த்தும் ஆணவப் பிணியும்
உடலுறும் கன்ம வெம்பிணியும்
மயலுடை மனத்துண் மாயையென் பிணியும்
மானிடர் மருந்தினுக்கு ஒழிமோ
செயிர்அறும் அறிவால் சிகண்டிமேல் வரவால்
சிறந்ததன் திருவருள் கதிரால்
வயம்அறப் போக்கும் வயித்தியன் வாழும்
மயிலனே சயில நாயகனே.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

91. குலவரை குடைந்து கொக்கினைச் சுட்டும்
கொழுவிய கரியினைக் கொன்றும்
பலதலை அரிஏறு அதனையும் படுத்தும்
பற்றுமற்று அவற்றினை விடுத்தோன்
குலாவும்தன் நாமங் கூறுகோழியையும்
குறுகுறுஞ் சிறுமயில் தனையும்
வலமுறக் கொண்டோன் வாழுமா முகட்டு
மயிலனே சயில நாயகனே.

92. சுத்த அசுத்தம் ஆகும் அம்மாயைச்
சொரூபமும் பெயரதும் முறையே
ஒத்துறுங் கன்மச் சுவையினை ஒழிக்கும்
உற்றஅச் சுவையின் உள்ளூறுத்தும்
சுத்த ஞானத்தால் யானெனல் அடக்கிச்
சொரூபம் என்னது எனல் போக்கி
வத்துவோடு ஒன்றாம் வண்ணமே புரிவாய்
மயிலனே சயில நாயகனே.

93. தகரு நற்கோழி தனிமயில் வைவேல்
தாங்குறுந் தனிப்பெருந் தெய்வம்
பகருநற் சரியை கிரியையோ உணர்வு
பற்றினோர்க்கு உற்றருள் பரிந்து
நிகரில்நன் நிழலே மணமதே கனியே
நீள்சுவை தருபெருந் தருப்போல்
மகரவாரிதி சூழ் மாநிலத்து அருளும்
மயிலனே சயில நாயகனே.

94. பெருமலைப் பிறந்த சிறுநதிப் பாம்பின்
பெருங்கடற் படத்தட முடிமேல்
தருசுடர் மணியின் வருசுடர்ப் பரிதி
தனிவிழி நனிகலந்திடல் போல்
குருமுதல் மூன்றாய் அறிவொடுங் கலந்த
குராமலர் விராவுசெம் பதுமம்
மருவியுண் மணக்க வணக்கமே செய்வேன்
மயிலனே சயில நாயகனே.

95. மீன்றலை உடும்புங் கரி மருப்பு ஏனம்
மிக்கு இரசக்கழை வரைகள்
தேன்தரு கதலிக் கமலமும் புயலும்
செந்நெலுஞ் சங்கிவை முதலா

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

ஈன்றிடும் முத்த இரும் புவிப் பொன்றும்
இதனையான் வேண்டிலன் சீவன்
மான்றலில் முத்தம் மருவிட அருள்வாய்
மயிலனே சயில நாயகனே.

96. தகரினை அடக்கும் தலைவனை உடையாய்
தக்கதோர் சரியையின் பயனும்
பகருநற் சேவல் துவசனைப் பரிப்பாய்
பண்புறுங் கிரியையின் பயனும்
சிகிபரித் தேரோன் சத்தியற் சுமப்பாய்
செப்புறும் யோக ஞானங்கள்
மகிதலத்து எவரும் மருவிடற்கு அருள்வாய்
மயிலனே சயில நாயகனே.

97. கூப்புகைக் கமலம் குலவு மானிடத்துக்
குரைகடற்கு உள்ளுறை அன்பே
வாய்ப்புடன் தாங்க வருமுனை நாட்டி
வள்ளல் அம்கரிசிகிப் பரியோர்
தாப்பெனு மருளைத் தாங்கியீர்ப்பு எழுந்த
தகுஞ் சிவஞானம் ஆர்அமுதம்
வாய்ப்புடை வழிய வார்த்திடல் வேண்டும்
மயிலனே சயில நாயகனே.

98. கூடுறுஞ் சிவத்தைக் கொண்டருள் மயிலுங்
குறைவறத் தனந்தரு மயிலும்
வேடுவர் குலத்தை விளக்குறு மயிலும்
விண்ணுறை கரிவளர் மயிலும்
நாடுறுங் கற்ப நாடனா மயிலும்
நல்தவத்து ஆதியின் மயிலும்
வாடுறச் செவ்வேள் வகித்தருள் புரியும்
மயிலனே சயில நாயகனே.

99. காலமே கருதிக் கைப்பிடித்து அழைக்குங்
காலனைக் கடிந்த நல் தந்தை
சாலவே மகிழத்தனிவருந் தகைமைத்
தனயன்நீ உடைமையான் அடைந்தேன்
ஞாலமேல் அப்பர் காலமே பார்த்தல்
நன்றென அன்றென நடந்தான்
மால்அயன் போற்றும் ஆலயம் படைத்த
மயிலனே சயில நாயகனே.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

100. குமரனே போற்றி குழகனே போற்றி
குணமுதல் கடந்தவா போற்றி
அமரனே போற்றி அழகனே போற்றி
அருள்மொழி விழியனே போற்றி
சமரனே போற்றி சதுரனே போற்றி
சதுர்மறைத் தலைவனே போற்றி
வமிசமே வந்துஉன் பதம் வலந்தருவன்
மயிலனே சயில நாயகனே.

ஸ்ரீ சிவஞான பால குரவே நம;
நூற்பயன்

கயிலா சரபம் பரையான் கதுவும்
மயிலா சலன்அம் புயம்ஆர் மாலை
பயிலா வளன்ஈந்து அருள்ஆர் பரனோடு
உயிர்ஆர் தரவே ஒன்றுஆக் குறுமே

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

முருகன் அருள்வேட்டல்
ஆசிரியர்: திரு.வி. கலியாணசுந்தரனார்

திருமயிலம்

1. மண்எழுந்து விண்காட்டு மலையாய்ச் செங்கால்
வாங்கி நிலவாக்கு நிழல் வண்மைக் காடாய்
தண்அமரும் பசுமைகொழி வயலாய் நீலச்
சாந்தநிறக் கடலாகித் தாங்கும் தாயே!
உண்மையிலே ஒளிர்கின்ற ஒளியே! என்றும்
உளக்கோயில் கொண்டோர்தம் உயிரே! நாயேன்
வண்ணமயில் திருக்கோல வனப்புள் மூழ்க
வந்துஅடைந்தேன் மயிலமலை வாழும் தேவே.

2. பசுங்கடலில் மிதக்கின்ற படகே போன்று
பயிர்சூழ ஓங்கிநிற்கும் பரிவுக் கோயில்
விசும்புஉள்ளார் பாதலத்தார் விரும்பி ஏத்த
வீற்றிருக்கும் பெருமானே! விமலா! பாசம்
நசுங்குவழி காணாது நாயேன் பன்னாள்
நாயகனே! கழித்துவிட்டேன் ஞானம் இன்றுஉன்
வசம்பெறவே வந்துஅடைந்தேன் வள்ளால்! பார்த்து
மருள்நீக்கி அருள்செய்க மயில வாழ்வே.

3. வித்தாகி முளையாகி வேர்கள் வீழ்த்தி
விண்ஓங்கு செடியாகி விரிந்து நீண்டு
சத்தாகிக் கவடாகித் தாங்கும் கோடாய்த்
தளிர்இலைகள் தழைத்துநிற்கும் தருவே! நீழல்
பித்தாகி ஓடிவந்தேன் பாலைக் கள்ளிப்
பெருங்கழுகு எதிர்க்க எனைப் பின்னிட்டே னால்
அத்தா! என் வேட்கையுணர்ந்து அச்சம் நீக்காய்
அமரர்தொழும் அம்மயிலமலை அன்புத் தேவே.

4. மண்ணாகி மணலாகி வளர் கல்லாகி
மகிழ்கின்றாய் மனங்கவரும் மலையே! நின்பால்
கண்ணாகிக் கல்ஆகிக் கதிருள் மூழ்கிக்
கறைஇல்லா உயிர்ப்புஅருத்திக் கருத்திற் சாந்தம்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

உள்நாடி வழிஅடைய உவந்து வந்தேன்
ஒருபுலியின் பார்வைவிழாது உடைந்து வீழ்ந்தே
அண்ணா! நான் நடுநடுங்கி அகன்றேன்! அச்சம்
அழித்துஅருள்செய் மயிலமலை அழகுத் தேவே.

5. மலையாகிக் கால்நீராய் வனப்பு ஆறாகி
வாய்பாய்ந்து புனல்காடாய் வாரிபோல
விழியாலும் கரைகாணா விண்சாய் ஏரி!
வெம்மைகொள வேட்கைஎழ விரைந்தே ஓடி
வழியாலே நடந்துஇழிந்து வந்த வேளை
மகரங்கள் குழுகுழுவாய் வளைந்து பாய்ந்து
சுழியாடல் கண்டுஅஞ்சித் தூரஞ் சென்றேன்
துயர்களையாய் மயிலமலைத் தூய்மைத் தேவே.

6. எங்குஎங்கு நீங்காமல் இருக்கும் தேவே!
எங்கிருந்து துன்பஇருள் எழுந்தது ஐயோ
தங்குமிடம் தெரியவிலை தமியேன் நாளும்
தாங்குதுயர்க்கு எல்லையிலை தாயே ஆகி
இங்குஅடியார்க்கு அருள்புரிய எழுந்த ஈசா
ஏழை முகம் பாராமல் இருப்பது என்னே
திங்கள்பொழி நிலவுஆடத் தென்றல் வீசத்
திருக்குளம்சூழ் மயிலமலைச் செல்வத் தேவே.

7. அத்தநினது உண்மையினை அறிந்துஞ் செய்த
அடாதசெயல் அத்தனையும் அழிதல் என்றோ?
சித்தர்எலாம் தொழுந்தலைமைச் சித்தர் ஏறே!
சிந்தைகொண்டால் தீப்பஞ்சாய்த் தீய்ந்து போகும்
பத்தர்உளக் கோயில்கொளும் பரமா! செம்பில்
படுகளிம்பைப் பாற்றுவித்துப் பசும்பொன ஆக்கும்
சுத்தசெழு மூலிகைகள் சூழ்ந்து நிற்கும்
தொன்மயில மலையிருந்தே! துணைசெய்யாயே.

8. சாதியிலே மதங்களிலே சார்பு விட்டேன்
சண்முகனே! திருவடியின் சார்பு கொண்டேன்
வீதியிலே விளையாடித் திரிந்த காலை
வேலவனே! நின்தொண்டு விளங்க இல்லை
நீதியிலே நின்றுஉயிர்க்கு நிகழ்த்தும் தொண்டே
நின்தொண்டாம் என்று உணர்ந்தேன் நிமலா! பின்னாள்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

வாதமிலா இடத்துஒளிரும் வள்ளி நாதா!
மயிலமலைச் சிவகுருவே வருவாய்இன்றே.

9. விண்உறுநீர் பந்தர்இட மிளிரும் கோள்கள்
மின்விளங்கு நிரைவாழ்அங்கு விரிந்த திங்கள்
வெண்ணிலவு விருந்துஊட்ட விசிறிச் சோலை
மெல்லியகால் பன்மலரின் விரையைத் தூவத்
தண்அருவி முழவுஅதிர்ப்பச் சங்கம் ஆர்ப்பத்
தமிழ்வண்டு பாண்மிழற்றத் தனியே நின்றே
கண்ணுலவு நாயகனே! கந்தா! வந்து
கருணைபுரி மயிலமலைக் கரும்பே தேனே.

10. மண்ஒடுங்கி நீர்வறண்டு வன்னி மாய்ந்து
வளியடங்கி வெளிகலங்கி மடிவுற்றாலும்
கண்மயிலில் ஏறிவிளையாடும் கந்தா!
கண்மயிலில் ஏறிவிளையாடும் கந்தா!
பண்அடியார்க்கு அருள்புரியும் பரமன் நீயே
பாழ்ப்பிறவி வேர்அறுக்கப் பாவி நாளும்
தண்அருளை நாடிஅலை கின்றேன் அந்தோ!
தயைபுரிவாய் மயிலமலைச் சாந்தத் தேவே.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

கார்த்திகைக் கதம்பகம்

ஆசிரியர்: ஆ. சிவலிங்கனார்

1. திருக்கார்த்தி கையின் பெருங்கூட்டம்
திருத்தேர் விழவின் பெருங்கூட்டம்
பெருக்குஆர் வத்தோடு இறைஞ்சிடவே
பெரிதும் அறியாது இருந்திட்டேன்
ஒருக்கா லும்யான் இனித்தாழேன்
ஒழியாது உன்னை வணங்குவனே
எருக்கார் முடியோன் அருள்பாலா
எழில்ஆர் மயிலத்து இறையோனே. 1

2. காலை நேரத்தில் கடவுள் முருகனுக்குப்
பால்அபிடேகம் பார்த்துவந்தேன் - கோலம்செய்
மாமயில வாகனத்தான் மாண்பார் அருள்பெற்றேன் 6

3. வாயில் விரலைச் சுவைத்ததனால்
வயிற்றுப் பசியை மறந்திட்ட
சேயின் நிலையில் எந்நாளும்
சிறிய இன்பம் துணையாக
நோயை மறந்து திரிவேனை
நுவல் நன்றே அருளுகவே
வாயை வாழ்த்த வைத்தவனே
வளமார் மயில முருகோனே. 10

4. பள்ளத்தை நோக்கிப் பாயும் வெள் ளம் போல
கள்ளத்தர் உள்ளே கலக்களன் - உள்ளமே
ஓடி உழலாமல் ஒண்மயிலத்து எம் முருகைப்
பாடி பரவுவாய் பார். 15

சந்தப்பாட்டு

5. பொழில்உறு நறுமலர் அவைகொடு நின்திருப் பாதத்தைப்
புகழ்உறும் அடியவர் வழிபடும் அம்முறை மேவத்தான்
வழிவகை அறிகிலன் எனில்இனி உய்வகை உண்டோதான்
வளர்மதி அருசடை உடைவள் சீர்வரு மைந்தாநான்
மொழிதமிழ் பயில்வரு சிறுவரின் பண்புறு பாட்டுக்கே
முனைவரு மயில்அது நடமிட மந்திகள் வேட்டுக்காண்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

பழியகல் புகழ்மிகு நலமயிலம் அமர் செவ்வேளே
பணிவருமற குறமகளிருக்கு இன்னருள் செய்வோனே. 52

அகப்பாடல்

6. கடலைக் காய்தரு மாதுளங்காய்
காமனார்மலர்ச் சீர்விளங்காய்
உடலைச் சேர் வேலங்காயோன்
ஒருவ வேப்பங் காயோடு
படலை தந்தாய் தேங்காய்நீ
பயனார் மயில மாங்காயா
நடலைத் தோகை நகர்வாழும்
நாதன் அருளால் நல்லோனே. 67

7. உடல்வளர்ச்சி உரைவளர்ச்சி உளவளர்ச்சி மூன்றும்
உயிர்வளர்ச்சிக்கு ஆகும்அவற்று உண்மைநிலை சொல்வேன்
உடல்வளர்ச்சி என்வளர்ச்சி உரைஅது பிறர்க்குஆம்
உளவளர்ச்சி யாவருக்கும் உவந்துஅருள்க நன்றே
மடல்வளர்ச்சித் தாழைமலர் மலிபுதுவை மாசி
மகவிழவுக்காக வரும் அடல்வளர்ச்சி வேலோய்
இடல்வளர்ச்சி இனிஅவர்கள் எழில்வளர்ச்சி வாழ்வே
பெருவளர்ச்சி உளமகிழ்ச்சிப் பெருமயில வாழ்வே. 77

8. கண்டகண்டபடி பேசிக் காலத்தைப் போக்காமல்
கொண்டமட்டும் நின்னைக் குறிக்கொண்டு - கண்டம்
கருத்தவன் நன்மகனே காங்கேயா வாழ
இருத்து இங்கு என்னை இனிது. 81

9. பாதிமதி வேணியனின் அருள்பாலா
பாதமலர் சூடிடுநல் அறிவாளர்
ஓதும்அடியார் அடிகள் பரவாமல்
ஓடிஉழல் நாயன்எனை அருள்வாயே
காதுகுணம் சேர்பவர்கள் இலாதாகும்
காண்அரிய தோகைபல விளையாடும்
போதுமலர்ச் சோலைபயில் மலையாகும் 82
போகுஅரிய ஊர்மயில முருகோனே.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

10. தோளும் தலையும் கலம்பகமாச்
சொல்லும் உருவும் பிளைத்தமிழா
ஆளும் முகவாய் கோவைகளா
அயிலே ஆற்றுப் படையாக
ஆளும் ஆரல் அந்தாதி
ஆகக் கொண்ட அறுமுதவா
மூளும் அன்பைத் தூதுஉரைத்தேன்
முன்னும் உளத்தில் உலாவருவாய்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

திருமயிலைச் சந்நிதி முறை

ஆசிரியர்: சாமிநாதப்பிள்ளை

திருச்சிற்றம்பலம்

சாற்றுக்கவி

குடியாத்தம் தாலுக்கா வேப்பூர் கிராமம் சீர்கருணீக வீரசைவ குலத்திலகராகிய ம - ள - ள - ஸ்ரீ, க. இராமலிங்கப்பிள்ளை அவர்கள் வேண்டுகோளின்படி இந்நூலாசிரியர் இயற்றியது.

சுந்தரர் அப்பர் மாணிக்கர் சம்பந்தர் தொண்டர் மற்றே அவர்களுத் துதிப்பா
தந்தர வடலூர் பார்வதி புரத்திற் சமரச சுத்த சன்மார்க்க
இந்திரர் பிரமர் அருமுனி உரகர் இமையவர் விஞ்சையர் உலகோர்
வந்தனம் புரியச் சட்சபை மேலாம் வள்ளல் மாமணி அருட்குருவே.

வே.தா. சாணாங்குப்பம் கிராம கணக்கு ம - ள - ள - ஸ்ரீ, மு. பொன்ன சுவாமிப்பிள்ளை அவர்கள் இயற்றியது.

தார்வளரும் மாமயிலைச் சண்முகன் மேல் அன்பாய்
பேர்வளரும் பாமாலைப் பேசினா - நேர்வளருந்
தென் அருணைப் பூர்வத் திசையில்வளர் ஆறாஞ்சி
தன் அருளே சாமிநாதன்.

திருமயிலைச் சந்நிதி முறை

பஞ்சாங்கப் பாமாலை

இது

திருவண்ணாமலையைச் சார்ந்த ஆறாஞ்சி கிராமம் சீர்கருணீக வீரசைவ குலதிலகராகிய கல்லணை கருப்பூர் அண்ணாப் பிள்ளை உபாத்தியாயர் என்கிற சிதம்பரம் பிள்ளை குமாரரும் சுப்பராயப்பிள்ளை சகோதரரும் ஆகிய ம - ள - ள - ஸ்ரீ, சாமிநாதப்பிள்ளை அவர்கள் இயற்றியது.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

வேலூர் தாலுகா சாணாங்குப்பம் கிராமம்
ம - ள - ள - ஸ்ரீ, மு. பொன்னுசுவாமிபிள்ளை அவர்கள்
கேட்டுக்கொண்டபடி
சென்னை சூளை: தனலஷ்மி நிர்த்தன அச்சு இயந்திர
சாலையில் பதிப்பிக்கப்பட்டது. *1906*
இந்நூலாசிரியர் மருமான் சுகஜீவி இராமநாதபிள்ளை
அவர்கள் இயற்றியது

சீர்வளர் உலகில் தென் மயிலாசலப்
பேர்வளர் சந்நிதிப் பிரபந்த நாமம்
அருணைகிரி பூர்வ ஆறாஞ்சி நகரின்
மருவியே வாழும் மாசிலாக் கோத்ரம்
காசிபச் சூத்திரம் கருது போதாயனம்
பேசுவர் மஹேந்திரப் பிரபவப் பாடி
வளர்சீர் கருணர் மா வீரசைவ
நளிர் மலர் சூட்டி நாதனைப் போற்றும்
அண்ணாவு பிள்ளை அருளிய பாலன்
நண்ணாரில்லா நாயகன் சுப்ப
ராயன் சோதரன் நலங் குணத்து அண்ணன்
மாயன் மருமகனை மனத்தில் போற்றும்
பொன்னுசாமியின் புனித நல் அம்மான்
அன்னவேல் என்னும் அரிவையை ஈன்றவன்
நாவலன் சாமிநாதன் நற் பெயரோன்.

சாற்றுக்கவி

பாவலர் மதிக்கப் பாக்கள் ஓராயிரச்
சந்நிதி முறையாய்ச் சாற்றினன் மிக்கோர்
அந்நிதி அருளால் அகம் மகிழுற்றே
அம்முறை தன்னில் அடங்கிய நூல்கண்
மும்மதம் பொழியும் முதற் கடவுள் மேல்
பன்னுங் கணேசர் பதிக தேவாரப்
பண்ணும் துயரப் பதிக பெண்பிரிவும்
வெண்பா மாலை விளங்கும் அந்தாதிப்
பண்பாந் தண்டகம் பஞ்சரத்நப் பா
பருத்த நற்சதகம் பஞ்சாங்கப் பாக்கள்
பிரித்த சொல்சதகம் பேர் அனுபூதி

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

நவக்கிரக வெண்பா நவின்றனன் முறையாய்ப்
பவக் கடல் கடக்கப் பற்பலப் பாடின
இப்பெருநூலில் இசைத்திடும் பெயரில்
அப்பெரும் வறுமைநோய் அகத்துயர் விலகப்
பஞ்சாங்கச் செய்யுள் பகர்மதி பதிகம்
கொஞ்சியவாரம் குலவிய திதியும்
பதிக நட்சத்திரப் பதிகம் யோகப்
பதிகம் கரணப் பதிகமும் இவைநேர்
மாலையுஞ் சேர்த்து மயக்கமும் நீக்கிக்
காலையும் மாலை கருத்துடன் ஓத
வல்பிணிச் சண்டை மாறாட்டங்களும்
சில்பிணி வாரா தென்திசை ஆளும்
ஏமனுஞ் சேரா என்பது நிச்சயம்
காமன் மருகன் கருணை செய்திடுவன்
அச்சியில் இட்டிட ஆக்கமது உதவி
இச்சையாய்ச் செய்தோர் இன்பம் உற்றிடுவோர்
படித்தவர் வரைந்தவர் படித்ததைக் கேட்போர்
நடித்தவர் பூவில் நலம் பெறும் வழியே.

இதுவும் மேற்படியார் சொல்லியது

தேங்கு மலர்ச்சோலை திருமயிலை மாமலைமேல்
ஓங்குசிவ சண்முகன் மேல் ஓதினான் - தாங்கு நறும்
பாவலர்கள் பார்க்கும் அதி பஞ்சாங்கப் பாமாலை
நாவலருட் சாமி நாதன்.

திருச்சிற்றம்பலம்

தேவியே நமஹ

அ. எல்லாம்மை, த. அமுர்தம்

இஷ்ட தேவதா தோத்திரம்
இரட்டை ஆசிரிய விருத்தம்

நீர்பரவும் கங்கை உமை சங்கரர் த்ரியம்பிகை
நித்ய கல்யாணி அமிர்தம்
நேமி சிவகாமி அபிராமி மதிமலர் வேணி
நிருமலானந்த அமிர்தம் இன்அமிர்தம்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

நிஷ்கள நிரஞ்சன நிராதர நிராமயமு
நிஜரூபமான அமிர்தம்
நிலவு கதிர்மணிசுடர்ச் செஞ்சுடர் விளக்கொளியுள்
நீண்ட ஒளிவெளி

கார்பரவு சத்த மேகங்கள் ஒலிமின்னல் இடி
கண்மாரி சொரியும் அமிர்தம்
கனக நவரத்தினப் பிரகாச சதுர் மறைகள்
காணொணா நின்ற அமிர்தம்
காலம் கடந்த மெய்ஞ்ஞானி கடபோதனர்
கலங்காது அருந்தும் அமிர்தம்
கரிய திருமாலயன் தேவரும் சித்தரும்
கண்டு களி கூறும் அமிர்தம்.

தார் பரவு நவகிரக ராசிமண்டல முதற்
றானாய்ச் சுகித்த அமிர்தம்
தராதரம் அறிந்த புவி ராஜ கவிராஜ
தவ ராஜ மகராஜ அமிர்தம்
தற்கம் இடும் பரசமயம் யாவுக்கும் உணர்வரிய
சட் சமயவாதி அமிர்தம்
தானாக நீயாக நானாக
வானாக சச்சிதானந்த அமிர்தம்

ஏர் பரவும் கல்வியும் செல்வப் பிரதாபமோ ஏகபோகங்கள் அமிர்தம்
எங்கணும் பூசை நை வேதனம்தியான துதி
இயம நியமங்கள் அமிர்தம்
இடரறுத்திடும் இன்ப உறவும் உற்றிடும்
இன்பம் என இஷ்ட தேவ அமிர்தம்
எல்லம்மை சொல் அமிர்த வெல்லம்மை
வல்அமிர்த வில்லம்மை நல்லமிர்தமே

இந்நூலாசிரியர் தாயார் ஸ்ரீமத் அன்னம்மை
பதவியடைந்த தினம்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

சரமகவி

பூமலர் யோகி அருந்தவம் புரியும்
பொன் நகர்க்கு இணை எனப் புகலப்
பூசுரர் போற்றும் சீதரப்
பிரமன் புகழ்அடி முடிதனைக் காணாப்
பொற்பதம் உடையோன் தன்னிகரில்லாப்
புரந்தரன் துதித்திடும் பாதப்
பொலிவுறும் உண்ணாமுலை உமை
பாகர் புகர்முக மகவை பெற்று உயர்ந்தப்
புண்ணிய முருகன் தொண்டர்கண் மூவர்
பொதியையில் அகத்தியன் முதலாய்ப்
புலவர்கள் நீதி நடுநிலை அருணை
புரிநிறை கோபுரங்கள் கீழ்பால்
புள்ளினம் சொலிக்கச் சுரும்பினம் பாடப்
புகுந்திடும் மகிழ்மணம் புரிய
புனற்கரை ஏரி தடாக முங்கூபப்
போதுவாய்க் கால்கள் நீர்ஓடை
மாமலர்ச் சோலை தழைத்த நற்பதியா
மாமணி கலிநகர் நாமம் வழங்கும் இவ்உலகில்
சாதி பற்பலருள் மருவிய சீர்கருணீகம்
மறை ஒளிமுரசு யோதனப் புரியோன்
மதித்தனர் உயரனக் கொடியோன்
மயேந்திரப் பாடி கைலாச வேளாளன்
மன்னுபட்ட டைவளை சேரி
மாதவம் மிகுத்த காசிபக் கோத்ரம்
வளரும் போதாய னச் சூத்ரம்
வழிவழி கால்கட் பரம்பரை மருவி
வரும்இரு காட்களில் ஒருவன்
மதிநிதி பதிசேர் கல்லணை கருப்பூர்
வரைந்து உறை சுப்ப ராயன்பால்
மகன் என உதித்தச் சிதம்பரபூபன்
மணவரை திருந்திய மனையாள்
தூமலர் மக்கள் தசத்தினில் பெண்பால்
சுதர்களும் பாகராய் உதித்தச்
சுதரிகள் இருவர் சுதரினில்
துலங்கிய ஈரிரு பாலில்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

துவங்கிய பெண்பால் இளையவள் அளித்தச்
சுதன் பொனுசாமி மாதுலராந்
துணைவரில் ஒருவன் அற்புதப் புலவோன்
சுவாமி நாதன் எனும் பெயரோன்
சொல்லிய கவியுள் பதந்தருந்
தௌத்ரன் தோத்திரப் புண்ணியச் செயற்கைத்
தொந்த மாங்கலியை ஆயிரந் தன்னில்
தொகை ஒருநூறு கால் கழிமேல்
சுத்த எண்ணளவிற் பிரபவ ஏழிற்
துணிவுளச் சீமுக ஆண்டில்
தோகையின் திங்கள் தியதியீர் நான்கின்
சோமநாள் வளர் பிரதமை நேர்
காமலர்ப் பாணி சித்தயோகத்தில்
கதிரவன் உதயம் ஒன்பான் மேல்
கால் கனல் செல்க இராசியும் தெறுக்கால்
ககன மண்டலத்தினில் பாயும்
கலை ரவி கன்னி தேளினில் செவ்வாய்க்
கணக்கனும் கனகனும் கவியோ
காடுறை சிங்கம் சனி யனும்மானும் கரும்பணி
தகர் துலை கேதும்
காட்சி யுந்தரு நட்பாட்சி உச் சமமாய்க்
கற்புடை கனல் விடையொடுங்
காசினில் உயர்ந்தத் தவத்தினின் மிக்கோர்
காணொணாத அருட்பெருஞ்சோதி
கண்டிடும் நாதம் விண்டிடும் உச்சின்
கண்ணொளி வெளிசுடர் விளக்காய்
கயிலையன் பரத்தில் அன்னமே அன்னை
கலந்தனள் நித்தியப் பதமே.

முற்றும்.

திருச்சிற்றம்பலம்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

திருச்சிற்றம்பலம்

ஓம் கம் கணபதியே நம

ஹரி ஓம் நன்றாக குருவாழ்க குருவே துணை

திருமயிலை சந்நிதி முறை

பஞ்சாங்கப் பாமாலை

விநாயகர் காப்பு

சீர்மதி வாரம் திதிநாளில் யோகம் திகழ் கரணம்
பேர்மதி ஐந்தும் கலித்துறையாக பிரபந்தம் எனப்
பார்மதி மா மயிலாசல தேவனைப் பாடுதற்குக்
கார்மதி யானை முகத்தோன் அனுதினம் காப்பதுவே.

நான்காவது
மாதப் பதிகம்

சித்திரை

1. புத்தரை வாதினில் வென்றோன் அருட்சுதப் புண்ணியனே
இத்தரை மீது நற் பத்தரை ரெட்சித்து இடர் விலகச்
சத்திரை வேலும் மயில் மிசை ஏறித் தனயன் முனம்
சித்திரை மாதம் வருவாய் மயிலைச் சிரோன் மணியே.

வைகாசி

2. ஐயா இதென்ன அநியாய கால அவதியினால்
பொய்யாது காயமும் மெய்யாய் நம்பும் தொண்டர் புண்ணியர்கள்
செய்யாது செய்தப் பெரும் பிழை யாதும் சிதறிடவே
வையாசி மாத வருவாய் மயிலை மகத்துவனே.

ஆனி

3. ஞானியும் மாலும் அறியா வழலுரு நல் வடிவோன்
மானியும் தந்த பிரான் முருகன் தெய்வயானை வள்ளிப்
பானியும் சேவலும் பன்னிரு ஆயுதப் பாணியும் விண்டு
ஆனி இம்மாதம் வருவாய் மயிலை அருமையனே.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

ஆடி

4. கூடிய தொண்டர்க்கு இடையூறு இலாமல் குலாவி நில்லேன்
தேடி எங்கெங்கும் பலபல தெய்வம் என்றுஎண்ணும் சிந்தை
வாடியே ஓடிப் பதுங்கிப் புழுங்கியும் வாது கொண்டே
ஆடி மாதத்தில் வருவாய் மயிலை அருட் பதனே.

ஆவணி

5. மேவிய தாருகன் சூரன் சிங்கன் படைமேல் வெகுண்டே
யாவரும் மூவரும் தேவருமே கண்டு அமர் புரியாப்
பாவரை வேரறுத்தே சிறைமீட்டுப் பயம் தவிர்த்தோய்
ஆவணிமாதம் வருவாய் மயிலை அமர்ந்தவனே.

புரட்டாசி

6. உரத்தஅதி சூரன் முறிபடவே உக்ர வேல் முனைந்துஉள்
கருத்தாதி தேவர்களுக்கு ஆதார சின்மயக் காட்சி தந்தோய்
வரத்தஆதி மூலப் பிரணவ வள்ளி தெய்வானை மன்னா
புரட்டாதி மாதம் வருவாய் மயிலைப் புராதனனே.

ஐப்பசி

7. முப்புரம் தீப்பட்டு எரித்திடப் புன்னகை மூர்த்தி தந்தே
துப்புறச் செய்தனன் அப்பன் விரும்பிய சோதிசுதன்
எப்பொருட்கும் பதியாகித் தலைமை இளமை புற்றே
ஐப்பசி மாதம் வருவாய் மயிலை அரும்பொருளே.

கார்த்திகை

8. தூர்த்தரைச் சேராத அருட் பதத்தார் நன்மை தூய் பதத்தைச்
சேர்த்தணைத் தாளக் கடன் உனக்கே தெய்வயானை வள்ளிப்
பார்த்திபனே நறும் பாவலனே நைந்த பாலனுக்கே
கார்த்திகை மாதம் வருவாய் மயிலை கருத்து ஒளியே.

மார்கழி

9. சீர்தரும் வேலுடைச் சங்கு சக்கர ஆயுதச் சேவல் கொடிப்
பேர்தரும் பன்னிரு பாணியும் சூலப் பெரும் படையும்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

தார் தரும் நீபத் தடமார்பு இலங்கத் தயை புரிய
மார்கழி மாதம் வருவாய் மயிலை மனோகரனே.

தை

10. பொய்மதி இன்றிப் புலவோர் மொழிக்கு எதிர் போதம்மிகச்
செய்மதி கீரன் அருணை நல்நாதர் சீருக்கு இரங்கிப்
பெய்மதி தீர ன்அருள்மதி தேகப் பிணி அகலத்
தைமதி தன்னில் வருவாய் மயிலை தனிப் பொருளே.

மாசி

11. காசிப் பதியும் கடந்தே நடந்துஇரு கால் கடுக்கப்
பேசித் திரிந்து செங்காவடி கட்டிப் பிரபலித்தே
நேசித்து இராமேச் சுரம்சென்று கண்டோர் நினைவு விண்டு
மாசித் தன் மாதம் வருவாய் மயிலை மணி மந்த்ரனே.

பங்குனி

12. இங்கித ஞாயசொல் பொங்கிய போகம் இப்பூதலத்தி;ல்
தங்கிய பாவ நல் புண்ணியச் செய்கைத் தழைத்த சரண்
எங்கணும் தான் அதுவாகத் திருவிளையாடல் உற்றோய்ப்
பங்குனி மாதம் வருவாய் மயிலை பரை சிவமே.

மாதப் பதிகம் முற்றும்
திருச்சிற்றம்பலம்

ஐந்தாவது
வாரப் பதிகம்
ஞாயிறு

சோதித் தரும் வெளி சொல் மயமானச் சுடர்க் கொழுந்தாய்
நீதித் தலைமைப் பதிஅரசே புரிநீண் நிலத்தில்
சாதித்த புண்ணியர் கண்ணியர் போற்றும் தயாநிதி சேர்
ஆதித்த வாரம் வருவாய் மயிலை அயிலையனே.

திங்கள்

நிதிசேர் அருள்வெளி விண்ணுலகு ஏந்தி நிலவு ஒளியாய்ப்
பதிசேர் பரமன் சிரசினில் சூட்டிப் பதிந்து இருக்கும்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

துதிசேர் முனிவர் இருடிகள் தேவர்கள் தொண்டவர்பால்
மதிசேர் வாரம் வருவாய் மயிலை மணி விளக்கே.

செவ்வாய்

சங்கரன் பேர்அருள் தாங்கும் குமரன் தரணிபர் கோன்
எங்கணும் முக்கண் பிரணவமே தவன் ஏகதந்தன்
ஐங்கரன் சோதரன் வள்ளி மணாளன் அரிமருகன்
மங்கள வாரம் வருவாய் மயிலை வஜீகரனே

புதன்

சதமாக நம்பி உனை நினைந்து ஓதத் தனயருக்குப்
பதமாக நாளும் பிணி தீது அகற்றிப் பரிவு தந்தே
இதமாகப் பாலும் குறமாது வள்ளி தெய்வானை உடன்
புதன்வார நாளில் வருவாய் மயிலை புகழ் குணனே.

வியாழம்

கருவாகி அன்னை பிதா குருவாகிக் கடந்து சன்மப்
பெரு வாரிதியில் பிறந்து உழன்றேன் மனப் பேதமையால்
தருவார் தரும மருவுவர் பாலின் தயாள குணக்
குரு வார நாளில் வருவாய் மயிலைக் குருபரனே.

வெள்ளி

தவ ராஜ ராஜர் முனிவோர் துதிக்கும் சரண்புகுந்தேன்
பவமே விலக்கி அவமே புகாமல் பரிவுதந்தும்
சிவமே சிவன்அருள் தாங்கிய தற்பர சிற்பரனே
சுவி வார நாளில் வருவாய் மயிலைக் கருணையனே.

சனி

இனிதான சர்ச்சன இன்பப் பகுதி எனக்கு அளிக்கக்
கனிவாகி இந்தப் புவியில் படைத்துக் கதிரவன்முன்
பனிபோல் பிணி வினை யாவும் விலக்கி நல் பட்சமுற்றுச்
சனி வார நாளில் வருவாய் மயிலைச் சரவணனே.

வாரப் பதிகம் முற்றும்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

ஆறாவது திதிப் பதிகம்
அமாவாசை

1. சூர்வாள் அயில்கரம் சூலம்மழுப்படை கொண்டு எதிரில்
தீர்வாய்ப் புரட்டி மிரட்டிஉருட்டித் திகைத்திடவே
நேர்வாய்ப் பகைஞரை வஞ்சக் கொடியர் கள்நெஞ்சு இருளே
ஈர்வாய்த் திதியில் வருவாய் மயிலை இகபரனே.

பிரதமை

2. கரமலர் பன்னிரு ஆயுதவேலன் கனக மயில்
புரவியில் ஏறி ஒருநொடிப் போது இப்புவியை வலம்
வருபவன் வள்ளி தெய்வானை மணாளனும் வல்லப நீ
பிரதமை தன்னில் வருவாய் மயிலைப் பிரணவனே.

துதியை

3. நதிபதி தீர்த்தம் படிந்திடும் யாத்திரை நல்பலன்மேல்
நிதிபதி கோடித் தருமமும் தான நிறைபலன் மேல்
அதிபதி தேவர் அவர் பணி தொண்டர் அவர் பலன் மேல்
துதிபதி மேலும் வருவாய் மயிலைச் சுகோதயனே.

திருதிகை

4. அருமறை சாத்திர நீதித் திருமுறை அந்தணர்கள்
விரத மெய்ஞ்ஞானத்து அரும்பொருள் செல்வ விவேக ரசங்
கருதும் அடியவர் தீவினை நீக்கிக் கருணை தரத்
திருதிகை தன்னில் வருவாய் மயிலைத் தினகரனே.

சதுர்த்தி

5. எதிர்த்திடும் பூதம் பசாசு வேதாளமும் ஏவல் பில்லிக்
கொதித்திடும் பிர்ம இராக்கத வேதை குறளி வித்தை
எதிர்த்திடும் வஞ்சனை சூனியம் யாவும் அமர்த்திட நீ
சதுர்த்தித் திதியில் வருவாய் மயிலைச் சமர்த்து உளனே.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

பஞ்சமி

6. நஞ்சம் தரும் அக நெஞ்சம் உள்ளோர் ஞயமும் மிஞ்சும்
வஞ்சம் தரும் திருச் சூழலும் கூடன் மனிதர் கொஞ்சும்
பிஞ்சும் தருநெறி உள்ளும் புறம் புரை பேதமறப்
பஞ்சந் திதியில் வருவாய் மயிலைப் பரம்பரனே.

சஷ்டி

7. எட்டுத் திசையும் பதினாறு கோணம் இரண்டு திசைக்
கட்டுத் திசை தச நான்கு திக்கும் கண்ட காவலனை
முட்டுத் திசை பனிரண்டு மும் மண்டல மூர்த்தியும் நீ
சட்டித் திதியில் வருவாய் மயிலைச் சமரசனே.

சத்தமி

8. நித்திய வத்துவை வாய்ப் பறையாக நிலை உணர்த்தும்
சத்தியம் பத்தி நல்நாக் கடிப்பாகவும் சாற்றி அப்பால்
சித்தியும் தேக உடல் பிணி நீக்கிநின் சித்தம் ஒன்றாய்ச்
சத்தமி தன்னில் வருவாய் மயிலைச் சகசியனே.

அஷ்டமி

9. துட்டக் கலியுக அந்நீதி இன்பமுந் துன்பமெத்தப்
பட்டக் குறைகள் படும் படும்பாவிப் படா முனமே
இட்டம் அளித்திட்டு இரங்கி இவ்வேளை இடர் விலக
அட்டமி தன்னில் வருவாய் மயிலை அகத்தியனே.

நவமி

10. பவமு நினைப்பும் பதறாம நெஞ்சகம் பற்று அற்றிடத்
தவமும் தயையும் பலித்திட வேண்டிச் சரண் புகுந்தே
அவமும் எனக்கினி எப்போதும் வாராது அகற்றிடவே
நவமித் திதியில் வருவாய் மயிலை நவமணியே.

தசமி

11. வசியுற்ற வாள் சங்கு சக்கரம் சூல மழுப்படை கொண்டு
அசுரப் படைகளை வேரறுத்தே சுரரானவர் கோன்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

சசிபெற்ற மாமகள் தெய்வானை தன்னையும் தாமணந்தோய்
தசமித் திதியில் வருவாய் மயிலைச் சனபதியே.

ஏகாதசி

12. ஆகாப் பிணி பல குன்மங்களெட்டி அதில் எரிவுந்
தேகாதி பற்றி சிலுகும் உபாதிச் சிறுமைபட
வாகா விதித்த விதியோ விதி மயில் வாகனனே
ஏகாதசியில் வருவாய் மயிலை இசை உளனே.

துவாதசி

13. தகாது என் பிணியைத் தகும் தகும் என்றே தலைமிசை நீ
அகாதஞ் செலுத்தத் தகுமோ தகாது இடர் ஆகும்என்றால்
சகாயம் புரிபவன் நீயன்றி வேறு சது மறையோ
துவாதசி தன்னில் வருவாய் மயிலைச் சுஜீகரனே.

திரயோதசி

14. உரையே உணர்ச்சி அறிகின்ற பேர்களும் உம்பரவர்
இரையே சுவை எனப் பேரொளி கண்டோர் இருடிமுனி
வரையே நிலை என நாட்டில் நின்றோர் தவ மாமணியே
திரயோதசியில் வருவாய் மயிலைத் திவாகரனே.

சதுர்த்தி

15. எதிர்த்தப் பகைஞர் அவுணர்கள் கூட்டத்து எவர்களையும்
சிதைத்துப் பொடி பொடியாக்கித் தகித்துச் செய செய எனப்
பதித்துச் சுரர் மகள் தெய்வானை பெண்ணைப் பரி நயத்தோன்
சதுர்த்தசி தன்னில் வருவாய் மயிலை தபோதனனே.

பருவம்

16. ஆரணனைப் பொருள் கேட்டுத் தகர்த்தோன் அறுமுகன்நீ
நாரணன் இந்திரனார் மருகோன் இரு நாரியர் கோன்
தோரணை பூண்ட நல் தொண்டர்க்கு இரங்கித் தனது அருகே
பூரணை நாளில் வருவாய் மயிலைப் புகர் ஒளியே.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

ஏழாவது
நட்சத்திரப் பதிகம்
அஸ்பநி (அசுவினி)

1. கச்சு அணிமாதர்கண் மாய்கையில் சிக்கிக் கலங்கி மனச்
சச்சரு பட்டுப் பரதவித்தேன் பஞ்ச சத்தை நம்பி
நிச்சயம் கொண்டு நிலை விண்டு கண்டு நினைந்தன் இதோ
வச்சுநி நாளில் வருவாய் மயிலை அரகரனே.

பரணி

2. தரணிபர் இந்திரன் வானவர் மூவர் கள்தன் அடியார்
பிரணவ மந்திரம் ஓதித் தலைமைப் பெருமை பெற்றார்
மரண பவம்தவிர்த்து ஆளும் தெய்வானை மனோகரனே
பரணி தன்னாளில் வருவாய் மயிலைப்பழம் பொருளே.

கார்த்திகை

3. சாத்திர நீதித்த ரும்மறை யோகி சகலர்களும்
தோத்திரமே புரி வாத்திய மேளம் தொனித் துவரச்
சூத்திர வள்ளி தெய்வானையும் நீயும் நின் தோகைமிசை
கார்த்திகை நாளில் வருவாய் மயிலை என் கண்மணியே.

உரோகணி

4. குரோதம் பகை கொளும் சூரன்படை முதல் கொன்று வென்றச்
சரோருக மாமலர்த் தாளிணை போற்றிச் சரண் புகுந்தேன்
அரோசிகம் சேத்ம மதி பித்த வாயு அகன்றிடவே
உரோகணி நாளில் வருவாய் மயிலை உதாரணனே.

மிருக சீரிடம்

5. அந்தர தேவர் முனிவோர் இருடி அரி அயனும்
சந்திரர் சூரியர் மற்றவர் யாவரும் தான் வணங்கச்
சுந்தர வள்ளி தெய்வானையும் தான் அந்தத் தோகைமிசை
இந்திர நாளில் வருவாய் மயிலை இறையவனே.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

திருவாதிரை

6. சாதக சன்மம் அவரவர் கன்மத் தருமநிலை
பேதக தேகப் பயனே அயன் விதி பேசிடினும்
பாதகம்நீக்கித் தனது அருள் தாக்கிப் பலன் பெறவே
ஆதிரை நாளில் வருவாய் மயிலை அறுமுகனே.

புனர்பூசம்

7. சினம் மேவும் தேவதை பற்பல ஞாயம் தெளிவு தந்து
மனமே அலை புரியாமல் எந்நாளும் வணங்கி நின்றேன்
கனதேக போகம் யோக மெய்ஞ்ஞானக் கருணை கொண்டு
புனர்பூச நாளில் வருவாய் மயிலை முன் புண்ணியனே.

பூசம்

8. மறை ஓதும் வேதியர் மண்ணவர் விண்ணவர் மா தவத்தோர்
முறையோடு சாத்திரம் சூத்திரம் கண்டு முனைந்து தவம்
குறையா ரப்புரிவார் அறியாது இந்தக் கொடியனுக்கே
நிறை பூச நாளில் வருவாய் மயிலை நிரந்தரனே.

ஆயிலியம்

9. வாயில் ஒன்பான் நவ கோளம் ஒன்பான் மணிமாலை ஒன்பான்
சாயல் ஒன்பான் அதிசித்தர் ஒன்பான் நவ சாதி ஒன்பான்
நாயகி வள்ளி தெய்வானையும் தான் நவ வீரர் ஒன்பான்
ஆயில் ஒன்பானில் வருவாய் மயிலை அதி குணனே.

மகம்

10. விதி தரும்தேவன் சிரம்தனில் தாக்கி வினாவி பொருள்
பதி தரும் நாயகன் என்றே சொலும் இந்தப் பார்மிசைநீ
ததி தனிநேயற்கு இடருற்ற நேரம் தயை புரிய
மதி மகம் நாளில் வருவாய் மயிலை மகிழ் குணனே.

பூரம்

11. அரிஅரன் ஆதி பிரமாதி தேவர் அருமறையோர்
பரிவு உரவுஆகச் சிவயோகி சித்தர் பணிந்து நிற்கத்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

தெரிவர யாவரும் வேதமும் ஓதும் தெளிந்தவர்பால்
சரிபுர நாளில் வருவாய் மயிலைசத் ஆனந்தனே.

உத்திரம்

12. சத்திரம் சாவடி மண்டப நாட்டித் தரும நெறி
அத்தமும் கொண்டு ஒரு மேலவர்க்கு ஈகிலன் அன்பு வைத்தே
சித்திரம் பேசித் தினம் தினம் சிந்தியாத் தீயனுக்கிங்கு
உத்திர நாளில் வருவாய் மயிலை அதிசயனே.

அஸ்தம்

13. நத்தும் தவத்தோர் இருடி மெய்ஞ்ஞானியர் நண்ணும் பதம்
பத்தும்படிச் சித்தர் பத்தரைக் காக்கப் பரிந்து இரங்கி
சத்தும் சிதானந்தத் தாண்டவ மாமயில் தாண்டி இங்கே
அத்தம் இந்நாளில் வருவாய் மயிலை அதிசயனே.

சித்திரை

14. இத்தரை முந்நில் அவதரித்தே பல இச்சை அற்றஉள்
கத்தரை உன்னித் தவம்செய்து இலேன் பவக் கன்மம் அறப்
பத்தரைச் சித்திரைப் பற்றிப் பலன் பெறாப் பாலனுக்கே
சித்திரை நாளில் வருவாய் மயிலைச் சிகாமணியே.

சுவாதி

15. ஆதி அனாதி நடுஉறுபாகம் அமர்ந்த ஒளி
பாதிப்ப அனாதி பதிஉறு தேகப்பலம் உணர்ந்தச்
சாதியும் பேதமும் வேதமும் நீதிச் சரா சரமாய்ச்
சோதி இந்நாளில் வருவாய் மயிலை சுடர்க் கொழுந்தே.

விசாகம்

16. நிசாசரர் வேர்அறத் தாக்கி பகை அற நின்று வென்றோய்
பிசாசுகள் சூனியம் வஞ்சனை ஏவல் பல பிணிநோய்த்
திசாதிசை போய்விழ வேல்முனை வள்ளி தெய்வானைபதி
விசாக நன்னாளில் வருவாய் மயிலை விதரணனே.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

அனுஷம்

17. தனியுற்ற தேவர் முதலான மூவர் தனைப் புகழக்
கனிவுற்ற தொண்டர்க்கு இடையூறு உறாமல் கருணை தந்தோய்
வினையுற்ற நாயேன் பிணிஅற்று வாழ விரும்பி நெஞ்சே
அனுடத்தி நாளில் வருவாய் மயிலை அரன் மகனே.

கேட்டை

18. பாட்டிற்கு இசைந்த பழம் பொருளே நறும் பாவலர் முன்
ஏட்டிற்கு இசைந்து எழும் பாவி நஞ்சு ஊட்டி இடர் அறுத்தோய்
சாட்டிற்கு இசைந்திடும் பம்பரம் போல் வினைத் தான் அயரக்
கேட்டைக்கு இசைந்து வருவாய் மயிலைக் கிருபையனே.

மூலம்

19. ஆலத்தை உண்டோன் அருளோன் அரி திருமால் மருகன்
கோலத்தைக் கொண்ட செஞ் சேவல் கொடியுடையோன் குமரா
ஞாலத்தைக் கண்ட புரமாது வள்ளி தெய்வானை மகிழ்
மூலத்தை விண்டு வருவாய் மயிலை முதல் பொருளே.

பூராடம்

20. மாராடு தேவர் முதல்வோர் முனிவர் வருத்தம் அறப்
போராடும் சூரன் முதற் படையோரையும் போக்கு அடித்துத்
தேராம் இந்திரன் புத்திரி தன்னைச் சீர் மணம்தோய்
பூராட நாளில் வருவாய் மயிலைப் புரவலனே.

உத்திராடம்

21. சத்தான சித்தர் பதின்எண்மர் தேவர் சகலர்களும்
வித்தான யோகி முனிநாதர் விஞ்சையர் வேந்தர் முதல்
அத்தா எனத் துதித் தாள் பணிந்து ஏத்த அருள் அளித்தோய்
உத்திராட நாளில் வருவாய் மயிலை உகந்தவனே.

அபிசித்து

22. பவ சித்தர் பாலர் மனைவிபந்துக்கள் பல பணிநேர்
தவ சித்தர் யோகர் சரியைக் கிரியை முச்சாதனையோர்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

சிவ சித்தர் மூவர் முனிவோர் இருடிகள் தேவருடன்
அபி சித்து நாளில் வருவாய் மயிலை அநாதியனே.

திருவோணம்

23. உருவே இருவினையாலே உடல் பொருள் ஆவி உன்னிப்
பிரிவேது நன்மைப் பெயராது சிந்தைப் பெருமை தந்தோய்
இருள் ஏதுமின்றி வினையால் பூடர்ப்பிணி யாதும் அறத்
திருவோண நாளில் வருவாய் மயிலை செகத் குருவே.

அவிட்டம்

24. நவக்கோள்கள் சக்கரம் நாற்பத்து எட்டாம் பதம் ராசியிலும்
பவக்காலவர் அவர்செய்வினை நன்மை பயன் விதிநூல்
தவத்தோர் இருடியர் மூவரும் தேவரும் தான் அதுவா
அவிட்டத்தி நாளில் வருவாய் மயிலை அருள் பதனே.

சதயம்

25. பதியுற்று வாழும் குறமாது வள்ளி தெய்வானை பதி
நிதியுற்று எந்நாளும் திருமால் மருகனின் அன்பர்அருள்
இதயத்துள் நின்றும் சிறியேன் துயர்அறவே இரங்கிச்
சதயத்தி நாளில் வருவாய் மயிலை சடாக்கரனே.

பூரட்டாதி

26. புரத்தாரை அந்நாள் சிரித்தே எரித்தோன் புதல்வன் அருள்
கரத்தால் தழுவிக் கடையேனை அஞ்சல் என்றே கருணை
வரத்து ஆதி வள்ளி தெய்வானை மணாளா மகிமை உற்று
புரட்டாதி நாளில் வருவாய் மயிலை உகாந்தரனே.

உத்திரட்டாதி

27. பத்திரம் கண்டு நல் பன் மலர்க் கொண்டும் பரிந்து விண்டும்
நித்தியச் செய்கைத் தவறாமல் பூசை நினைந்து அருளின்
முத்திரைச் சான்றோர் மொழிந்திடும் சின்மய மோனநிலை
உத்திரட்டாதி நாளில் வருவாய் மயிலை உகாந்தரனே.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

ரேவதி

28. பாவியும் ஆவிச் சடத்தே பிணியில் பரி தவித்தேன்
கூவிய சேவல் கொடியுடைத் தேவன் குமரகுரு
தாவிய மாது இரு வள்ளி தெய்வானைச் சரசனும் நீ
ரேவதி நாளில் வருவாய் மயிலை நிருமலனே.

எட்டாவது
யோகப் பதிகம்
விஷ்கட்பம்

1. நிஷ்கள நேமி நிராமய நாம நன் நெஞ்சு உழன்று உள்
வெட்க என் பாவ வினை நோய் அகன்று வெருவி கண்டு
பட்கரமாக நின் சந்தோட சித்தப் பரிவு விண்டும்
விஷ் கம்ப யோகம் வருவாய் மயிலை விதேயத்தனே.

பிரீதி

2. கருதி யோகத்தில் அறுபத்து நான்கு கலைத் தொடர்பை
சுருதி யோகத்தில் பரவிய தேக தத்துவம் கடந்தே
சரிதை யோகத்தில் கிரியை மெய்ஞ்ஞானமும் சாதனையால்
பிரிதி யோகத்தில் வருவாய் மயிலைப் பிரபலனே.

ஆயுள்மான்

3. தேயுள் தேகத்தினில் தேயாத நித்தியச் சிற்பரனாம்
வாயுள் தேஒன்பான் துவாரமும் பிரம வழிஅறிகப்
பேயுள் தே சித்தன் நிலை உணர்ந்து ஓதப் பிரணவமே
ஆயுள்மான் யோகம் வருவாய் மயிலை அதிபலனே.

சௌபாக்யம்

4. ஔவை மொழியை அகலாத சித்தர்கள் ஆரெனினும்
செவ்வைப் படுவார் இது நித்திய மொழி செப்ப ஒண்ணா
கௌவச் சொலில்இதில் யாவருக்கே பகை கண்டு அறிவீர்
சௌபாக்கியத்தில் வருவாய் மயிலைச் சதா நிதியே.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

சோபனம்

5. ஞாபகம் உள்ளோன் அறிவுடையோன் அவனான பசி
தீபனம் உள்ளவன் ஜீவனம் உண்டவன் தேக நிலை
லேபனம் உள்ளோன் இவன் அவனாக நிறைந்தவன் நீ
சோபன யோகம் வருவாய் மயிலைச் சுமங்கலனே.

அதி கண்டம்

6. துதி தந்த தேவன் அரிமுதல் தேவரும் தொண்டு புரி
நிதி தந்த ராசன் முனிவோர் இருடியர் நீதிநெறிப்
பதி தந்த யோகியர் சித்தரும் முத்தர்ப் பணிந்து இறைஞ்ச
அதி கண்ட யோகம் வருவாய் மயிலை அணைந்தவனே.

சுகர்மம்

7. பகரும் மெய்ஞ்ஞான நிறைந்து அருள் ஓங்கிப் பதி அரசா
அகம் குளிர்ந்து ஆங்கு ஐம்பொறி தேஅமர்ந்து உள்நிலை
செகம் எனும் மார்க்கம் திரும்பாமல் நெஞ்சே திருந்தி நிற்கச்
சுகர்ம யோகத்தில் வருவாய் மயிலை சுராதிபனே.

திருதி

8. பருதியும் சோமன் அங்காரகன் மால் குரு பார்க்கவன் சுன்
கருதிய ராகும் சிகி நவக் கோள்கள் கன்ம அனுபவம்
தரும் அதிவேதன் விதியே எழுதும் தருமமும் நீ
திருதி யோகத்தில் வருவாய் மயிலைச் சிவகுருவே.

சூலம்

9. வேலொடு நாயகி தெய்வானை வள்ளியும் வீரர் ஒன்பான்
மாலொடும் தேவர் அயன் அருள் யோகியர் வாழ் பரமன்
பாலொடு சத்தியும் கங்கையும் நீஎன் பகை அற்றிடச்
சூலமி யோகம் வருவாய் மயிலைச் சுப கரனே.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

கண்டம்

10. மண்டலம் தன்னில் அரிது அரிதாகும் மனித சன்மம்
கொண்டவர் கேள்வியும் ஞானமும் மோனமும் கொண்டவர்பால்
விண்டவர் தேவர்கண் மூவரும் யாவரும் மேலவர் காண்
கண்டமி யோகம் வருவாய் மயிலைக் கலை அருளே.

விருத்தி

11. திருத்தணி போரூர் பரங்குன்றம் ஏரகத் தெய்வ தலம்
தரித்தன ஆவினங் குன்றுதோறும் ஆடல் அழைத்த செந்தூர்
விருத்தனஞ் சோலை நிருத்தனம் செய்யும் விதரண நீ
விருத்தி யோகத்தில் வருவாய் மயிலை விமரசனே.

துருவம்

12. உருவமே ஏகச் சொரூபமே பற்பலர் உன்னும்ஒளி
பருவமே நின்நிலை சிற்சில தேகப் பராபரனாய்க்
கருவினுள் கருவே திருவிளையாடலைக் கண்டு அறியேன்
துருவ யோகத்தில் வருவாய் மயிலைச் சுயம் பொருளே.

வியாகாதம்

13. தயாளமும் ஈகையும் சன்மார்க்க நன்மனம் சார்ந்த நிலை
வியாபர ஞாய மெய்ஞ் ஞானமும் தூண்டலும் விமரசையும்
கியாபகம் உள்ளோன் எனது உளம் பூண்டக் கிருபையும் நீ
வியாகத யோகம் வருவாய் மயிலை விஜையமுனே.

அரிஷணம்

14. கரிசனம் பொய்யா மொழிக்கு அருணைக் கிரி கீரன் கனே
தரிசனம் மூவர்க்கு அளித்த பிரான் முருகன் தனதுஅருள்
பரிசனம் சேயிழைக் கற்றக் கரம் தந்த பண்பு தர
வரிஷண யோகம் வருவாய் மயிலை அடிமையற்கே.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

வக்சிரம்

15. நச்சு அரவம் பணி மார்பினில் வேணி நதி பதியும்
கச்சுஅணி மங்கையர்ப் பாகமும் நான்மறை காரணனா
அச்சிர மாலை மழு மான் கரத்தோன் அருள் முருகா
வச்சிர யோகம் வருவாய் மயிலை மரகதனே.

சித்தி

16. அத்தி முகத்தோர்க்கு இளையோன் அறுமுகன் சூரர்களைச்
சுத்தமுந் தாரகன் சிங்கன் முதல்படை தேவர் உய்யப்
பத்திப் பகை அற வேறொட்ட நாதப் பரப்பிரமம்
சித்தி யோகத்தில் வருவாய் மயிலைச் சிவன் அருளே.

விதிபாதம்

17. சதுர்வேதனால் சிரஞ் சிர்ட்டிப் பொருள் பயன் தான் வினவ
வெதிர்ஞான சூத்திரம் காணாது ஓட இடர்ச் சிரசில்
பதிவாகக் குட்டி பதித்தவனே அருள் பாலனுக்கே
விதிபாத யோகம் வருவாய் மயிலை விவேகத்தனே.

வரியான்

18. விரிவான தத்துவக் கேள்வியும் ஞான விசேட முறை
பரிவான சாத்திரச் சூத்திர ஆகமப் பற்பலநூல்
சரியான போதனைச் சாதனை நிட்டைத் தனைக் கலந்தோன்
வரியான யோகம் வருவாய் மயிலை அணிகையனே.

பரிகம்

19. அரிஅரன் காணாது அகண்டப் பெருவெளியான கனல்
சுருதிச் சுயம் பொருளாகிய ஞானச் சுடர் விளக்காய்ப்
பருதிச் சசிசேய்ப் புதன் குரு வெள்ளி சுன் பாம்பு இரண்டாய்ப்
பரிக யோகத்தில் வருவாய் மயிலைப் பராபரனே.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

சிவம்

20. தவமே முனிவோர் இருடியார் தேவர் சதுர் முகன் மால்
பவமே அரனும் மயேசன் சதாசிவன்பால் சத்தியும்
நவமே அறுமுகம் ஆதாரம் அஞ்செழுத்தாறு நண்ணும்
சிவயோகம் தன்னில் வருவாய் மயிலை செகத் குருவே.

சித்தம்

21. நித்தம் துதிக்கும் அடியாரைப் பற்றிய நீடு வினைச்
சத்துரு சூனியம் வேதைப் பிசாசுகள் தன் தலை நோய்
வைத்தவர் சித்தம் கலங்கிட வாரி மண்டைச் சிதறச்
சித்த யோகத்தில் வருவாய் மயிலைத் திருவருளே.

சாத்தியம்

22. காத்திர ஞான மெய்ச் சத்திய நித்தியம் கண்டறிந்தோர்
சாத்திரச் சூத்திரம் காண்பவர் தன்ம கன்மா அனுபவப்
பாத்திரம் கொண்டு கை வல்லியம் பெற்றுப் பகை அறவே
சாத்திய யோகம் வருவாய் மயிலைச் சகாயமுமே.

சுபம்

23. செபமே புரிந்து நிலை நின்ற பேர்க்குத் திருவருளே
விபரீத வேதை பிணி பீடை தொன்மை வினை கண் முதல்
அபவாததோடம் அணுகாமல் நன்மை அணுகும் வகைச்
சுபயோகம் தன்னில் வருவாய் மயிலைச் சுடரொளியே.

சுப்பிரமம்

24. அப் பிரமப் புரம் சூரன் படை பட அன்று தெவ்வர்
இப் பிரமப் புரஞ் சுந்தரவள்ளி தெய்வானையர் கோன்
எப் பிரமப் புரம் தொன்மைப் பிணி அற என்னருகில்
சுப் பிரமத்தில் வருவாய் மயிலைச் சுபகுணனே.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

பிரமம்

25. பிரமமே வள்ளி தெய்வானையும் வேலும் பிரணவ மேல்
பிரமமே சேவல் கொடியும் மயூரப் பிருதிவு மேல்
பிரமமே நின்று எரி தொன்மைப் பிணியேன் பிரபலன் மேல்
பிரமமே யோகம் வருவாய் மயிலை பிரம வித்தே.

ஐந்திரம்

26. இந்திரன் தேவர் முனிவோர் இருடி இணை அடியார்
தந்திரி வீணையர் மூவரும் யாவரும் தன் அருள்பால்
சுந்தர வல்லபை வள்ளி தெய்வானை சுமங்கலவாழ்
ஐந்திர யோகம் வருவாய் மயிலை அபையமூனே.

வைதிருதி

27. மை விழி மங்கையர் ஆசையில் சிக்கி மனம் தளரா
மெய் வழி தன்னில் இளகலுற்று ஆடி விண்ணோக்க மதிப்
பொய் விதி தன்னில் புலம்பா வகை அருள் புந்திக்குள் வாழ்
வைதிருதி யோகம் வருவாய் மயிலை மலைக்குகனே.

யோகப் பதிகம் முற்றும்

ஒன்பதாவது
கரணப் பதிகம்
பவம்

1. நவ கரணத்தில் விதித்தே விதி நவ கோள் மயமே
தவ கரணத்தில் உதித்தே குதித்து தறுதலையாய்ப்
புவி கரணத்தில் பகைத்தே பிணியில் புழுங்கினன் காண்
பவ கரணத்தில் வருவாய் மயிலைப் பவானந்தனே.

பாலவம்

2. காலம் கலியில் பிறந்தோர் கலக்கம் கலைப்பு மெத்தச்
சாலம் தனில் சிக்கித் தான் உழன்றேன் தடுமாறி நின்றேன்
வேலும் மயிலும் சுரர் குறமாது சேவல் கொடி மேல்
பாலவம் தன்னில் வருவாய் மயிலைப் பதியரசே.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

கௌலவம்

3. தவப் பலன் தேகப் பிணித் துயர் வேதைச் சங்கடத்தால்
அவப் பொழுது ஆற்றி எந்நாளும் திரிந்தே அடசருடன்
பவப் பொதி ஏற்றிப் பரிதவித்தே ஏங்கும் அன்பர்க்கு இரங்கி
கவுலவக் கண்ணில் வருவாய் மயிலைக் கருத்து உளனே.

தைதுலை

4. மெய்ந் நிலையாகத் தருமமும் தானம் விரதம் மந்த்ரம்
கைவிலை வேள்விச் சகசமும் சாந்தி முற்கண்டு செயக்
கொய்குலைக் குன்மக் கொடும் எரிவேதைக் குணமும் மறத்
தைதுலை தன்னில் வருவாய் மயிலையில் சத்தியனே.

கரசை

5. பரிசே பெறவும் மனிதரை நாட்டியும் பாட வல்லேன்
அரசே மயிலை மயிலை என்றேஓதி அனுதினமும்
வரிசே வரிசை குறமாது வள்ளி தெய்வானை மகிழ்
கரசே கரணம் வருவாய் மயிலைக் ககனத்தனே.

வனசை

6. தனதே தனத்தென நின்று ஆட்டுதனத் தனத் தாள ஒற்று
மனதே மனத்து அறியாமையும் நீயும் முன்வந்து அகத்துள்
இனிதே இனிமை சொல் பாடலும் ஆடலும் ஏற்று நிதம்
வனசே கரணம் வருவாய் மயிலை வரையத்தனே.

பத்திரை

7. சத்திரம் சாவடி மண்டபம் சோலைத் தடாகம் தன்ம
நித்தமும் பத்தித் துதித்து நடாத்திடும் நேச நெஞ்சில்
சத்தியமாகத் திருவிளையாடல் செய் தற்பர நீ
பத்திரை தன்னில் வருவாய் மயிலைப் பரை அருளே.

சகுனி

8. நகுமான் அளித்தக் குமரா குருபர நாரியர்கள்
தகுமான வள்ளி தெய்வானையர் காவலச் சண்முகனே

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

வெகுமான நின்னை வேண்டி நின்றேன் வினை நோய் அகலச்
சகுநீ கரணம் வருவாய் மயிலைத் தனபதியே.

சதுட்பாதம்

9. எதிர்த்தப் பகைவர் அசுரரை வென்று தேவ இந்திரர்க்குப்
பதித்தே மகுடம் சுரர்களைக் காத்துப் பயம் தவிர்த்துத்
துதித்தே மதித் தெய்வானையை மா மணம் சூட்டும் வல்லோன்
சதுட் பாதம் தன்னில் வருவாய் மயிலைத் தனது உளத்தே.

நாகவம்

10. ஆகம வேதப் புராணமும் நீதி அறிந்து உணர்ந்தே
ஏகம் அனேகம் அனேகமும் ஏகம் எடுத்து உரைக்கப்
போகமும் தேகம் யோகமும் நித்தியப் புண்ணியம்நீ
நாகவம் தன்னில் வருவாய் மயிலை நவரசமே.

கிமுத்துக்கினம்

11. திமித்தே திமி திமி தாள் சிலம்பு ஓசை செஞ்சேவல் கொடி
நமத்தே நமநம வள்ளி தெய்வானை நன் நாயகம் நீ
சமத்தே மயில்மிசைத் தாண்டித் தன் அடியார் அருகே
கிமுத்துக்கினத்தில் வருவாய் மயிலைக் கிருபை உற்றே.

காரணப் பதிகம் முற்றிற்று.
திருச்சிற்றம்பலம்

ஓம் கம் கணபதே நம:
திருமயிலைச் சந்நிதிமுறை ஆயிரப் பாவில் பத்தாவது ஸ்ரீ மயிலாசல மாலை
விநாயகர் காப்பு

மயிலாசல தேவன் வாழும் பா மாலை
செயலாங்கு குகன் அருளைச் செப்பப் பயலாம்
சரவணற்கு முன் பிறந்த சத்திதரும் புத்ரன்
பிரணவற்குக் காப்பே முன் பேசு.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

தேவர்கள் துதி

ஆதி வல்லபையாள் விநாயகன்ஆகு வாகன மேலும்மேல் வருக
நீதி மால் தேவி கருடன் வாணி நிறை விதி அன்ன மேல் வருக
சோதி சேர் கங்கை உமாபதி விடை சுரர் அவர் ஊர்தி மேல் வருக
மாது இருபாலும் அவ்வீரரும் வேலும் மயில் மிசை வருக நித்தியனே.

நூல்

1. கதிர்மதி செவ்வாய்ப் புதன் குரு வெள்ளி காரி பாம்பு இரு நவ கோள்கள்
எதிர் பதி ராசி பன்னிரண்டு இடத்து மிகலும் மேல் இழிவு நட்புஆட்சி
அதில் இரு பான் ஏழ் நாற்பதம் விரிந்தே அவரவர் இருவினை அது சீர்
சதுர் மறைப் பயனே விதித் தருண் மயிலை சயிலனே அகில நாயகனே.

2. அத்தி மாமுகவற் காகும் வல்லபையாள் அயன் அணைந்திடும் அபிராமி
உத்தமி திருமால் உருத்திரனும் ருத்ரி உமாபதி ஈசனோடு உற்றப்
பத்தினி சுத்த மனோன்மணி தேவி பதிந்து ஆறுஆதாரம் ஆறும்
சக்தி சண்முகனே அமர்ந்து அருள் மயிலை சயிலனே அகில நாயகனே.

3. இந்திரன் தேவர் அரி பிரமா ஆதி இருடியர் யோகியர் சித்தர்
அந்தரத்துளவரும் வீணை வல்லவரும் அவனியுள் உள்ளவர் மற்றோர்
சுந்தரர் நால்வர் நாயன்மார் முதலோர் தொண்டர்கள் துதித்திடும் பாதம்
தந்திர அட்சணையாய் வந்து அருள் மயிலை சயிலனே அகில நாயகனே.

4. இத்தரை தன்னில் புரிந்திடும் தவத்தோர் எண்ணில்லாத்தகை உணர்
சிந்தை, பத்தரை அடுத்து உள்அன்பையும் பொசித்தேன் பாவமும் பற்று
அறப் பாலன், பித்தரைப் போலப் பதிதொறும் சென்றும் பிச்சையே

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

கொண்டு இடும் சாமி சத்துரு நாதம் சொலித்து அருள்
மயிலை சயிலனே அகில நாயகனே.

5. அன்னையின் வயிற்றில் தசமதி இருத்தி அவயவக்
குறைவிலா நிரப்பிப்
பின்னை வந்து உதித்துத் தவழ்ந்து அடி நடத்திப்
பிள்ளை என்றொரு பெயர் எடுத்து
நின்னையே உன்னிப் பிரபஞ்சம் பொய்யாய்
நிலையென உண்மையை நிறுத்தி
தன்னை தான் அறியச் சற்று அருள் மயிலை
சயிலனே அகில நாயகனே.

6. எழுவகை தோற்றம் நால்வகையோநில் எடுத்திடும்
சடத்தினுள் உன்முகமே
பழு பூதுறும் இலக்கம் எண்பத்து நான்கும்
படைத்திடும் யானை தன்முதலாக்
கழிவுறும் எறும்பு ஈறான ஜீவர்கள்
கடைப்படும் பிறவிகள்தோறும்
தழுவி அகட்டாய்த் தந்து அருள் மயிலை
சயிலனே அகில நாயகனே.

7. வேதம் ஓர் நான்கும் சாத்திரம் ஆறும் விரிந்திடும் புராணம்
ஈரொன்றும்
ஓதும் ஆகமம் எட்டு இருபது மேலா உபநிடதமும்
முப்பால் இரண்டும்
தீதறு கலைகள் அறுபத்து நான்கும் தேகத் தத்துவம்
தொணூற்று ஆறும்
சாதனை நடுநேர் தேர்ந்த அருள் மயிலை சயிலனே அகில
நாயகனே.

8. சுந்தரர் அப்பர் மாணிக்கர் சம்பந்தர் சுவாமிகள் நால்வர்கள்
முறை போல்,
பந்திந்த ஞாயம் திரத்தர்கள் மொழியம் பாவையும்
கோவையும் மௌவை,
தொந்தித்த ஞான மன்ஞான மெய்ந்நீதிச் சொலும் குறட்பா
இன நயனார்,
சந்தித்தது ஒன்றாய் நிறைந்த அருள் மயிலை சயிலனே
அகில நாயகனே.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

9. கண்ணுவர் மேல்மட் காணொணா மூடக் ககனம்
ஊடுருவியே பரவி
மண்ணினுள் உருவிப் பாதல மூலம் வளர்ந்து எழுந்து ஓங்கு
மூங்கிலினைப்
புண்ணியப் பிரமன் முவ்விதந் துணிக்கப் புகழ்பினாச்
சார்ங்க காண்டபப் பேர்,
தண்ணருள் சுரந்தே தந்து அருள் மயிலை சயிலனே அகில
நாயகனே.

10. கண்ணனுக்கு உகந்த மரு மகனே வள்ளி காதல சேவலம்
கொடியோன்
அண்ணல் தற்பரனாற் அற்புதப் புதல்வன் யானை மா
முகத்தனுக்கு இளையோன்
விண்ணவர் வேந்தன் புத்ரி தெய்வானை விரும்பியே
விவாகமும் புரிந்தோன்
தண்ணுலகேசன் தன்னருள் மயிலை சயிலனே அகில
நாயகனே.

11. கங்கையாள் பெற்ற கணபதிக்கு இளைய கந்தனே வள்ளி
தெய்வானைப்
பங்கனே எங்கும் பரவிய பரனே பத்தருக்கு இரங்கிய
மணியே
இங்கிதச் சோலை தழைத்த நற்பதியில் இருந்திடும்
தலங்களில்ஆறில்
சங்கை அற்று உலாவிப் பரிந்து அருள்மயிலை
சயிலனே அகில நாயகனே

12. கண்ணிமை நேரம் கொன்றை மாமலரில் கைநொடி
வில்வமே வாசம்
மண்ணினில் அரசர் தன்னிடம் சென்றே மாத்திரைப் போது
நீ தங்கும்
நண்ணிய லிங்கம் நாள் ஒரு நாழி நனி சிவயோகியற்கு
என்றுந்
தண்ணருள் விலகாத் தற்பர மயிலை சயிலனே அகில
நாயகனே.

13. அரவு அணைத் துயின்றோன் மருகனே முருகன் அசுரரை
வேர் அறக் களைந்தே

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

தருவணை இந்திரன் தேவரைக் காத்துத் தணிகையில்
அமர்ந்திடும் தேவே
பெருவணையாகத் தவ முனி புவியோர் பிரபல பிணித்
துயர் அகற்றச்
சரவண பவனே தழைத்து அருள் மயிலை சயிலனே அகில
நாயகனே.

14. அஞ்சல் என்று அடைந்தப் பஞ்ச பாண்டவரை ஆதரித்துக்
காண்டீபன்
சாரதியாக், கஞ்சனை மாமன் சகுனியும் வஞ்சன் கடும்
பகைத் துரியனைத்
துலைத்தோன், மிஞ்சிய மருகன் முருகவேள் மயூர மீமிசை
வருகு நாள்
என்றோ, சஞ்சலம் தன்னை தணித்து அருள் மயிலை
சயிலனே அகில நாயகனே

15. ஒரு கையில் சூலம் ஒரு கையில் வேலும் ஒருகை
செஞ்சேவலும்
கொடியும், இருகையில் சங்கு சக்கரம் ஒருகை
இறைஞ்சினோர்க்கு அஞ்சல்
என்று இருகை, வருகையில் தண்டும் வில் சரம் இருகை
வாள் மழு பிரம்பு
ஒருகையும், சரிகையும் அரையில் தரித்த அருள்மயிலை
சயிலனே அகில நாயகனே.

16. தேகமே அவத்தைப்படுவது பாவம் செய்வினை பிணித்
துயர் சிந்தை
யூகமே ஒன்றோடு ஒன்றுடன் பொருந்தாது உள்ளமும்
நிலை தளர்ந்து
அலைந்தே, வேகமுற்று அயர்ந்து உள் பொருள் தனை
மறந்து விரும்பிய ஞானமும்
உதிர்ந்தேன், தாக மெய்ஞ்ஞானம் தான் அருள் மயிலை
சயிலனே அகில நாயகனே.

17. மனம் இருள் என்றும் அழிந்திடா வண்ணம் மாயையும்
சுபாவ மேல்பாவம்,
நினைவதும், ஒன்றே நினைந்திடும் பல பல நேயம்
ஏகாற்கள் விட்டு

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

ஓங்கும், புலனது போகாச் சஞ்சலம் சித்தம் பொருந்தி எப்
பிறப்பினும்
திருந்தாத் தனயருக்கு இரங்கித் தினம் அருள் மயிலை
சயிலனே அகில நாயகனே.

18. மணிமுடி ஆறும் பன்னிரு விழியும் வளர் கரம் பன்னிரண்டு
இலங்கப்
பணியணிப் படையும் பன்னிரண்டு ஏந்திப் பட்டு
பீதாம்பரம் அரையில்
துணிவுறத் தரித்தே வள்ளி தெய்வானைத் தோகை மாமயில்
மிசை ஏறித்
தணிகை வாழ் பவனீ முனைந்து அருள் மயிலை சயிலனே
அகில நாயகனே.

19. கருக்குழி அமர்ந்த தந்தை தாய் இருவர் காரணச்
செய்கையால் நெஞ்சே
உருக்கிய விந்து நாதமும் கலந்தே உருவுஎடுத்த அதன்
உள்ளே பரப்பிப்
பருக்கியப் பூதஅவயவச் சத்தும் பத்து மாதம் கழிந்து உலகில்
சருக்கி வீழ்ந்துஅலைந்தே இன்னருள் மயிலை சயிலனே
அகில நாயகனே.

20. வள்ளி தெய்வானை பங்கனே முன்னோன் வழங்கிய
மாங்கனி வேண்டி
தெள்ளிய சிந்தைத் தெளிவுறத் தந்தை செகந்தனை ஒரு
நொடி அதனில்
புள்ளி மா மயிலின் வலமதாய் வந்த புண்ணிய புருஷனே
சிறுவன்
தள்ளிய பவமே விண்டு அருள் மயிலை சயிலனே அகில
நாயகனே.

21. உலகினில் பம்பும் சூனியம் வேவ உக்கிர தேவதை எரிப்பும்
கலகம் இட்டிடும் பேய் பூத வஞ்சனையில் காட்டு எரி
இருளவுச் சாடிய
பலபல துஷ்டக் கிரகத் துற்பலங்கள் பவவினைக்கு
கருவுகண் முறையுஞ்
சலசலப்பு உறுமோ நிலை அருள் மயிலை சயிலனே அகில
நாயகனே.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

22. சன்னிதோ டங்கள் குன்ம நோய்ச் சூலைத் தலைவலி
நளிர்குளிர் சுரமும்
பின்னியப் பித்தம் சிலேட்டும வாதப் பிணி பல நலிவுறும்
இருமல்
பன்னிய விக்கல் கக்கலோர்க் குக்கல் பற்றிய நரை திரை
மூப்புந்
தன்னுதே தருமப் பதத்து அருள் மயிலை சயிலனே அகில
நாயகனே.

23. காம வேட்கையினால் பவமுறு வினையும் கன்மம்
மேன்மேல் இடும் துணிவு
நாமமே எங்கும் தழைத்திடும் புலனும் நைந்து நைந்து அகம்
குழைந்து அயரும்
நேமமும் இலனாய்ப் பாமரம் இவனாய் நினைவுணர்
விளக்கமும் இலனேற்கு
தாமதம் இலனாய்த் தனித்து அருள் மயிலை சயிலனே
அகில நாயகனே.

24. நன்மலர் கொண்டே அருச்சனை புரிய நாள்தொறும்
நியமமும் தவரா.
வென்மலர் கருத்தைத் திருத்தி உள்நிறுத்தி
இணைப்பதம் இரண்டினை இருத்தி
மன்மலர் விருத்திச் செய்திடாப் பண்டு வல்வினை
தடுத்திடும் கோரத்
தன்மலர் கறுப்பைக் கழித்த அருள் மயிலை சயிலனே
அகில நாயகனே.

25. வனமலர் பறித்துப் பலவிதக்கேள்வி வழங்கிய அறிஞர் பால்
சென்றும்
கனமலர் சொரிந்து உள் பரிவொடு பணிந்தே அவர்ப்
பதமலரினில் தொண்டு
மனமலர் கொண்டு அங்கு இசைமொழி விண்டே மாதவ
மலர்களைச் சென்னிற்
தனமலரணியத் தினம் அருள் மயிலை சயிலனே அகில
நாயகனே.

26. சூதுகள்படும் வஞ்சனை பேதம் சொல் கடினங்களும்
மறந்தே

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

வாதுகள் புரியா உண்மையை உணர்த்தி மனத்து
இடமறிந்து உடல் இணங்கிப்
போதுகள் போல் எப்போதுமே சோராப் புதுமுளரிப் பதம்
போற்றச்
சாதுகள் சங்கம் பதித்து அருள் மயிலை சயிலனே அகில
நாயகனே.

27. நீதிஅந் நீதி கேள்வி யில்திடனாய் நிலையறிந்து உணர்த்து
வாசகமும்
சாதி பேதங்கள் சமயவாது அற்று சாத்திர நெறி
பிசகிலனாய்ச்
சோதியுள் சோதி சூத்திரம் கண்டே தொல்வினை
பவங்களும் கழன்றே
தாதகி நடனம் புரிந்து அருள் மயிலை சயிலனே அகில
நாயகனே.

28. மூது உணர்வுடைய ஞானிகள் மொழியை முன்பின்
எண்ணாமலே தடுத்து
வாதுகள் புரிந்தே சாதனை அறியா வழி மறித்து இடரினில்
புகுந்து
காதகம் கொண்டஞ் ஞானமும் மீறிக் கன்மம்மேன்
மேலிடும் சன்மச்
சாதக பவத்தைத் தவிர்த்த அருள் மயிலை சயிலனே அகில
நாயகனே.

29. இன்னமும் இரண்டு பாவ புண்ணியங்கள் எப்படி இப்படி
தன்னில்
கன்னமும் கொண்டு பாய்வதை அறியாக் கள்ளனோ
கள்ளம் யான் அறிய
முன்னமே சென்ம தாய் பலனும் உண்டோ மொழியவும்
வாய் வராது உண்மை
தன் நவமானம் தன்அருள் மயிலை சயிலனே அகில
நாயகனே.

30. ஐயனே கற்றை வார்சடைகங்கை அம்புலி அணிந்து உமை
பாதி
மெய்யனே அரவு ஆபரணம் மார் மணி வெண்ணீற்றனே
ஈன்ற நற்புதல்வர்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

கையனே ஈராறுடைய கண்மணியே கானக வள்ளி
தெய்வானை
சையனே சகிதம் வந்து அருள் மயிலை சயிலனே அகில
நாயகனே.

31. வாரணக் கொடியும் வேலுடைக் கரமும் வள்ளி
தெய்வானையும் இருபால்
பூரண வடிவும் தண்டையும் சிலம்பும் பொற்பத நடன
சிற்றொலியும்
காரண தலங்கள் ஆறினும் உலவிக் கலாபினில் இளகிய
செவ்வேள்
ஆரண முருகா நின்று அருள் மயிலை சயிலனே அகில
நாயகனே.

32. எந்தைக்கும் எந்தை வந்தவன் என்ற இருவினைக்கு
உட்படும் சடத்தில்
பந்தித்து வேதைப் படும் துயர் புகட்டி பரதவித்திடப்பலப்
பிணியால்
சிந்தித்தே நேரம் நைந்து நைந்து உருகிச் செப்பினேன் என்று
உறுதியும் எப்படியோ
தந்தை தாய் குரு நீ ஈன்ற அருள் மயிலை சயிலனே அகில
நாயகனே.

33. அடுக்கு மேல் அடுக்காய் அண்டம் ஆயிரத்து எட்டு அதற்கு
மேல் பரவெளி
அமைத்தே, தடுத்து பாதலம்கீழ்த் தனித் தனி நரகம் தாக்கி
ஏழ் பிரபையும்
எரிக்க, விடுத்து விட்டிருங்கண் அடிமுடி காணா
விமலருக்கு உகந்த சற்
குருவே, சடுக்கினில் ஜீவசத்து அருள்மயிலை சயிலனே
அகில நாயகனே.

34. தோற்றங்கள் எவையும் மாற்றுதற்கு அரிதாய்ச் சொல்
பொருள் சொல்
உறுதியினால், போற்றியது ஒன்றைப் பற்பல விதமாய்ப்
பொருட்சுவை
தன்னையே கிளறல், வேற்றுடப்பொருளால் ஆவியுள் கலந்த
விசேடமும்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

விரிந்த முன்நூல்கள் சாற்றவும் மகிமைச் சித்து அருள்
மயிலை சயிலனே அகில நாயகனே.

35. தத்துவம் நிறைந்தத் தேகமோ சாரி தவநிலை யோகிகள் முனிவோர்
வித்தக ஞானி தன்னிலை தானாய் விபரமும் அறிந்திடக் கருவி
சத்துகள் அடிக்கிற் சீவனும் சிவனாய்த் தனிநிலை அத்விதப் பரமாய்ச்
சத்து சித்தானந்தத் தனித்து அருள் மயிலை சயிலனே அகில நாயகனே.

36. கன்னியர் பாலிற் இன்பமே தோய்ந்து கன்ம மத்தினில் கடங் கடைந்தே
அன்னியர்க்கு அமுதை அளித்தனன் அன்பாய் ஆனதை அருந்திலேனையா
பன்னு மெய்த்தவமும் பலனும் எப்படியோ பரத வித்திடும் எனது உள்ளத்து
அன்னதே போதம் தழைத்து அருள் மயிலை சயிலனே அகில நாயகனே.

37. மண்ணினைப் பெண்ணை பொன்னையும் விரும்பி மாதவத் துரும்பென மதித்து
விண்ணொளி விலக்கி மெய்த்தவம் குறைந்து வினைப் பவ மீண்டு இக்கடத்திற்
பண்ணிசை பாடும் கன்மம் ஊடுருவிப் பற்பல கொடுமைகள் புரியாத்
தண்ணமர் தருமக் கண்அருள் மயிலை சயிலனே அகில நாயகனே.

38. வேதனே கடத்தில் செய்முறைப் பலன் யான் மெலிவது தருமமோ சாமி
நாதனேசாமிநாதன் என்றொரு பேர் நாட்டிய தவப் பல நயத்தாற்
சூதினை அகற்றிப் பாதகம் சிதைத்துத் தொண்டனைக் காப்பதும் உன் கடமை
சாதனை நீதி நின்ற அருள் மயிலை சயிலனே அகில நாயகனே.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

39. மணிவிளக்கு ஒளியே வள்ளி தெய்வானை மகுணனே
வாரணத்து விசா,
அணி ஒளி கரத்தில் வேலுடன் மயில் மேல் அமரர்கள்
இறைஞ்சு நற்பதமேல்,
பணியொலி சொலிக்கச் செந்தமிழ்க்கு இரங்கிப் பாவலர்க்கு
இடுக்கணே தவிர்க்கத்,
தணி சரவணனே தண்ணருள் மயிலை சயிலனே அகில
நாயகனே.

40. எந்தையே தந்தை சற்குரு நாதா என்துணைப் பிறவி
என்று அமரர்
முந்திய முன்னோர் பிந்திய பின்னர் முன்னம் மா மாமன்
மைத்துனனார்
சொந்த மாமக்கள் பந்தமா மனைவிச் சுகந்தரும் தாய் முதல்
இவரியார்
சந்தத நிட்டை விண்ணருண் மயிலை சயிலனே அகில
நாயகனே.

41. நிட்டையே நிலையாய்ப் புரிந்தவர்க்கு உதவும் நிட்கள
நிருமலச் சொரூபப்
பட்டையே தானாய்ப் பரப்பிரம்ம வடிவே பாதலப் பூதலம்
மேலா
எட்டையே இரண்டாய்ச் சேர்ந்திடப் பொருளாய் ஏகமும்
அனேகமும் விரிவாய்ச்
சட்டையே பூண்டு தட்டு அருள் மயிலை சயிலனே
அகில நாயகனே.

42. அத்தன் மால் அயனும் தேவர் இந்திரனும் அருந்தவர்
முனிவர் யோகியரும்
சித்தர் விஞ்சையர் கணாகர் பூசுரரும் தெளிந்த ஞானியர்
கணநாதர்
பத்தர் பாவலரும் காவலர் முதலோர் பணிந்த பொற்
சிலம்பணி பாதர்
சத்ரு சம்மாரர் தணித்து அருள் மயிலை சயிலனே அகில
நாயகனே.

43. அல்லல் சம்சாரச் சஞ்சிதத் தன்னால் அவரவர் அனுபவத்
துன்பக்,

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

கல்லலா மிடுக்கிற் கலங்கிய சனனக் கன்ம எம் பவக்கடல் சுழலிற்,
சொல்லல் அச்சொல்லான் முடிவுறாது என்று உன் துணைப் பதம் நம்பினேன் என்று உரையே
சல்லியம் விலக்கி நன்று அருள் மயிலை சயிலனே அகில நாயகனே.

44. எண்ணிய கருமம் பற்பல விதமாய் இச்சை உற்று அறிவினைக் கலக்கிப்
புண்ணிய தவங்கள் பூசை கள்நேமம் பதி துதி கதிபெறு நிட்டை, நுண்ணியக்
கேள்வி உண்ணிலை விண்ணில் நோக்கமும் தேக்கமுற்று அலைந்தேன்,
தண்ணமர் ஞானம் தழைத்து அருள் மயிலை சயிலனே அகில நாயகனே.

45. நம்பும் மெய் அடியார் நின்பதம் தன்னில் நன்மலர் அருச்சனை புரிந்தே,
அன்பு வைத்து இறைஞ்சிச் சென்னியில் சூட்டி ஆவியும் பொருள் உடல் அளித்துத்
துன்பம் அற்றிட உட் சஞ்சலம் விடுத்து துதித்திடக் கதிபெறும் ஞானச்
சம்புவே சாமி தண்ணருள் மயிலை சயிலனே அகில நாயகனே.

46. பாரினில் சனனம் எடுத்திடும் கடத்திற் பற்பல துன்பமும் அமைத்துப்
பூர்விக காமத்து அவரவர் செய்கைப் புண்ணியப் பதத்தினில் உதித்துச்
சீருறவாழ்க்கை மனை மக்கள் வாஞ்சிற் சிந்தையும் செலுத்திடச் செய்யும் நீ,
தார்மலர் நீபம் புனைந்து அருள் மயிலை சயிலனே அகில நாயகனே.

47. நரை திரை மூப்பும் வருவதும் முனமே நாட்டிடில் பவங்களும்பலியாக்,
கரையுறு மாயை வெகுளியும் காமக் கன்மமும் வந்ததை தடுக்கும் நிரை

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

நிரை சனனத் தருமமும் செய்த நிறை பலன் தன்னை மேல்
விடுக்கில்
தரை சரியெனவும் தந்த அருள் மயிலை சயிலனே அகில
நாயகனே.

48. சொல்லரும் பொருளே பொருளினிற் சுவையாய்ச் சுவை
அறிகின்ற
நல் உணர்வே, நல்லரும் பூவே நாவினுள் தேனை
நயந்ததே நுகரும் வண்டினம்போல்,
கல்லர்கண் மனத்தினின் இடுங்கருத்தாய் கருத்து
ஒளிவெளிப்படக் கண்டும்,
சல்லியம் பரவா வல்லருண் மயிலை சயிலனே அகில
நாயகனே.

49. ஆடிடும் பதத்தில் சிலம்பொலி ஓசை அகங் குளிர்ந்து
அலந்திடச் சொலிக்க,
நாடிடும் துறையும் விண்டிலேன் விண்டுஇந் நாளும்
மேல்தவிர்த்தனன்,
கூடிடும் தவங்கள் புரிந்திலன் பாவக் கோதையர் இருளினை
விலக்கச்,
சாடிடும் படிக்கே கண்டு மயிலை சயிலனே அகில
நாயகனே.

50. முற்பவக் கொடுமைப் பிரபஞ்ச மயக்கில் பினும் உறும்
வழிபடா திகைத்து,
துற்பலனாகச் சலித்து அயர்ந்து ஓய்ந்தே சுவையுறும்
பொருள் நிறைந்திடும் சொல்,
பற்பல விதமே முறை முறை துதிக்கும் பாடலுக்குஇரங்கி
நீ வருகச்,
சற்பனை புரியாத் தகைத்த மயிலை சயிலனே அகில
நாயகனே.

51. ஐயனே உன் உள் உன்னை யான் கூடி அரகர வேல்
மயில்அஞ்சற்,
செய்யனே ஈராறு உடைய நற் கரனே தேவ சேனாபதித்
தலைவா
துய்யனே மாது வள்ளி தெய்வானை தோழனே அஷை
அபயம் என்று அடைந்தேன்,

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

சையனேபாதுகாத்து அருள் மயிலை சயிலனே அகில
நாயகனே.

52. அப்பனே வேத சாத்திர நீதி ஆகம புராணத் தத்துவமும்
ஒப்பித ஞானச் சொரூபமும் விளக்க உபநிடதமும் நிட்டை
ஒடுக்கம்
துப்பனே நால்வர் திருமுறைபொழிப்பும் தொண்டர்கள்
துதித்திடும் நயமும்
தப்பிலா உண்மை தழைத்துஅருள மயிலை சயிலனே அகில
நாயகனே.

53. சரவணோற்பவ குரு சண்முக தேவே சடாட்சர சொரூப
துல்லபனே
கரண நான்கு ஐந்துள் புலன் பொறி கருத்தே காரண
மூலமந்திரம் நீ
மரண பஞ்சரத்தின் துயில்தனை நீ;க்கி வாதிடும் சூதினைக்
களைந்து ஆள்
சரணமேல் சரணம் தன் அருள் மயிலை சயிலனே அகில
நாயகனே.

54. திக்கு வேறு இல்லை செயலினை அறியேன் தெய்வமே
செய செய என்றே
நெக்கு நெக்கு உருகி நெஞ்சமும் தளர்ந்தே நின்பதம்
துணையெனப் பணிந்தேன்
பக்குவம் அறியாப் பத்தரை வணங்காப் பணி செயாப்
பாலன் ஆனாலும்
தக்கு மேற் பாடாய்த் தணித்த அருள் மயிலை சயிலனே
அகில நாயகனே.

55. கவலை கண் மேலாச் சஞ்சல மதியால் கன்மமே மேலிடும்
சரமாய்க்
குவலய மயக்கில் சுழன்ற நித்தியனாய்க் கோதையர்
உருவினில் அயர்ந்துத்
திவலயதாகி அவலம் அதாகத் திகைத்தனன் தேகத்துள்
பிணியேன்
சவல புத்திரனைக் காத்து அருள் மயிலை சயிலனே அகில
நாயகனே

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

56. சரஹண பவனே சயிலொளி பவனே சங்கரன் உமையவள் மகனே
திரிபுர பவனே திகழொளி பவனே ஸ்ரீஹரிமான் மருமகனே
பரிபுர பவனே பவம் ஒளிபவனே பத்தரை ரெட்சியும் குகனே
தரி பிரணவனே திருவருள் மயிலை சயிலனே அகில நாயகனே.

57. ரஹண பவச என குறுமுனி தனக்கோர் அட்சரம் உரைத்திடும் குருவே
ரஹண பவச எனவென்று தான் உரைக்க ராட்சத கணங்களும் விலகும்
ரஹண பவச என ரவி முகம் பனி போல் அங்கண்அப் பிணிகளும் அகலும்
சஹகண என நடம் நன்கு அருள் மயிலை சயிலனே அகில நாயகனே.

58. ஹணபவ சரவென ஹரிசிவ பிரமன்அன் பத்தோர் ஷர முதலா
ஹணபவ சரவென அனமசிவா என அங் வங் உங் எனும் அதுவே
ஹணபவ சரவென சத்தி ஓம்காரி அம்மனும் அருளிய பாலா
க்ஷணபவ வலமா உலக அருள் மயிலை சயிலனே அகில நாயகனே.

59. ணபவ சரஹவென நாட்டில் நின்றுஉதிக்க நமனுமே ஓடிடும் அதனால்
ணபவ சரஹவென வெண்குட்டம் சோகை நடுங்கிடும் சூலை காமாலை
ணபவ சரஹவென சுரங்களும் நளிர் குளிர் நயன ரோகத் தலை வலிப்பும்
தபத பவின வென வென்று அருள் மயிலை சயிலனே அகில நாயகனே.

60. பவ சரஹண வெனப் பார்க்கவே யோகப் பகுதியைக் காத்திடப் பரமாம்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

பவ சரஹண வெனப் பல்பிணி சுதறிடப் பற்றியே
எதிர்த்திடும் முருகா
பவ சரஹணவென மாது இருவரும் மயில் பாங்குடனே
ஏறி நீ வரவே
தவ சரஹண எனும் தன் அருள் மயிலை சயிலனே அகில
நாயகனே.

61. வசரஹணப என அரன்கனி நீ வாங்க வலம் அதாய்
வந்ததும் அறியேன்
வசரஹணப என உரைத்திடும் முன்னோர் வகுத்திடும்
கவிகளைக் குறியேன்
வசரஹணப என வரந்தரும் தாவி வாயில்நின்று உதித்திடச்
சிறியேன்
றசரஹணப எனத் தந்து அருள் மயிலை சயிலனே அகில
நாயகனே.

62. திரிபுர பவ என ஐயும் ஏரீயும் ஸ்ரீயுமே திரிபுரங்கிலியும்
திரிபுர பவ என சவ்வுமே நவ்வும் சிவ்வொடு மவ்வுமே
ரவ்வுந்
திரிபுர பவ என பவ்வமே யவ்வும் திமித் திமி தேவர்கள்
அனைத்தும்
சரிபுர பவ என செபம் அருள் மயிலை சயிலனே அகில
நாயகனே.

63. திகழ் ஒளிபவனே தேவர்கள் சிறையைத் தீர்த்து நீ சூரனை
மயிலாய்த்
திகழ் ஒளிபவனே கயிலையைச் சுற்றித் திரிந்திடும் தினமது
வலமாய்த்
திகழ் ஒளிபவனே அரன் எனும் புதல்வா திருநடம் புரி
சரவணனே
சகம் ஒளிபவனே குருவருள் மயிலை சயிலனே அகில
நாயகனே.

64. பரிபுர பவன் என பாலனோ சிறியேன் பதநிதம் தொழுது
உனைப் பணியப்
பரிபுர பவசர ஹணபவ குகனே பங்கய முகங்களைத்
தேடிப்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

பரிபுர பவன் எனப் பாடினேன் முருகா பலபிணி
வறுமையை அகற்றத்
தரிபுரம் என்னுள் தவன் அருள் மயிலை சயிலனே அகில
நாயகனே.

65. சரஹண பவஓம் சனவசியம் ரம் சயிலொளி பவமும்
வித்வேஷந்
திரிபுரபவ ஹம் பேதநம் ஓம்ணம் திகழொளி பவமும்
ஆரணஓம்
பரிபுர பவமோ கனபவம் ஒளிபவங் காட்டிடும் ஹரியும்
தம் பனமே
சரி சரி ஆறும் பிணைத்த அருள் மயிலை சயிலனே அகில
நாயகனே.

66. முருகனே கார்த்திகேயனே மந்த்ர மூர்த்தியே மறைமொழி
குகனே
அரன்மரு கங்கை மங்கை தன் மைந்தா வையனே மயில்
மிசை வேலும்
சுரம் அருள் சத்தி வள்ளி தெய்வானை காதலா அபயம்
என்று அடுத்தேன்
சரஹணபவனே வந்த அருள் மயிலை சயிலனே அகில
நாயகனே.

67. வாரணத்துவசா வந்து எனைக் காப்பாய் மலரடிக்கு அபயம்
என்று அடைந்தேன்
காரண குருவே வள்ளி தெய்வானை கண்டு உளம் மகிழ்ந்து
அருள் முருகா
நாரணன் மருகா பிரமனை அன்றோ ரஹசியம் வினவிடப்
பொருட்குஉ
தாரணம் இலனால் தகர்த்திடும் மயிலை சயிலனே அகில
நாயகனே.

68. பாவி மேல் பாவிப் பிறவிகள் தோறும் பாவி தீவினைப்
புரிபாவக்
கோபிமேல் கோபிக் குரூர மேல் காமக் கொடுமை
கொண்டு அமைந்திடும் பச்சை
நாபி மேல் நாபி பகைத்திடும் நஞ்சும் நாரியை வதைத்திடும்
நெஞ்சே

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

தாவிய கவலைத் தடுத்து அருள் மயிலை சயிலனே அகில
நாயகனே.

69. பாரம்மேல் பாரம் மேலிடும் வலுமைப் பற்றியே பிதற்றிடும்
பாரக்
கோரமேல் கோரங் குடும்ப சம்சாரக் கோரமேல் பிணி
அதிகோரத்
தீரம் ஏற்றி ஈரம் திருவடித் தியானம் செய்ய நின் செயலது
தீரச்
சாரமேல் சாரம் கவி அருள் மயிலை சயிலனே அகில
நாயகனே.

70. உன்னிய கருத்தே உள் வெளிப் பரப்பே ஓங்கிய சத்த
சாகரமாய்ப்
பன்னியப் பொருளே பற்பலச் சுவையாய்ப் பகிர்ந்திடும்
மாயை இக்கடமே
நன்னயப் பருக்கம் அளவிலாச் சீவ ரட்சக பராபர சுகசை
தன்னியப் பிரமச் சொரூபமே மயிலை சயிலனே அகில
நாயகனே.

71. நீதியா அரசு வெங்கணு நிறுத்தி நிட்சய விசாரணை
புரிந்தும்
சாதி பேதங்கள் சாத்திரம் கண்டு உள் சமரச சாத்திரம்
உணர்ந்தே
சூதினைப் பறித்து சூத்திர நெறியில் தொல்பவ இருவினை
நிலையில்
தாதுறப் படியே சோதி சூழ் மயிலை சயிலனே அகில
நாயகனே.

72. பூர்விக கன்மத் தாரக மதியைப் பூண்டிடும் அணுக்களின்
உணர்வாய்ப்
பேர்பெறு கல்விச் செல்வமும் வாழ்வும் பிரபல உற்பலன்
தருமச்
சீர்பெறும் என்றே அருமறை அறிஞர் செப்புதற்கு அரிதுஅரிது
எனச் சொல்
சார்வதற்கு எளிதாய்த் தெளிவுறும் மயிலை சயிலனே அகில
நாயகனே.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

73. முற்பவத் துன்பம் அறுத்திடும் முன்னோர் முதுமறை
மொழிப்படி உணர்ந்தார்
பிற்பவத்தோர்களின் இன்பம் உற்றிடவும் பிணித்துயர்
வறுமைகள் சிதறச்
செப்பியதான மந்திர விரதம் செயும் முறை வேள்வியில்
தவிர்த்தார்
தப்பிதம் அடையார் நற்பதம் மயிலை சயிலனே அகில
நாயகனே.

74. மண்ணவர் மனிதர் அநேகருள் பவராய் வகைவகை
புரியினு வாடி,
விண்ணவர் கண்ணில் கண்டிடில் கன்மம் விரும்பும்
மோகாகங்கள் கோடி
நண்ணலர் வில்லிற் கற்கள் விட்டு எறியுமுன் நடுங்கிடப்
பறப்பது போலாந்,
தண்ணலர் கங்கை பரவிய மயிலை சயிலனே
அகில நாயகனே.

75. காம வேட்கையினில் கடைப் படும் மனத்தன்
காண்பனோ திருவடிக்கு அன்பாய்,
நேம நிட்டை உன் தன்னிலை தளர்ந்து
அலைந்தே நிர்விகாரத்தினில் அழுந்தாப்
பாமரத்தனனாய்ப் படர் பவ மறுக்காப்
பாவி கண்டிடப்பலன் பெறுமோ,
தாமதத்தனன் யான் பற்றினேன் மயிலை
சயிலனே அகில நாயகனே.

76. கோப மூவகையும் குரூரமும் துட்ட குணமும்
அந்நீதியும் பகைசேர்
பாபமேல் கடுமைப் பகர்பதர் வசனம்
பற்று அற அகற்றி நல் உணர்வில்
தீப மெய்ச்சுடர் மெய்ஞ்ஞானமும் மோனச் செய்கையில்
பேரொளி வெளியில்
சாபம் அற்றிட நல் அருள் புரி மயிலை
சயிலனே அகில நாயகனே.

77. பஞ்சைநின் அருளைப் பற்றியே
பாடும் பதத்தினுக்கு இரங்கி நீ வருக

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

நெஞ்சகத்து உருகி வஞ்சகம் அகல
நிட்சய நிலை உணர்ந்திலனேற்
கிஞ்சிதக் காம வேட்கையில் அழுந்திக்கெடாமல்
என்துயர்ப் பிணி களைவாய்
தஞ்சமென்று அடுத்தேன் தற்பரா மயிலை
சயிலனே அகில நாயகனே.

78. திக்கு வேறில்லைத் திரு உளம்அன்றிச் சிந்தையில்
தைரியம் இலனாய்
வெட்கியே பாசப் பந்தத்தில் ஆழ்த்தி
வீணனாய் கவலையும் மீறிச்
சிக்கியுள் உழன்றே அனலென மெழுகாச்
செயும் பிணி வறுமையில் உருகிச்
சக்கியந் தப்பித் தவிப்பதோ மயிலை
சயிலனே அகில நாயகனே.

79. வஞ்சியர் மாயை வலைதனில் சிக்கி மண்ணொடு
பொன்னையும் விரும்பிக்
கொஞ்சி எந்நாளும் கழிந்ததும் அன்றிக்
கோபமும் கோபமுற் பாவம்
அஞ்சிடா வளர்ந்தே அகத்தினுள் பகிர்ந்தே
அலை கொளும் வறுமை யான் அடைந்தேன்
சஞ்சலம் தவிர்த்து ஆள்சரண மெய்ம் மயிலை
சயிலனே அகில நாயகனே.

80. சென்ம தீ விளையும் பஞ்செனும் பொதியாய்த்
திருவுளம் இரங்கியே வருக
நன்மை செஞ் சுடரா அழல்எனும் தீயாய்
நசித்திடச் செயலது புரிந்தால்,
கன்மமும் கன்மப் பிணியும் பிற்பிணியும்
காணு மோகண்முனே காணத்,
தன்மமோ சுத்த நின் மல மயிலை சயிலனே அகில நாயகனே.

81. வள்ளி தெய்வானைப் பாகனே யோக
வானவர் தொழும் கழற் தூய்மை
எள்ளினுள் எண்ணெய் நிறைந்தது போல
எங்கணும் எவ்வுயிருக்கு உயிராய்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

நள்ளிருள் சோதிப் பகல் இரவற்ற ஞயம்
பொருளளிக்கும் மெய்ஞ்ஞானத்
தள்ளொணாத் தெய்வச் சரஹண மயிலை
சயிலனே அகில நாயகனே.

82. விதித்திடும் பிரமன் விண்டு தேவேந்திரன்
விமல மற்ற எவர்களும் தேவர்
சுதித்திடும் யோகி இருடிகள் சித்தர் கணங்களும்
முனிவரும் திகைக்க
மதித்திடும் வரத்தால் பகைத்திடச் சூரன் வலிமையை
அடக்கி நீ ஆளச்
சுதித்திடும்ரூபச் சடாட்சர மயிலை சயிலனே அகில நாயகனே.

83. சூரனோடு அசுரர் குலங்களை வென்றுஞ் சுரர்களைக்
காத்து நீ பண்டு
வாரணம் பயின்ற தெய்வானையை மணந்து வாகு வல்லயம்
அதுபூண்டத்
தீரனே தொண்டர் பாபசம் மாரா தினம் தினம்
துதித்திடும் லிங்கத்
தாரணை தரித்த முருகனே மயிலை சயிலனே
அகில நாயகனே.

84. தந்தை தாய் பெண்டு மகப் பெறும் பாசம்
தமரரும் துணைவரும் சகல
விந்தையர் சிந்தாகுலம் பல கிருஷி
வியாபார அரசு செங்கோலாய்ப்
பந்தமும் வீடும் கானடை கால்கள் பற்பலப்
பொருள்களும் நிலமும்
சந்த தஞ்சுரும் பாங்கால் எனும் மயிலை சயிலனே
அகில நாயகனே.

85. என்னுளம் அறிவாய் பிணித் துயர் வறுமை
இடர்அறுத்து இன்பம் உற்றிடவே
நின்னருள் பாரம் காப்பதும் உன் கடமை
நெஞ்சமே வஞ்சகம் இலனாய்ப்
பன்னுதற் பாக்கட்கு இரங்குந் தெய்வானை
பாகனே மாமயில் வேலும்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

தன்னுதே யாவுந் தன்னுதே மயிலை சயிலனே
அகில நாயகனே.

86. வேதம் ஒர் பாதை நீண்டிடும் துலையாய்
விரிந்திடும் இருபுரஞ் சாலைச்
சோதிஆகமனூல் அழைத்திடும் புராணம் துதி நதி
பெருநகர்ப் பதியும்
ஆதியாம் மனுக்கள் நீதிநூல்களும் தான் அரசனார் அகிலம்
அதை திருத்தற்
சாதி பேதங்கள் நிலை தரும் மயிலை சயிலனே அகில
நாயகனே.

87. மூவர்கள் தேவர் சகாயம்முத்தேவர் முதல் எமன்சிவன்
சிரம் மீதில்
காவல் உற்றிடும் மாற்கு உடன்படும் இந்திரன்
கரம் இரண்டது முதல் உந்தித்
தூவது பிரமற் கனங்கனும் துணையாய்த்
துதிப்பதங் கோசமும் முதலாய்த்
தாவது தேகத் தத்துவ மயிலை சயிலனே அகில நாயகனே.

88. முதற் சிரம் கண்டும் சிவற்கிது பிரிவாய் மொழிகுவது
உரம் கரம் வயிறும்
திதிப் பதி உந்தி அரை முதல் பதமும் செப்பிய பிரமன் முத்தேவர்
அதிபதி தேகம் ஓர் உருவாகி அமர்ந்திடச் சத்தியின் கூறாச்
சதபதி சகிதம் ஆகிய மயிலை சயிலனே அகில நாயகனே.

89. சுந்தர தேக தத்துவ நியதித் துகை பிரி விரிவுகள் பெருகி
அந்தர நடுமுன்னாகி ஐம்பூத அது முதலுள் வெளி பரவிச்
சிந்திய தொண்ணூற்று ஆறெனும் கருவி செப்பியது உறவு
மெய்ஞ்ஞானத்
தந்திரத் தவத்தோர் இயந்திர மயிலை சயிலனே அகில
நாயகனே.

90. பவம் எனும் வறுமைக் கடலினிற் தளர்ந்துப் பற்பல
பிணியுறும் பார
பவமெனும் தேக உபாதியும் உயிரைப் படைப்பது முதுகினை
விரியச்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

சிவமெனுந் தியானம் செப தப நிஷ்ட்டைச் செல்லுமோ
செல்லொணா வலிமை
தவமெனும் மோனத் தரு நிலை மயிலை சயிலனே அகில
நாயகனே.

91. சிந்தனைக் குரிய கந்த வேல் மருவு தெய்வானையும்
வள்ளியும் இருபால்
வந்தனம் புரியத் தந்திடும் பதத்தை மைந்தனும் நம்பகம்
இலனாய்
நொந்து நொந்து அலறி வீழ்வது என் பயனே நொய்யனுக்கு
இரங்கியே வந்தும்
சந்ததம் காப்பது ஆர்சொலாய் மயிலை சயிலனே அகில
நாயகனே.

92. திருவுளம் உண்மை பதி துதி வள்ளி தெய்வானை
செஞ்செவ்வேளும் உண்மை
வருவதும் உண்மை வேல் மயில் மறவா மலரடி
வணங்குவதும் உண்மை
குருவருள் உண்மை வஞ்சகக் குல பிணி குறுகிடாக்
காப்பதும் உண்மை
தருவதும் உண்மை நிலை புரி மயிலை சயிலனே அகில
நாயகனே.

93. கருத்து ஒளிமயமாய் என்னில் உள் ஒளியாய்க் காட்சியும்
தரும் ரகசியனாய்த்
திருத்தம் செய் தேகத் துயர் பிணி வறுமைச் சிறுவனை
அணுகிடா வண்ணம்
வருத்தமும் இலனாய்க் காப்பது உன் கடமை வள்ளி
தெய்வானையும் இருபால்
தரித்த சண்முகவா நித்திய மயிலை சயிலனே அகில
நாயகனே.

94. எந்த நற்றுதியும் உடல்பிணி வறுமை இடர் துயர்அற
மொழி உருத்தற்
கந்தனே சிந்தை நலக்கமும் கலக்கம் காண்கிலா ரகசியப்
பொருளை
வந்து நீ இந்த வேளையும் மகிழ்ந்தே வள்ளி தெய்வானை
வேல் மயில் மேல்

Public domain. Digitization Muthulakshmi Research Academy

சந்ததம் என்றுஉள் நடம் புரி மயிலை சயிலனே அகில
நாயகனே.

95. போகம் மேதக மாயையே யூகம் பொருந்திய புண்ணிய
ஞானம்
யோகமே நாக ஐம்புலக் கரணத்து உள்வெளி கருவிகள்
பிரிந்தும்
வேகமே பாகம் சத்திமுக் கூறாய் விரும்பிய சிவனுள்
பாய்ந்துத்
தாகம் மேலோகம் எங்கணும் மயிலை சயிலனே அகில
நாயகனே.

96. பச்சை மால் மருக முருகனே இச்சை பற்றியே முற்றிலும்
உணர்வின்
இச்சை அப்பதி வாய் பாடலும் அமைத்து நின் அருள்
பரவியே நின்றோய்
செச்சையும் கடப்ப மாலை மார்பும் சேவலும் கொடி மயில்
வேலும்
சச்சிதானந்த மெய்ச்சுடர் மயிலை சயிலனே அகில
நாயகனே.

97. முடிவுறா வறுமைப் பிணித் துயர்க்கெகட நீ முனைந்திடப்
பொடிப் பொடி நீறாய்ப்
விடியுறாக் கரும மடித்திடத் தடித்த தருமம் பிடித்திடச்
செயலது பாக்கள்
படியுற வேண்டித் துதித்திடப் பற்றிப் பகல் இரவு அற்று
மெய்ஞ்ஞானத்து
அடிவுறக் கண்டே கொண்டு அருள் மயிலை சயிலனே
அகில நாயகனே.

98. சொல்ல அரும் பொருளே உயிர்க்கு உயிராகிச் சுருதியுள்
தனிப் பரவெளியே
அல்லலும் பிணியும் பவக் கடல் வறுமை அகத்துயர்க் கெட
நினைத்த அளவில்
தொல்லை ஊழ் வினையும் பஞ்சு இடும்அனல் போல்
துலைத்திடும் அருட்பெருட் சோதி
சல்லியம் அணுகாச் சுகம் தரும் மயிலை சயிலனே அகில
நாயகனே.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

99. அருணை நன்னாதர் பொய்யா மொழிப் புலவரான நக்கீரர்
மூவருக்கும்
கருணை தந்து ஆள சொரூபமும் நிசமாய்க் காட்சி கண்;
காண நீ நின்றோய்த்
தருணமே வீர சைவமே கருணைச் சாமிநாதனுக்கு அருள்
தருவாய்ச்
சரஹண பவஓம் சரஹண மயிலை சயிலனே அகில
நாயகனே.

100. பேர் பெறு சனனம் விட்டநின் நினைவால் பெற்ற புண்ணிய
பலத்தால்
சீர்பெறு சகஸ்ரப் பிரபந்தம் மேல் பா செப்பிய மாலை
இந்நூறும்
ஏர்பெறு மனத்தின் துயர்ப் பிணி வறுமை என அணுகாது
இடல் வண்ணந்
தார் பெறு சிறுவனே அருள் மயிலை சயிலனே அகில
நாயகனே.

101. வருந்தி யான் பாடும் செந்தமிழுக்கு இரங்கி மாரெரி பிணித்
துயர் வறுமைப்
பரிந்து நீ தவிர்க்க வரா விடில் இந்தப் பாலனுக்கு உதவி
யார்ஐயா
கரம்தனில் வேலும் சேவலம் கொடியும் காதலி வள்ளி
தெய்வானைத்
தரம் தரும் வரமும் வாழி மேல் மயிலை சயிலனே அகில
நாயகனே.

ஸ்ரீ மயிலாசல மாலை முற்றும்

திருச்சிற்றம்பலம்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

திருமயிலைச் சந்நிதிமுறை ஆயிரப்பாவில் பதினொன்றாவது திருமயிலை அந்தாதி

விநாயகர் துதி

புத்தி தரும் வித்தை தரும் போதம் மிகு நன்மை தரும்
சித்தி தரும் செல்வச் சிறப்பு தரும் - அத்திமுகப்
பின்னோனைப் பாடும் பிரிவை தரும் மா மயிலை
முன்னோனை நாடு முதல்.

நூல்

1. திருவளர் எந்நாளும் திருமயிலை வாழும்
திருவளரும் சின்மய சொரூபன் - திருவளரும்
பன்னிரு தோள் கையன் பரவும் திருவுளத்தன்
மன்னிரு காலுன்னு மயில்.

2. மயிலை வளர் தேவன் மனம் உறையும் வேளே
கயிலை வளர் கந்தச் சுவாமி - அயிலை வளர்
கையன் இருகன்னியர்கள் காதலனே பூதலனா
மெய்யன் இரு துன்பம் அறும் வேல்.

3. வேலாயுதனே மிகு விஜயமுற்ற கர
சூலாயுதம் படைத்த சூரனே - நாலாம்
பதவிஅருள் மாமயிலை பன்னும் மனுஒன்றே
உதவி அருள்அன் பருக்குஇப் போது.

4. இப்போது நாயேன் இழிவுதனில் மூழ்காது
எப்போது அருள் பெறுவது ஏதம்அற - முப்போது
எந்தை எனும் மா மயிலை ஈசனையே போற்றுங்கால்
சிந்தையுறவே செய்யும் சீர்.

5. சீர்தருகு மா மயிலம் செவ்வேல் முருகன் அருள்
பேர் தருகும் எங்கும் பிரபலிக்கும் - போர்தருகும்
சூரர் பொடி படகைச் சூலமிகத் தானே உன்
தீரர் பிடிபடவே செப்பு.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

6. செப்பரிய வேத ஆகம சாத்திரம் முதலா
ஒப்பரிய நேரா உபநிடதந் - தப்புஅரிய
தானான தத்துவமும் சண்முகனே மா மயிலை
கோனான சத்குருவைக் கொண்டு.

7. கொண்டேன் கவியக் குவலயம் மீது உன் கழலைக்
கண்டேன் கவியில் களிகூறத் - தொண்டேன்
இடையூறு தன்னில் இருந்தேன் மயிலை
நடையூறு மாயூர நால்.

8. நால்வேதம் உச்சி நடு முதலாய் என் உளமே
கால்ஈரா றானபரி காரணனே - நூலுள்
பொருளுறவே மா மயிலை புண்ணியனே நாயேன்
இருளறவே பார் அருளிப் போது.

9. போது மதி கங்கைப் புனையும் அரன்ஈன்றச்
சீதமலர்ப் பாதச் சிறுவனே - ஏதம் அறப்
போற்றும் புகழ் மயிலை போதகனே நின் அடியற்(கு)
ஆற்று மகி ழேதருகு மாம்.

10. ஆமென்று பத்தி அநு தினமுமே நெஞ்சின்
ஆமென்ற ஆணவமும் நாடாரே - ஓமுன்
சரணம் அதைத் தாக்கும் தனிமயிலை வேலோன்
மரணம் அதைப் போக்கும் மருந்து.

11. மருந்தாம் பிரணவ மா மந்திரத்தை
அருந்தார் அறியார் அறியார் - இருந்தேங்கி
நெஞ்சம் தனில் உழலும் நின் மயிலை சிந்திக்கார்
வஞ்சம் தனில் உழலு வார்.

12. வார் கொண்ட கன்னி குறவள்ளி மணவாளனே
தார் கொண்ட மார்பிலகு சண்முகா - போர்கொண்டு
அடிக்கும் அசுரரையே அந்தரத்தோர் வாழ்கப்
பிடிக்கும் திருமயிலைப் பேசு.

13. பேசப் படா வருமோ பிஞ்ஞகன் தன் கேள்வியினில்
கூசப்படா மந்திரம் கொள்கையே - நேசிப்பது

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

எந்த நாள் வேளை இலங்கு மயிலை கிரி
வந்த நாள் வேளை மகிழ்

14. வேளை மகிழ் மனமும் வேண்டும் வெகுளியறத்
தாளைப் புகழ் கனமும் சாற்ற அரிய - நாள் அதனை
வீண்போது போக்கா விரைந்து தனி மயிலை
காண்போது எப்போது அவனைக் கண்டு.

15. கண்டு உனைப் போற்றாக் கருமியான் ஆனாலும்
பண்டு வினை நீங்கக் கண் பாராயோ - தொண்டர்
புகழ் பெருகும் போரூர் பொருள் மயிலை வாசர்
இகழ் வருகாக் கேள் வில் இரு.

16. இருந்தேன் பயன் அறியாஈனம் அறபூவில்
பொருந்தேன் பதமலரை போற்றாத் - திரிந்தேன்
சென்ம வினை நீங்கத் திருமயிலைச் சிந்திக்க
நன்மை தனை எப்போதும் நாட்டு.

17. நாட்டும் பொருள் மனமும் ஞானம் தரும் கல்வி
கூட்டும்படி அருளும் கொள்கைதனைக் - காட்டும்
பரம குருவே கழலைப் பற்றிப் புகழத்
தரும புரி மா மயிலைச் சாற்று.

18. சாற்றரிய கேள்வி தனைப் புகல ஞாலத்தே
போற்றரிய மா மயிலைப் புண்ணியா - தோற்றரிய
என் இச்சையானே எளியோற்கு இரங்கி நீ
உன் இச்சை மூலம் என ஓது.

19. ஓதும் மறை நான்கு உணர்வில் உணர்வானப்
போத முறையே பெருகும் புண்ணியா - தீதறக்
கல்வி மிகவே வளரக் கண்பாரும் மாமயிலைச்
செல்வம் மிகவே பெருகச் செய்.

20. செய்யாறி ரண்டு உடையான் தெய்வானை வள்ளி பங்கன்
பொய்யா மொழிப் புலவன் போற்றமதி - துய்யான்
கருணை நிருபா நிதியைக் கண்டு மயிலானைச்
சரணம்எனப் போற்றத்தந் தாள்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

21. ஆளக் கடனாம் அறுமுகனே வள்ளி மண
வாளக் குகனே அயில்ஏந்தி - கோழிக்
கொடியனே மா மயிலை கோலா கலனின்
அடியனே காக்கும் அருள்.

22. காக்கும் அருளான் கயிலை முருகேசர்க்காள்
ஆக்கும் அருளாளன அயிலரசாள் - தேக்கும் அருள்
சிற்றுணரு நீங்கவே தீவினை போம் மா மயிலை
முற்றுணரு நற்செயலே முன்.

23. நற்செயலை முன்ன மதி நாட்டும் புகழும் மன
நற்குணமும் நற்சுகமும் ஞானமுறை - நற்கதிகள்
நாயேன் பெற வேண்டி நம்புந் திரு மயிலை
சேயோன் திரமே செயல்.

24. செயல் கண்டு அறியாதத் தீவினை மேலாகு
மயல் கொண்டு உழன் மனமும் வாடா - அயில்கொண்டு
அவுணரையே வாட்டி அமரர்இடர் தீர்க்கக்
கவன மயிலைப் பதியே காண்.

25. பதிகாண வள்ளி பதி காண தெய்வம்
துதி காண பாதந் தொழ அறியேன் - அதி கரண
மூழ்கிலனேன்ஆகின் முக மலர மா மயிலை
ஊழ் வினையும் நீங்க உரை.

26. உரை அறியா நாயேன் உகந்தென் உளமே
புரை அறியாப் பாவன் போற்றா - தரையறியப்
பன்னும் பிரபலமும் பாரும் திருமயிலைப்
பின்னம் பிரபலமாய்ப் பேண்.

27. பேணத் துயரப் பிணிபோ மரணம் அறுங்
காணத் திருவடி புற்கன்மம் அறும் - நாணத்
தரும நெறிநாட்டத் தனிமயிலை வாழ்வே
உருமை நெறி உள்ளவனை ஊட்டு.

28. ஊட்டும் படி அமுதம்உண்மைப் பொருள்அதனைக்
காட்டும் படி நிதமும் - கண்முனே கூட்டுணுந்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

தேமருவு சோலைத் திருமயிலை நேசத்தாற்
பாமருவு மாலை உரம் பற்று.

29. உரம் பற்றி லக்குமி ஆளுற்று அமருமானாங்
கரம் பற்று இலகிய வேல் கந்தன் - திரம் பற்ற
ஊரு மனம் உடையார்க்கு உள்ள மகிழ் மா மயிலை
தாருங் கனமுடையான் தாள்.

30. தாளை நினைந்து உருகத் தாங்கும் இரு மனைவி
யாளை நினைந்து உருகும் அறுமுகா - நாளையே
பாலன் துயர் அணுகாப் பாரு மயிலையனே
காலன் கயர் அணுகாக் கார்.

31. காக்கு நாள் இன்றே கருணை கிருபா நிதியைச்
சேர்க்கு நாள் என்றோ திருவடியைப் - பார்க்கும் நாள்
எந்நாள் அந்நாள் மயிலை இன்பமுறும் தேவநீ
உந்நாள் அந்நாள் மயிலோடு ஒக்கு.

32. ஒக்கம் திருமயிலை யோக நம சிவாயன் அருள்
அக்குஞ் சரவணனார் சத்குருவே - திக்கு எங்கும்
தானா அதி அவுணச் சம்மார மா தேவச்
சேனாபதி அவனைத் தேர்.

33. தேர்ந்து தெளி நெஞ்சே திரந்துத் துதிவாணிப்
போர்ந்த சுகம்ஆதிப் புகழ் மயிலை - ஊர்ந்தே
நொடியில் வலம் வருவான் நூல்உண்மைத் தொண்டர்
படியில் வலம் வருவான் பார்.

34. பாரோர் அறியப் பகரும் திருவருளால்
ஊரார் உறவினரோடு அமரும் - சீராகப்
போற்றும் போருண் மயிலைப் புண்ணியனைப் பூசிக்கத்
தேற்றும் தருணம் அதிசேர்.

35. சேரும் கருத்துளே தேறும் சுக வெற்றிப்
பாரும் குணம் அதுவே பற்பலவாம் - யாரும்
சந்தோஷமாகத் தழைக்கும் திருமயிலை
அந்தாஷை இல்லாது அறி.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

36. அறியும் பல சபை நல் ஆடைச் சுகத்தைக்
குறியும் புவனம் எங்கும் கொண்டே - செறியும்
படியிலகு மா மயிலை பற்று மயிலேசன்
அடியிலகு வெங்கணுமே யாம்.

37. ஆகுஞ் சகல துணிவான சுக மகிழ்ச்சிப்
போகும் பிணியும் பொருள்சேரும் - பாகும்பால்
தேன் சொரியும் மாமயிலம் சேனாதிபதித் தலைவன்
தான் சொரியும் தன் மகிமைத் தான்.

38. தானே தான் தன் அறிவும் தானே சுக மகிழ்ச்சி
ஊனே ஒருவழியோ உன்னில் உறுந் - தேனே
மிக வளரும் மா மயிலை வேலோன் அடியேன்
அக வளரும் அங்கதுவே யாம்.

39. அதுவே யாமச் சுகமும் ஆன சவுபாக்யம்
பொதுவே அநுபவிக்கும் போகம் - இதுவன்றி
எங்கும் குறைநிறையா ஏத்தி மயிலையனை
சங்கைஅறத் தானே தொழு.

40. தொழுது வருவோர்க்குச் சுகபோகம் சொல்வேன்
பழுது அறவே சொல்லும் பலவா - எழுதியறா
வையகத்து மாந்தர் மகிழும் திருமயிலை
சையகத்துள் ஓதத் தரும்.

41. தருமே பதமும் தாரம் அது நேரில்
வருமே அவரால் மகிழும் - திருமயிலை
உண்டாம் திருமயிலை யோனை மிக நாடிக்
கொண்டால் இரு மனைவி கோன்.

42. இருமனைவி கோனோன் இடையூறு மற்றோ
இருமனை விதானே இணங்கத் - தரும்மனையும்
மேவல் பொருளிடத்தை ஈகுவனே மா மயிலை
சேவல் கொடியோனைச் சேவி.

43. சேவித்து இருபதமும் சிந்தித்தனை இருத்திப்
பாவித்து இருமனையாள் பத்தி தனை - மேவித்து

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

அருகும் புகழ்உறவே தன் மயிலம் வேண்டி
உருகும் மிகழ் அறவே உற்று.

44. உற்று நினைந்து உருகி உன்அடிக்கு ஆளாகப்
பற்று மனை இருவர் பாலிப்பு - முற்று முறை
எப்பவத்தோன் ஆனாலும் எல்லாம் களங்கம் அற
ஒப்பும் திருமயிலை யோன்.

45. திருமயிலையோன் அருளால் தேடும் தனமே
பெருமை உள இன்பப் பெருக்கால் - தருமமலை
ஆனப் பொருள் உறவே யார்கண்டு உரை செய்வார்
ஊனப் புரை அறவே உன்.

46. உன்னும் தவநிலையும் உற்ற பொருள் ஆகமநூல்
பன்னும் பலனைப் பணம் எனவே - என்அகமும்
தாவும் புகழுலகுந் தானாகு மா மயிலைக்
கோவும் மகிழ் இலகும் கூறு.

47. கூறுத் தன மகிமைக் கொள்ளும் சுகத்தைத்
தேறும் பலமும் தெளிவு தரும் - வாறுமே
புல்லோர் அறியார் புகழும் மயிலைக் குரிசில்
நல்லோர் அறிவார் நலம்.

48. நலமே புரியுங்கால்நாடு எங்கும் மேன்மேல்
பல லாப தான்யப் பலிதம் - தலமே
பொருள் மயிலை வாசப் புரவலனே தொண்டர்க்கு
அருள் மயில் உலாசன் அருள்.

49. அருளே மிசக் சிறக்கும் அன்னமயத் தான்யப்
பொருளே புகழ்ச்சி தரும் போதம் - மருள்ஏது
நீங்கும் திருமயிலை நின் மலன் என் நெஞ்சில்
தாங்கும் குருபதமே தான்.

50. தாங்கும் குருபதமும் தானான மைந்தரின்
ஓங்கும் திருவருளும் உற்ற சுகம் - தேங்குமோ
பத்தி மிக வளரும் பாரும் திருமயிலைச்
சுத்த சுகயோகம் துதி.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

51. துதிக்கும் சரவணனைத் தொல் உலகில் யாரும்
மதிக்கும் பிரபலமே மாறாக் - கதிக்குமே
காணும் படி ஆங்கருது மயிலை அனைத்
தோணும் படியாம் சுதன்.

52. சுதனால் பெருவாழ்வை சொல்லின் முடிவுஏது
அதனால் வரும் வாழ்வே யாவும் - மெதினால்
பெறாரே இதனால் பெறுவார் மயிலை
உறாரே இதனால் உரை.

53. உரையறியா நாயேன் உரைக்கும் சுகத்தைத்
தரையறியாப் பாவம் தான் என்னில் - விரைவாய்த்
தரும மிகு புத்திரனே தான் உதியத் துன்பக்
கருமம் அறும் மா மயிலைக் கண்டு.

54. கண்டு மிகப் போற்றக் கனயோக ஜாதகனாய்த்
தொண்டர் மகிழ்ச் சுதன் அருளே - விண்டு
மருகனே மா மயிலை வள்ளி தெய்வானை
முருகனே பூவின் முடி.

55. பூவின் முடியோனை புந்திதனில் உன்னமுனே
தாவி வலம் வருவான் தண்மயிலைத் - தேவனையும்
சிந்தை தனில் உருகிச் சின்மயமே பூசித்தால்
சந்ததி தானம் தருவன் தான்.

56. தருவன் தான் மிக்கச் சரவணனே நேரில்
வருவன் தான் மெய்க்க மகிழ் ஞானக் - குரவன் தான்
தானான தெய்வச் சகாயனே மா மயிலைத்
தானான சந்ததியே தான்.

57. சந்ததி தானம் தருகச் சாற்றம் கால் எந் நாளோ
வந்த அதிகாரந் தனக்கு எலாம் அவனே - சந்ததம்
மா மயிலை நிந்தையிலா வந்து புரிவோர் மகிழே
ஆம் மயிலை யானே அறி.

58. அறிவு மிக பெருகலான மதியாமே
குறியும் தகும் எனவே கொள்கை - நெறியும்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

தருவான் அகமுகமும் தான் மயிலை என்ன
வருவோன் அகமே மகிழ்.

59. மகிழ் தருகுவாய் மகிழ்ந்தே மா மயிலைக் கோவே
இகழ் தருகு நிந்தை அழியப் - புகழ் தருகும்
கல்வி அருள் பாலன் கருணை வளர் நெஞ்சகமே
செல்வி அருள் பாலகனைச் சேர்.

60. சேரும் சுகஞானச் செந்திரு சூழ் மகிழ்ச்சிப்
பாரும் இக பரமும் பற்றவே - நேரும்கால்
சுத்த சுகயோகத்தில் தோன்றும் வெளி மயிலை
பத்தர் அக மேவும் பரிந்து.

61. பரிந்துச் செய் கன்மம் பலவிதமே ஆகும்
திருந்தச் செய் கன்ம சுகம் செப்ப - விரைந்துச்செய்
நீதிமுதலாம் செயலும் நிச்சயமா மயிலை
ஆதி முதலாகும் மறை.

62. அறை வாயுரவு மகத்தான பேரின்ப
முறை வாய்ப் பல வியன மூன்றாய் - பொறையாக
வாழ்வு தரும் நன்மை மா மயிலைக் குன்றே நீ
தாழ்வு வரும் இன்மையே தள்.

63. தள்ளும் இகழ்ச்சி தனைத் தள்ளொணா உண்மை மிகக்
கொள்ளும் மகிழ்ச்சிக் குவலயமே - உள்ளம்
புரமாய் மகிழ்வார் புகழ் மயிலைத் தேவே
திரமாய் நிகழும் செயல்.

64. செயலே புரி பழனிச் செங்கல்வராயன்
அயிலே கரம்இலகு ஐயன் - மயலே
துரத்தும் பகல் சுகமும் தோன்றும் மிகுக்காட்சி
உரத்தும் செக மயிலை யோன்.

65. மயில் ஊரும் சண்முகமே வல் இரவின் மானே
மயல் ஆரும் தாவும் மனத்தே - குயில் சேரும்
கற்பகப் பூங்கா வேகனக்குந் திருமயிலை
அற்புத பாதத்திணையே யாம்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

66. இணையே யாம்இந்த இரவு பகலாகி
இணை கொண்டு இதை காக்கும் ஆயுளே - பணைகொண்டு
எருதேறு காரணனார் ஈன்ற மயிலோனே
வரு நூறு தீர்க்க வயது.

67. வயது சுகம் போற்றி வாணி சுகம் கொண்டே
நியதி சுக லக்குமியும் நிற்கச் - சுயவெகரம்
கொண்ட கொடிகைச் சுகமும் கொள்ளும் திருமயிலை
கண்ட சுகம் நற் சுகமே காண்.

68. காணும் விஜய சுகம் கட்டிய நல்லாடை சுகம்
தோணும் துணிவு சுகம் சொல்அறிவால் - ஊணும்
சுக மகிழே சௌபாக்யம் சொல் மயிலை போகம்
சுக தனமே நன்மைச் சுகம்.

69. சுகமாகும் தான்யச் சுகமாகும் மைந்தர்
சுகமாம் மதி பெருகும் சொல்லச் - சுகமாகும்
கல்வி சுகமாகும் கருணை வளர் மா மயிலைச்
செல்வ சுகமாகும் திரம்.

70. திரமாஞ் சுகஞானம் தேறும் தருமம்
வருமாஞ் சுகம் உரவோர் வண்மை - உருவா
உணருஞ் சுகம் கீர்த்தி யோகோ மயிலைப்
புணருஞ் சுகம்அனைத்தான் போற்று.

71. போற்றும் இரா எல்லைப் பொருளே வயதுசுக
நால்திசையும் சாமிநாதச் சுகமே - ஏற்றிசையும்
தில்லை முதல் ஐந்துதலம் சென்று பணிந்திட்ட சுகம்
சொல்லும் மயிலோனே துணை.

72. துணையாய் இருபதமும் தோன்றுஅச்சுதனோ
குணமாய் வரும் குன்றுடை வேல் - அணையாக
ஐந்நான்குமான சுகம் அன்பாய்த் திருமயிலை
முந் நான்குமான கர மூர்த்தி.

73. மூர்த்தி அருளாளன் மூவுலகம் போற்றி செயப்
பார்த்திபனே பாலசுப்ரமணியன் - சீர்த்தித்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

திகழும் பிரபலனாம் தென் மயிலை ஊரில்
புகழும் நரர்க்கு ஓர் பொருள்.

74. பொருளே குறைவிலாப் புந்திதனில் எந்நாள்
அருளே நிறை நில்லும் - ஆதி இருள்ஏதும்
முன்னாது நெஞ்சில் உகந்த மயிலைக்கு அரசை
முன்னாகத் துஞ்சுமே முத்தி.

75. முத்திதருவான் மகிழ்ந்தே மூன்றாம் பதம்கடந்தப்
பத்தி தரு நான்காம் பதவியே - சித்தித்
தரு மயிலை வாழ்த்தி மிகச் சந்தமும் போற்றப்
பருமயிலில் ஏறிவரப் பார்.

76. ஏறிவரப் பாராய் எந்தை முருகன் எனக்
கூறிவரப் பாராய் குருபரனை - சீறிமிகக்
காலன் வரும் முன்னே காணும் மயிலைஎனப்
பாலன் வரும் முன்னே பணி.

77. பணி உன் இரு சரணம் பற்றுஒழியா பாசப்
பிணியன் கருமம் பெரிதோ - துணியென்
நவமணியே தென்மயிலை நாத சுகஅதீதத்
தவ மணியே என் உளமே சார்.

78. சாரும் தவம் உடையார் தன்னுள் நிலையாகப்
பாரும் பவம் உடையார் பாரமே - தீரும்
தெளிவே பெரும் சிந்தைத் தென்மயிலைத் தேவ
ஒளிவே தரும் பயனை உன்.

79. உன்னும்படி நிதமே உள்ளும் புகழ் புரமும்
பன்னும்படி உதவும் பார்அருளே என்னும்
பிரமமே மா மயிலை பெற்றார் உற்றாரும்
தருமமே செய்வார் தழை.

80. தழைக்கும் நாள்எந்நாள்தன தருகில் என்னை
அழைக்கும் நாள் எந்நாள்ஐயாவே - பிழைக்கும் நாள்
அல்லல் வினையால் அலைவுறா மா மயிலை
சொல்லல் புனையால் துதி.

n Public domain. Digitization Muthulakshmi Research Academy

81. துதி அமரும் நெஞ்சத்தே தோன்றும் பிரமப்
பதிஅமர்ந்து துஞ்சலே பார்க்கக் - கதியமரும்
வஞ்சப் பிறப்பு அறுக்கும் மா மயிலை அண்ணல் அருள்
கஞ்சப் பதத்தைக் கருது.

82. கருதி ஒரு வழியில் கண்டு தரிசிக்கச்
சரியை கிரியா யோகம் சாற்றும் - சுருதி
முடிவாகும் ஞான முதிரும் மயிலைக்கே
குடியாகும் மோன நிலை கூறு.

83. மோன நிலை கூறும் மும்மலமும் தானகலக்
கியான நிலை தேறும் கேவலமே - வானநிலை
தானான தற்பரனார் சண்முகனார் மா மயிலைத்
தேனான அற்புதத்தைத் தேர்.

84. தேர்ந்து தெளி நெஞ்சில் திருவேரகத்து உள்உறை
நேர்ந்த கதிர்வேலவனை நேசிக்கச் - சார்ந்து இலகு
வள்ளி மணவாளன் எனும் மா மயிலைக் கோன் என்றேன்
உள்ள மணவாளன் என ஓது.

85. ஓது நால்வேத முகந்த திருவாசகமும்
நீதிநூல் யாதுமே நிஷ்டை எனப் - பாதம் அதைப்
போதுறவே சேர்க்கும் போதகனே மா மயிலை
கோது அறவே போக்கும் குரு.

86. குருவே அருகு இருக்கக் குன்றாது எந்நாளும்
வருமே பெருவாழ் மயிலைத் - திருவாகி
வாராய் வழி அருளாய் மா வினையைப் போக்கி நீ
காராய் விழி அருளால் கண்டு.

87. கண்டு உணர நெஞ்சம் கலங்காமல் முன்னமே
பண்டு உணரத் துஞ்சும் பழம்பொருளே - கொண்டு உணரத்
தேன் பொழியும் மா மயிலைத் தேவனை எந்நாளும்
தான் பொழியும் நாவின் இடம்தான்.

88. நாவிடம் தானே நல்லோர் புல்லோர் அறியாப்
பாவியிடம் திரியும் பாவிதனைத் - தாவியே

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

தன் அடியரோடும் தழைக்கச் செயும் மயிலை
நின் அடியர் ஆடுவது நீ.

89. நீயே தாய் தந்தை நியதி குருவேத அமரர்
நாயேதும் யான்எனவே நாடுவனால் - நீயாகும்
தன் மகிமை உன் மகிமை தானாகும் மா மயிலை
இன் மகிமை நன் மகிமை - ஈது.

90. ஈதறியாப் பேதை இனிமை சுகம் துன்பத்
தீது அறியாச் செல்வச் சிறப்பு அறியாது - ஏதம்அறக்
குன்றாத மா மயிலைக் கோன் அருளாலே மனது
நன்றாகவே செயலை நாடு.

91. நாடும்படி அமுதே நன் நெஞ்சகம் உள்
தேடும்படி அமுதே தேவாரம் - பாடும்
திருவாசக முறையும் தேறா மயிலை
மருவாசகம் உறையும் வாய்.

92. வாயாரப் போற்றி மகிழ்ந்தே பத மலரைச்
சேயாரத் தூற்றித் தியானித்தே - நோயாரப்
பத்திமிகவே புரியாப் பாதகனே மாமயிலைச்
சத்திமிகவே பெருகத் தா.

93. பெருகத் தருகும் பிரணவமே மேலா
உருகத் தருவானும் ஓங்கிப் - பருகத்
திருத்தோளன் மா மயிலைத் தெய்வானை பங்கன்
இருத் தோளனாம் கழலை ஏற்று.

94. ஏற்றும் திருமயிலை ஈசன் அருளே பெருகப்
போற்றும் அருவினையும் புந்தி துயர் - மாற்றவரும்
தேவர் சிறை மீட்டச் சின் மயானந்த மதி
மூவர் முறை கேட்ட முன்.

95. கேட்டு மகிழ்முன்னே கெடுதிஉறா என்உளே
நாட்டும் புகழ்ஆதி நன்மலரால் - சூட்டும்
சுயரூப சுந்தரனே தோன்ற வரும் தேவே
மயில்ஊரு அந்தரனே வாழ்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

96. வாழ்வே முருகேச வள்ளி தெய்வானை மகிழ்
வாழ்வே மரு ஈச மா மனதின் - வாழ்வே
திரு கேதும் இல்லாத் திருமயிலை ஈசன்
உரு வேதும் இல்லான் உகந்து.

97. உகந்து இருக்குரு முள்ளில் உருவு படவே நீ
மகிழ்ந்து இருக்கும் வள்ளி மணாளன் - புகழ்ந்திருக்கும்
தெங்கு வளர் மா மயிலம் தேவர் சேனாபதியாம்
இங்கு வளர் மா மயிலும் இங்கு.

98. இங்கு வளர் மாமயில் எங்கு நிறை அங்கங்கும்
தங்கி வளர் மா மயிலன்தான் என் - பங்கில் வளர்
செங்கமல மா மயிலைச் சீதை மகிழ் மால் மருகன்
அங்கமல மா மயிலை ஆதி.

99. ஆதி பெரும் முச்சுடரே ஆகும் அவரேநல்
நீதி தருமச் சுடரும் நீள்நிலமே - சோதிஉரு
வானவரும் ஞானகுரு ஆனவரும் மா மயிலைத்
தானவரும் வானவரும் தான்.

100. வானவரும் தானவரும் மா இருடியானவரும்
ஞானவரும் வள்ளி தெய்வ நாயகியும் - மானவரும்
கார் வளரும் மா மயிலைக் கண்டு பணிவோர்க்கே
சீர் வளர் எந்நாளும் திரு.

திருமயிலையந்தாதி முற்றும்
திருச்சிற்றம்பலம்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

திருச்சிற்றம்பலம்

திரு மயிலைச் சந்நிதி முறை ஆயிரப்பாவில் பன்னிரண்டாவது

மயிலாசல சதகம்

விநாயகர் காப்பு

1. முத்திக்கு வித்தாக மூலமுதல் ஓர்எழுத்தாய்
சத்தி சிவமயமே தானாகப் பெற்றுஇலகும்
தந்தி முகத்து ஐந்துகரன் தம்பி மயிலோன் சதக
முந்தி என்ற நாவின் மொழி.

தேவர்கள்துதி

2. இடும்பன் நவ வீரரும் இந்த்ராதியரைப் போற்றிக்
கடம்பன் மேல் பாமாலைக் கட்டித் - திடம்படவே
சாற்றும் திருத் தொண்டர் தன் அடியர் நாயைக் காப்
பாற்றும் கரை சேர் பதி.

பிரபஞ்ச துதி

3. மயிலாசல சதக மன்னே மகிழும்
செயலாம் இது எனவே செப்ப அயிலான்
அருள்இலகு எங்கும் செல்வன் ஆயுள் ஒரு நூறும்
பொருள்இலகு எங்கெங்கும் புகழ்.

நூல்

கலிவிருத்தம்

1. திங்கள் சடை மறையோன் அருள் தேவர்க்கு எலாம் சேனாதிபன்
கங்கைச் சுதன் கருணாகரன் கந்தன் கணபதி சோதரன்
தங்கத் தணி முருசேனார் தனையர்க்கு இருவினை தீர்ப்பவன்
மங்கைத் திருத்தோளன் புகன் மயிலாசலா மயிலாசலா.

2. சிந்தித்த பேர்க்கு அருள் நல்கிடும் தெய்வச்சிகா வல சண்முகன்
நிந்தித்த பேர்க்கு இருளாகி நல்நினைவு எய்திடா மோகாந்தகன்
அந்திப் பகல் எந்நேரமும் மாறக் கரந்தனை ஓதுமுன்
வந்திப் பவம்தனை நீக்குவன் மயிலாசலா மயிலாசலா.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

3. எள்ளத்தனை உனை நம்பியான் என்னுக்குளே பண்ணித் தொழா
உள்ளத்தனை வினை ஆனதோ உற்றார் துணை பெற்றாரும் நீ
கள்ளத்தனம் செய்யாமலே கருணைத் தரும் கருணாகரா
வள்ளிக்கு இசைந்த அழகான நல் மயிலாசலா மயிலாசலா.

4. எந்நேரமும் பவ சாகரத் துளந்நோடி கற்புரி போகமும்
சொன்னால் அதுங் கேளாமலே தோர்வைச் செயும் தூதாக வந்து
ஒன்னார் எனும் சின்னங்களாய் உள்ளம் புகுந்து உருமாறிடா
மன்னா வினையேன் முன்வாராய் மயிலாசலா மயிலாசலா.

5. தீதாக முன் செய்த வினை தேகங்களாய் உருவாகி நேர்
வாதாக மண் பொன்னோடு பெண் மயாமயம் தனை எய்தினேன்
கோதாகி இம் மூவாசையும் கொண்டு களி கூறாது அருள்
மாதாவும் என் தாதாவும் நீ மயிலாசலா மயிலாசலா.

6. கனிவாய் வரும் தீதானதும் காணாமலும் தோன்றாமலே
அனியாயமே மனதே படும் அவதிக்கெலாம் வகை ஏதுரை
இனியாகிலும் தயையாகி வந்திடர்அற்று மேல் இன்பந்தராய்
வன மாதுடன் மணமே புரி மயிலாசலா மயிலாசலா.

7. நன்றுக்கு நீ தீதுக்கு நீ நாளைக்கு நீ வேளைக்கு நீ
இன்றைக்கு நீ அன்றைக்கு நீ என்றைக்கு நீ வென்றிக்கு நீ
குன்றுக்குளே நின்றாடு நீ கோபிக்குளே வாதிக்கு நீ
மன்றுக்குளே தொண்டர்க்கு நீ மயிலாசலா மயிலாசலா.

8. பத்தர்க்கு மேல் பணியாகினாய்ப் பாவிக்கு மேல் தீதாகினாய்ச்
சுத்தர்க்கு மேல் சுசியாகினாய் சொல்லுக்கு மேல் பொருளாகினாய்ச்
சித்தர்க்கு மேல் சித்தாகினாய்த் தேவர்க்கு மேல் தேவாகினாய்
மத்தர்க்கு மேல் மத்தாகினாய் மயிலாசலா மயிலாசலா.

9. தியாகம்தனை வருவோர்க்கு எலாம் சிந்தித்து உளந் தாராமலே
நியாயம்தனை வாதித்து இடர் யான் சொல்லி காலம் தள்ளிஇக்
காயம்தனை நிசம் என்று இனங் காமச் சமுத்திரம் மூழ்கினேன்
மாயம்தனை என் சொல்குவேன் மயிலாசலா மயிலாசலா.

10. பூமிக்குளே சென்மித்த நாள் புல்லோர்தனை நேசித்ததும்
காமிக்குளே காமப் பயல் கற்றோர் வழி நிற்காதவன்
சாமிக்கு நீ சாமித் தனம் தானாகியது அறிவே சொலாய்
மாமிக்குள் செந்திருவே மகிழ் மயிலாசலா மயிலாசலா.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

11. மூலாதராய் உன் நேரில் யான் மொழியில் பதம் தொழவே அருள்
பாலாக இக்கவிதைக் கொளே பரமோ பொறுத்து எனை ஆளவே
கோலாகலமாகச் சமர் கொண்டே பகைசூர் வென்று உடன்
மாலான தெய்வானைப் பதி மயிலாசலா மயிலாசலா.

12. முருகேசனே திருதேது காண் முந்திந் தவம் சிந்தித்த பேர்க்கு
இருளேது முன் வாராத பேரின்பம்தருங் கிர்பாகரா
அருகேஇனி வாராய் எனதுஅங்கம் புளகிதம் கொள்ளவே
மருநீப மாமணி மார்பனே மயிலாசலா மயிலாசலா.

13. உளனாகியும் உயிராகியம் உயிருக்குளே உயிராகியும்
யானாகியும் தானாகியும் அவனிக்குள் பற்பலவாகியம்
கோனாகியும் நானாவிதம் கோலங்களே ஞாலங்களாய்
வானாகியும் தேனாகினாய் மயிலாசலா மயிலாசலா.

14. கந்தா கதிர்வேலாயுதா கருணைக்கு ஒரு முகில்ஆகினாய்
சிந்தா குலம் தீரும்படி செவியில் பொழியும் உபதேசிகா
வந்தா தரித்து எனை ஆட்கொள வாராவிடின் மற்றோர் யார்
மந்தாகினி மைந்தா எழில் மயிலாசலா மயிலாசலா.

15. தருணத்தில் வந்துஉதவாததா மதம் ஏது தானது தேறிலேன்
அருணைப் பதிதனை மேவிய அருணைக்கிரிகண் காண நீ
கருணைத் தரும் கருணாகரா கந்தா கதிர் வடிவேலவா
மரணப் பவம்தனை நீக்குவாய் மயிலாசலா மயிலாசலா.

16. மானார் விழி வள்ளிக்கு நீ மணவாளனே உனது ஆசையால்
தேனார் மொழி புலவோர் சொலாய் செப்பாமலே ஒப்பாச் சொலும்
நானார் பழி நீ என்று தானானே சொலும் ஞாயங்களோ
வானோர் தொழும் பதசேகரா மயிலாசலா மயிலாசலா.

17. கன்னல்மதன் எந்நேரமும் காமக்கணை வந்து எய்கிறான்
சின்னத் தனம் செய்யாமலே செம்பொற் பதம் தந்து ஆள்வையோ
என்னத்தை யான் சொல்வேன் இனி என் பாவமே மேலாகுமோ
மன்னித்து நீ வரல் வேண்டுமோ மயிலாசலா மயிலாசலா.

18. உள்ளத்தை யான் சொன்னேன் இதை உற்றோர்அகும் கற்றோர்அகும்
கொள்ளக் கடன் பிள்ளைக்கவி கூசா மனன்நேசங்களோடு
எள்ளத்தனை விசுவாசரா என்பேரில் அன்பே கத்தராய்
வள்ளிக்கு இசைந்த அழகேசனே மயிலாசலா மயிலாசலா.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

19. தீதான எம் பிணியானதே சிறுவன் தனை நலி செய்ததேன்
நீதான் ஒருவகை தேடவும் நெறியில்லையோ முறையோஇது
மாதா பிதா குரு தேவதா மைந்தோன் உனை நம்பும்பதா
வாதாகுதே சூதேது தான் மயிலாசலா மயில்லாசலா.

20. உலகுக்கெலாம் ஒரு கர்த்தனே உணரும்படி உள்ளத்திலே
மலமற்ற மெய்ஞ்ஞானிக்குஎலாம் வடிவற்ற நிர்மல சோதியே
பலருக்கெலாம் பரதேவதா பரமா சரஅசரமே மன
வலிமைக்கெலாம் பல முத்தனே மயிலாசலா மயிலாசலா.

21. தனிவேலவா முனியாமனின் தயையே புரிமயலே ஒழி
இனி யார் எனக்குரியார் துணை ஈசா உனை விட வேறில்லை
கனிவாக நீ எனை கூவி என் காதார நல் உபதேசம் ஓர்
மனதாக வந்து இனிதாய் உரை மயிலாசலா மயிலாசலா.

22. சூரன் படை ஆளும்படி சுரரே முனிமுதலோர் துயர்
தீரும்படி நவவீரரும் தேர் ஏறியே சேநாதிபன்
காரும்படி வேலே விடும் கருணாகரா கடையேன் முன்
வாரும்படி முருகேசனே மயிலாசலா மயிலாசலா.

23. அன்னைப் பிதா சுற்றங்களோடு எனை ஓர் துணை மனை மக்களார்
என்னைப் பிடித்தது பந்தமா இன்புற்றதே மாயா வலை
முன் எப்படி செய் தீவினை முறையோ அதை அறியேன் இதை
மன்னிப்பது என் அப்பனே மயிலாசலா மயிலாசலா.

24. ஆதித்தன்அம் புலிசேய் புதன் நவனோடு மந்திரி சுக்கிரன்
வாதச் சனி ரெண்டோடுஅரா மாறா நவக்கோள் சக்கரம்
சாதித்த புண்ணியமோ இது சதுர் மாமுகன் விதியோஅது
வாதிக்க நன்னெறி இல்லையோ மயிலாசலா மயிலாசலா.

25. காலைத் தரும் கருணாகரா கந்தா முனம் வந்தே அருள்
பாலைத் தரும் வேலைத் திரு பாணிக் கொளும் பரமேசுரி
வாலைத் தரும் குமரேசுரா மாதே குர வள்ளிக்குநீ
மாலைத் தருமிகு மோகனா மயிலாசலா மயிலாசலா.

26. ஐயா திரிபுரமே பொடி ஆகும்படி செய்யும் தனித்து
உய்யா பரஞ்சோதிச் சுடர் சுதனே அறுமுகனே குகா
மெய்யா விணைப் பொடி செய்யும் நீ வேல் ஏவி என்பாலே வராய்
வையாபுரித் தலைவாசனே மயிலாசலா மயிலாசலா.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

27. செயா திருச்செந்தூரினும் திருஆவினன் குடி வாசமே
ஓயா திருப்பரங்குன்றமே உறையும் பழமுதிர்ச்சோலையும்
தூயா பரம் திருஏரகம் சொலிக்கின்ற நற் குன்றாடலே
மாயூர வாகனம் ஏறிவா மயிலாசலா மயிலாசலா.

28. அள்ளித் திருநீறே தரித்து அரனார் செவிக்கு இனிதாய்உற
மெள்ளத் தரும் உபதேசிகா வினையேனை நீ வேண்டிச் செவி
கொள்ளத் தரும் பிள்ளைக்கு அருள் குருவேதிரு சராணாகதி
வள்ளித் தருமிகு மோகனா மயிலாசலா மயிலாசலா.

29. எங்கும் பல உயிருக்குளலாம் எள்ளுக்கு எண்ணெய் போலவே
தங்கும் பராபரமேசுரா சகலப் பிரபஞ்சக ரட்சகா
பொங்கும் கடல் துயிலோன் அரி புகழோன் திரு மருகா குகா
மங்கும் கருத்து உள்ளம் புகா மயிலாசலா மயிலாசலா.

30. புரமே பொடி செய்யும் தயை புண்ணியன் தரும் சிவ சண்முகா
பரமே குரு அமரர்கதி பதிராசனே பகை சூரர் தன்
சிரமே துணிபட வேல்விடும் தீராதி தீர்க்கத்தனே
வரமே தரும் திருகேது காண் மயிலாசலா மயிலர்சலா.

31. ஆற்றாமையால் அறியாமையாம் ஆகாமையால் போகாமையாம்
போற்றாமையால் புகழாமையாம் போதாமையால் தீதாமையாம்
நீற்றாமையால் நினையாமையாம் நில்லாமையால் சொல்லாமையாம்
மாற்றாமையால் மறவாமையா மயிலாசலா மயிலாசலா.

32. கதிர் வேலவா கருணாகரா கந்தா குகா வந்து ஏகுவாய்
சதுர் மாமுகன் பொருள் ஓதவாய் தரியாததால் சிறை வைத்தவா
எதிரான சூர்ப்பகை வென்றவா ஏழைக்கு அருள் தர வேண்டுவாய்
மதிமாமுக மயில் ஊர்பவா மயிலாசலா மயிலாசலா.

33. வாதிக்குதே பிணி வந்து தன் வல்லாண்மையை முன் காணவும்
போதித்து உடல்உயிரோடு உறும் பொருளுக்குளே மருள்ற்றனாய்
பேதிக்குதே வேறாய் மனம் பேதைக்கு நீ சூதுச்செயா
வாதிப்பிலா வரல் வேண்டுமோ மயிலாசலா மயிலாசலா.

34. நீபம் புனைந்த அருளேசனார் நீலக் கலாபியில் ஊர்தியே
சாபம் கொளா நாயேன் பிணி சம்சார சங்கடம் நீக்கிடக்
கோபம் கொளாப் பாவம்தனை கொய்துத் தராய் ஐயன் கழல்
மாபங்கனே வள்ளிக்கு நீ மயிலாசலா மயிலாசலா.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

35. அன்னம் விகாரமும் வைத்தனை இது போதாது என்ற அரிவைத்தனை
பன்னும் விகாமும் வைத்தனை பத்தாமலே பொன் வைத்தனை
இன்னம் விகாரமும் எத்தனை என்நெஞ்சமே உள்ளூற்றனை
மன்னும் சடாக்கர அத்தனை மயிலாசலா மயிலாசலா.

36. மலமற்ற மெய்ஞ்ஞானிக்குளே வந்தே புகுந்து ஒளி மேவிசஞ்
சலமற்று இருப்பது வாசமே சண்டாளர்அஞ் ஞானிக்கு எலாம்
அலமுற்று சஞ்சலம் உற்றுஇருள் மருள்உற்றுடும் வினை அற்றுகே
வலமுற்று நல்லருள் உற்றனோ மயிலாசலா மயிலாசலா.

37. நல்லோர்களோடு உறவாகி மெய்ஞ்ஞானத்தனாய்க் யானம் படச்
செல்லாது உளம் நில்லாமை சஞ்சிதம் மேவி தாமதமே செயுங்
கல்லாததே யானே எனும் கற்றோர் வழி நிற்கேன் மனம்
வல்லோர்களே சொல்லார்களோ மயிலாசலா மயிலாசலா.

38. சொல்லும் குறை வெல்லும்படி சொல்லும் திறம் சொல்லும் குகா
சொல்லும் பவம் சொல்லும் வினை சொல்லும் தினை சொல்லும் எனை
அல்லும் பகல் தொடரா மல்நல் அருள்ளுற்று புல்லிருள் அற்றிடாய்
மல்லும் புரி பகை அற்றவா மயிலாசலா மயிலாசலா.

39. என்அப்பனே கந்தப்பனே என் சொல்லுவேன் குறைதீரமுன்
சொன்னப்படி சொல்லும்கிளி சொல்லானது என் சொல்லானதே
பன்னிப் படிப்பில்லாததே பயன்ஏது யான்அறியாது தான்
மன்னிப்பது மயில் வாகனா மயிலாசலா மயிலாசலா.

40. இப்போது உடல் பொருள்ஆவிகள் எல்லாம் தனது என்றே செயல்
முப்போது இருந்தாலே மயம் முந்தும் பல பிரிவுள் செயும்
அப்போது நீ பல தேவதா ஆகும் செயல் போகின்றதால்
மப்பேறிய செனனங்களோ மயிலாசலா மயிலாசலா.

41. குறப்பெண்ணையே மணம் செய்யுந்நீ குன்று ஊடுருவேல் எய்யும் நீ
மறப்பேதுகாண் வையற்றுள்நீ மனுநீதி கண்மறை ஆகும் நீ
பிறப்பேது இறப்புஏதுக்குஇனி பிள்ளைக்கு முன்பின்னுக்கு நீ
மறப்பேது இலான் வரல் வேண்டுமோ மயிலாசலா மயிலாசலா.

42. அயிலே மறந்து இருளே புரிந்து அருளே துறந்து அசடாகிநின்
செயலே அறிந்து அகமே உறும் செய்கைக் கொளா செனனங்களால்
மயலே புகுந்து உடல் ஆவியை மருவும் பொருள் மாய்கின்றது ஏன்
வயலூரனே மயூரவா மயிலாசலா மயிலாசலா.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

43. நாயேன் சொலும் விண்ணப்பமே நல்புத்தியும் நல்செய்கையும்
சேயேன் தனக்கு அருளாமலே செய்யும் வகை ஈதென்ன காண்
பேயோன் செயும் வினையோ மிகு பெரிது ஆகினும் அரிதல்ல தான்
மாயோன் திரு மருகா குகா மயிலாசலா மயிலாசலா.

44. கந்தா குகா எந்தைச் சுதா கருணாகரா கதிர் வேலவா
எந்தாய் பிதா குருதேவதா இன்பம் தராய் மனை சுற்றமோடு
அந்தோ வியைஅவையாவனே அன்றோ அறியா நெஞ்சமே
வந்துஆதரி அருள்தூயனே மயிலாசலா மயிலாசலா.

45. இம்மாத்திரம் போதாததோ எம் பாவமே மேலானதோ
சும்மாய்த் திரிந்து இந்நாள் வரை சோம்புற்றதும் போதாததோ
எம்மாத்திரம் நாயேன் மனதுஇடருற்றதும் போதாததோ
வம்பாய்த் திரிந்து உழலாமல்ஆள் மயிலாசலா மயிலாசலா.

46. பேசாது இருமனமே இனி பேசா தொழில் பொருளே வரும்
கூசாது மந்திரம் ஓதவே குமரன் குருபரன் நாடியே
ஆசான் திரு வேடம் புனைந்த அருள் ஈகுவான் அடியாருளே
வாசா மருமலர் வாசனே மயிலாசலா மயிலாசலா.

47. தன்னம் தனி முருகேசனார் சகலப் பிரபஞ்சக நாதனார்
பன்னும் தமிழ் நக்கீரனார் பாடல் இசைந்து எதிர் ஏகினார்
மின்னும் சிகிமீது ஏறினார் மின்னிட்டில் பூவலம் ஆகினார்
மன்னும் புகழ் பிரதாபனார் மயிலாசலா மயிலாசலா.

48. எதிராய் வரும் பகை யாவையும் எல்லாம் தனது என்றே மறை
சதுராய் வரும் தெளியேன் செயல் தள்ளாத அனுபோகம் விடாக்
கதிராய் வரும் வேலன் வினை கசடே வரா வசமே செயின்
மதியால் வரும் விதி வெல்குவன் மயிலாசலா மயிலாசலா.

49. நாராயணன் பல மந்திரம் நண்ணும் நமசிவாயங்களும்
பாரரயணம் பலகாலமும் பன்னும் இரண்டாமக் கரம்
கூராய் இராமமந்திரம் கூறும் பலன் யாவும் தரும்
வாராய் சடாக் கரமெ பலம் மயிலாசலா மயிலாசலா.

50. அரையாகி மேல் நிரையாகும் நீ ஆடாகியே மாடாகியும்
விரையாகி மேல் தரையாகும் நீ வீடாகியே நாடாகி மேல்
உரையாகி மேல் துரையாகும் நீ சொல்லாகி மேல் பலவாகியே
வரையாகி மேல் வருவாய் இனி மயிலாசலா மயிலாசலா.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

51. பொழுதே வரும் பொழுதே புகும் பொழுதே இராபொழுதே பகல்
இழிவே வரும் தொழுவே புகும் இன்பம் தரும் துன்பம் புகும்
அழிவே வரும் பழியே புகும் அவை எய்திடாத் தகவே புரி
வழியே வரும் மனதே புகும் மயிலாசலா மயிலாசலா.

52. காலம்தனை கடக்கும் பொருள் காலர்க்கு எலாம் காலப்பொருள்
ஆலம்தனை உண்டோன் பொருள் அமரர்க்கு இடர் நீக்கும் பொருள்
சாலம்தனை செய்யும் பொருள் சாயுச்சமே தருகும்பொருள்
மாலின்திரு மருகப்பொருள் மயிலாசலா மயிலாசலா.

53. முனியல்முறை தெரியாமலே மூடர்க்கு எலாம் மூடத் தனாய்
பனி நம்பிஏர் பூட்டும் கதை பாலிப்பு போல் உடன் நம்பியே
கனிவுக்கு நாள் வெகுவாய் பலக்கருத்து ஏகியென் உருத் தேய்ந்தனன்
மனிதர்க்கு எலாம் வர துங்கனே மயிலாசலா மயிலாசலா.

54. அருணைக்கிரி நாதர்க்கு முன் அருளாய் வடிவேல் ஏந்திமுன்
கருணைக்கு ஒரு மயிலேறி முன் கடாத்த பன்னிரு பாணிமுன்
தருணத்தில் நக்கீரற்கு முன் சாற்றும் பொயா புலவர்க்குமுன்
வருணத்தில் சீர் கருணற்கு முன் மயிலாசலா மயிலாசலா.

55. மெய்யர்க்கு எலாம் மிகு மெய்யும் நீ மேலுக்கு எலாம் மிகுமேலும் நீ
பொய்யர்க்கு எலாம் மிகு பொய்யும் நீ பொறுமைக்கு எலாம் பொறுமை நீ
துய்யர்க்கு எலாம் மிகு துய்ய நீ சோதிக்கெலாம் மிகு சோதி நீ
மையர்க்கு எலாம் மிகு மையனே மயிலாசலா மயிலாசலா.

56. மிகு போகமும் மிகு காமமும் மிகு போசனம் மிகு நித்திரை
மிகு தாபமும் மிகு வாதமும் மிகு பித்தமும் மிகு சேத்துமம்
மிகு கோபமும் மிகு சோபமும் மிகு செல்வமும் மிகு பாவமே
வகை மோசமும் மிகு நாசமோ மயிலாசலா மயிலாசலா.

57. மிகு தானமும் மிகுதியானமும் மிகுஞாயமும் மிகு தூய்மையும்
மிகுஞானமும் மிகு சத்தியம் மிகு பத்தியும் மிகு புத்தியும்
மிகு மோனமும் மிகு பூசையும் மிகு கல்வியும் மிகு புண்ணியனே
வகையானதும் மிகு மோட்சமோ மயிலாசலா மயிலாசலா.

58. குற்றம்குறை தான்ஆனதுஆர் கோழிக் கொடி கரம்ஆனதுஆர்
முற்றும்திருத் தொண்டுஆனதுஆர் மூலப் பிரணவம்ஆனதுஆர்
கற்றும் கவிப் பொருள்ஆனதுஆர் கல்லான் இடஞ் சொல்ஆனதுஆர்
மற்றும் புவிப் பொருள்ஆனதுஆர் மயிலாசலா மயிலாசலா.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

59. சேயன் படேன் பெருந்தீது எலாம் செப்பும் கவித் திரமோ சொலாய்
சேயன் சுகாதீதா அறி சிந்தித்து உளம் வாடாமலே
பேயன் தனை வந்துஆதரி பித்தே பிடித்து உளறேன் புவி
மாயன் திருமருகா குகா மயிலாசலா மயிலாசலா.

60. தீஞ்சொல் புரி காகங்களும் சேர்ந்தே ஒரு கோடித்திரள்
தான் வல்ல தாய் ஒரு கல்முனே தான் நிற்குமோ சாமி சொலா
யான் செய்வினை அதுபோல ஆங்காகும்செயல் போகும்படி
வாஞ்சை புரிந்து ஆளக் கடன் மயிலாசலா மயிலாசலா.

61. என் நேரமும் துயரங்களால் ஏகும் வினைபோகும்படி
சொன்னேன்கவித்ததிறம்இல்லனேன்சொல்லத்துணிந்தோர்போல்யான்
பன்னேன் அருள் கொள்ளேன் அரும் பாவிக்கெலாம் மிகு பாவனோ
மன்னே திருப் போரூர் உறை மயிலாசலா மயிலாசலா.

62. என் நெஞ்சமே நீயே இருந்து எண்ணங்களை ஈடேற்றுதல்
தன்னம் தனிவிட்டே மனன் தளரச் செயா மகிழே மிகச்
சின்னம் செயும் பவ நீக்கி ஆள் தேவச் சேனாதிபதி கர்த்தனே
மன்னும் சடாக்கர மூலமோ மயிலாசலா மயிலாசலா.

63. மோடிச் செயும் விதம் ஏதுதான் மூலப்பொருள் ஓதாமையோ
தேடித் திரிந்து உழலா வணம் சீதக் கழல் முடிமேலிடும்
பாடித் திரிந்து அருளே பெறாப் பாவிக்கு நீ வரல் வேண்டுமோ
வாடித் திரிந்து உள்ளேன் மகிழ் மயிலாசலா மயிலாசலா.

64. வீணாகவே வாழ்நாட்களும் விழலுக்கு இரைத்திடு பாவமாம்
தோணாமலே செய்யும் பவம் தொலையா மனநிலை எய்திடேன்
காணாமலே முக சுந்தரா கண்டு களி கூறாமனின்
மாணாகனே பேணித் தொழேன் மயிலாசலா மயிலாசலா.

65. சிவனுக்கு அருள் பாலித்தவா தேவர்க்கு எலாம் சேனாதிபா
கவனிப்பு இலாச் சூரன் மகா காலர்க்கு எலாம் வேலாயுதா
அவனிப் புகழ்மிகு சுந்தரா ஆலிக்க நல்வரம் ஈகுவாய்
மவுனத்து உரை மயில் வாகனா மயிலாசலா மயிலாசலா.

66. நகையே புரிந்திடும் மாதரை நான் நம்பி வீணாள் ஏகினேன்
பகையானது இவ்வுலகுக்குளலாம் பாசத்தையே நேசித்துயான்
திகையேன் இனி புகையானதே தீராத தீவினையாய் வரும்
வகைஏது தான் தகவே புரி மயிலாசலா மயிலாசலா.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

67. முருகன் தனி வேலன் குகன் மூலப் பிரணவ தேவதே
குரவன் குறுமுனி தீவினை கொன்றாய் அருள்தந்து ஏகவே
வருவன் சரவணப் பொய்கையோன் வந்தே விளையாடும்சுதா
மருகன்திரு மாதுக்குநீ மயிலாசலா மயிலாசலா.

68. ஓயாமலே எந்நேரங்களே உள்ளே அலைந்து உழல்கின்ற தால்
தீயாக வெந்து உடலே பொருள் சீவன்களே கருகும்படி
யேயாய்த்திரிந்து இந்நாள்சுகம் பெண்ணே இலான் மண்ணே இலான்
மாயா மயப் பொன்னே இலான் மயிலாசலா மயிலாசலா.

69. ஆசைக்கு ஒருஅளவில்லையே அகிலங்களை ஆண்டேவரின்
நேசிப்பு நாள் அற்றதோ நினைவு எய்திடாக் கூறுஅற்றதோ
பாசத்தினால் பல மாயை பற்பல சிந்தையாய் அலைவுற்றிடா
ஆசைத் தவிர்த்து எனை ஆளுவாய் மயிலாசலா மயிலாசலா.

70. தன்னம் தனி முருகேசனார் சகலப் பிரபஞ்சக ரட்சகனார்
முன்னம் பசு பதி மூலனார் மூவர்க்கு முன் பிரத்தியட்சனார்
என்நெஞ்சு உளே நின்றுஓதினார் எங்கும் பல உயிராகினார்
மன்னும் குரமாது ஏகினார் மயிலாசலா மயிலாசலா.

71. அல்லும் பகல் ஓயாமலே அனைவர்க்கு நல் உபகாரனாய்
வெல்லும் பல மந்திரங்களாய் மிகு தந்திர உபாயங்களே
சொல்லும் புரிந்திடும் மாயமே தோன்றா வெளிமயமே மனம்
மல்லும் பகையில்லாமையாள் மயிலாசலா மயிலாசலா.

72. அரவம் புலித்தோலோன் அருள் ஐயா அறுமுக ரூபமே
வருகும்படி குரு ரூபமே வந்துஆதரி சிந்தித்து உள்நின்று
உருகும்படி செய்வண்ணம் என் உள்ளத்து உறை குறை தீரவே
மருவும் குறமாதே மகிழ் மயிலாசலா மயிலாசலா.

73. நான்செய் திருவினை ஆனதே நன்றாய்த் திரண்டு உருண்டேகமா
ஊன்செய்து உயிர் பொருளாக மூன்று உண்டாயதின் மோகத்தனா
மான்வெய்யில் நீரென்று ஓடிதான் வாய்விட்டு அழும்ஆறு ஆகினேன்
வான்பெய்யும் நல் வயலூரனே மயிலாசலா மயிலாசலா.

74. என்னக் குறிப்பறியேன்ஐயா எந்தைச் சுதா சிந்தைக்குளே
பன்னித் தோழா பாலர்க்கு இடர் பாரங்களே நேரங்களாய்
முன்னச் சுமை பின்னச் சுமை முடியில் சுமை மிண்டுஏற்றினாய்
அன்னக் கலாபியில் ஊர்தியே மயிலாசலா மயிலாசலா.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

75. முக்காலமும் பூசித்து உளே முளரிச் சரண் மலரைத் தொழாது
எக்காலமும் செனனங்களால் இடருற்றதும் போதாததோ
இக்காலமும் பிணிமூன்றுளே ஏங்கிக் கிடந்து உழல்கின்றனேன்
மைக்கால் விழி வள்ளிப் பதி மயிலாசலா மயிலாசலா.

76. மோகம் தொடர்ந்து உள்ளேஹறிடா மோகம் புரிந்திடும் மாதர்உண்
மேகம் படர்பாவங்களா மீறிப் பவ மேகம் புகுந்து
தேகம் படிந்து இடருற்ற நோய்த் தீதே பொழிவது மாரியாய்
வாகும் புனைந்து ஆளும் குகா மயிலாசலா மயிலாசலா.

77. செய்யும் பலபாவங்களும் சிந்தாமலே அந்தோ இதோ
கையாய் இரு காலாய் இரு கண்ணாய் இரு நன்றாயதே
மெய்யாய் மனப் பொய்யாய் முலை மின்னாகி மேல் பொன்னாடை கண்
மையா மயல் உய்யாமல்ஆள் மயிலாசலா மயிலாசலா.

78. அன்னங்களால் அறிஞோர்களாய் யாகங்களால் யோகங்களால்
தன்னம்தனி விரதங்களால் தானங்களால் மோனங்களால்
மின்னும் புரிவன ஏகலான் மீறும் பலன் தேறும்பலன்
உன்னும் சடாக் கரம் மேலுதான்ம மயிலாசலா மயிலாசலா.

79. வேதங்களால் அறு சாத்திரம் விரியீர் நவ புராணங்களோ
ஓதும் பதினான்காம் இரண்டுஉறும்ஆகமம் எண்ணான்கதுஆம்
தீதன்று உபநிடதங்களே செயமா மறு பன்னால் கலை
வாதுக் கருவிகளாகும் நீ மயிலாசலா மயிலாசலா.

80. என் மேலினம் வாதேதுதா என்செய்குவேன் ஏழைச்செயல்
தன் மம்தயை தானில்லையோ சர்வஆல்ய ஆடம்பரா
கன்மம் களைந்து ஈடேற்றுமா கருணைக்கு ஒரு கடலாகு நீ
வன்மம் செயா நன்மைத் ததராய் மயிலாசலா மயிலாசலா.

81. ஈராறு பன்னிரு கோணமா இருபத்து ஏழுநாள் உற்றதா
நேராய் இருந்து ரவிச் சசி நில மைந்தன் மால் குரு சுக்கிரன்
தாராச நிராக் கேதுகள் தாரா பலன் சரண்அண்டினால்
வாராத தோவகை ஏதுகாண் மயிலாசலா மயிலாசலா.

82. தவம்ஏது தான் தனயன் செயும் தானங்களோடு அறம்ஏதுயான்
அவமாக வீணாள் சென்றனேன் அன்றிப் புகழ் ஒன்றே இலேன்
நவ கோள்களும் பன் ஒன்றிலே நாடும் பலன் தேடித் தராய்
வவி தான் இடர் தொடராமல்ஆள் மயிலாசலா மயிலாசலா.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

83. திருவேரகம் தன்னில் வளர் தேவா அறுமுகா சுந்தரா
குருவாக வந்து ஒருமூலமாக் கொடே அருள் ஒன்றே தராய்
இரு மாதினைமருவும் குகா இமையோர்மகிழ் கிருபாகரா
வரும் மாது துயர் மாற்றும் பரா மயிலாசலா மயிலாசலா.

84. பரமே திருப்பரம்குன்றமே பரைஅம்பிகைத் தரு குஞ்சுதா
குருவே குறுமுனி தேசிகா குமரா விளையாடும் பதா
திருகே தினம் பாலர்க்கு உபதேசம் தராய் நேசம் தராய்
வருவாய் இனி மிகு சுந்தரா மயிலாசலா மயிலாசலா.

85. திருஆவினன்குடி சேகரா திருத்தொண்டருல்லா சந்தராய்
கருவாய்ப் பிணி அதில் ஊறிடாக் கடையேனையும் காக்கின்றவா
பெருகாய் அருள்பேணித் தொழாப் பேதைக்கு நீ கருணாகரா
வருவாய் நிதம் வையாபுரி மயிலாசலா மயிலாசலா.

86. செந்தில் பதிவேலோன் தினம் சேவைத்தரும் பாதத்தனார்
முந்திப்பவம் நீக்கும்படி மூலத்தனார் கோலத்தனார்
சுந்தப்பனார் சொந்தப்பனார் காண்உம்பராய்த் தோன்றுஉம்பனார்
வந்தப்பனார் எந்தப்பனார் மயிலாசலா மயிலாசலா.

87. குன்றாடலே நின்றேபுரி கோழிக்கொடிவேல் எய்பவா
அன்றேக நி வேண்டிக் குவலையமே வலம் நிமிடத்திலே
சேன்றே மயில் மீதுற்று அருள்செய்ஏந்திவந்தை யாவும் நீ
மன்றேகமழ் நீபம் புனை மயிலாசலா மயிலாசலா.

88. சொல்லும் பழமுதிர்ச்சோலையும் துதி தொண்டர் தன் அகமே வளர்
அல்லும் பகல் எந்நேரமே அங்கும் வளர் இங்கும் வளர்
வெல்லும் புகழ் எங்கும் வளர் வேலே மயில் மீதே வளர்
மல்லும் பகைக்கு எல்லும் வளர் மயிலாசலா மயிலாசலா.

89. குறையேது இனி குருவாகியும் கோழிக்கொடி வேலாகும்நீ
அறமேது இனி அருளாகியே அன்பர்க்குளே நண்பாகும் நீ
உறவேது இனி சமராடியே உம்பர்க்குளலாம் தேவாகு நீ
மறைஏது நீ பொருளாகு நீ மயிலாசலா மயிலாசலா.

90. செய்யும் பவம் மேலுற்றதோ தீதுற்றுஅறம் கீழ்உற்றதோ
நைய்யும் துயர்மேலுற்றதோ நாடும் சுகம்கீழ் உற்றதோ
பொய்யும் புரை மேலுற்றதோ போதப் பொருள் கீழ்உற்றதோ
வையும் பதம் மேலுற்று நீ மயிலாசலா மயிலாசலா.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

91. தேடேன் அலோ அடியாரொடும் திரியேன் லோக விசிந்துகள்
பாடேனலோ முக்காலமும் பணியேனலோ நின் சீரையும்
சூடேனலோவாறக்கரம் சொல்லேனலோ என் நெஞ்சுளே
வாடேனலோ வினையேனலோ மயிலாசலா மயிலாசலா.

92. துயரற்ற மந்திரமே மிகும் தொகையற்ற மந்திர மந்தகன்
கயிரற்ற மந்திர மெய்யினில் கலியற்ற மந்திரம் ஏதினும்
செயிரற்ற மந்திர நெஞ்சுளே திகையற்ற மந்திர மாதர்கண்
மயலற்ற மந்திரம்ஆகுமோ மயிலாசலா மயிலாசலா.

93. பார் சொல்லுமே கவி சொல்லுமே பதி சொல்லுமே முனிவோர் முதல்
யார் சொல்லுமே நவகோள்நிறையவை சொல்லுமே மறை சொல்லுமே
பேர்சொல்லி நல்லோர் சொல்லுமே பேரின்பமே சிறியேன் யான்
வார் சொல்லவே துவமாவனோ மயிலாசலா மயிலாசலா.

94. துணிவே தரும் நீயே அலாற் சொல்லே தரும் நீயே அலாற்
பிணியே தரும் நீயேஅலாற் பிரிவே தரும் நீயே அலாற்
பணியே தரும் நீயே அலாற் பதமே தரும் நீயே அலான்
மணியே தரும் நீயேஅலால் மயிலாசலா மயிலாசலா.

95. இயலைத் தரும் நீ அல்லவோ இசையைத் தரும் நீயல்லவோ
பயலைத் தரும் நீயல்லவோ பசியைத் தரும் நீயல்லவோ
செயலைத் தரும் நீயல்லவோ சித மெய்த்தரும் நீயல்லவோ
மயிலைத் தரும் நீயல்லவோ மயிலாசலா மயிலாசலா.

96. செக மாயம் மொற்றுள எங்கணும் செந்துக்களே உயிர்ஆகமம்
சுகமாய் மனத் துயராய்ப் பெரும்சொல்லே அரும்பொருளாகலன்
இகமாய்ப் பரம்.ரெண்டானதே ஏழைச் சொலும் கவியோ பொருள்
வகையானதே நீயேஅலால் மயிலாசலா மயிலாசலா.

97. இனிஏது தான் ஏழைச் சொலேன் இடருற்று நோய் அடலே புரிந்து
அனியாமே சடலம் தனுள் அலையேன் அது நிலை தன்மமோ
பனியானதே பகலண்டினால் பாவங்கள் அவ்விதமாக ஓர்
மனதாக நீ தனதாய் அருள் மயிலாசலா மயிலாசலா.

98. எங்கும் திரிந்து உன்னாலயம் என்கால் வலம் வரவே அருள்
பொங்கும் திருவடியார் உணைப் போற்றும் புகழ்கேழ்க்கும் விழி
தங்கும் பதம்தனைத் தொழும் சார்பே நினை என் நெஞ்சமே
அங்கும் வர நல்கும்படி மயிலாசலா மயிலாசலா.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

99. கண்ணுக்குளே மயிலாசலா கருவுக்குளே மயிலாசலா
விண்ணுக்குளே மயிலாசலா விமலர்க்குளே மயிலாசலா
பண்ணுக்குளே மயிலாசலா பாடலுக்குளே மயிலாசலா
மண்ணுக்குளே மயிலாசலா மயிலாசலா மயிலாசலா.

100. தினமே திரு மயிலேசனைத் தியானித்து ஒரு நூறும் புகழ்
கனமே தரும் வாசிப்பவர் கண்டே பயன் விண்டே சொலார்
முனமே வரும் வேல்ஏந்தியே மூலங்கண் மெய்ஞ்ஞானக் கடன்
மனமே குருமுத்திக்குநேர் மயிலாசலா மயிலாசலா.

ஸ்ரீ மயிலாசல சதகம் முற்றும்
திருச்சிற்றம்பலம்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

திருச்சிற்றம்பலம்

வேலும் மயிலும்

திருமயிலைச் சந்நிதிமுறை ஆயிரப்பாவில் பதின்மூன்றாவது

பஞ்சரத்தினம்

1. கங்கை புனை வேணிப் பிரான் அருள் காதலன்
கணபதிக்கு இளைய பாலன்
காசி ராமேசுர தலத்தும் அகிலத்தும்
பிரகாசன் எங்கும் விசாலன்
செங்கை புனை வேலு நற்குன்றுதோறாடல்
திருவேரகத்து சீலன்
செப்பும் ஆயிர எணின் ஆலயம்
உலாவி பல திருமகிமை கொண்ட கோலன்
சங்கை புனை ஊர்வசி திலோர்த்த மேனகை
ரம்பை சரச சல்லாப லீலன்
தாருகன் சிங்க முக சூரபத்மன் முதல்
சம்மார கோர காலன்
மங்கை புனை மலர் விசி தவரசப்
பிரணவ மூல மால் மருகனான முருகா
வள்ளி தெய்வானையொடு புள்ளி
மயில் ஏறிவரும் மயிலாசலத் தலைவனே.

2. ஓராறு முடியழகும் ஓராறு சிகழிகையும்
ஓராறு சிகரம் அழகும்
ஓராறு வாயழகும் ஓராறு நாசிகளும்
ஓராறு விம்பும் அழகும்
ஈராறு செவியழகும் ஈராறு குண்டலமும்
ஈராறு புருவ அழகும்
ஈராறு விழிஅழகும் ஈராறு வெற்றிபுயம்
ஈராறு செங்கை அழகும்
மார்ஆர் மணிஅழகும் ஈராறு ஆயுத
வலுக்கர மிகுத்த அழகும்
மன்னும் இருபதம் அழகு மாமயில்
நடம்புரிக வையகம் உலாவும் அழகும்
வாராறு சமயவாதித்த பேதத்தஅழகும்
மால்மருகனான முருகா
வள்ளி தெய்வானையொடு புள்ளி
மயில் ஏறிவரும் மயிலா சலத் தலைவனே.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

3. ஒன்று முச்செய்கை நீ முவ்வகையும் மொழியும் நீ
முவ்வுலகும் முவ்விடமும் நீ
ஓதும் முக்குற்றம் முக்காலம் முத்தியும்நீ
ஓங்குமுச்சீவவனன்நீ
இன்றுமுச்சுடர் இருமை இருவகைப் பொருளும் நீ
இருவினையும் இருமரபும் நீ
இருவகைத் தோற்றம் இருகந்தம் இரு இன்பம் நீ
இரு வீடு இருஅறமும் நீ
நன்று முக்குணமும் நால் வேத நால்கேள்வி நீ
நால்கரண நால்கதியும் நீ
நானும் நான்நீயும் நீயான தருமங்கள்நீ
நவிலும் பற்பல விதமும் நீ
மன்று முன் நடனமிடும் தொண்டரக மலரும் நீ
மால் மருகனான முருகா
வள்ளி தெய்வானையொடு புள்ளி
மயில் ஏறிவரும் மயிலாசலத் தலைவனே.

4. பூரண கடாக்ஷ கிருபாநிதி சமுத்திர
பூதாதி மோக்ஷ திருவே
புத்தி மிகவே பெருக சுகஜீவனப் பெருமை
போதக மகிஷி தருவே
காரண கடாக்ஷ பிசாக்ஷர யோகாக்ஷரக்
கருது மறு சமய பிரிவே
கற்ற மேலோர் அறிஞர் புவிராஜர்
கவிராஜர் கண்டு தொழுகின்ற உருவே
ஆரண திரியாக்ஷர அஷ்டாக்ஷர சொரூப குண
அத்துவிதமான விரிவே
அகத்தினில் சஞ்சலம் வாராது பரகதி உதவ
ஆதியாய் நின்ற குருவே
வாரண திசாக்ஷரத் தந்திரனே மந்திரனே
மால் மருகனான முருகா
வள்ளி தெய்வானையொடு புள்ளி
மயில் ஏறிவரும் மயிலாசலத் தலைவனே.

5. படபடென சிந்தைகள் பாழுறு மலப்
பந்த பாசமும் அறாது பாவப்
பஞ்சமா பாதகன் எனச் செனன பாவியாய்ப்
பரத வித்திடுவது உள்ளம்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

கடகடென சொற்களும் இலக்கண இலக்கியம்
கண்டிலேன் கூறும் ஓசைக்
காது கேளாமல் பராமுக இருப்பதுன்
கருணையோ கருணை அலவே
தடதடென மந்தார புந்தியும் விளங்கிலாச்
சண்டாள துற்போதனே
தானெனினும் நாயேனை தற்காத்து
இரட்சை புரிசமயம் இது சமயம் இதுவே
மடமடென பஞ்சரத்னம்தனை படித்திட
மால் மருகனான முருகா
வள்ளி தெய்வானையொடு புள்ளி
மயில் ஏறிவரும் மயிலாசலத் தலைவனே.

திருச்சிற்றம்பலம்

திருச்சிற்றம்பலம்
வேலும் மயிலும்
பதினான்காவது

தேவாரப் பண் கொல்லி 16

1. மாமணி பணிகள் பூண்ட வள்ளி தெய்வானை நேய
நேம மாங்கனியை வேண்டி நிமிடத்தில் மயிலில்ஏறி
பூமியை வலமாய் வந்தோய் புண்ணிய புருஷரூபா
தாமதம் நீக்கி ஆள்வாய் சத்குரு மயிலையானே.

2. நீலமாமயிலில் ஏறி நினைக்கும் முன் வருக மூன்று
காலமும் பூசை செய்யாக் கழித்தனன் காலம்தன்னை
சாலமும் செய்யாமல் தன் சலிதி வந்து அஞ்சல் என்பாய்
ஞாலமும் புகழ்ந்து போற்றும் நடம்புரி மயிலையானே.

3. நடம்புரி மயிலில்ஏறி நம்பும் தொண்டரையே காக்கத்
திடம் பெற வருவாய் நித்தம் தேசிக வடிவு கொண்டே
இடம் பொருள் ஏவலோடு ஏழையேற்கு இரங்கி வாழ்வைக்
கடம்பனே அளிப்பாய் போற்றி கந்தனே மயிலையானே.

4. விளக்கிய ஞானம் கல்வி மேன்மையால் வேதம் நான்கும்
உளத்தினில் தேரா மூடன் உணர்வினுக்கு உறுதி உண்டோ

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

அளக்கிற பயறுபோல அவனவன் இசைந்த சொல்லை
வளர்த்தலாய்க் கொண்டு அலைந்தேன் மன்னனே மயிலையானே.

5. சித்தமே அலைந்து அலைந்துத் தெளிவிலாப் பித்தனாகிச்
சத்திய நிலைமை எண்ணாச் சங்கடம் படிந்து இழிந்தேன்
நித்தமும் உனைப் பணிந்து நின்றிடா நாயினேற்கு
முத்தி தந்தாள வல்லாய் மூலனே மயிலையானே.

6. ஜென்ம தீவினையால் நெஞ்சம் திடுக்கெனப் பயந்து ஒன்றேனும்
நன்மையை உணர்த்தாப் பாவி நான் அலைந்து இழிந்தேன் இன்று
துன்மையே நீக்கி ஆளத் துரை மகன் அன்றி வேறோ
வன்மம் செயா மல்தாவி வந்து அருள் மயிலையானே.

7. பெற்ற தாய் தந்தை சுற்றம் பெருந்துணை மனைவி மற்றோர்
உற்ற நற் கருமம் எல்லாம் உறும் பிணி ஒழிப்பும் ஆனாய்
நல்தவத்தோர்க்குத் துன்ப நடுங்கிடப் பகுப்பு நன்னூல்
கற்றவர் மனத்துளானாய் கருணையே மயிலையானே.

8. நித்தமே உனைப் பணிந்து நெஞ்சமும் நிலை பெறாமல்
சுத்தமும் அசுத்தம் என்றே துலைத்து நாள் கழித்தேன் இங்கு
வத்து வையறியும் தன்மை வகையெனக்கு அருள் செயாமல்
சித்துகள் புரியும் கோலம் தெரிகிலேன் மயிலையானே.

9. நெஞ்சத்தின்கண் எழுந்த நிமலனே அமரர்கோவே
வஞ்சகம் செய்யாமல் தான் வந்தருள் மயூரம்ஏறி
தஞ்சம் என்ற வரைக் காக்கும் சரவணபவனே உந்தன்
செஞ்சரணங்கள் போற்றி சிவசிவா மயிலையானே.

10. மைந்தன் யான் செய்த பாவம் வளர்ந்ததால் வஞ்சம் கொண்டே
நைந்தனன் திகைத்து நின்று நலிந்து அலைந்து இழிந்தே நெஞ்சம்
நிந்தை இல்லாமல் ஆள நீ அன்றி வேறுமுண்டோ
சந்ததம்சிகியில் வாழும் சரவண மயிலையானே.

11. நித்தமும் உனைப் போற்றாமல் நெஞ்சமும் திடுக்கிட்டு ஏங்கி
சுத்து நீர்ச் சுழல் வண்டைப் போல் துன்ப சாகரத்தில் வீழ்ந்து
பத்திகள் புரியாப் பாலன் பரிதவிப்பதுவோ தன்மம்
சித்த மெய்க்குடிகொண்டு உற்றத் தேசிக மயிலையானே.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

12. எள்ளுக்கு எண்ணெய் போல எங்கணும் நிறைந்த சீவன்
உள்ளத்துள் ஒளியாய் நிற்கும் உயர் பிரணவத்தை என்னுள்
தெள்ளித்து நின்று இலங்கத் தெளிந்திலேன் தெளிவிலாத
கள்ளத்தைப் போக்கி ஆளக் கருணைபார் மயிலையானே.

13. பூர்வத்தில் செய்த பாவம் புந்தியில் உலாவி அச்சம்
நேர்பட வருத்தும் வேளை நீயதைப் பொடித்துநீவிச்
சீர்பெறு மயிலில் இந்தக்ஷணத்தினில் சிறுவன் முன்னம்
பேர் பெற வருவாய் புண்ணிய பிரபல மயிலையானே.

14. நேயமும் புரிந்து நித்ய நின்னிலை நிலை கொளாமல்
காயமு நிலை என்று எண்ணிக் கருத்து அழிந்துஇழிந்தேன் அந்தோ
மாயையினாலே துன்பம் வந்தது என்று அறிவிலாத
நாயென அலைந்தேன் அந்தோ நாதனே மயிலையினே.

15. கன்னல் மன்மதனால் வாடும் காளையைப் பொருளாய் எண்ணி
இன்னமும் சின்னம் செய்யா ஏழையேன் மீது இரங்கி
வன்ன மாமயிலில் வந்து வள்ளி தெய்வானை நீயும்
உன்னிய மூலம் தன்னை உரை செயும் மயிலையானே.

16. உதவி யார்எனக்கார் உண்மை உரை செய்வார் உன்னையன்றி
மதமதாய்ப் பிரித்துப் பேசும் வாதி அனேகர் உண்டு
நிதம் அழுக்கடையா நெஞ்சம் நிலைபெறச் செய்வார் இல்லை
சதம் என நம்பி நின்றேன் தயை புரி மயிலையானே.

திருமயிலைத் தேவாரம்
முற்றும்
திருச்சிற்றம்பலம்
திருச்சிற்றம்பலம்

வேலும் மயிலும்
திருமயிலைச் சந்நிதி முறை ஆயிரப் பாவில்
பதினைந்தாவது
திருமயிலை துயரப் பதிகம்

1. ஓங்கி வளர் கொம்பில்லாச் செடி போல் நெஞ்சம்
உலைந்து அலைந்துத் துயர்மேலாய் உழன்று ஒடுங்கி

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

ஆங்காரம் தனக்குத் தன்னுள் அமர்ந்தே ஆதரிப்பாரும்
இல்லா அச்சம் உற்றேன்
தாங்கி எனை ஆதரித்துக் காக்க வேண்டி சஞ்சலங்கள்
மீறாமல்தகவே செய்வாய்
மாங்கனிக்கா உலகை வலம் வந்த மூர்த்தி மயிலையனே
எளியேன் முன் வருகுவாயே

2. சித்தமது தான் கலங்கித் திகைத்து நின்றேன் சிறுமைப்படும்
செய் துயரம் தெரிந்து இரங்கி,
நித்தம் எனக்கு அருள்புரி நேசம் கொண்டு நிலையாக
ஞான உபதேச மோன
அத்தன் அருளாய் உதித்து அமரர் போற்றும் ஆறுமுக
மெய்ப்பொருளே அயில்வேல் ஏந்தி
வத்துவையான் கண்டு உணர மகிழ்ச்சி பூண்டு
மயிலையனே எளியேன் முன் வருகுவாயே.

3. எத்து புரி தொழிலனுக்குச் செல்லும் அப்பாஏங்கி
நின்றே புலம்பிடினும் என்னவென்றே
சற்றுவர நேர்கொள்ளாய்த் தன்னை மிஞ்சித்தான்
அசையுமோ என்று சத்வங் கொண்டே
சுற்றிவர நாளுக்கு நாள் தானே அச்சுத்த பரிசுத்தன்என்றே
துலங்கச் செய்தே
மற்றும் வகை அருள் புரியும் மயில்ஏறி மயிலையனே
எளியேன் முன் வருகுவாயே.

4. கருத்தனென்றால் உந்தனுக்குச் செல்லும் செல்லுங் கன
பாவம்தீர்த்து இன்பம் காட்டும் தன்மை
ஒருத்தன் அன்றி வேறுண்டோ உன்னி உன்னி உரைத்திடிலோர்
மிக பெரிது உண்மை உண்மை
பருத்த மயிலேறி விளையாடும் பாலா பத்தர் இருதய
வாசப் பரமயோகி
வருத்தமற தெய்வானை வள்ளியோடு மயிலையனே
எளியேன் முன் வருகுவாயே.

5. கற்றதினால் என்ன பயன் உண்டோ இன்னங் கற்றவழி
நிற்கிலாக் கலங்கின்றேனே
உற்ற பரிசுத்தன் என்றே உளம் பொருந்தி ஊடுருவ
நிலை காண்கவோர்து மூலம்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

அற்று விதமான பொருளான சோதி அரன் அயன் மால் அமரர்
முனி அமரர் கோனும்
மற்றும் உள்ள மனுநீதி அரசர் போற்றும் மயிலையனே
எளியேன் முன் வருகுவாயே.

6. திருகதுதான் செய்யாதே சேயன் செய்யும் தீவினை தான்
மெத்த உண்டு சினம் கொள்ளாதே
வருவது போவதும் தெரியா மருளன் என்றே மறையாதே
மதிஎன்னுள் குறை வையாதே
பரிவு தரும் பொருள் ஞானம் பற்றவேண்டி பற்றுஅறவே
வஞ்சமிலாக் கருணைப் பாராய்
மருவி வருந் தெய்வானை வள்ளி பாகா மயிலையனே
எளியேன் முன் வருகுவாயே.

7. சந்ததமும் சம்சாரம் மாய்கை மெத்தச் சங்கடங்கள் மேன்
மேலாய்ச் சார்பு கொண்டே
பந்தனங்களாகி மனம் பரிதவித்துப் பற்பல துன்பங்களுமே
பர்வதம் போல்
மைந்தனையே தான்இருந்தும் வாறென் தன்னால் வாயாரச்
சொல்லின் முடிவாமோ அப்பா
வந்தனங்கள் வந்தனங்கள் இந்த வேளை மயிலையனே
எளியேன் முன் வருகுவாயே.

8. நெஞ்சகமே நிலை கொள்ளா நிலை தளர்ந்தே நியாயம்
அநியாய நித்யம் என்றே
கிஞ்சிதமேனும் தீது நன்மை என்றே கிட்டிவரும் பாவம் இது
புண்ணியம் என்றே
ரஞ்சிதமே அஞ்ஞான மெய்ஞ்ஞானம் என்றே நான்
அறியாதவன் அலைந்து நாயேன் இன்றேன்
வஞ்சகமே செய்யாத மாறுபாவா மயிலையனே
எளியேன் முன் வருகுவாயே.

9. இந்து நுதலாள் மாதர் மாய்கையாலே எண்ணம்
அதுதான் கலங்கி நின்றேன் அந்தோ
அந்தகனுக்கு ஆளாகா அருளே தந்து அடியேனை
ஆதரித்துக் காக்க வேண்டி
சிந்தை துயர்தனை அகலச்சிகி மீது ஏறி
தெய்வானை வள்ளியுமாய் வடிவேல் ஏந்தி

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

மந்திர சடாக் கரனே மூலம் கொண்டு மயிலையனே
எளியேன் முன் வருகுவாயே.

10. பாடவகை அறியாதப் புல்லனேனைப் படுத்தாதப் பாடு
மெத்தப்படச் செய்வித்தாய்
நாடு அதனில் உண்டான மனிதர் போல நான்களித்து
வாழா மனலிந்தேன் இந்நாள்
தேடரிய பாவம் எல்லாம் செய்தேன் பாவி, சென்மாந்திர
பாவன் என்போல் செகத்தில் உண்டோ
வாடுகின்றேன் மனம்கலங்கி வள்ளி நேயா மயிலையனே
எளியேன்முன் வருகுவாயே.

11. தனக்குள் தானான குருவே போற்றி
சத்துருவின் பயந்தனையே தவிர்த்தாள் போற்றி
பன்னும் மறை ஆகம நூல் பகர்ந்தாய்போற்றி பத்தரக
மலரில் இருதாள் பதித்தாய் போற்றி.
துன்னு மயில் வாகனனே சூரா போற்றி தோகை வள்ளித்
தெய்வானைத் தோழா போற்றி
மன்னுபுகழ் மயிலையனே வருவாய் போற்றி
வந்துஅருளைக் கொடுப்பவனே போற்றி போற்றி.

திருக்கயிலை துயரப் பதிகம் முற்றும்
திருச்சிற்றம்பலம்.

திருச்சிற்றம்பலம்
வேலும் மயிலும்
திருமயிலைச் சந்நிதி முறை ஆயிரப்பாவில்
பதினாறாவது - இந்நூலாசிரியர் மனைவி
ஸ்ரீ வள்ளியம்மை துயரங்கள்
பெண்பால் பிரிவு
ஸ்ரீ மயிலை நாதர் பதிகம்

விநாயகர் காப்பு

பூர்வ திசை மாமயிலம் புண்ணியமாம் பெண்நோயும்
தீர்வதற்கு மேல்பதிகம் செப்பவே - ஆர்வமெனப்
பன்னிரு பாவகமும் பற்றும் கணாதிபதி
தன்னிரு தாள் காப்பே சரண்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

நூல்

1\. பருதி சோமனும் பார்மகன் குகன் பண்டிதன் குரு
பார்க்க வன் சனி
அரவு இரண்டுடனாக ஒன்பதும் அகில
மீதர சாட்சி தன்மையைக்
கருதியே நவ தேவாரம் எனக் கண்டு கீர்த்தியைக்
கொண்டு உருகினேன்
வரம் எனக்கு நீ தருக வேண்டுமே
மயிலை நாதனே மயிலை நாதனே.

2\. கஞ்சமொற்ற பொற் பாதமே கதி கண்டு
கொண்டிட விண்டிலேன் விதி
அஞ்சல் என்று உனை அடைந்த நாள்முதல்
அவதி மேலதாய் பவதி காலனாய்
நெஞ்சம் ஒற்றலை நிலை கலங்கினேன்
நின்னை அன்றியே பின்னையார் சொலாய்
வஞ்ச நீக்கியன் தஞ்சம் என்றனன்
மயிலை நாதனே மயிலை நாதனே.

3\. தொல்லையாம் பவத் தொடர்பினான் மனத்
துயரமேலதாய அயர்வை உற்றினம்
சொல்லு நல்தவம் பெரியர் சொல்லினை துணை
கொளாமலே கணைகள் வேறதாய்
அல்லுமே பகல் அல்லலும் பிணியான் மெலிந்திடும்
தியானம் என்னவோ
மல்லுமே புரிவாது நீக்கிஆள்
மயிலை நாதனே மயிலை நாதனே.

4\. கள்ள வஞ்சகம் கபடு சூதுகள் கலகவேதையும்
கண்டிதங் கொளாக்
கொள்ளை கொண்டிடும் குணத்தின் தீதினைக்
கொண்டிடா வகையண்டினேன் அருள்
உள்ளமே படிந்து உலக வாஞ்சையால் ஊன்றியே திரிந்து
உழலும் நாயினேன்
வள்ளலே மல மாயை நீக்குவாய்
மயிலை நாதனே மயிலை நாதனே.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

5. தாது ஆண்டினில் ஆடி திங்களில்
சந்நிதிதனில் கன்னியானும்அங்கு
ஏதுவாக வந்து இந்த நாள்வரை இடறு மேலதாய்
அடர் பவங்களும்
தீது செய்திட செல்வம் அற்றதும் செல்வம் அற்றதே
சிறுவன் உற்றதும்
வாது கொண்டதை பாதுகாத்ததே
மயிலை நாதனே மயிலை நாதனே.

6. கூச்சல் ஈச்சுரஆண்டில் கொண்டதும்
கூறுமே வெகுதானியம் குளிர்
காச்சலாம் பிரமாதி கண்டமே காணும் தீச்சலாய்த்
தோன்றும் மூவ்விதம்
ஆச்சுதே அதில் யானும் வீழ்ந்து உடல்
அஸ்தி மூலமே கஸ்தி மேலாதாய்
வாச்சுதே பவம் தீச்சுதே தவ
மயிலை நாதனே மயிலை நாதனே.

7. போதும் போதும்முன் புண்ணியத்தினால்.
புத்திஉத்தினால் வெற்றி பெற்றதும்
பாதுகாத்தலால் பலிதம் ஆனதே
பட்சம் வைத்து நீ இஷ்ட்டம் உற்றதும்
காதலான பெண்பேதி காய்ச்சலாய்
க்ண்டு விண்டிலாகக் கலங்குதேகுற
மாதுவள்ளி தெய்வானை காதலா
மயிலை நாதனே மயிலை நாதனே.

8. உற்ற வேடனை மூன்றின் உள்ளிது
ஒன்றலால் இதில் குன்றுதே மனம்
கற்ற கல்வியும் பெற்ற கேள்வியும்
கட்டுவிட்டலோ நட்டம் உற்றதே
அற்ற தேவனே அகிலம் ஆள்பவா
அபையம் அபையம் என்று அலறினேன் சிகா
மற்றும் தோத்திரம் வைத்த பாத்திரம்
மயிலை நாதனே மயிலை நாதனே.

9. பத்தி பூசையும் நிஷ்டை நேமமும்
பங்கமான தே,அங்க வேதையால்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

சித்த நொந்து நொந்து உருக சென்றனன்
செய்த தீவினை எய்யுமோ என
புத்தி உத்தியில் பட்டு கெட்டதே
போதுமோ இனம் வாது செய்யுமோ
வத்துவே பயந் தவறி மாறினேன்
மயிலை நாதனே மயிலை நாதனே.

10. சன்னி பித்தமும் கசல தோஷமும்
தாதுமக்தமும் வாத ரோகமும்
சின்ன பின்னமா ரோசிதம் சுரம் தீச்சலான
மெய்ச் சீதளம் பிணி
குன்னமா இனம்கொண்ட நோய் பவம்
குருபரா என வருகுமோ சுகா
மன்னி யாவையும் பன்னுவே நித
மயிலை நாதனே மயிலை நாதனே.

11. தருமமே துணை என்று சஞ்சலம்தான்
தொடுத்திட ஏன் வரவில்லை
அருமை ஐயனே அபயம் என்றனன்
ஆதரித்திடாய் பாதுகாத்து நீ
சருவ ஜீவ ஆதாரமானவா சரவணோற்
பவா தாரம் காப்பவா
வரும நீக்கியே கிருபை செய்குவாய்
மயிலை நாதனே மயிலை நாதனே.

12. நீதி நன்னெறி வேத நூல்களும்
நிலை தளர்ந்திடாக் கலை உயர்த்திடச்
சாதி வேதமும் சாத்ர ஆகமம்
தான்தழைத்திடச் சாமிநாதனும்
தீதிலாச் சுகம் தானும் மேவிடச்
செப்பினேன் மன ஒப்பமாகவே
வாதிலா வரம் தாரும் மூலமே
மயிலை நாதனே மயிலை நாதனே.

ஸ்ரீ மயிலை நாதர் பதிகம் முற்றும்
திருச்சிற்றம்பலம்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

திருச்சிற்றம்பலம்
வேலும் மயிலும்
திருமயிலைச் சந்நிதிமுறை ஆயிரப் பாவில்
பதினேழாவது
பெண்பால் பிரிவு
திருமயிலை வடிவேல் முருகர் பதிகம்
விநாயகர் காப்பு

ஆகுமிசை ஏறி அருளா அமர்ந்திருக்கும்
பாகுமொழி வல்லபை ஆள் பாகனே - நாவில்
தவறாமல் நின்று தருகு மயிலைத்
தவறாமல் நன்றெனக்குத் தா.

1. பூவுலகு தன்னை ஒரு நொடி யில்வலம் வந்தவா
புண்ய புருஷோத்மரூபா
பொய்யா மொழிப் புலவனுக்கு முன் வந்தவா
பொதியை முனிவினைக் கொய்தவா
நாவுலவு செந்தமிழ்ப் பாடற்கு இரங்கியே
நக்கீரர் முன் வந்தவா
நாதனே அருணை கிரி நாதர் முன் வந்தவா
நாயினும் கடையேற்குவா
மாவுலவு மார்பனே தெய்வானை வள்ளி இரு
மனைவியர் கண் மகிழ் சலாபா
மகிபனே கரதல ஆமலகம் நிகர்என்னை நீ வைத்து
எனை ரெட்சை புரிவாய்
பாவுலவு திரு ஆவினன் குடி பரங்கிரி
பத்தி புரி திருவேரகா
பதி தொறும் துதிபரவு திருமயிலை கிரி
பிரபு பாலவடிவேல் முருகனே.

2. தீராப் பெரும் பிணிகள் யாவையும்
தீர்த்தவா செங்கல்வராயன் எனவா
திருநாமமே பன்ன பங்கில் வந்தாள்பவா
சேயனே ஆறுமுகவா
பேராப் பெரும் கிரக திசைகிரக கோசார
பேரும் பிரதிஷ்டை கிரகா
பெற்றிடும் காலசக் கரகிரக பேதகா

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

பிரணவ சொரூப மகிபா
நேராக் குருரங்கள் வாராது அகற்றவே
நிலை கொண்டு கலைகள் உண்டாய்
நின்னாமமே பன்னு தன் நாமமே
நாளும் நீடூழி வாழி நாமா
பாராய்ப் பெரும் கருணையாளனே
பிட்சையாய் பாரியை ரெட்சை புரிவாய்
பதிதொறும் துதி பரவும் திருமயிலை கிரி
பிரபு பால வடிவேல் முருகனே.

3. தாது வருடத்தில் வரும் ஆடி மாதத்திலே
சந்நிதானத்தை நாடி
தாரமும் யானும் அங்கே ஏதுவாய் வந்த
நாள்தானும் முதல் இந்நாள் வரை
ஏதுதான் சொல்லுவேன் சொன்னாலும்
வாய்வராது இம்சை அளவு இவ்வளவு என
என்றனால் ஆகுமோ செய்வினை
கணேர்மையே எள்ளளவு தானுரைப்பேன்
போதுமே கர்த்தனே புத்தி அலையுற்றதும்
போன ஈஸ்வர தாதுவில்
புத்திரனை பெற்றதே அத்தம் அழிவுற்றதும்
பொல்லாங்கு மேல் கூச்சலாய்ப்
பாதுகாத்திட்ட பின் காச்சலும் தீச்சலும்
பண்பு கெட பட்டு விட்டேன்
பதி தொறும் துதி பரவும் திருமயிலை கிரி பிரபு
பால வடிவேல் முருகனே.

4. இதுவன்றி இன்னமும் பாவம்கண் மேலதா
என்னை இம்சைப்படுத்தவே
ஏங்கி மனது என்னுளே தாங்கப் படாமையால்
இல்லாமை மேலாகியும்
ததியில் வந்து உதவியே நிதியினை அளித்திடச் சாமி நீ
எந்தனுக்குத் தயவு வைத்து அருள் புரிக
ஊர்தொறும் சென்றனன் தன்மமே
செயம்என்று தான்
துதிதனை விரும்பியே ஜீவனம் செய்து வர சொல்லொணாத்
துன்ப மலையாய்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

சொந்த மனையாள் பிள்ளை பெற்றதும்இறந்ததே
துணைவன் இல்லாத சமயம்
பதியினில் அலைந்தவள் அலங்கோல வேதையில்
படும்முனே நீயே துணை
பதிதொறும் துதி பரவும் திருமயிலை கிரி பிரபு
பால வடிவேல் முருகனே.

5. விக்கிரம சித்திரை மாதத்திலே மனவி
மிக்கவேகஸ் தியாகி
மீளா வியாதியில் தேகம் தளர்ந்ததே
விழிகொண்டு கிருபை செய்தீர்
சக்கியம் தப்பியே இப்போது வீழ்ந்து உடல்
சங்கடம் படும் நோய்தனைச்
சற்றே கடைக்கண்ணால் பார்க்கவும் வேண்டினேன்
சடுதியில் வந்தாள வருவாய்
நெக்கிஉள்ளே உருகி தோத்திரம் செய்யவே
நிலைமை புரி அலைவிலாமல்
நேசம் பிடித்து நீ தாரத்தை ரெட்சை புரி
நீடூழி வாழி வாழி
பக்குவம் கண்ட பரிகாரியே ஹரிகரி
பத்த ரட்கச மருகனே
பதி தொறும் துதி பரவும் திருமயிலை கிரி பிரபு
பால வடிவேல் முருகனே.

6. நினைவு பலபலவாக சாத்திரம் கற்று என்ன
நின் அடிமை தொண்டு செய்யார்
நேசப் பிரியங்களும் கொலை களவு சூது பொய்
நெஞ்சம் தடித்த புல்லோர்
அனைவரும் பரியாச வசனமே கொள்ளுவாரது
அன்றியே என்தனக்கோர்
ஆதரவும் இன்றியே பரிதவித்திடும் ஏழை
ஆகையால் இந்த வேளை
மனையாள் படும் துன்பம் மாற்று நீ தேற்று நீ
மாயா விகாரம் அல்லவோ
மா பாவியாகினும் பாபவி நாசாய
மாதேவ தேவ மகிபா
பனையளவு வினைகளைத் தினையளவும் இல்லதாய்ப்
பரமனே அருள் குமாரா

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

பதி தொறும் துதி பரவும் திருமயிலை கிரி பிரபு
பால வடிவேல் முருகா.

7. ஆதித்த கிரக ஜெப மூன்று மதி செய்து
மேல்அம் புலியும் மூன்று மதியா
அங்காரகன் இங்கண் மூன்று மதிமூன்று
அறிவால் ஆனகுரு மூன்றுமதியா
நீதித் தவிர்ப்பிலா சுக்கிரனும் மூன்று மதி
நீல நறுமூன்றி மதியா
நீள் அரவினுக்கு ஜெப மூவிரண்டாகு மதி
நிலைமையாய்ச் செய்ததுஅன்றி
சாதித்த நவ கிரக நவ மாத முறை முறைத்
தபமே புரிந்து ஜபமாய்ச்
சாற்றும் பிரமாதி முதல் விக்கிரம விஷீவரை தவுத்யம்
செய் கிரகப் பலனைப்
பாதிப் பெறும் வரிசையாகினும் பாரிக்கு
பாலித்து வரம் அருளுவாய்ப்
பதி தொறும் துதி பரவும் திருமயிலை கிரி பிரபு
பால வடிவேல் முருகனே.

8. வஞ்சம் செய்திடா மனையுறும் துன்ப நோய்
வாங்கியே தேக நிலையாய்
மறை நாலுவே தங்கள் ஆகம புராணங்கள்
வையகம் தன்னில் நிலையா
அஞ்சிடா நெஞ்சில் அலையில்லா மல்நாளும் மெய்
அருளே விளங்கு நிலையா
அந்தணர்கள் செய்கரும ஆலயப் பிரதிஷ்டை
அன்புடன் தரும நிலையாய்த்
தஞ்சம் என்றோர் துயர் மாற்றி வரும் தூயனே
சத்தியம் தானும் நிலையாய்ச்
சந்ததஞ் சிந்தை வளர் வள்ளி தெய்வானைச்
சதா கால மயிலும் நிலையாய்ப்
பஞ்சை உன் பாடலில் பிழைதனை பொறுத்து நீ
பலமாக நிற்கும் நிலையாய்ப்
பதிதொறும் துதி பரவும் திருமயிலை கிரி பிரபு
பால வடிவேல் முருகனே.

9. மாத சூதகமேவு வலியேது கிலியேது
மற்றம் ஒரு வினைகள்ஏது

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

வயிறு வலிசந்நிகர நளிரேது குளிரேது
மாறாப் பிதற்றலேது
நீதம் சொலிக்கும் பிரணவமோ தனின் மகிமை
நீறுபட வேறு வினையும்
நிற்குமோ பட்டு இழிய விட்சணம் காக்க ஒரு
நிஜ ரூபமான வடிவே
வாதுபுரி துன்ப நோய் பற்றுஅற அகற்றுவாய்
வள்ளி தெய்வானை சரசா
வஞ்சகம் செய்யாதே தஞ்சம் என்று அருள்
மனைவி வந்து முன் கிருபை புரிவாய்
பாதுகாப்பது விரத முன் தனக்கே கடமை
பாரமே உமது பாரம்
பதி தொறும் துதி பரவும் திருமயிலை கிரி பிரபு
பால வடிவேல் முருகனே.

10. நித்திய தத்துவ ஞான அத்துவிதமான பர
நிர்மல சொரூப வடிவேல்
நீங்காத தேவர் சிறை மீட்டு தெய்வானையை
நீ மணம் செய்த வடிவேல்
சத்தி தரு புத்ரனே மித்ரு பரிபாலனே
சத்ரு சம்மார வடிவேல்
தணிகை மலை கந்தமலை பழனிமலை பொதியை மலை
தாவி விளையாடும் வடிவேல்
வெற்றி மயில் ஏறி ஒரு நொடியினில் தரணி வலம்
வேகமாய் வந்த வடிவேல்
மிக்க மனை தேகத்தை சொசுத்தப் படுத்தும்
வகை விடுபட செய்யம் வடிவேல்
பத்தி புரி தொண்டர் அனு கூலனே சீலனே
பரமகுரு குமர வடிவேல்
பதி தொறும் துதி பரவும் திருமயிலை கிரி பிரபு
பால வடிவேல் முருகனே.

11. ஒருபோதும் ஒருமாது ஒரு தரம் முருகனே
ஓடி வந்தே அவட்கு
ஒரு கரம் புருடனால் அறுபடவே இரு துண்டம்
ஒரு கரமதா அளித்தாய்
இருபோது பலதரமும் எந்நாளும் உன்நாமம்
ஏற்றிப் பணிந்திடும் எனை

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

என்னென்று கேழ்க்கவும் நீதி இலையோ பக்தி
யாவுமே பூச்சானதோ
தருமமாய்ப் போகுது இவ்வேளை மிகவே வந்து
தாரத்தை ரெட்சை புரிவாய்ச்
சதுர்வேத வஞ்சகனை பொருள் வினவியே
சிறைச் சாலையில் அடைத்த குமரா
பருவ மயிலே ஏறி விளையாடி வரும் விஜையனே
பார்வதி அருள் தூயனே
பதி தொறும் துதி பரவும் திருமயிலை கிரி பிரபு
பால வடிவேல் முருகனே.

12. சொற்பனச் சூட்சமாய்க் கனவினில்
சேடனாய்த் தோன்றியே மனித உருவாய்ச்
சுகிர் தகுண வசனமா ஒரு வரருகே உறைய
சொல் வண்மையாக நிசமா
உற்பனம் அதாகவே பாடுவான் என்றுரை
உரைக்கும் ஒரு மொழி தந்து நீ
ஓதுவாய்ப் பாடலை யானும் வருவேன் என்று
முகமையாய்ச் சொல்லும் இரவில்
அற்புதம் செய் கவிதை பாடற்றுடங்கினேன்
அரகரா வேலும் மயிலும்
அபயமே அபையமே என்று அலறியே பாதத்தை
அனுதினமும் நாடி நின்றேன்
பற்பல விதம் தவிர்த்துப் புவியிலே நிலை
பாரிக்கு வயது அருளுவாய்
பதி தொறும் துதி பரவும் திருமயிலை கிரி பிரபு
பால வடிவேல் முருகனே.

திருமயிலை வடிவேல் முருகர் பதிகம்
முற்றும்
திருச்சிற்றம்பலம்

திருச்சிற்றம்பலம் வேலும் மயிலும்
பதினெட்டாவது திருமயிலை தேவாரப் பண் கொல்லி
காப்பு மாலை

1. திரு உளமே தேவே திருமயிலை வாழ்வே
மரு இளமை என்தன் மனைவி - அருவினையால்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

வாதை படுகின்றாள் வயித்தியனே நீ நினைத்தால்
வாதை அறும் என்றேன் மகிழ்.

2. இஷ்டமாய் ராம ஜெய லெட்சம் உருவே எழுதி
பஸ்தியா இல்லாளுக்குப் பாடதனை கஷ்டம்
தனை நீக்கத் தான் அளித்தேன் தண்மயிலை வாழ
அனை வோருக்கு அற்புதமே யாம்.

3. வினையெல்லாம் வீறிடவே வேலாயுதத்தை
முனைவோன் திருமயிலை மூர்த்தி நினைவேற்குப்
பற்பலவாய் சிந்திக்கும் பாடலுக்கு இரங்கு மணி
அற்புதமே ஆறுமுக வா.

4. இஷ்டம் வைத்துஎன் பேரில் இல்லாள்தனக்கு இப்போ
கஷ்டமே நீங்கக் கண் பாராயோ நஷ்டங்கள்
வாராமல் காக்கும் மயிலை வளர் தேவே
தீரா வினை தீரும் தேர்.

5. ஆதி பராபரமே ஆகும் திருமயிலை
நீதி தவறாமல் நின்றோர்க்குச் சோதி
தருவான் அடியருளம் தாவு மொகரத்தில்
வருவான் துயரகல வாழ்

திருமயிலைத் தேவாரப் பண் கொல்லி
காப்பு மாலை
முற்றும்

திருச்சிற்றம்பலம்
வேலும் மயிலும்
திருமயிலைச் சந்நிதிமுறை ஆயிரப்பாவில்
பத்தொன்பதாவது
திருமயிலை தேவ தேவாரப் பண் கொல்லி

1. திருவுளம் பொய்மையாமோ தேவரும் பொய்மையாமோ
அருமறைப் பொய்மையாமோ வன்புகழ் பொய்மையாமோ
தருமமும் பொய்மையாமோ சாமி நீ பொய்மையாமோ
குருமொழி பொய்மையாமோ கூறுவீர் மயிலை தேவே.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

2. ஆகமம் புராணம் பொய்ம்மோ அந்தணர் வேள்வி பொய்ம்மோ
யோகமும் ஞானம் பொய்ம்மோ உன்னு நற்தியானம் பொய்ம்மோ
தாகமும் தண்ணீர் பொய்ம்மோ தழலுறு வெப்பம் பொய்ம்மோ
வேகமும் மயிலும் பொய்ம்மோ விரித்துரை மயிலை தேவே.

3. நீதமும் நிஷ்டை பொய்ம்மோ நினைவு கொண்டு உருகும் பொய்ம்மோ
தீதறு அருளும் பொய்ம்மோ தேசிகர் வாழ்த்தும் பொய்ம்மோ
நாதனே நீயும் பொய்ம்மோ நான் கவிபாடும் பொய்ம்மோ
வேதனும் அரியும் பொய்ம்மோ விளம்பிடும் மயிலை தேவே.

4. உயிர்க்கு உயிராகி எங்கும் உதவியாய் இருப்பும் பொய்யோ
செயிர்ப்பு அறநீங்கும் தன்மை செய்த அருள் பதமும் பொய்யோ
தயிர்க்கடை மத்துபோலத் தத்துறு உள்ளம் பொய்யோ
கயப்பது வேலோ என்மேல் கடவுளே மயிலை தேவே.

5. அடியவர்க்கு அருளு நீதி அகத்தினில் கொள்ளா நாயேன்
படியுறு மாய்கையாலே பரதவித்திடும் என்னுள்ளம்
சடிது நீ வந்து இவ்வேளை தாரத்தை ரெட்சை செய்வாய்
கடுகியே வாரா விட்டால் கருணையோ மயிலை தேவே.

6. திக்கு வேறில்லை நீயே திருவுளம் துணை என்று எண்ணி
நெக்கி உள்ளுருகி நொந்தே நேரமோ என்மேல் ஐயா
சக்கியந் தப்பி இப்போ தவித்திடு மனைவி நோயை
இக்கணம் தன்னில் வந்தே இதம் செயும் மயிலை தேவே.

7. மெத்தநான் பவன் ஆனாலும் மேதினிக்கு அவமானாலும்
பத்தியில் குறைவானாலும் பதத்தினில் கெடுமானாலும்
சத்திய கிரகசார சூழ்வினை மேலானாலும்
நத்திய தாரம் தன்னை ரட்சியும் மயிலை தேவே.

8. ஏது தான் உரைத்தும் என்ன ஏந்திழை வருத்தம் என்னோ
பாதுகாத்திடு வீராகில் பழிநிலை சொன்னேன் சொன்னேன்
காதுகள் வழியில் சற்றே கடைவிழி நோக்கம் கொண்டே
தீதறச் செய்யும் செய்யுங் செயம் செய மயிலை தேவே.

9. பித்தன் போல் பெண்ணால் யானும் பேதமை சொண்டேன் முன்ன
நித்தனே வந்து இப்போது நிமிடத்தில் வலிபோம் நேர்மை

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

சத்திய நிலைமை எண்ணித் தாங்கியே பாதுகாப்பாய்
நத்தினேன் நின்னை அந்தோ நலம்புரி மயிலை தேவே.

10. வினையை ஊடறுக்கும் தேவேவேண்டுவது அளிக்கும் தேவே
தனை நிகரில்லாத் தேவே தாரத்தை ரெட்சை தேவே
அனைவரும் போற்றும் தேவே ஆறுமா முகனே தேவே
நினைவறிந்து உதவும் தேவே நிர்ம்மல மயிலை தேவே.

11. சத்திய மெய்ம்மை அல்லோ வசத்தியம் பொய்ம்மை அல்லோ
நித்திய மெய்ம்மை அல்லோ வநித்தியம் பொய்ம்மை அல்லோ
சுத்தியும் மெய்ம்மை அல்லோ வசுத்தியும் பொய்ம்மை அல்லோ
பத்தியும் மெய்ம்மை அல்லோ பார்த்து அருள் மயிலை தேவே.

12. காலனார் வஞ்சம் தன்னை கண்டறி மிண்டன் அல்லோ
ஞாலனார் உனக்குச் சாமிநாதனும் தொண்டன் அல்லோ
ஆலனார் பெற்ற பிள்ளை அறுமுகக் கண்டன் அல்லோ
கோலனார் கொண்ட கோலம் குறிப்பனோ மயிலை தேவே.

13. முற்பவம் இன்னதென்று முதன்மையாய் உணர்வு கொள்ளேன்
பிற்பவம் இன்னதென்று பிதற்றிடும் வகையும் தள்ளேன்
எப்பவம் என்னோம் என்று ஏங்கினேன் உள்ளம் விள்ளேன்
இப்பவம் தன்னை தீர்க்க எழுதினேன் மயிலை தேவே.

14. உலக வாஞ்சையின் உள்ள உணர்வொடு பொறிகலங்கி
பல விகாரங்கள் செய்ய பாடவும் நடுக்கம் கொண்டேன்
நிலைமையும் தளர்ந்தே பத்தி நேசமும் தவிர்ந்தே கொஞ்சும்
தலைமையை அறிந்து பெண்ணோய் தணித்து அருள் மயிலை தேவே

15. புண்ணியம் பாவமாமோ பொய்ம்மையும் மெய்ம்மையாமோ
பண்ணிய உபசாரங்கள் பதில் அபகாரமாமோ
அண்ணலே நினைந்தது எல்லாம் அகிர்த்தியம் ஆமோ அந்தோ
திண்ணிய நன்மை எல்லாம் செயம் செய மயிலை தேவே.

16. செப்பினேன் உள்ளம் கொள்ளத் தெய்வமே வேறொன்று இல்லை
இப்ப வந்து உதவ வேண்டி இயற்றினேன் தேவாரங்கள்
முற்பவ பிற்பவங்கள் முழுமையும் பொறுத்தே ஆள்வாய்
அப்பனே இனி என்செய்வேன் அடிமையான் மயிலை தேவே.

திருமயிலை தேவாரப்பண் முற்றும்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

வேலும் மயிலும்
திருமயிலைச் சந்நிதிமுறை ஆயிரப்பாவில்
திருமயிலை சத்குரு நவ ரத்தினம்

காப்பு

வெற்றிவேல் வாழி நவவீரர் முதலோரும்
பற்றிய பூதப்படைகள் பார்த்திபரும் முற்றும்
தவத்தோர் முனிவோரும் தாங்கு நவ ரத்னம்
சிவத்தோர் திருமயிலம் சீர்

ஆசிரியவிருத்தம்

1. சீர்புகழ் மயிலைத் தேவனை நினைந்தே
தினம்தினம் என்னுளே உருகி
செப்புமாங்கீர வருடம் முதலாய்த்
திருவடிக்கு அற்புதப் பாவாய்
பார் புகழ் பதிகம் பஞ்ச ரத்தினமும்
பற்பலத் தோத்திரத் துதியும்
பாடு தேவாரம் சதகம் அந்தாதிப்
பத்தி மேன்மேலுறும் பூதி
கார் புகழ் கருணை ருத்திரி அந்தாதி
கணேசர் அந்தாதியும் மேலாய்
கற்பனைத் தேவி சரஸ்வதி அருளால்
கவி பொருள் அளித்து உளம் களிக்கப்
பேர்புகழ் கிரகச் சூத்திர மாலைப்
பேசு வீரருண் மணி விளக்கே
பிரமமே நிலையாய்த் தருமமே மலையாம்
பிரணவ மயிலை சத்குருவே.

2. அன்னை தந்தையரும் பெற்று எனை எடுத்த
அருமை நற்பெருமையும் அறிவீர்
ஆதரித்து எனை நீ பாதுகாத்து அருளும்
அற்புதக் காட்சியும் அறிவீர்
உன்னை ஓர் பொருளால் என்னுள்ளே விளங்க
உணர்த்திய கல்வியும் அறிவீர்
உண்மையைப் புரிந்து இங்கு
உடன்படு நேர்மை உகந்த புகழ்ச்சியும் அறிவீர்;
பன்னியே பாடும் வரிசையும் கேள்விப்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

பரிசுமே பெற்றதும் அறிவீர்
பஞ்சுபோல் பாடும் படுத்திடும் வேதை
பஞ்சையாய்த் திரிந்ததும் அறிவீர்
பின்னை யார் பெண்ணின் நோய்தனை தவிர்க்கப்
பேசு வீரருள் மணி விளக்கே
பிரமமே நிலையாய்த் தருமமே மலையாம்
பிரணவ மயிலை சத்குருவே.

3. தாதுஆண்டு அதனில் ஆடி மாதத்தில்
சந்நிதானத்தையும் நினைந்தே
தாரமும் யானும் ஏதுவாய் வந்தே தம்பிரான்
அடியாரைப் பணிந்தே
தீதற நீக்கி நன்மையை வேண்டிச் செயம் பெறும்
வாழ்க்கைய முனைந்தே
செய்தநூல் தன்னை பதத்தினில் வைத்தே
செய்யும் அர்ச்சனைகளைப் புரிந்தே
போதுமே சிறையில் வைத்த நாரண முதலாய்ப் புத்திரன்
பிறந்து உடல்மெலிந்தே
பொருள் சிலஅழிந்து தொழில் முறை ஒழிந்தே
போதமும் புந்தியும் அலைந்தே
பேதமை ஆகும் ஏடணை மூன்றே
பேசு வீரருள் மணி விளக்கே
பிரமமே நிலையாய்த் தருமமே மலையாம்
பிரணவ மயிலை சத்குருவே.

4. உன்னது மகிமை இன்னது என்றெ வரால்
உரைத்திடல் ஆகுமோ மெய்யா
உற்ற வேதனையுள் ஒன்றலாற் பெண்ணுக்கு
உறும் பிணி தவிர்த்து அருளையா
பன்னியே வேதம் துதித்திடும் பொருளைப் பற்றியே
நித்தமும் படியாய் ஆண்டாய்
பகல் இரவாக ஜீவனம் உயர்ச்சிப்
பண்ணினேன் மூவிரண்டு
தன்னுதே பாரம் பாரம் என்னுளமே
சங்கடம் படும் விதம்
தானாய்ச் சாமி நீ அறிவாய் காமி யான் அறியேன்
சகலமும் அறிந்திடும் தேவாய்ப்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

பின்னை யார்எனக்குத் திக்கு வேறுண்டோ
பேசுவீர் அருள் மணிவிளக்கே
பிரமமே நிலையாய்த் தருமமே மலையாம்
பிரணவ மயிலைச் சத்குருவே.

5. தருகுவோன்தன்பால் குறைவுறுமோ சொல்
தருக்கமே விட்டவர் பாலிற்
சாமி நீ பிரிந்தே வருத்தமும் வருமோ
தன்உளம் பிரியமே ஒற்று
மருவுவார் பால் இரக்கமும் இலையோ
மாலையும் தொடுப் பவர்பாலில்
வஞ்சகம் கொண்டே சோதனை உளதோ
மனையினுக்கு அனுக்கிரகம் புரிவாய்
கருவுகள்தோறும் உயிக்கு உயிராகி
காட்சியை இயற்றிடும் முருகா
காதலி மிகவும் வாதனை மேலாய்க்
கால்வலி கைவலி சுரப்பும்
பெருகிய முதன்மைச் சிறுகவும் முனையப்
பேசு வீரருள் மணி விளக்கே
பிரமமே நிலையாய்த் தருமமே மலையாம்
பிரணவ மயிலை சத்குருவே.

6. சிற்றறிவாலே வேண்டிய பவங்கள்
செய்தனன் பாவியான் அறியேன்
செய்திடும் பாவக் கடலினில் திவலைச்
செய்கிலேன் புண்ணியம் அறியேன்
எத்தனை சூதோ வாது கண் மேலா
ஏய்த்திடும் கர்வமும் அறியேன்
ஏழையான் பேதை கூவியே ஊழை
இடுவது மெய்யென அறியேன்
தத்தியப் பெயரை அடுத்தவர் பாலின் நடுநிலை
ஞாயமும் அறியேன்
நம்பியே உன்னை மறந்ததும் மறவா
நாள்தொறும் நினைந்ததும் அறியேன்
பெத்தவள் பிள்ளை வருத்தமும் அறிவாள்
பேசு வீரருள் மணி விளக்கே
பிரமமே நிலையாய்த் தருமமே மலையாம்
பிரணவ மயிலை சத்குருவே.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

7. உற்றதை உரைத்துப் பவம்தனை ஒழித்தே
உயிர்நிலை பெறுவது வேண்டும்
உன்னிய வேத முறைப்படி பொருளே
உணர்வுகொண்டு அகமகிழ் வேண்டும்
மற்றதை உரையா நல்தவச் செயலை வருந்தி
நிர்மலப்பட வேண்டும்
மாதவம் புரியும் இருடிகள் முனிவோர்
மலர்ப்பதம் துதித்திட வேண்டும்
குற்றமும் குறைப்பும் கெடும் குணக் குறிப்பும்
கோபமும் பற்று அற வேண்டும்
கோதையர் மனையாள் வாதையை நீக்கிக்
குணத்துடன் வாழ்க்கையும் வேண்டும்
பெற்ற தாய் தந்தை நீ எனல் வேண்டும்
பேசும் வீரருள் மணி விளக்கே
பிரமமே நிலையாய்த் தருமமே மலையாம்
பிரணவ மயிலை சத்குருவே.

8. உள்ளதை உரைத்தேன் வள்ளலே அறிவாய்
உன்தனக்கு எழுதினேன் இருபாய்
உடன்படச் செவிக்கே ஏற்கவும் இலையோய்
உத்திரம் பதில்எனக்கு உரையாய்
எள்அளவேனும் சற்றெனும் இரக்கம்
இல்லையோ குருமுகம் தாராய்
ஏறிய மயிலும் கூரிய வேலும்
ஏந்திழை இருவரும் காராய்
கள்ளமே நினையாக் கடைவிழி பாராய்
காதலி கலிதனைத் தீராய்
கலியுக தருமம் நேரினில் நேராக்
கனவினில் சூட்சமம் வாராய்
பிள்ளையாம் என்னை மதித்திடச் சீராய்ப்
பேசு வீரருள் மணி விளக்கே
பிரமமே நிலையாய்த் தருமமே மலையாம்
பிரணவ மயிலை சத்குருவே.

9. பரம்பொருள் சுவையே நிர்மல வடிவே
பரிந்து வெண்ணீறு தொட்டஅளவில்
பற்றிய காய்ச்சல் குளிர் நளிர் சுரமும்
பற்பலச் சன்னி தோஷங்கள்
சிரம்வலி கைகால் குடைச்சலும் வாதச்
சிலேட்டுமம் பித்த ரோகங்கள்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

திகைப்பு மேல் இளைப்பு இருமலும்
சுரப்பம் சிற்றிடை வலிப்பு மாயாசம்
உரம்பெறும் பிரம ராஷச பூதம்
உற்றதோர் பில்லி வஞ்சனையும்
உச்சரி ஏவல் சூனியம் முதலா
உன்பெயர் நினைத்திடப் பறக்கும்
பிரமனைச் சிறையில் அடைத்திடும் தேவே
பேசு வீரருள் அருள் மணி விளக்கே
பிரமமே நிலையாய்த் தருமமே மலையாம்
பிரணவ மயிலை சத்குருவே.

திருமயிலை நவரத்தினம் முற்றும்

பெண்பால் பிரிவு
இருபத்து இரண்டாவது

திருமயிலை அருள் பதிகம்

1. ஆனைக்கு முன்னே முறையிட்டபோது அவனாய்அளித்த மூலம்
சேனைத் திரட்சி பகை சூரரை வென்று ஜெயபேரி கொண்ட மயிலை
கானக் குறத்தி மணவாளனாக கருணைப் பிரவாகு நேயன்
ஈனப் பயற்கு மனதுற்ற பெண் இடர் வேதை நீக்கி அருளே.

2. சித்தம் திருத்தி மனமொற்ற அன்பர் சிலுகைத் துரத்து முருகா
முத்தன் தனக்கு முதலாய் உதித்து முதலே உரைத்த குருவே
நித்தம் துதிக்கம் பணி பத்தர் மேவி நிலை நிற்க நின்ற மயிலை
எத்தும் பொருட்குப் பயபக்தி எண்ணிஇடர் வேதை நீக்கி அருளே.

3. நக்கீர தேவுக்கு இடருற்ற காலை ஏயமே புரிந்த மயிலை
முக்காலும் உன்னை தொழுகின்ற பேர்க்கோர் முகமாக முன்னம் வருவாய்
எக்காலும் நாயேன் மறவாமல் நெஞ்சில் இணை கொண்ட பாத மலரை
இக்கால நோக்கி உருகின்ற பெண்ணின் இடர் வேதை நீக்கி அருளே.

4. முன்செய்த தோட முகமாக நின்று மூர்க்கங்கள் செய்தது அறிவாய்
பின்செய்த பாவம் தகவாய் உரைத்துப் பிலங்கொண்டி மூக்கும் விதம் ஏன்
நன்சொல்லு நீதி நடுவான மயிலை ஏயமாய் இரங்கி வருவாய்
என் சொல்லுவாயோ எளியேற்கு உறும் பெண் இடர் வேதை நீக்கியருளே.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

5. நல்லோர் இணங்கத் தகவாய் நிறைந்தே நகம்எங்கும் நாடி நினைவார்
கல்லாத மூடன் கவிதைக்கு இரங்கி கண் கொண்டு கிருபை தரவும்
சொல்லால்து திக்கு மறை நாலும் நீதி சுகபோக ஞான மயிலை
எல்லாம் அறிந்தோய் மனையாள் தனக்கு இடர் வேதை நீக்கி அருளே.

6. பரியாச வார்த்தை உலகங்கள் ஓதும் பவமே பலத்தை அறியார்
சரியான நீதி துகை கண்ட போது சுபா சென்று மெச்சும் உறவோர்
விரிவான வேதப்புராணங்கள் எல்லாம் மிக ஏது திக்கு மயிலை
இருதாரம் மோகன்ஒரு தார பெண்ணின் இடர் நீக்கி அருளே.

7. அன்னத்தில் ஊரும் பிரமன் சிரத்தை அதிரத் தகர்த்து முருகா
பண்ணிப்பில் ஊரும் கருணைப் பிரவாகப் பத்தர்க்கு இரங்கு மயிலை
சின்னத்தை நீக்கி எனை ஆள வேண்டி சிறுமைத் துரத்த வருவா
எண்ணத்தை சொல்வேன்மனம்ஹற்ற பெண்ணின்இடம் வேதைநீக்கியருளே

8. மெய்யாக நம்பிஇணை கொண்ட பாத மிகவே பிடித்து நினையேன்
செய்யார் இரண்டு முகமாறு தேவா ஜெகசித்தர் உன்னு மயிலை
நையாத காமக் குரோதம் கடனை ஞயமா அகற்ற வருவாய்
இய்யாத உலோபிச்சிறியேன் மனைக்கே இடர் வேதை நீக்கி அருளே.

9. தாதாண்டு மாதம் கடகத்திலுள்ளம் தனை நாடி சாரு மயிலை
மீதா நினைந்தே மனையாளும் நானும் விரைவாய் மகிழ்ந்து வந்தோம்
கோதாகி நாளும் படுபாடு யாவும் குணமாய் உரைக்க வருமோ
வேதோ பலன் தன் தனதாக பெண்ணின் இடர் வேதை நீக்கி அருளே

10. நீதா குறத்தி மணவாள தேவா நினைவாய் உருக்கும் வகையோ
தீதான போதன் நிலைகொண்டு நிற்கத் திடமேது சற்றும் அறியேன்
மாதா பிதா நீ தகவாய் இரங்கி மயில் மீதில் ஏறி வருவாய்
யாதா நினைத்தே முனமே மனைக்கே இடர் வேதை நீக்கி அருளே.

11. பஞ்சங்கள் நீக்கி நிலைகொண்டு வாழ மகதேவ தேவ மயிலை
பஞ்சைப் புகழ்ந்தே பவமோகனாகிப் பாடுபடு தன்னை கருதி
கஞ்சப் பதத்தை அபயங்கள் என்றேன் கருணா கடாட்ச முருகா
இச்சொல்லுரைத்தே மகிழுண்டு பெண்ணின் இடர் வேதை நீக்கி அருளே

திருமயிலை அருள் பதிகம் முற்றும்
திருச்சிற்றம்பலம்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

வேலும் மயிலும்
திரு மயிலைச் சந்நிதி முறையாயிரப் பாவின்
இருபத்து மூன்றாவது
ஸ்ரீ மயிலாசல அனுபூதி
விநாயகர் காப்பு

முருகன் குமரன் குகன் என்று மொழிந்து
உருகும் புனை மாலை உணர்ந்திடவே
வருகும்படி மாமயிலாசலனைச்
சருவும்படி ஐங்கரனே சரணம்.

நூல்

1. திருமால் மருகா சிவ சண்முகவா
வருவாய் மயிலாசல அனுபூதி
தருவாய் நிலை சஞ்சல நீக்கி அருள்
குருவாய் நிறை கொண்டு உணர்என் உணர்வே.

2. மயிலாசல சண்முகனே உமையாள்
கயிலே வளர் கந்த கிருபா கரனே
அயிலால் அசுரேசரை வென்ற அருள்
செயலே அறிவார் எவர் சேய் குகனே.

3. தாளுந் தின நம்பின தன்அடியார்
நாளும் துதி செய்பவ நற்செயலே
ஆளும்திற மார்எவர் பெற்றிடுவார்
வாழும் திருமா மயிலைப் பதியே.

4. சக மாயை உள் நின்று தயங்கு மனம்
வெகுவாய் துயர் சாகரமே சுழலா
நகம் எங்கணும் நாமமும் துதியத்
தகவே புரிமா மயிலாசலனே.

5. பவ சாகரம் என்னுள் பரந்து நிலை
தவறாமலே சாஸ் விதமாய்ப் புரியும்
அவமாய் எனை விட்டு அகலா மயிலா
தவமே புரி மெய் அடியார் சரணே.

6. தன்னந் தனி சண்முகனே குகனே
என் நெஞ்சினில் உண்ணிலையே நகரா
பன்னுந் தமிழ் பாவலருக்கு உதவி
மின்னுஞ் சிகி மீமிசை வந்தருளே.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

7. நெஞ்சில் துயர் அற்றிட நீ நினைவாய்த்
தஞ்சம் என தாளிணையான் தொழுதேன்
அஞ்சாது என வந்து எனை ஆதரவா
இஞ்சொல்லுரை மாமயிலா சலனே.

8. ஐயா திரு மா மயிலாசலமே
செய்யாய் கொடி சேவலனே பன்னிரு
கையாய் வடிவேல் முருகா கருணை
மெய்யாய் மன நற்பதம் மேலிடுமே.

9. வருவாய் இவ்வேளையிலே மயிலை
முருகா இரு புன் செவியில் அமுதம்
தருவாய் நிலை தன்னருளே நிலையாய்
வருவாய் வருவாய் வருவாய் குகனே.

10. மயில் வாகனனே திருமா மயிலை
அயிலே முதல் பன்னிரு ஆயுதனே
செயலே அறியாச் சிறுபாலகனேன்
மயலே ஒழி மாவினை அற்றிடவே.

11. மாயைப் பெரிதாகிய ஐம்பொறியும்
தீயைப் போலே சுடு தீ மனதைத்
தாயைப் போலே தணி சண்முக நீ
சேயைப் பார்த்து ஆதரி சேவகனே.

12. முருகா என ஒரு முறை கூறினபோது
அருகே வந்து ஆதரியா விடிலோ
பரிவாய் பல பாடும் வகைப்படுமோ
குருவாய் அருள் கொண்டு உரை கொற்றவனே.

13. முருகா சரவண பவனே முறையோ
வருவாய் துயர் அற்றிட மா மயிலா
திரு கேதும் இலாதவனே ஜெயமே
தருவாய் சர்வ ஜீவ தயாபரனே.

14. வருவாய் சரவணபவ பூபதியே
மரு மாமலர் மணி புனை திருமயிலா
உருவாய் ஒளி உள்ளொளியாய் உறையும்
திரமேஅறிவார் அறிவார் செயலே.

15. கள்ளப் புல வேடர் கருத்தினையே
தள்ளத் தரு மாமயிலா சதுரா

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

மெள்ளப்படி மீமிசை ஏறிமிதித்து
உள்ளப்படி நின்றிடு உத்தமனே.

16. இஞ்சொல்லறி யாதவன்நான் ஈனன்
புன்சொல் உரையாகினு நற்பொருளை
நன் சொல்லென நாட்டிடுமோ மயிலைச்
செஞ்சொல் உரை திருவடியே சரணம்.

17. குமரா சரவண பவனே குகனே
அமராபதி ஆள்பவ நன் மருகா
சமராபுரி சண்முக சத்குருவே
அமராய் என்னுள் அறிவிற்கு அறிவே.

18. சாற்றும் ரஹணபவச வேல் முருகா
போற்றும்தனை மெய்யடியார் பொருளே
ஆற்றும் குறை யாவையும் நீ எனை காப்
பாற்றும் திருமா மயிலைப் பதியே.

19. புகழும் திருமா மயிலா புரியோன்
நிகழும் ஹணபவ சர என நிமலா
அகமும் புறமாகிய ஆறுமுகா
செகம் எங்கணும் முச்சுடர் சோதியனே.

20. வந்தாள் மயிலாசலனே வரமும்
தந்தாள் சிவ சங்கரி தருமதலா
எந்தாய் குரு (ண ப வ ச ர ஹ) எனவும்
கந்தா கதிர் வேலொடு கண் எதிரே.

21. தருமாபுரி மாமயிலைத் தலைவா
அருமா மறை அந்த முதல் பொருளே
உருவாய் உபதேசம் உணர்த்திட நீ
வருவாய் பவ சரஹண பூபதியே.

22. மனம் ஏற்றிடும் மாமயிலாசலனைத்
தினம் உற்றிடு (வ ச ர ஹ ண ப) செயலே
கனம் உற்றிடும் எங்கணுமே கருணைத்
உற்றிடுவென் தனம்உணர் தற்பரனே.

23. ஐயா திரு மாமயிலைப் பதியா
மெய்யாய் சரஹண பவனே விமலா
துய்யாய் சிவ சுப்பிரமண்ய குகா
நையா வரநீ அருள் நாயகமே.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

24. முருகா சயிலொளி பவனே முறையோ
வருவாய் திருமா மயிலாசலமே
திருமால் மகிழ் சேவலனே வரமும்
தருவாய் அருள் சண்முகக் குருவே.

25. பண்ணார் மொழி திரிபுர பவ முருகா
கண்ணாரமுதே கருணைக் கடலே,
உண்ணாமுலை ஆள்அருள் உத்தமன் என்
எந்நாள் துதிமா மயிலைக்கு அரசே.

26. முன்நாள் செயும் முற்பவம் மேலிடுகைச்
சொன்னேன் வினை தூள்படவே முறியும்
மன்னா திகழொளிபவனே மயிலை
பன்னார் தமிழ் பாவலருக்கு அருளே.

27. தன்னம் தனி தற்பரமே அடியார்
பன்னும் பரிபுர பவனே முருகா
மின்னும் திருமா மயிலா விமலா
என்நெஞ்சினில் நின்றொளிர்வாய் நிறைவே.

28. வாழும் திருமா மயிலைப் பதியே
சூழும் பவமொழி பவனே சுரரை
ஆளும் திறமாகியும் அசுரர்களை
மாளும்படி வேல் விடு மாவலனே.

29. பரமேசுரி ஈன்ற அருள் பாலகனே
சுரமே அயிலேந்திய காரணனாய்த்
திரமான் மயில்ஏறிய சேவக நன்
வரமே அருள் மா மயிலா பதியே.

30. தாய் தந்தையர் சத்குரு தெய்வம் எலா
நீயே என்று என நெஞ்சுதனில் பதியா
நாயேன் அலை கொண்டனன் நாள்தொறுமே
வாயேன் அலை தீர்ந்திட வரம் அருளே.

31. அன்னம் தரும் மா மயிலாசலமே
தன்னம்தனி வேலவனே தமிழைப்
பன்னும்படி பாவலருக்கு அருள்வாய்
சின்னம் பவ தீவினை பற்றறவே.

32. மந்தாகினி தந்தருள் மாமயிலா
சிந்தாகுலம் வந்தெனை சேர்ந்திலனாய்க்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

கர்தாகதிர் வேலவனே கருணைத்
தந்தாள் சிவ சண்முக தேசிகனே.

33. மதியே தரு மா மயிலைக் கருணை
நிதியே வரும் நெஞ்சகம் நின்றுணரப்
பதியா உரை பத்தியுள் நன்னிலையில்
கதியே பரமாகிய கண்ணொளியே.

34. ஒளியாய் நிறை எங்கணுமே உறையும்
வளியாய் கனன் மண்ணோடு நீர் முதலா
வெளியாய் அழியா உருவாகிய வேள்
வழியாய் வரும் மாவினை தூள்படவே.

35. வினை தூள் பட விட்டுளறிவேல் முருகா
தனை ஆளென சாற்றிடவே உலகுஅஞ்
சினையாம் என சிந்தை தெளிந்திட நீ
நினையா விடில் நெஞ்சம் நிலை பெறுமோ.

36. பலமாகிய மாமயிலைப் பதியில்
நலமே புரி நாயினை ஆட்கொளவே
அலையா வரு சஞ்சலம் அற்றிடும்முன்
நிலையாய் வரு நெஞ்சக நின்று உணர்வாய்.

37. நிலையாய் மயிலை பதி நெஞ்சகமே
வலையாய் மல மாயையிலே மிகநின்
அலையா ஒரு வண்ணமுமே அமரும்
கலையாய் வரும் ஞான கிருபாகரனே.

38. வேலே வினை பொடிபட மாமயிலின்
மேலே நிலையாகிய வெற்றிதரும்
காலே நிலையாகிய நற்கருணைப்
பாலே மொழியாகிய பாஸ்கரனே.

39. மன்னா உனை நெஞ்சக மாமயிலைப்
பன்னா பவனாகிய பஞ்சமகா
சின்னா பவன் என்றிடு தீஞ் சொலிலா
நன்னாவு தரும் கருணா நயமே.

40. ஹரி ஓம் சரஹண பவனே திருமால்
மருகா குக சண்முக மா மயிலா
புரமே நிறை புண்ணிய அற்புதமாய்
வருவாய் மனமாயை தெளிந்திடவே.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

41. தெளிவாய் உபதேசமும் நன்னிலையும்
தெளியேன் மிக மாயையிலே சிதறிக்
களை மாறியும் நெஞ்சு கலங்கினநின்
ஒளியே மயிலாசல உள்ஒளிவே.

42. மயில்வாகன மந்திர சடாக்கரமே
மயிலாசல மண்டல பூபதியாய்
அயில் பாணியனாகியவா அறுமுகா
செயிர் தீர்ந்து எனை ரெட்சியும் சேவலனே.

43. துயர் அற்றிடு துன்பமும்உற்று உவகை
செயிர் உற்றிடு தீவினைகளை அறவே
அயிலக்கர மணி சரஹண பவ ஓம்
பயிற்றிட உள்ளில் வெளிப்படுவாய்.

44. மெய்யா உனை நம்பி நல்ல வெறும்
பொய்யா உலகோர் புகழப் புதுமை
ஐயா உரைசெய்தன ஐம்புலனை
மெய்யா நிலை கொண்டிரு வேலவனே.

45. சேரும் பவம் மேலிடு செய்கை அதாற்
போரும் புலனென்னொடு ஒன்றுபுகாச்
சோரும் பலனைச் சொலின் முடிவு பெறா
நேரும் கிருபை நெஞ்சினில் நின்றருளே.

46. கஞ்சப் பத சேகரம் இன்றி வினைக்கு
அஞ்சிப் பய முள்ளுடை ஐம்புலனை
நெஞ்சைப் பலமுற்றிடு நன்னிலையும்
பஞ்சப் பயல் பற்றிட வந்து அருளே.

47. போருந் துயர் போர்புரி புற்பவமும்
நேரும் பகை நெஞ்சம் வலைந்த எனைக்
காரும் பன்னிரு கணில் ஒரு கருணைப்
பாரும் திருமா மயிலைப் பதியே

48. புவியோர் புகழ் மாமயிலைப் புரிவாழ்
தவமேல் இடுகைச் சரம்ஒன்று உதவிப்
பவ தீவினை பட்டு உருவும்படி செய்
அவமா எனை விட்டு அகலாது அருளே.

49. மயிலாசல மன்னவனே உனது
செயலாம் என தேர்ந்திலனே மனதே

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

மயலால் பனி மூடு தன் மா வினையை
அயிலால் அறுபட்டிடவே அருள்வாய்.

50. வாதித்திடு சூரரை வென்ற சுகஅ
தீதப் பொருளாகிய திரு மயிலை
நாதக் கழல் சென்னியில் நாட்டிடுவாய்
கோதப் பிழை அற்றிடு கொற்றவனே.

51. மயிலாசல வாழ் பதியே மகிழ்வா
அயிலே கரமணி இரு மனையருடன்
மயில் வாகன மீமிசை ஏறி வரும்
செயலே அனுபூதி சிறந்ததுவே.

மயிலாசல அனுபூதி முற்றும்.

திருச்சிற்றம்பலம்
வேலும் மயிலும்
இருபத்திநான்காவது

தேவாரப் பண் 32

1. பூமிகோள் வக்ரீஞாயப் புண்ணியப் புருட நாமா
ஆமி தென்றல்ல என்றே அறி ஒணாப் பவத்தனாகிக்
காமியாய்த் திரிந்து இந்நாளும் காரிய விகற்பன் யானேன்
சாமி நின் செயலை அன்றி சாற்றொணா மயிலை கோவே.

2. அத்தன் மால் பிரமன் விண்ணோர் யாவரும் திகைக்கச் சூரன்
கத்தனாய் வாழ்ந்த நாளில் கலக்கங்கள் உறுத்தி ஞாயச்
சுத்தனாய் வீரம் செய்தே சூரர்களைக் காத்த தேவா
நித்திய வாழ்வே பூமி நிலைபெறும் மயிலை கோவே.

3. தத்தைமார் இருவர்சூழ தரணி வானோர்கள் போற்றக்
கத்தனாய்த் தலங்கள் தோறும் காட்சியை அளிக்கும் சேயே
புத்தனாய் புத்தி உத்திப் போத மெய்ஞ்ஞானம் தேர்ந்தோய்
சித்தம் வைத்து என்னை ஆள்வாய் சின்மய மயிலை கோவே.

4. இஞ்சொலை உரைத்தே நன்னா இணக்கமும் அறியாப் பாவிக்
புஞ்சொலை விரும்பி நாளும் புல்லரை வாழ்த்தும் புல்லேன்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

தஞ்சம் என்றவரைக் காக்கச் சற்றெனும் இரக்கம் இல்லேன்
அஞ்சல் என்றுஅடைந்தேன் இப் போது அருள்புரி மயிலை கோவே

5. மாதரை விரும்பி நாளும் வஞ்சகம் படக் கொண்டே
ஆதரவில்லா மல்தான் அலைகொளும் மனத்தன் ஆனேன்
தாது அவிழ் நீபத் தோளா சரஹண பவகுகேசா
தீதறப் புரியும் தேவா செயம் செய மயிலை கோவே.

6. இன்னதென்று இனியதென்றே என்னுள்ளே உணர வல்லேன்
பின்னதைப் பிரித்துப் பேசப் பிரபலன் அல்ல கண்டீர்
சொன்னதைச் சொல்லும் கிள்ளைச் சொல்லென உவமை போல
நன்னிதம் கொள்ளும் தூய ஞாயனே மயிலை கோவே.

7. முறை முறை உரைத்தே மூவர் முத்தியை அடைந்தோர் தேவர்
நிறை நிறைவாக மன்று நிர்மலஆல யங்கள்தோறும்
திறை திறைக் கொணர்ந்து பாதச் சேர்வையைக் காண்பரன்றி
மறை மறைப் புகழ்ந்து வாழ்த்தும் வள்ளலே மயிலை கோவே.

8. அண்ணலே ஸ்தலங்கள் தோறும் அன்பொடு அமர்ந்து நின்றாய்
மண்ணுளோர் எவரும் போற்றும் மகிமை கொண்டு உறுதி ஓங்கி
விண்ணுளோர் இதனைக் கண்டே விரும்புவர் மாந்தராகக்
கண்ணுடைக் காட்சியாய் நீ கருத்துறு மயிலை கோவே

9. நித்தியக் கேள்வி உற்று நிஷ்டை சாதனை உள் நின்றே
பத்தியாய்ப் புரிந்தும் ஆசை பற்றறக் கழிக்கும் தொண்டர்
சத்திய நிலைமை நன்றாய்ச் சற்றேனும் கொள்ளாநாயேன்
சித்தமும் காட்சி காணத் தெளியுமோ மயிலை கோவே.

10. தந்தை தாய் குருவுமானாய் தரும தேவதையும் ஆனாய்
சிந்தையும் பொருளும் ஆனாய் தேவர் பற்பலரும் ஆனாய்
சந்திரக் கிரணமானாய் தபன நற் சுடரும் ஆனாய்
சுந்தரக் கிரணமானாய் சோதியே மயிலை கோவே.

11. மைந்தரும் மனைவி மக்கள்மாடு வீடு ஆடுமாகிப்
பந்துவும் பலரும் கூடிப் பற்பல சினேகராகித்
தொந்தமுன் தான் தானங்கே தொடர்ந்து தான் அல்லதாகி
அந்தர பூமியாகி ஆண்டிடு மயிலை கோவே.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

12. மந்திர மௌன யோக மாதவம் தானும் உய்யத்
தந்திரச் சூட்சமங்கள் சத்குரு கடாக்ஷ நன்றாய்
மைந்தரைக் காக்கும் வேலோன் மகிமை பூபாலன் என்றே
சுந்தரமான சோதி துதிபெறும் மயிலை கோவே.

13. தாருகன் சிங்கன் சூரன் தளங்களை வேர் அறுத்தோய்
தீரனாய் சுரர் கோன் பெண்ணைத் திருமணம் செய்த பாலா
சாரியா அடியார்களுக்குத் தயாளமும் இரக்கம் வைத்தே
ஆரிய வடிவுளானாய் அரகர மயிலை கோவே.

14. காட்டினில் வாழ்ந்து துஷ்டக் கரடி நாய் புலி குரங்கைக்
கூட்டினில் அடைத்து வைத்தே கொடும் பகை அனைத்தும் தீர்க்கத்
தாட்டிக மிருக வர்க்கம் நீ தழைத்திடும் அனேகம் தன்னை
ஆட்டிடும் குரு முகூர்த்த வாதியே மயிலை கோவே.

15. பாட்டினில் பயன்படாத பாவிகள் உளனாய் வேண்டி
நீட்டிய சாலம் செய்தே நினைவுக்கு நினைவாய் நின்றும்
போட்டினில் தான் பொருந்திப் பொருள் பறி;த்தவனைப் போக்கக்
காட்டிடு மெய்ம்மை போலக் கடவுளே மயிலை கோவே.

16. நிச்சய வடிவே என்னும் நிலைபெறும் சோதி வாழ்வே
அச்சுதன் அயனும் விண்ணோர் யாவரும் மகிழ்வுண்டு உட்கி
மெச்சு நற் புகழே ஆதி வேத வேதாந்தம் போற்ற
உச்சிதப் பொருளாய் எங்கும் ஓங்கிய மயிலை கோவே.

17. பூரண வடிவே நித்திய புண்ணிய புருடா போற்றீ
நாரண மருக திவ்ய ஞான சத்குருவே போற்றீ
காரண முருக வேளே கார்த்திகை புதல்வா போற்றீ
வாரணத்துவசா போற்றி வரம் தரும் மயிலை கோவே.

18. எண்ணிய கருமம் எல்லாம் ஈடழிந்து அலைவது ஏனோ
புண்ணிய பலனும் இல்லாப் போன்றதே பொறுப்பும் தானோ
பண்ணிய தவங்கள் எல்லாம் பகைத்திடும் பாவம் தானோ
கண்ணிய வேலை ஏந்தும் கையனே மயிலை கோவே.

19. சாத்திரம் கற்றும் என்ன சதுர்மறை படித்தும் என்ன
சூத்திரம் அறிந்தும் என்ன சுசீலனாய் இருந்தும் என்ன

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

நேத்திரம் கிருபையுற்று நினது அடியாரைச் சற்றே
மாத்திரைப் போதும் பாரா வாழ்வரோ மயிலை கோவே.

20. நெஞ்சத்தால் உழலுந்தோட நினைவின் கண்நினைவின் தோடம்
வஞ்சத்தால் மறப்பின் தோட மனையின் கண் மனையின் தோடம்
பஞ்சத்தால் அஞ்சும் தோடம் பாவி சண்டாளன் தோடம்
தஞ்சத்தால் கெஞ்சும் தோடம் தவிர்த்து அருள் மயிலை கோவே.

21. இவ்விதம் தோடந் தன்னால் இடைந்தெனை அணுகா மூலம்
அவ்விதம் தன்னை இப்போது அறிந்திடும் கரணத்தாலே
எவ்விதப் பவமானாலும் என்னுளே நிறைந்த சோதி
முவ்விதப் பொருளாய் நின்றோய் முனைந்து அருள் மயிலை கோவே

22. வினையெலாம் கூடி மேலும் விகாரமாய் மூடிக் கொண்டே
தினை அளவேனும் நன்மை செய்யொணாத் தடுக்குது அந்தோ
முனையுறும் வேலா வள்ளி மோஹனா மயூரம் ஏறி
எனை ஒரு பொருளாய் வந்து இங்கு ரட்சியும் மயிலை கோவே.

23. மெய்க் குரு பாதம் கண்டே மெய்ம்மையாய் வீழ்ந்து போற்றிச்
சட்டெனப் பொருளும் ஆவிச் சடலமும் தத்தஞ் செய்தே
அக்கண உபதேசத்தால் அருந்தவம் புரிந்து தன்னில்
சிக்கெனப் பிடித்தே ஞானம் தெளிவனோ மயிலை கோவே.

24. சக்கரம் கரத்தில் ஏந்தி சங்கு ஒரு கரத்தில் ஏந்திச்
சுக்கு மாந்தடி ஒன்று ஏந்திச் சூலமும் கரத்தில் ஏந்தி
உக்கிர வடிவேல் ஏந்திஉயரும் வாள் கரத்தில் ஏந்தி
வக்கரத்தானை ஏந்தி வதைத்திடும் மயிலை கோவே.

25. வல்லயம் கரத்திற் தாங்கி வளர் தண்டும் கரத்தில் தாங்கி
வில்லையும் கரத்தில் தாங்கிமேற் சரங் கரத்தில் தாங்கி
சொல்லிடும் பிரம்பும் தாங்கித் தொண்டரைக் கரத்தில் தாங்கிச்
சல்லிய நினைப்பும் தாங்கித் தாக்கிடும் மயிலை கோவே.

26. விதிதனை விதித்தே இன்ன விதியென விதியாப் பாவ
மதிதனை மதித்தே இன்ன மதியென மதிக்கும் ஞாலக்
கதிதனை கதிக்கும் மந்திரக் காரண மதிக்கும் மூலத்
துதிதனைத் துதித்து எந்நாளும் துதிப்பனோ மயிலை கோவே.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

27. கற்பிதம் கடவா நின்ற காமமே உலகம் தாக்கும்
கற்பிதம் கடவா நின்ற காமமே விதியும் தாக்கும்
கற்பிதம் கடவா நின்ற காமமே மாயைத் தாக்கும்
கற்பிதம் கடவா நின்ற காமமே மயிலை கோவே.

28. கற்பிதம் கடந்து நின்ற கருணையே உலகக் கேள்வி
கற்பிதம் கடந்து நின்ற கருணையே அறிவின் பிரமம்
கற்பிதம் கடந்து நின்ற கருணையே தவத்தின் ஞானம்
கற்பிதம் கடந்து நின்ற கருணையே மயிலை கோவே.

29. அற்புதக் காட்சி நீதி ஆகம புராண வேதக்
கற்பிதச் சூட்ச மூலக் காரண குருவே என்னுள்
தற்பரமாக நின்றோய் சச்சிதாநந்த வாழ்வே
பொற்புடை மயிலில் ஏறும் பூரண மயிலை கோவே.

30. கண்ணினுள் கண்ணாய் நின்றோய் கருத்தினுள் கருத்தாய் நின்றோய்
விண்ணினுள்விண்ணாய்நின்றோய்வெளியினுள்வெளியாய்நின்றோய்
பண்ணினுள் பண்ணாய் நின்றோய்ப் பரத்தினுள் பரமாய்; நின்றோய்
எண்ணினுள் எண்ணாய் நின்றோய் ஏகனே மயிலை கோவே.

31. ஆட்சியாய் நிறைந்த வேதத்து ஆகமம் புராணக் கேள்வி
சாட்சியாய்த் தேக பூதத்தராதலத்து உள்ளோர் ஜீவச்
சூட்சியாய் மந்திர மூலச் சோதி விண்ணவரும் காணக்
காட்சியாய் நின்ற ஞானக் கருணை மயிலை கோவே.

32. திருவருள் மயிலை வாழி தேவர்கள் மூவர் வாழி
குருவருள் முறைகள் வாழி கோழி வேல் மயிலும் வாழி
இருமனைவியரும் வாழி இணை அடியார்கள் வாழி
தரு நவவீரர் வாழி சாமி நீ வாழி வாழி.

இருமனை வியரும் வாழி இணையடி யார்கள் வாழி
தருநவ வீரர் வாழி சாமிநீ வாழி வாழி

தேவாரப் பண் முற்றும்

திருமயிலைச் சந்நிதிமுறை ஆயிரப்பா 4 முதல் நூற்பிரிவு
21வரைக்கும் காப்பு உட்படச் செய்யுள் 599 முற்றும்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

In Public domain. Digitization Muthulakshmi Research Academy



ISBN NO: 978-93-85508-01-1